புத்தகம் கிடைக்குமிடம் :

1. வடார்க்காடு மாவட்ட சமரச சுத்த
சன்மார்க்க சத்திய சங்கம்,
மெரினா கபே திரு. V. K. விநாயக முதலியார்
கல்யாண மண்டபம், வேலூர், (வ. ஆ.)

2. அருட்பெருஞ்ஜோதி அச்சகம்,
7,8/99, அம்மன்கோயில் தெரு, சென்னை-1.

3. அஜந்தா நூல் நிலையம், சேலம்.

4. சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,
பிராட்வே, சென்னை-1.

5. பாரி நிலையம், பிராட்வே, சென்னை-1.

6. இராமலிங்கா மிஷன், இராஜேஸ்வரி
கல்யாண மண்டபம், சென்னை-4.

7. மெர்குரி புக் டிபோ, கோவை.

8. ராஜாமணி ஸ்டோர்ஸ், கோவை.

9. துறவி திரு. கந்தசாமி,
ஆசிரியர், "அருட்சுடர்", வடலூர்.

10. திரு. இராம. இராதாகிருஷ்ணன்,
செயலாளர், மாவட்ட சன்மார்க்க சங்கம்,
கீழ்வாசல் (வடக்கு), ஸ்ரீரங்கம்.

11. திரு. A. S. பஞ்சநாதம் பிள்ளை,
வள்ளலார் நூல் நிலையம்,
1537, பெரிய அரிசிக்காரத் தெரு,
கீழ்வாசல் தஞ்சாவூர்.

12. திரு. வேணுகோபாலாச்சாரி,
சன்மார்க்க சங்கம், அல்சூர், பெங்களூர்-8.

திருவருட்பிரகாச வள்ளலார்

# திருவருட்பா

வடிவுடை மாணிக்கமாலை

உரையாசிரியர் :
வித்துவான் பாலூர்
கண்ணப்ப முதலியார்
எம்.ஏ., பி.ஓ.எல்.



11

வெளியீடு: சமரச சுத்த
சன்மார்க்க சத்திய சங்கம், வேலூர்.

உ

திருச்சிற்றம்பலம்

திருவருட்பிரகாச வள்ளலார்

# திருவருட்பா விரிவுரை

## வடிவுடை மாணிக்கமாலை

பதிமூன்றாம் புத்தகம்

விரிவுரை ஆசிரியர் :
செந்தமிழ்ச்செல்வர், சைவ சமய சிரோமணி, பேராசிரியர்,
வித்துவான் பாலூர் கண்ணப்ப முதலியார், எம்.ஏ., பி.ஓ.எல்.,
முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர், புதுக் கல்லூரி,
சென்னை-14.

வெளியிடுவோர் :
வட ஆர்க்காடு மாவட்ட சமரச சுத்த சன்மார்க்க
சத்திய சங்கம் (பதிவு 52/1966)
வி. கே. விநாயக முதலியார் கல்யாண மண்டபம்
வேலூர், வட ஆர்க்காடு மாவட்டம்.

வெளியீடு : 11

1968 ஜுலை

உரிமையுடையது

விலை ரூ. 2-25

அச்சிட்டோர் :

ரத்னம் கிளா அச்சகம்

65, திருப்பள்ளி தெரு

சென்னை. 1

# பதிப்புரை

திருவருள் துணைகொண்டு திருவருட்பா, வடிவுடை மாணிக்கமாலை விரிவுரை 11-வது நூலாக வெளி வருகிறது.

இறைவியை போற்றும் இப்பகுதி, அமரநிலை யெய்திய திருமிகு கு. பாக்கியம்மாள் நினைவு மலராக வெளி வருவது மிகப் பொருத்தம். இந்த வெளியீட்டுக்கான பொருளுதவி அளித்த அன்னார் குடும்பத்தாருக்கு எம் உளங்கனிந்த நன்றி உரியதாகும்.

இந் நூற்பயனை,

"வாணாள் அடைவர் வறுமை உறார்நல் மனைமக்கள்பொன்
பூணாள் இடம்புகழ் போதம் பெறுவர்பின் புன்மைஒன்றும்
காணார்நின் நாமம் கருதுகின் றோர்ஒற்றிக் கண்ணுதல்பால்
மாணார்வம் உற்ற மயிலே வடிவுடை மாணிக்கமே" (89)

எனத் திருவருட் பிரகாச வள்ளலார் விதந்தோது கின்றார்.

இந் நூலுக்கு அரிய பல மேற்கோள்களுடன் எளிய முறையில் விரிவுரை எழுதி உதவிய

பேராசிரியர், வித்துவான் பாலூர் கண்ணப்ப முதலியார், M.A.,B.O.L., அவர்களுக்கு நாம் பெரிதும் கடப்பாடுடையோம்.

முந்தைய நூற்களை வாங்கி எங்கள் முயற்சிக்கு துணை செய்த சன்மார்க்க அன்பர்கள் இந்நூலையும் பெற்று வாழ்க்கைப் பயன் எய்த எல்லாம் வல்லான் றனையே ஏத்துவோமாக.

வேலூர்,
6—7—68

ஊ. வ. தட்சணாமூர்த்தி
தலைவர், வ. ஆ. மாவட்ட சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்.

திருச்சிற்றம்பலம்

# உரை ஆசிரியர் முன்னுரை

திருவருள் துணையினால் நம் வள்ளலாரின் திருவருட்பா உரைநூல் வரிசையில் பதின்மூன்றாவது உரை நூலாக வடிவுடை மாணிக்கமாலை உரைநூல் வெளிவருகிறது. உரைநூல் வரிசையில் இது பதின்மூன்றாவதாக அமைந்தாலும், திருவருட்பா முதல் திருமுறையில் இஃது ஏழாவது நூலாகும்.

வடிவுடை மாணிக்கமாலை இறைவியின் திருவருளைப் பெறுதற்குப் பெருந்துணையாக இருக்கிறது. இஃது உண்மை; வெறும் புகழ்ச்சி அன்று. இந்த நூலில் மற்றும் ஒரு தனிச் சிறப்புளது. அஃதாவது இந்நூல் திருஒற்றியூர் இறைவியைப் புகழ்ந்து பேசுவதே பெரு நோக்கமாகக் கொண்டிருந்தாலும், ஊடே ஊடே திருஒற்றீசருடைய புகழும் இணைத்துப் பாடப் பட்டதாகும். ஆகவே, இதனை அம்மை அப்பர் திருவருளை பெறுதற்கும் துணையாய் உள்ளது என்றுகூடக் கருதலாம். முதல் பாட்டு விநாயகர்மீது பாடப்பட்ட காப்புச் செய்யுளாம்.

இந்நூலில் தேவியைச் சீரிய சொல்லாலும், தொடராலும், வரியாலும் விளித்துப் பாடியுள்ள முழுப்பாடல்கள் பற்பல. அவையே 1, 2, 3, 4, 6, 7, 8, 9, 10, 34, 35, 36, 41, 50, 52, 53, 54, 55, 56, 57, 58, 59, 62, 63, 72, 73, 75, 82, 83, 84, 87, 88, 89 என்னும் எண்ணுள்ள பாடல்கள் என்க.

இந்நூலில் திருஒற்றியூர்ப் பெருமான் புகழ்நிறைந்த பாடல்களின் எண்கள் 5, 11, 12, 22, 34, 36, 48, 89, 93 என்பன. இவையே அன்றி இறைவன் ஒற்றித்தியாகர்,

ஒற்றிப்பூரணர், ஒற்றி வாழ்க்கைச் சிலையான், ஒற்றிப்புண்ணியர், தனைஆள்பவர் இன்றி நிற்கும் பரமன், அனைப் பொறுத்தான் புகழ் ஒற்றி நன் நாயகன், மதியின் தேய் குற்றம் மாற்றும் திருஒற்றியூர் நாதர், ஒற்றிப் பரமசிவம், எளியார்க்கெளியர் திருஒற்றியார், முன் நால்வர்க்கருள் ஒற்றி எம்மான், சீதரன் ஏத்தும் திருஒற்றிநாதர், தாமம்படர் ஒற்றியூர்வாழ் பவளத் தனிமலை என்னும் அரிய தொடர்களாலும் இதில் புகழப்பட்டுள்ளனர்.

திருஒற்றியூர், இந்த நூலில் சீர்கொண்ட ஒற்றிப்பதி, ஒற்றி அம்பதி, பீடார் திருஒற்றி, சோலையிட்டார் வயல் ஒற்றி, மன்னின்ற ஒற்றி, எழில் ஒற்றி, காமட்டலரும் ஒற்றி, மூப்போதும் அன்பர்கள் வாழ்த்து ஒற்றியூர், வேடார் பொழில் ஒற்றியூர், உன்னும் திருஒற்றியூர், காநந்த ஓங்கும் எழில்ஒற்றி, திணம் கடந்தோர் புகழ் ஒற்றி, மல்லார் வயல் ஒற்றி, செழுவார் மலர்ப்பொழில் ஒற்றி, செய்யகம் ஓங்கும் திருஒற்றியூர், தரும்பேர் அருள் ஒற்றியூர், மன்போல் உயர் ஒற்றி, சொல்தேர் அறிஞர் புகழ் ஒற்றி, மங்கலம் கொள் ஒற்றி, மல்போர் பெறும் ஒற்றி, தேருச் சிறியார்க்கரிதாம் திருஒற்றி, மற்றோர் அணி ஒற்றி, பொன்னேர் பொழில் ஒற்றி, மல்லார் பொழில் ஒற்றி, வளம் திறம்பா ஒற்றி, பூந்தோரணம் பூத்த எழில் ஒற்றி, மடைமன்னும் நீர் ஒற்றி, மல்பதம் சேர் ஒற்றி, மன்தேர் எழில் ஒற்றி என்று புகழப்பட்டுள்ளது.

இம் மாலையில் கந்தபுராணச் செய்திகளும், திருவிளையாடல் புராணச் செய்திகளும் 8, 21, 29, 60 எண்ணுள்ள பாடல்களில் காணப்படுகின்றன. கண்ணப்பர், திருஞான சம்பந்தர், சுந்தரர், நால்வர் பற்றிய குறிப்புகளை 13, 35, 53, 71, 91 எண்ணுள்ள பாடல்களில் காண்க. முருகனைப்பற்றி 53, 54, 78ஆம் பாடல்கள் குறிப்பிடுகின்றன.

இறைவி, திருமால், இலக்குமி, சரசுவதி முதலியோரால் வணங்கப்படுவள் என்பது, இந் நூலிலுள்ள 6, 8, 42, 44 எண்ணுள்ள பாடல்களால் தெரியவருகிறது.

இறைவனும் ஊடல் காலத்தில் இறைவியை வணங்கினான் என்பதை 48வது பாடலில் நம் ஐயா குறிப்பிடுகின்றார்.

இலக்கியங்களில் நகைச்சுவை அமையப் பாடுவது புலவர்களின் மரபு. இந்த மரபு தோத்திர நூல்களிலும் காணப்படுகின்றது. இந்த மரபுக்கு ஏற்ப வள்ளலார் நகைச்சுவை அமைத்துப் பாடியுள்ள பாடல்களை இந் நூலின் 13, 15, 20, 21, 22, 23, 24, 25, 49 எண்களில் காணலாம்.

இறைவியின் கற்பின் மேம்பாடும், வாழ்வரசியாக வயங்கும் சிறப்பும் 14, 30 பாடல்களில் துலங்குகின்றன.

55வது பாட்டில் ஒரு நல்ல பழமொழி பொருந்தியுளது. உருவக அணிக்கு உதாரணமாக 9வது, 86வது பாடல்களை எடுத்துக் காட்டலாம்.

திருமால், அலைமகள், கலைமகள் பற்றிய அரிய குறிப்புகளை 6, 8, 11, 12, 16, 17, 18, 19, 44 எண்ணுள்ள பாக்களில் இந்நூல் எடுத்து இயம்புகிறது.

இறைவியின் உண்மை நிலைகளை 28, 33, 50, 51, 74 எண்ணுள்ள செய்யுட்களில் நம் ஐயா குறித்துள்ளனர்.

இறைவியைப் புகழ்பவர் அடையும் பேற்றையும், புகழாதவர் உறும் சிறுமையையும் 37, 43, 90 எண்ணுள்ள பாடல்களில் உய்த்து உணர்ந்து கொள்க.

இறைவியிடம் நம் ஐயா வேண்டுகோள் முறையில் இந் நூலில் பாடியுள்ள பாடல்களை 27, 32, 46, 61, 64, 65,

66, 67, 68, 69, 70, 76, 77, 78, 79, 80, 81, 86, 92, 93, 94, 95, 97, 99, 100 என்னும் எண்களில் காணலாம்.

இந்த உரையில் மீனாட்சி அம்மன் பிள்ளைத்தமிழ், அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ், மங்களாம்பிகை பிள்ளைத்தமிழ், அபிராமி அந்தாதி, பெரியநாயகி அம்மை கழிநெடிலடி ஆசிரிய விருத்தம், பெரியநாயகி அம்மை கலித்துறை முதலான இறைவியைப்பற்றிப் பாடியுள்ள நூல்களிலிருந்து மேற்கோள் காட்டப்பட்டிருத்தலை ஊன்றி நோக்கவும். இவைகளே அன்றி மேலும் ஐம்பது நூற்களிலிருந்து பல மேற்கோள்கள் காட்டப்பட்டுள்ளன.

பல அரிய குறிப்புகள் கருத்துகள் அடங்கிய வடிவுடை மாணிக்கமாலை என்னும் நூலுக்கு உரை எழுதும் பேற்றினை அளித்த அருட்பெருஞ்சோதி தனிப்பெருங் கருணையாம், அம்மை அப்பருடைய பொன்னார் திருவடிகளை வந்தித்து வாழ்த்தி வணங்குகின்றேன்.

இவ்வுரை வெளிவரக் காரணமாக இருக்கும் வட ஆர்க்காடு மாவட்ட வேலூர் சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கத்தார்க்கும் என் உளம் கனிந்த நன்றி உரியதாகும்.

"அம்மை அப்பர் அகம்"
43, விசயவிக்னேசுவரர்
கோவில் தெரு,
சூளை, சென்னை-7.
6—7—68.

இங்ஙனம்,

பாலூர் கண்ணப்ப முதலியார்.

வேலூர் வேலப்பாடி,

உயர்திரு குருவப்ப முதலியார் அவர்களின்

வாழ்க்கைத் துணைவியார்



# திருமதி பாக்கியம்மாள்

## நினைவு மலர்

திருச்சிற்றம்பலம்

# வடிவுடை மாணிக்கமாலை

## தோற்றுவாய்

பூந்தமிழ் மொழியில் தொண்ணூற்றாறு வகையான பிரபந்தங்கள் பொலிவுற்று விளங்குகின்றன. அவையே, பிள்ளைத்தமிழ், கலம்பகம், அந்தாதி, கோவை, உலா, தூது, பரணி, மாலை, தசாங்கம், சதகம் முதலியன. இவ்வாறு பாடப்படும் நூல்களுக்குரிய இலக்கண விதிகளைப் பாட்டியல் என்னும் நூலில் பரக்கக் காணலாம். ஒல்காப் பெருமை வாய்ந்த தொல்காப்பியத்தில் இத்தகைய பிரபந்தங்கட்குரிய இலக்கணங்கள் வெளிப்படையாகக் கூறப்படவில்லை என்றாலும், குறிப்பினால் இப்பிரபந்தங்கட்குரிய இலக்கணமும் தொல்காப்பியத்தில் உண்டு என்று கூறலாம்.

"ஊரொடு தோற்றமும் உரித்தென மொழிப" என்னும் தொல்காப்பிய நூற்பா உலாப் பிரபந்தத்திற்குரிய இலக்கணத்தை உணர்த்தும் முறையில் அமைந்துளது என்பதை, உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர், "அது பின்னுள்ளோர் ஏழு பருவமாகப் பகுத்துக் கலிவெண் பாட்டாகச் செய்கின்ற உலாச் செய்யுளாம்" என்று விளக்குவதால் அறியவருகிறது. இவ்வாறே, "குழவி மருங்கினும் கிழவதாகும்" என்னும் தொல்காப்பிய நூற்பாவிற்கு நச்சினார்க்கினியர் விளக்கம் தரும்போது "ஒருதிங்களில் குழவியைப் பற்றிக் கடவுள் காக்க" என்று கூறுதலானும், "பாராட்டுமிடத்துச் செங்கீரையும், தாலும், சப்பாணியும், முத்தமும், வரவுரைத்தலும், அம்புலியும், சிற்றிலும் சிறுதேரும், சிறுபறையும் எனப் பெயரிட்டு வழங்குதலானும் என்பது" என்று

" அடி அடி தோறும் ஐஞ்சீர் ஆகி
முதல்சீர் நான்கும் வெண்தளை பிழையாக்
கடையொரு சீரும் விளங்காய் ஆகி
நேர்பதி னாறே நிரைபதி னேழ்என்று
ஓதினர் கலித்துறை ஓர்அடிக் கெழுத்தே "

என்னும் நூற்பா கட்டளைக் கலித்துறைக்குரிய இலக்கணத்தை அறிவிப்பதாகும்.

இந்த இலக்கண விதிக்குச் சிறிதும் தவறாத நிலையில் வடிவுடை மாணிக்க மாலையில் அமைந்த கட்டளைக் கலித்துறைப் பாக்கள் அமைந்திருப்பதைக் கண்டு உணரலாம்.

வெண்சீர் வெண்தளை, இயற்சீர் வெண்டளை, நேர் அசை, நிரை அசை ஆகிய இவற்றின் விளக்கங்களைத் தெளிவுற அறிய விரும்பின் யாப்பிலக்கண நூலில் காண்க.

மாலை என்றதும் நமக்குப் பூமாலைதான் நினைவுக்கு வரும். ஆனால், ஈண்டு மாலை என்பது பாமாலையாகும். பூமாலை எங்ஙனம் மலர்களால் தொடுக்கப்படுகிறதோ அதுபோலப் பாமாலை பாக்களால் தொடுக்கப்படுவது. இறைவனுக்கும் இறைவிக்கும் பூமாலையினிடத்து இருக்கின்ற விருப்பத்தைக் காட்டிலும், பாமாலையினிடத்து வேட்கை மிகுதி. இது குறித்தே சிவபெருமான் சுந்தரரை நோக்கி "அன்பில் பெருகிய சிறப்பில் மிக்க அர்ச்சனைப் பாட்டே ஆகும். ஆதலால் மண்மேல் நம்மைச் சொற்றமிழ் பாடுக" என்று அன்புக் கட்டளை இட்டனர். தாயுமானவரும் இந்த உண்மையினை,

" பல்மாலைத் திரள்இருக்கத் தமையு ணர்ந்தோர்
பாமாலைக் கேநீதான் பட்சம் என்று
நல்மாலை யாஎடுத்துச் சொன்னார் நல்லோர்
நலம்அறிந்து கல்லாத நானும் சொன்னேன்
சொல்மாலை மாலையாக் கண்ணீர் சோரத்
தொண்டனேன் எந்நாளும் துதித்து நிற்பேன்
என்மாலை அறிந்திங்கே வாவா என்றே
எனைக்கலப்பாய் திருக்கருணை எம்பி ரானே "

என்று பாடி இருத்தலைக் காண்க.

இந்தப் போக்கினை உளங்கொண்டே நம் ஐயா, தம் பாமாலையைத் திருஒற்றியூர் வடிவுடை மாணிக்க அம்மையார் மீது அன்புடன் புனைந்து அவ்விறைவியார் திருவடிகளில் சூட்டியுள்ளனர். இதனை அவர் தம் திருவாக்கினாலேயே "வடிவாம்பிகை மலர் அடிக்குத் தார்கொண்ட செந்தமிழ்ப் பாமாலை சாத்த" என்று காப்புச் செய்யுளில் குறித்துள்ளனர். நம் வள்ளலார் இறைவியின்மீது இம்மாலையே அன்றித் தில்லைச் சிவகாமி அம்மையின்மீது திருப்பதிகம் என்னும் தலைப்பில் ஓர் அடிக்குப் பதினாறு சீர் கொண்ட கழிநெடிலடி ஆசிரிய விருத்தமாகப் பத்து விருத்தப் பாடல்களைப் பாடியுள்ளனர். மேலும் இந்தச் சிவகாமி அம்மையின் மீதே சிற் சத்தி துதி என்னும் தலைப்பில் அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தப்பாவில் பத்துப் பாடல்களைப்பாடி யுள்ளனர். திருவதிகையில் திருக்கோயில் கொண்டுள்ள பெரியநாயகி அம்மையின்மீது மூன்று பாடல்களைப் பாடியுள்ளனர். அவற்றுள் முதல் தோத்திரப்பா கலி விருத்தத்தால் ஆயது. ஏனைய இரு தோத்திரப் பாடல்கள் பன்னிரு சீர்களால் அமைந்த கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தால் ஆனவை.

இவ்வாறு இறைவிமீது பாடப்பட்ட பாடல்களுள் பத்திச் சுவையும், இலக்கியச் சுவையும், நகைச் சுவையும் நிறைந்த நூல், வடிவுடை மாணிக்க மாலையே ஆகும்.

இதில் இறைவன், இறைவியின் சொருப தடத்த லட்சணங்களும், இறைவியின் இறைமைப் பண்பும், இம்மைப் பயனுடன் அம்மைப் பயன் அடைதற்குரிய வழிவகைகளும் பொதிந்து விளங்குவதை நன்கு உணரலாம். முழுமையும் இறைவியினைப் பல பெயர்களால் விளித்துப் பாடப்பட்ட பாடல்கள் பல இதில் உள்ளன. இந்த உண்மைகளை இனி வரும் பாடல்களிலும், உரை விளக்கங்களிலும் காண்போமாக.

திருச்சிற்றம்பலம்.

திருச்சிற்றம்பலம்

# நூல்

## காப்பு

### விநாயகர் வணக்கம்

**சீர்கொண்ட ஒற்றிப் பதியுடை யான்இடம் சேர்ந்தமணி**
**வார்கொண்ட கொங்கை வடிவாம் பிகைதன் மலர்அடிக்குத்**
**தார்கொண்ட செந்தமிழ்ப் பாமாலை சாத்தத் தமியனுக்கே**
**ஏர்கொண்ட நல்அருள் ஈயும் குணாலய ஏரம்பனே.**

(பொழிப்புரை.) "சிறப்புடைய திருஒற்றியூரில் எழுந்தருளியுள்ள படம்பக்க நாதனது இடப்பக்கத்தே வீற்றிருக்கும் அழகிய கச்சு அணிந்த கொங்கையினையுடைய வடிவாம்பிகையின் திருவடி மலர்களுக்கு மாலையாகச் செந்தமிழால் ஆகிய பாமாலையைச் சூட்ட அடியேனுக்கு அழகினைத் தன்னகத்தே கொண்ட எட்டுக் குணங்களுக்கு இருப்பிடமாக உள்ள விநாயகப் பெருமான் எனக்கு நல்ல திருவருளைத் தந்து காப்பாற்றுவாராக" (என்பது)

(அருஞ்சொல்) சீர் - சிறப்பு. பதி - ஊர். மணி - அழகிய. வார் - கச்சு. கொங்கை - முலை. தார் - மாலை. ஆலயம் - இருப்பிடம். தமியேன் - அடியேன், ஏழை. ஏர் - அழகிய. ஏரம்பன் - யானைமுகக் கடவுளாம் விநாயகர்.

(இலக்கணக் குறிப்பு) மலர் அடி, உவமத் தொகை. பாமாலை, மூன்றும் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை ஆலயம் = குணாலயம் வடமொழிப் புணர்ச்சி.

(விரிவுரை.) காப்பு என்பது வடமொழியில் இரட்சை என்று கூறப்படும். புலவர்கள் தாம் ஒரு நூலைப் பாடத் தொடங்கும்போது, அந்நூல் இனிது முடிதல் பொருட்டுத் தாம் வழிபடு கடவுளை வணங்கித் தொடங்குதல் தொன்று தொட்ட மரபாக வந்துகொண்டிருக்கிறது. இவ்வாறு பாடி வரும் மரபைத் தற் சிறப்புப்பாயிரம் என்றும் கூறுவர். தற் சிறப்புப் பாயிரமாவது,

"தெய்வ வணக்கமும் செயப்படு பொருளும்
எய்த உரைப்பது தற்சிறப்புப் பாயிரம்"

என்பது. இந்த இலக்கண மரபை ஒட்டியே "சீர்கொண்ட ஒற்றிப்பதி" என்னும் காப்புச் செய்யுள் பாடப்பட்டுள்ளது. "தமியேனுக்கு ஏர்கொண்ட நல்அருள் ஈயும் குணாலய ஏரம்பனே" என்பது தெய்வ வணக்கம். "வடிவாம்பிகைதன் மலரடிக்குத் தார்கொண்ட செந்தமிழ்ப் பாமாலை சாத்த" என்பது செயப்படுபொருள். வடிவாம்பிகை என்பது திருவொற்றியூர்த் திருத்தேவியாரின் திருப்பெயர்.

திருஒற்றியூர் தொண்டை நாட்டுப் பாடல்பெற்ற சைவத் தலங்கள் முப்பத்திரண்டனுள் ஒன்று. இது சென்னைக்கு வடக்கே ஐந்து கல் தொலைவில் உள்ளது. இத்தலத்தை அடைய பேருந்தி (பஸ்) வண்டிகளும், இரயில் வசதியும் உண்டு.

திருஒற்றியூர் என்று இத்தலம் வழங்கப்படுதற்குரிய காரணம் மிகவும் வியத்தற்குரியதாகும். மாந்தாதா என்னும் சூரிய வம்சத்து மன்னன், தான் செய்த சிவ புண்ணிய வசத்தால் ஆயுள் நீடிக்கப்பெற்றான். அதனால், மூப்பு மிகுதியும் உற்றுத் துன்புறலானான். அந் நிலையில் தான் அளித்துவந்த கோயில்களின் படித்தரத்தைக் குறைக்குமாறு ஓலை எழுதினான். அங்ஙனம் தினசரிப் படித்தரத்தைப்

பெற்ற தலங்களுள் திருஒற்றியூரும் ஒன்று. அவ் ஓலையின், திருஒற்றியூர்த் தியாகேசன் திருவருளால் "திருஒற்றியூர் நீங்கலாக" என்னும் தொடர் கட்டளை பிறப்பித்த அரசனாலும், எழுதியவர்களாலும் அறிந்துகொள்ள முடியாத நிலையில் அமைந்துவிட்டது. இந்தவாறு ஓலையில் பதிவான காரணத்தால் (அதாவது திருஒற்றியூர் மட்டும் ஒற்றிவைக்கப் பட்டமையினால்) இத்தலம் ஒற்றியூர் என்னும் பெயரைப் பெற்றது. திரு என்பது ஒற்றியூர் என்பதனைச் சிறப்பிக்கும் அடைமொழி. இங்ஙனம் திருஒற்றியூர்த் தியாகர் மாந்தாதா எழுதுவித்த ஓலையில் உள்ள எழுத்துகளை அறிந்து மாற்றம் செய்ததால் திருவொற்றியூர்ப் பெருமான் என்றும், எழுத்தறியும் பெருமான் என்றும் அழைக்கப்பட்டனர்.

மேலே கூறிய வரலாற்றைச் சிறிது மாற்றியும் கூறுவர். அதாவது, அரசன் தனது ஆட்சிக்குட்பட்ட ஊர்கட்கு இந்த அளவுக்கு வரிப்பணம் கட்டவேண்டுமென்று எழுதிச் சுற்றறிக்கையாக அனுப்பினான். அப்படி வரி விதிக்கப்பட்ட ஊர்களில் திருஒற்றியூரும் ஒன்றாகும். ஆனால் இறைவன் திருவருளால் அச்சுற்றறிக்கை ஓலையில் எழுதப்பட்ட வரிகள் பிளவுபட்டு அவற்றின் இடையே "இவ்வாணை ஒற்றியூர் நீங்கலாக" என்று எழுதப்பட்டுவிட்டது. இவ்வாறு எழுதப் பட்டதை அரசனோ, அவ்வாணையை எழுதிய எழுத்தாளர் களோ அறிந்திலர். ஆகவே, வரிகட்டுதல் வேண்டும் என்னும் விதியிலிருந்து, இத்தலம் ஒற்றிவைக்கப்பட்டமை யின், இது திருஒற்றியூர் என்னும் பெயரைப் பெற்றது என்பதாம். இந்த அற்புத நிகழ்ச்சியைச் சேக்கிழார் பெரு மானார், "ஏட்டு வரியில் ஒற்றியூர் நீங்கல் என்ன எழுத்தறியும் நாட்டம் மலரும் திருநுதலார்" என்று எடுத்து மொழிந் துள்ளனர். இந்த வரலாற்றை உளத்தில் கொண்டே நம் வள்ளலார், எழுத்தறியும் பெருமான் மாலை என்னும் பெயரில் ஒரு நூற்று முப்பத்தொரு பாடல்களில் பாடியுள்ளமை காண்க.

"சங்குடையான் தாமரையான் தாள்முடியும் காண்பரிதாம்
கொங்குடைய கொன்றைக் குளிர்சடையாய் கோதைஒரு
பங்குடையாய் ஏழைமுகம் பாராது தள்ளிவிட்டால்
எங்கடைவேன் ஐயா எழுத்தறியும் பெருமானே"

என்பது அந்நூலில் உள்ள ஒரு பாடல்.

கடல் ஒற்றிச் சென்றதால் இப்பெயர் பெற்றது என்பாரும் உளர்.

பதும கற்பத்தின் பிரளய காலத்தில் தனக்குத் திருவருள் புரியப் பிரமன் தவம் செய்தான். அவனது யோகாக்கினி மத்தியில் இறைவன் விசித்திர வடிவமான பலகை வடிவில் தோன்றி அவ்வக்கினியையே கோவிலாகக் கொண்டனன். அங்ஙனம் கொண்டு பிரளய வெள்ளத்தை ஒற்றி (தள்ளி)ப் போகும்படி ஆணை இட்டமையின், இத்தலம் திருஒற்றியூர் எனும் பெயரைப் பெற்றது என்று கூறுதலும் உண்டு.

இறைவர் படம்பக்கநாதர் என்று அழைக்கப்படுவார். வாசுகி என்னும் பாம்பு உபமன்யு முனிவரிடம் சிவதீட்சை பெற்று, ஒற்றியூர் இறைவனை வழிபட்டது. அப்பாம்பை இறைவர் தம் திருமேனியில் ஐக்கியம் செய்து கொண்டனர். இதுபோது திருஒற்றியூர்ப் பெருமானின் மூல உருவில் பாம்பு வடிவம் காணப் படுவதைக் கண்டு களிக்கலாம்.

திருவள்ளுவருக்கு மாணவராக அமையும் பேறுபெற்ற ஏலேல சிங்கச் செட்டியார் அரசனுக்குச் செலுத்தவேண்டிய கப்பப் பணம் இல்லாமையால் துயருற்று, ஒற்றியூர்ப் பரமனிடம் முறைஇட அப்பெருமான் மாணிக்கம் ஒன்றை ஈந்து கப்பம் கட்டுமாறு செய்தனர். அங்ஙனம் மாணிக்கம் தந்து திருவருள் புரிந்தமையினால், இறைவர் மாணிக்கத் தியாகர் எனும் பெயரைப் பெற்றனர்.

மேலும் ஆதிபுரீஸ்வரர், புற்றிடம் கொண்டார் என்னும் பெயர்களும் ஒற்றித் தியாகருக்கு உண்டு. திருஒற்றியூர் ஆதிபுரி என்று கூறப்படுவதனால், இத்தலத்து இறைவனை ஆதிபுரீஸ்வரர்என்றும், இறைவரின் கரு அறை (மூலட்டானம்) பாம்புப்புற்று வடிவில் திகழ்தலின் புற்றீசர் என்றும் பெயர் பெற்றனர் என்று காரணம் கூறுவர். இறைவர் புற்றிடம் கொண்டவர் ஆதலின் அவர்மீது என்றும் கவசம் இடப்பட்டிருக்கும். அக்கவசம் ஒவ்வொரு கார்த்திகை பௌர்ணமி தினத்தன்றும், அதற்கு அடுத்த இரண்டு நாள்களிலும் மட்டும் எடுக்கப்படும். அந்தச் சமயத்தில் இறைவர் புற்றாக இருக்கும் நிலையினை நேரில் கண்டு களிக்கலாம். கவசம் சாத்தப்பட்டிருக்கும்போது புற்றின் ஒரு பகுதியை மட்டும் பார்க்கலாம்.

இத்தலத்து விருட்சம் மகிழமரமாகும். இம்மரத்தடியில் தான் சுந்தரர் சங்கிலியாரை மணக்கும்போது "திருஒற்றியூர் எல்லையை விட்டுப் பிரிவதில்லை" என்று சத்தியம் செய்து கொடுத்தனர். இவ்விழா மகிழடிசேவை என மாசி மாதத்தில் சிறப்பாக நடத்தப்படுகிறது.

இங்குள்ள தீர்த்தங்கள் அலைவாய் (கடல்) தீர்த்தம், பிரம்ம தீர்த்தம் என்பன. அலைவாய் இத்தலத்திற்கு அருகில் இருப்பதால் கடலும் தீர்த்தமாயிற்று. "உகைக்கும் தண் கடல் ஓதம் வந்துலவும் ஒற்றியூர்" என்று ஆளுடைய நம்பிகள் பாடுதல் காண்க

இத்தலத்தில் தொண்டைமான், மாந்தாதா, ரோமச முனிவர், நந்திதேவர், திருமால், பிரம்மன், வால்மீகிமுனிவர், சந்திரன், வாசுகி, சேடன், லவன், ஐந்தருக்கள் (மரங்கள்) ஆகியோர் பூசித்துப் பேறு பெற்றுள்ளனர். கோவிலுக்குள், யோக தட்சணாமூர்த்தி வடிவத்தையும், ஏகபாத மூர்த்தியின் திருவுருவத்தையும் கண்டு களித்தல் வேண்டும். மாசி மாதப்

பெருவிழாவில் ஒன்பதாம் நாள் திருக்கல்யாண விழாவில் அகத்தியர்க்குக் காட்சி தந்த விழா மிகச் சிறப்பாக நடைபெறும்.

இத்தலத்தின் நடன தரிசனம் விசேடமானது. எக் காரணம் கொண்டும் மாணிக்கத் தியாகர் பகல் காலத்தில், வெளியே பவனி வரமாட்டார். இங்குள்ள தியாகர் மாசி மாதம் பெருவிழாவில் ஆரும் நாள் இரவு நடனக் காட்சியை அன்பர்களுக்கு அளிக்கின்றனர். இதுவே ஆரும் பவனி எனப்படும். இது சிறப்பான விழாவாகும். ஐந்தாம் பவனியும் விசேடமானது. இந்த நடன விழா நந்திதேவர் பொருட்டு நிகழ்வது. நந்திதேவர் இந்த நடனத்தை மகா கயிலாயத்தில் சந்தியா காலத்தில் (மாலைச் சந்தி) பிரதோட காலத்தில் கண்டு களித்தவர். நந்திதேவர் கயிலாயத்தில் கண்ட நடனம் ஆடும் நடனம் ஆகும். நந்தி தேவர் இறைவரை நோக்கி "பெருமானே! அமர்ந்து இருந்து அசையும் நடனத் தைத் திருஒற்றியூரில் செய்ய வேண்டு" மென்று விண்ணப் பித்துக் கொள்ள அவ் வேண்டுகோட் கிசைய அத்தகைய அசைந்தாடும் நடனத்தை இங்குப் புரிகின்றார். இதனைத் திருமால், பிரம்மன், ரோச முனிவர் ஆகியோர் கண்டு களிப்பர் என்பது கூறப்படுகிறது.

இந்தக் காட்சியினை நம் வள்ளலாரும் கண்டு களித்து இக்காட்சியின் சிறப்பைத் திருவுலாப் பேறு, திருவுலா வியப்பு, திருவுலாத் திறம், திருக்கோலச் சிறப்பு, காதல்மாட்சி என்னும் தலைப்புகளில் பல பாக்களைப் பாடி இன்புற்றுள்ளார். அவற்றுள் ஒரு பாடல்,

"சீரார் வளம்சேர் ஒற்றிநகர்த்
தியாகப் பெருமான் பவனிதனை
ஊரா ருடன்சென் றெனதுநெஞ்சம்
உவகை ஓங்கப் பார்த்தனன்காண்

வாரார் முலைகள் மலைகள்என
வளர்ந்த வனைகள் தளர்ந்தனவால்
ஏரார் குழலாய் என்னடிநான்
இச்சை மயமாய் நின்றதுவே''

என்பது. மேலும், தியாகர் தம் பவனியில் விரைந்து ஓடுதலை வியந்து,

''திடநால் மறையார் திருஒற்றித்
தியாகர் அவர்தம் பவனிதனை
மடனும் அகன்று காணவந்தால்
மலர்க்கை வளைக ளினைக்கவர்ந்து
படனு கணியார் நமைத்திரும்பிப்
பாரார் தோடு கின்றார்நாம்
உடனு ஓடி னும்அவர்
ஓட்டம் பிடிக்க ஒண்ணதே''

என்று பாடியுள்ளனர். விழாவின்போது இவ்வாறு தியாகர் ஓடுதலை இன்றும் நேரே கண்டு களிக்கலாம்.

திருஒற்றியூர்க் கோவிலுக்குள் பல இலிங்கங்கள் உள்ளன. புற்றிடங் கொண்டார் சந்நிதிக்கு வடக்கே ஆதிபுரீஸ்வரர் (ஆதிலிங்கேஸ்வரர்) ஆலயம் ஒன்று உண்டு. இது புதிதாகக் கட்டப்பட்டது. அழகிய சிற்ப வேலைப்பாடு களுடன் கூடியது. இங்குச் சுந்தரரும் சங்கிலிநாச்சியாரும் மணக்கோலத்துடன் காட்சி அளிக்கும் உருவங்களைக் காணலாம்.

திருஒற்றியூர் எழுத்தறியும் பெருமான் சந்நிதியின் உட் பிராகாரத்தில் ஆதிசங்கரர் உருவத்தையும், இலகுலீசர் உருவத்தையும் கண்டு களிக்கலாம். மூலத்தானத்தின் மேலே அமைந்துள்ள விமானம் இராசேந்திர சோழனல் கட்டப்பட்டது. உள் கோயிலைச் சுற்றி வரும்போது வட்ட

பலி நாச்சியார் என்னும் பெரிய துர்க்கையின் கோயில் உளது. இச் சந்நிதிக்கு முன்பு ஒரு வட்ட வடிவக் கிணறு காணப்படுகிறது. அக்கிணறு ஒரு வட்டமான பாறையினால் மூடப்பட்டிருக்கிறது. இதனால் இக்காலத்தார் வட்டப்ப நாச்சியார் கோவில் என்பர். இவ்வம்மையாருக்குச் சித்திரை மாதம் பதினெட்டுநாள் திருவிழா நடக்கும். இந்நாச்சியார் மிகவும் உக்கிரமுடையவளாக இருந்தமையினால், சங்கரர் மந்திர சக்தியால் இவ்வம்மையின் உக்கிரத்தை அடக்கி இத் தேவிக்கு எதிரே உள்ள கிணற்றில் இறக்கிப் பாறையால் மூடிவிட்டனர் என்னும் செவி மரபு செய்தி கூறப்படுகிறது. இக் கோவிலுக்குள் பல சிறு சிறு கோவில்களும் உள்ளன.

சந்நிதித் தெருவில் அகத்தீஸ்வரர் கோவில் எனும் பெயரில் ஓர் ஆலயம் உண்டு. இங்கு இரண்டு சுரங்க அறைகள் இருப்பனவாகக் கூறுவர். இங்குள்ள இறைவர் அகத்தீஸ்வரர். தேவியார் அகிலாண்டேஸ்வரி.

இத்தலத்தில் சங்கிலியார் என்னும் பெயருடைய அம்மையார் இறைவனுக்குப் பூத்தொடுக்கும் தொண்டில் ஈடுபட்டு வந்தார். இவ்வம்மையாரைச் சுந்தரர் கண்டு மணக்க விரும்பி இறைவரிடம் வேண்டினார். அவ் வேண்டுதலின் பயனாகச் சங்கிலியார் தம்மை விட்டுப் பிரிவதில்லை என்று சுந்தரர் சத்தியம் செய்தால் மணப்பதாகக் கூற, அவ்வாறே சுந்தரர் சபதம் செய்து சங்கிலியாரை மணந்தார். சின்னாள்களுக்குப் பிறகு சுந்தரர் தம் வாக்கை மீறித் திருவாரூருக்குப் போகத் தீர்மானித்து திருஒற்றியூர் எல்லையைத் தாண்டிக் காலடி வைத்தார். அப்படி வைத்த இடமே இதுபோது காலடிப்பேட்டை என்று வழங்கப்படுகிறது. இங்குள்ள திருமால் கோயிலின்

வைகாசி கருட சேவை காஞ்சி வரதரின் கருட சேவையைப் போன்ற சிறப்புடையது.

திருஒற்றியூரில் சக்கரப்பாடி என்னும் தெருவில் வாணியர் குலத்தில் பிறந்த சிவபத்தர் ஒருவர் இருந்தார். அவர் பெயர் கலியர் என்பது. அவர் கோயிலுக்கு விளக்கு ஏற்றும் தொண்டில் ஈடுபட்டவர். எண்ணெய் விற்றுத் தேடிய பொருள் நாளுக்கு நாள் குறைந்தது. ஆனால், அன்பர் தம் தொண்டை முட்டின்றி நடத்தி வந்தார். கூலி வேலை செய்து எண்ணெய் விற்றும் தொண்டு செய்தனர். எண்ணெய் கொடுத்து விற்கச் செய்யும் பணியினையும் அவர் மரபினர் நிறுத்தி விட்டனர். தம் தொண்டுக்குத் தடை வரா திருக்கத் தம் மனைவியாரை விற்க விலை கூறினர். அவ்வம்மையாரை வாங்க எவரும் முன் வந்திலர். ஆகவே எண்ணெய் வாங்கப் பொருள் இல்லாமல் தத்தளித்தார். என்றாலும், மனம் தளராமல் கோவிலுக்குள் சென்றார், அகல்களுக்கு வர்த்தி இட்டனர். எண்ணெய்க்குப் பதிலாகத் தம்மை அறுத்து அதன் வழியே வரும் செந்நீரைக் ஊற்றி விளக்கெரிக்கக் கத்திக்கொண்டு அறுத்துக் கொண்டனர். இந்நிலையில் திருவொற்றியூர்ப் பெருமான் தோன்றிக் காட்சி தந்தனர். அறுப்புண்ட இடமும் மறைந்தது; குருதியும் நின்றது. இறைவர் அவருக்குத் திருவருள் புரிந்தனர். அவரே கலிய நாயனார் ஆவார்.

பட்டினத்தார் தமக்கு முத்திதரும் தலம் எது என்று இறைவரைக் கேட்டபோது, அவர்க்கு ஒரு பேய்க் கரும்பைத் தந்து, "இக் கரும்பு எத் தலத்தில் இனிக்கிறதோ, அத்தலமே உனக்கு முத்தி தரும் தலம்" என்று திருவருள் புரிந்தார். அவ்வாறே பட்டினத்தடிகள் இத்தலத்துக்கு வந்து அக்கரும்பைக்

கடித்தபோது அஃது இனிக்கக் கண்டனர். இதனை அவரே,

" கண்டம் கரியதாம் கண்மூன் றுடையதாம்
அண்டந்தைப் போல அழகியதாம்—தொண்டர்
உடல்உருகத் தித்திக்கும் ஓங்குபுகழ் ஒற்றிக்
கடல்அருகே நிற்கும் கரும்பு "

என்று பாடி இருக்கின்றனர். இத்தலம் அவருக்குச் சிவ மயமாகக் காட்சி அளித்ததையும்,

" வாவிஎலாம் தீர்த்தம் மணல்எல்லாம் வெண்ணீறு
காவணங்கள் எல்லாம் கணநாதர்—பூவுலகில்
ஈது சிவலோகம் என்றென்றே மெய்தவத்தார்
ஓதும் திருவொற்றி யூர் "

என்றும் சிறப்பித் துள்ளனர். மேலும் அவர் திருஒற்றியூரின் மாண்பினை,

" ஓடுவிழுந்து சீப்பாயும் ஒன்பதுவாய்ப் புண்ணுக்
கிடுமருந்தை யானறிந்து கொண்டேன்—கடுவருந்து
தேவாதி தேவன் திருஒற்றி யூர்த்தெருவில்
போவார் அடியின் பொடி "

என்றும் புகழ்ந்துள்ளார்.

திருவொற்றியூரில் அப்பர் பெருமான் ஆலயமும், இராமலிங்கசுவாமிகள் ஆலயமும் உள்ளன. இவற்றைக் கடற்கரைக் காட்சியைக் காணச் செல்லும்போது கண்டு களிக்கலாம்.

இத்தலத்து இறைவியின் திருப்பெயர்கள், திரிபுரசுந்தரி, வடிவுடை அம்மையார் என்பன. இவ்வம்மையார் சந்நிதி கோவிலுக்கு வெளியே வடப்பக்கத்தில் அமைந்துள்ளது. இவ்வம்மையாரை வணங்கிப் பெரும்பேறு அடைய ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் பரம ஏழை முதல் பெருஞ் செல்வர் வரை திரள் திரளாக வந்து தரிசித்துச் செல்வர்.

வடிவுடை அம்மையாருக்குப் பூசை புரிபவர்கள் ஆதி சைவக் குருக்கள் அல்லர். மலையாளப் பிராமணர்கள் பூசித்து வருகின்றனர்.

இத் தலத்துக்கு அப்பர், சம்பந்தர், சுந்தரர் பாடியுள்ள தேவாரப் பதிகங்கள் எட்டு. அவற்றுள் திருஞானசம்பந்தர் பதிகம் ஒன்று. அப்பர் பதிகங்கள் ஐந்து. சுந்தரர் பதிகங்கள் இரண்டு. அருணகிரிநாதர் பாடிய திருப்புகழ்கள் இரண்டு உண்டு. இராமலிங்க சுவாமிகள் இத் தலத்தின்மீது அறுபத்தேழு தலைப்புகளில் பற்பல பாடல்களைப் பாடியுள்ளனர்.

இராமலிங்க சுவாமிகளுக்கு இத்தலத்து இறைவி பல்லாற்றுலும் திருவருள் சுரந்துள்ளனள். நம் வள்ளலார் பசியினுல் வருந்தி உறங்கிக் கொண்டிருக்கும்போது, வடிவுடையம்மையார் அவரை எழுப்பிச் சோறளித்துத் திருவருள் புரிந்தனள். இதனை நம் வள்ளலார்

"அன்றொருநாள் நம்பசி கண்டந்தோ தரியாது
நன்றிரவில் சோறளித்த நற்ருய் காண்".

என்று பாடி யறிவித்துள்ளனர். இதில் திருஒற்றியூரில் நடந்த நிகழ்ச்சி என்பதற்குரிய குறிப்பு இல்லையாயினும், ஆருவது திருமுறையின் அருள் விளக்க மாலையில்,

"தெற்றியிலே நான்பசித்துப் படுத்திளைத்த தருணம்
திருஅமுதோர் திருக்கரத்தே திகழ்வள்ளத் தெடுத்தே
ஒற்றியில்போய்ப் பசித்தனையோ என்றெனைஅங் கெழுப்பி
உவந்துகொடுத் தருளியஎன் உயிர்க்கினிதாம் தாயே".

என்று குறிப்பிட்டிருப்பது கொண்டு இவ்வருட்செயல் நடந்த இடம் திருஒற்றியூர் என்றே உறுதிப்படுத்த வேண்டி இருக்கிறது. அருள் விளக்கமாலையில் இந்த அற்புதத்தை நம் ஐயா மிகுதியும் எடுத்து மொழிந்துள்ளனர்.

திருஒற்றியூரைப் பற்றிய கல்வெட்டுகள் பல உள்ளன. அவற்றால் பல அரிய குறிப்புகள் தெரிய வருகின்றன. இங்கு இராசேந்திரன் மடம், குலோத்துங்க சோழன் மடங்கள் இருந்தன. மண்ணைக்கொண்ட சோழன் மண்டபம், இராசராசன் மண்டபம், இராசேந்திர சோழன் மண்டபம் எனப் படும் பல மண்டபங்களும் இருந்திருக்கின்றன.

படம்பக்கநாதர் கோவில், வீரராசேந்திரனால் கட்டப் பட்டது. இங்கு வியாகரண மண்டபம் ஒன்று இருந்து இலக்கணப் பாடம் நடத்தப்பட்டது. இதனால் இத்தலத்துப் பெருமான் வியாகர்ணதானப் பெருமான் என்னும் பெயரையும் பெற்றனர். இங்கு ஆனி மாதத்தில் பெருவிழா நடந்ததாகத் தெரிகிறது. இவ் விழாவினைக் குலோத்துங்கன் கண்டு இன்புற்றுள்ளான். இவன் இராசராச மண்டபத்தில் தங்கி இருந்தனன். இத்தலத்துத் தியாகர் கருணைவிடங்கர் என்னும் பெயரையும் பெற்றிருந்தனர். இங்குச் சூரியனுக்கும் ஒரு தனிக்கோயில் இருந்தது. இங்குள்ள பிள்ளையார் அனுக்குப் பிள்ளையார் என அழைக்கப்பட்டனர். வாக்கு வாதம் நடத்த வாக்கணிக்கும் மண்டபம் ஒன்று இருந்ததை யும் அறிகிறோம். இக் கோவிலில் பணி புரிந்த பணி யாளர்கள் நூற்றுமுப்பத்தொன்பதின்மர் என்பது கல்வெட் டால் அறிய வருகிறது.

ஆதொண்ட சக்ரவர்த்தி புழல்கோட்டத்தை வென்ற போது, அங்கிருந்து கொணர்ந்த இரு பவழத் தூண்களையும், இரு வெண்கலத் தூண்களையும் கோவிலுக்குத் தானமாக அளித்துள்ளான். ஆனால் அவற்றை இதுபோது இங்குக் காணமுடியவில்லை. ஒருவேளை கடல் கொண்டிருக்கலாம். இறைவர் மகாதேவ பட்டர், திருஒற்றியூர் மகா தேவர், ஒற்றியூர் ஆழ்வார், திருஒற்றியூர் உடைய நாயனர், படம்பக்க நாயக தேவர் என்றெல்லாம் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள் ளனர்.

இத் தலத்தில் ஆனித் திருவிழா, மாசித் திருவிழா, பங்குனி உத்திரத் திருவிழாக்கள் மிக்க சிறப்புடன் கொண்டாடப்பட்டன. இப்போது மாசி மாதத்தில் நடைபெறும் மகிழடி சேவை பங்குனிமாதம் நடத்தப்பட்ட விழாவில் ஆறும்நாள் நடத்தப்பட்டதாகக் கல்வெட்டு கூறுகிறது. இந்த உண்மை அப்பர் திருத்தாண்டகத்தில் வரும், "உத்திர நாள் தீர்த்தமாக ஒளி திகழும் ஒற்றியூர்" என்று கூறி இருப்பதனுலும் தெரிய வருகிறது. அந்த நாளில் படம்பக்கநாதரை எழுந்தருளச்செய்து சுந்தரர் புராணம் வாசிக்கப்பட்டது.

குலோத்துங்கன் சோழன் மண்டபத்தில் நாள்தோறும் ஐம்பது அடியார்களுக்கு அன்னம் அளிக்கப்பட்டது. இதற்காக முதல் குலோத்துங்கன் பனப்பாக்கம் என்னும் ஊரை எழுத்தறிவார் நல்லூர் என்று பெயரிட்டு அதில் ஒரு பகுதியை நிவந்தமாக அளித்தனன். இங்குள்ள வியாகர்ணை மண்டபம், தூர்க்கை ஆண்டி நாயகனுல் கட்டப்பட்டது. மண்ணைக்கொண்ட சோழன் மண்டபம் கோயில் தொடர்புடைய வழக்குகளை விசாரிக்கப் பயன்பட்டது. கோயிலின் வெளிப் பிராகாரம் கட்டியவர் சேதிராய தேவர். அங்கு அளக்கும் கருவியின் பெயர் அருமொழித்தேவன் நாழி எனப்பட்டது. இதனுல் நெய், நெல் முதலியன அளக்கப் பட்டன. இறைவன் திருப்பெயரான படம்பக்கநாதன் என்பது கோயில் நாயகம் செய்து வந்த ஒருவனுக்கு 'படம்பக்க நாயகப்பட்டன்' என்று பட்டப்பெயராகச் சூட்டப்பட்டது.

திருவொற்றியூர் இன்னேரன்ன மாண்புகளுக்கு உறைவிடமாக இருப்பதாலும், நம் ஐயா பாடியுள்ள வடிவுடை மாணிக்க மாலைக்குரிய இறைவியார் வீற்றிருக்கும் பதி ஆதலினுலும், நம் ஐயாவிற்கு இத்தலத்து இறைவி சோறளித்துத் திருவருள் புரிந்தமையாலும், "சீர்கொண்ட ஒற்றிப்பதி" என்று நம் வள்ளலார் காப்புச் செய்யுளில் எடுத்த

சுருதியில் போற்றிப் புகழ்ந்திருகின்றனர். இதனுல்தான் இவ்வளவு விரிவாக இத்தலத்தின் மாண்பு எடுத்து எழுதப்பட்டது.

இறைவி, இறைவனின் இடப்பக்கத்தே இருந்து காட்சி அளிப்பவள் ஆதலின் "ஒற்றிப்பதி யுடையான் இடம் சேர்ந்த மணிவார் கொண்ட கொங்கை வடிவாம்பிகை" எனப் பட்டாள். இறைவியின் கொங்கை மானிடப் பெண்களுக்கு அமைந்த கொங்கை போன்றதன்று. அவளுடைய இரு கொங்கைகள் அபர ஞானம், பர ஞானம் ஆகிய இரண்டின் அறிகுறியாகும்.

இந்த உண்மையினை "கருது ஞானம் பொழிதனமும்" எனவும், "பரஞான தேசுமலிதரு கொங்கை" எனவும் மங்களாம்பிகை பிள்ளைத்தமிழ் கூறுதல் காண்க. இறைவி அழகம்மையாக இருத்தலின், வடமொழியினர் வடிவாம்பிகை என்று கூறி மகிழ்வாராயினர். இறைவனையும் இறைவியையும் பிணித்தற்குரியவை (கட்டுதற்குரிய) பாமாலைகளே ஆகும். இப்பாமாலைகளையே இருவரும் விரும்புவர். "சொற்றமிழ் பாடு கென்றார் தூமறைப்பாடும் வாயார்" என்னும் சேக்கிழாரின் செம்மை சான்ற மொழியையும், "பல்மாலைத்திரள் இருக்கத் தமை உணர்ந்தோர் பாமாலைக்கே நீ தான் பட்சம் என்று நன்மாலையில் எடுத்துச் சொன்னார் நல்லோர்" என்று தாயுமானுர் கூறியுள்ள கருத்தினையும் காண்க. இதனுல் தான் வள்ளலார், "வடிவாம்பிகை தன் மலர் அடிக்குத் தாங் கொண்ட செந்தமிழ்ப் பாமாலை சாத்த" என்றனர்.

விநாயகப் பெருமான் விக்னேஸ்வரன் (துன்பங்களை நீக்கும் பெருமான்) ஆதலாலும், போற்றுநர்க்கு அறக்கருணை புரிந்து அல்லார்க்கு நிகரில் மறக்கருணை புரிந்து ஆண்டு கொள்ளும் நிருமலன் ஆதலாலும், திருவாக்கும், செய் கருமம் கைகூடும், செஞ்சொல் பெருவாக்கும் பீடும் பெருக்கும் ஆனைமுகன் ஆதலாலும்,

"குள்ளக் குள்ளனைக் குண்டு வயிறனை
வெள்ளைக் கொம்பனை விநாயகனைத் தொழு"

"வெள்ளைக் கொம்பன் விநாயகனைத் தொழத்
துள்ளி ஓடும் தொடரும் வினைகளே"

"கருணை வள்ளல் கணபதியைத் தொழ
அருமைப் பொருள்கள் அனைத்தும் வருமே"

"முப்பழம் வெல்லம் மோதகம் தின்னும்
தொப்பை அப்பனைத் தொழவினை இலையே"

"வேழ முகத்து விநாயகனைத் தொழ
வாழ்வு மிகுத்து வரும்"

எனும் பழப் பாடல்கள் விநாயகனைத் தொழுதால் துன்பம் நீங்கி இன்பம் வரும் என்று கூறுதலாலும், "உள்ளத்தே வாழ்வானை வாழ்த்தியே வாழ்" என்னும் கட்டளையினாலும், "நின்றாடும் மழகளிற்றை நினைவார் வினைஇலரே" என்றதனாலும் "வெவ்வினையை வேரறுக்க வல்லவனும் வேட்கை தணிவிப்பவனும் விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாய் இருப்பவனும்" ஆதலாலும் மேலும்,

"களியானைக் கன்றைக் கணபதியைச் செம்பொன்
ஒளியானைப் பாரோர்க் குதவும்—அளியானைக்
கண்ணுவதும் கைத்தலங்கள் கூப்புவதும் மற்றவன்தாள்
நண்ணுவதும் நல்லார் கடன்"

என்று ஆன்றோர்கள் கட்டளைப் பிறப்பித்திருப்பதாலும் நம் ஐயாவும் விநாயகப் பெருமானை வணங்கித் தம் நூலைத் தொடங்குகிறார். தமக்கு 'ஏர்கொண்ட நல் அருள்' ஈயும்படி விநாயகரை வேண்டுகின்றார்.

பழங்கால இந்தியப் போர் முறை என்னும் ஆங்கில நூலிலும், விநாயகப்பெருமான் வெற்றிக்கு அறிகுறியான

தெய்வம் என்றும், நல்ல தெய்வப்பற்றுள்ள ஒவ்வொருவரும் வெற்றியின் பொருட்டும், துன்பம் நீங்கும் பொருட்டும் இவரை வணங்குவர் என்று கூறப்பட்டுள்ளது. இதையும் இங்கு நினைவு கொள்க.

"The Elephant Head of Ganesa is a symbolical representation of Victory. Hence, at the commencement of every understanding the Orthodox Hindu offers prayers to this God to bless him with success."
—"War in Ancient drehia."

பல்வேறு வடிவில் காணப்படும் விநாயகர் உருவங்களில் ஏரம்ப கணபதியும் ஒருவர்.

விநாயகப் பெருமான் அன்பர்கட்கு அருள் செய்யும் முறையில் முப்பத்திரண்டு திருவுருவில் காட்சி அளிப்பதாகத் தெரிகிறது. அம் முப்பத்திரண்டனுள் ஒன்றே ஏரம்ப கணபதி திருவுருவம் ஆகும். இவ்வுருவத்தில் ஐந்து யானை முகங்களைக் கொண்டு, பத்துக் கைகளுடன், பசுமை கலந்த கருமை நிறத்தோடு சிங்க வாகனத்தில் அமர்ந்து கணபதி காட்சி அளிப்பர். பத்துக் கரங்களில் ஒன்று அபயத் திருக்கர மாகவும் (இஃது இடக்கரம். திருவடியைச் சுட்டும் முறையில் கீழ்நோக்கி இருக்கும்.) மற்றொன்று வரதத் திருக்கரமாகவும் (இது வலத்திருக்கரம். காப்பாற்றுவேன் என்னும் குறிப்பில் மேல் நோக்கி இருக்கும்) அமைந்திருக்கும். ஏனைய் எட்டுத் திருக்கரங்களில் பாசம், தந்தம், அட்சமாலை, மாலை, பரசு (கோடரி) சம்மட்டி, மோதகம் (கொழுக்கட்டை) பழம் பொருந்தி இருக்கும்.

இத்தகைய பெருமானையே நம் ஐயா முதல் பாட்டில் குறித்து "குணாலய ஏரம்பனே" என்று விளித்து வணங்கி யுள்ளனர்.

## நூல்

கடல்அமு தேசெங் கரும்பே அருள்கற்ப கக்கனியே
உடல்உயி ரேஉயிர்க் குள்உணர் வேஉணர் வுள்ஒளியே
அடல்விடை யார்ஒற்றி யார்இடம் கொண்ட அருமருந்தே
மடல்அவிழ் ஞான மலரே வடிவுடை மாணிக்கமே.

(பொ - ரை.) "திருப்பாற் கடலில் தோன்றும் அமுதம் போன்றவளே! செங்கரும்பைப் போல இன்பரசமே! திருவருளைச் செய்கின்ற கற்பக விருட்சத்தில் தோன்றும் பழம் போன்றவளே! உடலில் நிறைந்த உயிர் போன்றவளே! உயிர்க்குள் விளங்கும் மெய்ஞ்ஞானமே! உணர்வுள் ஒளியாய் விளங்குபவளே! வன்மை மிக்க இரடப வாகனத்தில் எழுந்தருளி அன்பர்கட்கு அருள்செய்கின்ற திருஒற்றியூர்த் தியாகேசப் பெருமானின் இடப்பாகத்தைக் கொண்ட அருமையான மருந்தாக இருப்பவளே! ஞான இதழ்கள் விரிந்த மலராக விளங்குபவளே! வடிவுடை மாணிக்கமே" (எ - து.)

(அ - சொ.) அடல் - வன்மை. விடை - இரடபம். உணர்வு - மெய்ஞ்ஞானம்.

(இ - கு.) அடல், உரிச்சொல்.

(வி - ரை.) உடல் சடப்பொருள். உயிர் சத்துப் பொருள். சித்துப் பொருளாகிய உயிர் கலந்தால் அன்றி மற்றைப்படி சடப்பொருளாம் உடல் செயல்படாது. ஆகவே அதனைத் தொழிற்படுத்த உயிர் இன்றியமையாதது ஆதலின், இறைவியை ஈண்டு உடல் உயிரே என்றனர். உயிர் சார்ந்ததன் வண்ணம் ஆகும் தன்மையது. உயிர் புலியின் உடலில் சேரின் கொடுமைக் குணமும், பசுவின் உடலில் புகின் அமைதித் தன்மையும் அடையும். ஆகவே, அவ்வுயிர்க்கு அமைதியும், இறை அன்பும் தேவை. எனவே,

அவற்றைக் கொடுப்பது உணர்வு (மெய்ஞ்ஞானம்) ஆதலின், அத்தகைய வடிவாய் இறைவி விளங்கலின் "உயிர்க்குள் உணர்வே" எனப்பட்டனள்.

திருவொற்றியூர்த் தேவியின் திருப்பெயர் வடிவுடை அம்பாள் என்பது. அப்பர் இத்தலத்துப் பதிகத்தில் "வடிவுடை மங்கையும் தாமும்" என்று குறித்திருப்பதையும் உணரவும். ஆனால், வள்ளலார் வடிவுடை மாணிக்கம் என்னும் பெயரால் குறிப்பிடுகின்றார்.

ஒற்றித் தியாகர் மாணிக்கத் தியாகர் ஆதலின், இறைவியாரும் வடிவுடை மாணிக்கம் ஆயினர். மேலும் இறைவிக்குரிய திருப்பெயர்களில் மாணிக்கவல்லி என்பதும் ஒன்று. இதனை மீனாட்சி அம்மன் பிள்ளைத்தமிழ், "மலைவல்லி, கற்பூரவல்லி, அபிராமவல்லி, மாணிக்கவல்லி மரகதவல்லி, அபிடேகவல்லி என்று கூறுகிறது. ஆகவே, நம் வள்ளலார் திருஒற்றியூர்த் தேவியின் சிறப்புப் பெயராகிய வடிவுடை அம்மை என்பதோடு, பொதுப் பெயராகிய மாணிக்கவல்லியையும் இணைத்து "வடிவுடை மாணிக்கமே" என்று பாடி மகிழ்ந்தார் என்று கூறினும் அமையும். (1)

அணியே அணிபெறும் ஒற்றித் தியாகர்தம் அன்புறுசற்
குணியேஎம் வாழ்க்கைக் குலதெய்வ மேமலைக் கோன்தவமே
பணியேன் பிழைபொறுத் தாட்கொண்ட தெய்வப் பதிகொள்சிந்தா
மணியேஎன் கண்ணுள் மணியே வடிவுடை மாணிக்கமே.

(பொ - ரை.) "அலங்காரப் பொருளே! அழகைத் தன்னிடத்தே கொண்ட ஒற்றித்தியாகர் அன்பைப்பெற்ற நல்ல குணவதியே! எங்கள் வாழ்க்கைக் குலதெய்வமே! மலை அரசன் செய்த தவத்தின் பயனாக, அவனுக்குத் திருமகளாய் வந்தவளே! உன்னை வணங்காதவனாகிய நான் செய்யும் தவறுகளைப் பொறுத்து ஆட்கொண்ட தெய்வநாயகன் தன் இடப்

பாகத்தே கொண்டுள்ள சிந்தாமணியே! என் கண்ணுள் விளங்கும் மணியே! வடிவுடை மாணிக்கமே" (எ - து.)

(அ - சொ.) அணி - அழகு, அலங்காரம். கோன் - அரசன். பணியேன் - வணங்காதவன். தெய்வப்பதி - சிவபெருமான.

(இ - கு.) தம், அசைச்சொல். பணியேன், வினையால் அணையும் பெயர். சிந்தாமணி, உவம ஆகுபெயர்.

(வி - ரை.) தியாகரைப்பற்றிய குறிப்பைக் காப்புச் செய்யுள் விரிவுரையில் காண்க. குணமாவன பண்புகள். அப் பண்புகளைக் கொண்டு விளங்குவது குணி. இறைவி பல அருங்குணங்களுக்கு உறைவிடம் ஆதலின் குணியே எனப்பட்டாள். இறைவி நம் வள்ளலாரின் வாழ்வுக்கு மட்டும் தெய்வமாக இன்றி, அவர்தம் குடும்பத்துக்கும் தெய்வம் ஆதலின் 'எம் வாழ்க்கைக் குலதெய்வமே' எனப் பட்டனள். இறைவனைப் பணியாதவர் அறிவீனர்கள். அவ்வறிவீனர்களின் செயலைத் தம் மேல் ஏற்றி நம் ஐயா, "பணியேன்" என்று கூறிக்கொள்கின்றனர். குழந்தைக்கு நோய் கண்டபோது தாய் மருந்துண்பதுபோல் இக்கருத்தைக் கொள்ளவேண்டும்.

சிந்தாமணி என்பது ஓர் உயர்ந்த கல். இது தேவலோகத்தில் இருப்பது. கேட்டவை யாவற்றையும் தரவல்லது. அக் கல் இவ்வுலகச் சிற்றின்பப் பொருள்களை மட்டும் கொடுக்கவல்லது. ஆனல் இறைவியோ, இம்மை இன்பத்தோடு மறுமை இன்பத்தையும், பேரின்பமாகிய வீட்டின்பத்தையும் கொடுக்கவல்லவள். தெய்வலோகச் சிந்தாமணி இந்திரனிடம் உள்ளது. இறைவியாம் சிந்தாமணி தெய்வப்பதி (சிவபெருமான்) கொள் சிந்தாமணி. அதனுல்தான் இச் சிந்தாமணி இம்மை, மறுமை, வீடு என்னும் மூன்றையும்

கொடுக்கும் நிலையில் உள்ளது. பெருமைக்குரிய சிவபெருமான் செத்துப் பிறக்கின்ற தெய்வங்களைப்போல் இன்றிச் சாவாது மூவாது இருத்தலின், தெய்வப்பதி எனப்பட்டான். (2)

**மானேர் விழிமலை மானேஎம் மான்இடம் வாழ்மயிலே**
**கானேர் அளகப் பசுங்குயி லேஅருள் கண்கரும்பே**
**தேனே திருவொற்றி மாநகர் வாழும் சிவசத்தியே**
**வானே கருணை வடிவே வடிவுடை மாணிக்கமே.**

(பொ - ரை.) "மான் கண்களுக்கு ஒப்பான கண்களையுடைய மலையரசன் பெற்ற மான் போன்றவளே! எம்பெருமானாகிய சிவபெருமானின் இடப்பாகத்தே வாழ்கின்ற மயிலே! காடுபோல் அடர்ந்து இருண்டு விளங்கும் கூந்தலுடைய பசுங்குயிலே! அருளாகிய கண்களைப் பெற்ற கரும்பே! தேனே! திருஒற்றியூராகிய சிறந்த நகரில் வாழும் சிவசத்தியே! ஆகாய வடிவினளே! கருணை வடிவுடையவளே! வடிவுடை மாணிக்கமே!" (எ - து.)

(அ - சொ.) நேர் - ஒப்பான. எம்மான் - எம்பெருமானாகிய சிவபெருமான். கான் - காடு. அளகம் - கூந்தல். மா - சிறந்த. வான் - ஆகாயம்.

(இ - கு.) நேர், உவம உருபு. மான்+நேர், கான்+நேர் எனப் பிரிக்க. மா, உரிச்சொல். மான், மயில், தேன், கரும்பு உவமை ஆகுபெயர்கள். எம்பெருமான் என்பது எம்மான் என ஆயது மரூஉ வழக்காகும்.

(வி - ரை.) பெண்களின் கண்கள் மிகுதியும் மருளும் தன்மையன. மான் கண்ணும் அத்தகையனவே. இது குறித்தே புலவர்கள் பெண்களின் கண்களுக்கு மானின் கண்ணை உவமை கூறுவர். இறைவி மயிலைக் கபாலீச்

சுரத்திலும், மயிலாடு துறையிலும் (மாயூரம்) மயில் வடிவில் இறைவனைப் பூசித்துள்ளமையின், மயிலே எனப்பட்டாள். இவ்விரண்டு ஊர்களின் பெயர் ஒற்றுமையினைக் காணவும். அடர்ச்சி கருதியும் கருமை கருதியும் காடு மாதர்களின் கூந்தலுக்கு உவமை கூறப்படும். நாம் சுவைக்கும் கரும்புக்கும் இடையிடையே கணுக்கள் இருப்பதைக் காண்கின்றோம். ஆனால், இறைவியாகிய கருப்புக்கு அருளே கணுக்களாக அமைந்துள்ளன. ஆகவே, "அருள் கண் கரும்பே" என்று சிறப்பிக்கப் பட்டாள். தேன் உடல் நோயைப் போக்கும் பொருள். ஆனால் இறைவியாம் தேன் உயிர்க்குரிய பிறவி நோயைத் தீர்ப்பது. ஆதலின் இறைவி தேனே எனப்பட்டாள். திருவாசகமாகிய தேனும் பேரின்ப நிலையாம் வீட்டைத் தரும் என்றும் கருத்தில் தான்,

தொல்லை இரும்பிறவிச் சூழும் தளைநீக்கி
அல்லல்அறுத் தானந்தம் ஆக்கியதே — எல்லை
மருவா நெறிஅளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவா சகம்என்னும் தேன் "

என்னும் பாடலும் எழுந்தது. திருஒற்றியூர், மாநகர் என்றமைக் குரிய காரணத்தைக் காப்புச் செய்யுள் விரிவுரையில் காண்க.

"குவளைக் கண்ணி கூறன் காண்க", என்று கூறிய மாணிக்கவாசகர், "அவளும் தானும் உடனே காண்க," என்றும், அவரே "ஏகம்பத்துறை எந்தாய் போற்றி" என்றதும் உடனே, "பாகம் பெண்ணுரு வானாய் போற்றி" என்றும் கூறி இருப்பதும், பரஞ்சோதியார், "சத்தியாகிச் சிவமாகித் தனிப்பர முத்தியான முதல்" என்று அறிவிப்பதும் இறைவனும் இறைவியும் வேறல்லர் என்னும் உண்மையை உணர்த்துவன ஆகும். இந்தக் கருத்தில்தான் "சிவ சத்தியே" என்று கூறப்பட்டது.

இறைவிக்குரிய பெயர்களுள் அந்தரி என்பதும் ஒன்று. அந்தரம் என்பதன் பொருள் ஆகாயம். ஆகவே, இறைவி பராகாசவடிவினள் ஆதலின், அந்தரி எனப்படுவள். சிதாகாச வடிவினள் என்று கூறினும் பொருத்தமே. இதனால்தான் இறைவி தகராகாசரூபிணி என்று கூறப்படுகின்றாள். இந்த அரிய கருத்தில்தான் நம் ஐயா தூய தமிழ்ச் சொல்லில் "வானே" என்று தேவியை விளித்தனர்.

சேக்கிழார் இறைவியைப் பற்றிக் கூறுகையில் "அருட் கருணைத் தாயை திருவுள்ளமுடைய தவவல்லி" என்று உணர்த்தியுள்ளனர். அதனால்தான் ஐயா "கருணை வடிவே" என்றனர்.

இறைவியின் கருணை அவளுடைய பிள்ளைப் பருவத்தி லேயே அமைந்திருந்தது என்பதை மீனாட்சி அம்மன் பிள்ளைத் தமிழ் மிக அழகாக,

"கிள்ளைக்கு மழலைப் பசுங்குதலை ஒழுகுதீங்
கிளவியும் களிமயிற்குக்
கிளர் இளம் சாயலும் நவ்விக்கு நோக்கும்விரி
கிஞ்சுகச் சூட்டரசனப்
பிள்ளைக்கு மடநடையும் உடன்ஆடும் மகளிர்க்கோர்
பேதமையும் உதவி முதிராப்
பிள்ளைமையின் வள்ளன்மை கொள்ளும்ஒரு
பாண்டிப் பிராட்டி."

என்று பாடுதலைப் படித்து மகிழவும். இந்த அளவிலும் அவளது கருணை நிற்கவில்லை. கல்லா மூடர்களுக்கும் இன்பம் செய்பவள். இதை மங்களாம்பிகை பிள்ளைத்தமிழ், "கல்லா மூடர் மதிக்கும் இனித்துக் கமழும் பைந்தேனே" என்று கூறுதல் கொண்டு தெளிக. (3)

பொருளே அடியர் புகல்இட மேஒற்றிப் பூரணன்தன்
அருளே எம்ஆர்உயிர்க் காம்துணை யேவிண் ணவர்புகழும்
தெருளே மெய்ஞ்ஞானத் தெளிவே மறைமுடிச் செம்பொருளே
மருளே தம்நீக்கும் ஒளியே வடிவுடை மாணிக்கமே.

(பொ - ரை.) "எல்லாப் பொருளுமாய் இருப்பவளே! அடியவர்கள் சரண் புகுதற்குரிய இடமாய் இருப்பவளே! திருஒற்றியூரில் நிறைவாய் விளங்கும் தியாகப்பெருமானின் அருளாய் இருப்பவளே! எங்கள் அரிய உயிர்களுக்குத் துணையாய் இருப்பவளே! தேவர்கள் போற்றும் அறிவின் விளக்கமே! மெய்ஞ்ஞானத்தால் தெளியப்படும் பொருளே! வேத முடிவில் திகழும் செம்பொருளே! என் மயக்க உணர்வையும், குற்றத்தையும் ஒழிக்கும் ஒளியே! வடிவுடை மாணிக்கமே!" (எ - து.)

(அ - சொ.) புகல் இடம் - அடைக்கலம் புகும் இடம். பூரணம் - நிறைவு. விண்ணவர் - தேவர். தெருள் - அறிவு. மறைமுடி - வேதத்தின் அந்தம். மருள் - மயக்கம். ஏதம் - குற்றம், துன்பம்.

(இ - கு.) தன், அசைச்சொல். அருமை + உயிர் = ஆருயிர். ஆம், ஆகும் என்பதன் தொகுத்தல் விகாரம். மருள் ஏதம், உம்மைத் தொகை.

(வி - ரை.) இறைவி எல்லாப் பொருளும் ஆவாள் என்பதை அபிராமி அந்தாதி, "தரங்கக் கடலுள் வெங்கண் பணி அணைமேல் துயில் கூரும் விழுப் பொருளே" என்று போற்றுகிறது. திருப்பாற்கடலில் பாம்பு படுக்கையில் துயில்பவர் விஷ்ணு என்றாலும், அவ்விஷ்ணு உமையே ஆவாள். அதுபோது அவளுக்கு வைஷ்ணவி என்னும் பெயர் அமைகிறது. "சகஸ்தரள புஷ்பமிசை வீற்றிருக்கும் நாரணி" என்று தாயுமானவர் கூறுதலும் இக்கருத்தில்தான்.

இந்த வைஷ்ணவியின் கோயிலைச் சென்னைக்கு அடுத்த அம்பத்தூரின் அருகே கண்டு தரிசிக்கலாம்.

இறைவியின் திருவடியே யாவரும் தஞ்சம் புகுதற்குரிய இடம். இதனை அபிராமி அந்தாதி,

" அருணாம் புயத்தும்என் சித்தாம் புயத்தும் அமர்ந்திருக்கும்
தருணாம் புயமுலைத் தையல்நல் லாள்தகை சேர்நயனக்
கருணாம் புயமும் வதனாம் புயமும் கராம்புயமும்
சரணாம் புயமும்அல் லால்கண்டி லேன்ஒரு தஞ்சமுமே "

என்று உறுதிப்படுத்துவது கொண்டு உணர்க. எனவேதான் " அடியர் புகல் இடமே " என்றனர் நம் வள்ளலார்.

இறைவனுக்கு அமைந்த தேவி, ஏனைய பெண் வடிவங்களைப் போன்று எலும்பு, தசை முதலியவற்றால் ஆனவள் அல்லள். இறைவன் தன் அருளையே சத்தியாக (தேவியாக)க் கொண்டு விளங்குகின்றான். இந்த உண்மையினைச் சாத்திரங்களும், புராணங்களும், தோத்திரங்களும் கூறுகின்றன.

" அருளது சத்திஆகும் அரன்தனக் கருளை இன்றித்
தெருள்சிவம் இல்லைஅந்தச் சிவம்இன்றிச் சத்தி இல்லை
மருளினை அருளால் வாட்டி மன்னுயிர்க் களிப்பன் கண்கட்
கிருளினை ஒளியால் ஓட்டும் இரவியைப் போல ஈசன் "

என்று சிவஞான சித்தியாரும்,

" மேனாள் அகிலம் தரமெல் இயலா
ஆனா அருள்தன் னைஅளித் தொருபால்
தானா கஇருத் தியதற் பரனை
ஆனா மயல்செய் வதுநன் றிதுவே "

என்று கந்தபுராணமும்,

" ஒன்றும் அரும்பொரு ளேஅரு ளேஉமை யேஇமயத்
தன்றும் பிறந்தவ ளேஅழி யாமுத்தி ஆனந்தமே "

என்று அபிராமி அந்தாதியும் கூறுதல் காண்க. எனவே தான் இங்கும் ஒற்றிப் பூரணன் தன் அருளே" எனப்பட்டனள்.

தேவர்கள் இறைவியைப் புகழ்கின்றனர் என்பதன் கருத்து, போற்றுகின்றனர் என்பதாம். இதனை அபிராமி பட்டர் தம் அபிராமி அந்தாதியில், "முதல் தேவர் மூவரும் யாவரும் போற்றும் முகிழ் நகையே" என்றும்,

"வந்திப் பவர்உன்னை வானவர் தானவர் ஆனவர்கள்
சிந்திப் பவர்நல் திசைமுகர் நாரணர் சிந்தையுள்ளே
பந்திப் பவர்அழி யாப்பர மானந்தர் பாரில்உன்னைச்
சந்திப் பவர்க்கெளி தாம்எம்பி ராட்டிநின் தண்ணளியே"

என்றும் அறிவித்தல் காண்க. அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ் "தேவர்தொழும் கல்யாண சௌந்தரி" என்று கூறுதலையும் உணர்க. ஆகவே ஈண்டு நம் வள்ளலார் "விண்ணவர் புகழும் தெருளே" என்றனர்.

இறைவி வேதத்தின் கிளை, கொழுந்து வேர் ஆகவும் மூன்றாகி, நடு முழுவதும் ஆகி, முடியும் ஆகவும், விளங்கு பவள். இதனைச் சுருதிகளின் பணையும் கொழுந்தும், பதி கொண்ட வேரும் திருபுரசுந்தரி ஆவது அறிந்தனமே" என்றும் "அருமறைக்கு முன்னாய் நடு எங்குமாய் முடிவாய முதல்வி" என்றும் அபிராமி அந்தாதி கூறுகின்றது. இதே கருத்தில் ஈண்டு "மறைமுடிச் செம்பொருளே" எனப் பட்டது. (4)

**திருமாலும் நான்முகத் தேவும்முன் நாள்மிகத் தேடிமனத்**
**தருமால் உழக்க அனல்உரு வாகி அமர்ந்தருளும்**
**பெருமான்எம் மான்ஒற்றிப் பெம்மான்கைம் மான்கொளும் பித்தன்மலை**
**மருமான் இடம்கொள்பெண் மானே வடிவுடை மாணிக்கமே.**

(பொ - ரை.) "விஷ்ணுமூர்த்தியும், பிரமதேவனும் முன்பு சிவபெருமானைத் தேடி உள்ளத்தில் நினைத்தற்கும் அரிய மயக்கத்தால் வருந்தத் தீப்பிழம்பாய் விளங்கித் திகழும்

பெருமானும், எம்பிரானும், திருவொற்றியூரில் எழுந்தருளி யிருப்பவனும், கையில் மானைப் பிடித்திருக்கும் பித்தனும், மலையரசன் மருமகனும் ஆகிய சிவபெருமானில் இடப் பாகத்தை ஏற்றுக்கொண்ட பெண்மானே! வடிவுடை மாணிக்கமே" (எ - து.)

(அ - சொ.) நான்முகத்தோன் - நான்கு முகங்களைக் கொண்ட பிரமன். மால் - மயக்கம். திருமால் - சிறந்த பெருமைக்குரிய மகாவிஷ்ணு. உழக்க - வருந்த. மருமான் - மருமகன்.

(இ - கு.) அருமை + மால்; கைம்மான், ஏழன் தொகை. பெண்மான், உவம ஆகுபெயர்.

(வி - ரை.) இறைவன் பிரமன், விஷ்ணு ஆகிய இருவ ரால் காணமுடியாத அழல் உருவாய் நின்றதைத் திருஞான சம்பந்தர்,

"அயனொடும் எழில்அமர் மலர்மகள்
மகிழ்கணன் அளவிடல் ஒழியஒர்
பயமுறு வகைதழல் நிகழ்வதொர்
படிஉரு வதுவர வரன்முறை
சயசய எனும்மிகு துதிசெய்
எளிஉரு வியஅவன் உறைபதி
செயம்நில வியமதில் மதிஅது
தவழ்தர உயர்திரு மிழலையே"

என்று பாடினர். இந்தக் கருத்தே முதல் இரண்டடிகளில் உள்ளது.

மனம் துள்ளிஓடும் தன்மையது. அதனை அடக்கி ஆள்வதுதான் அருமை. அந்தக் குறிப்பில்தான் மானை இறைவன் தன் கரத்தில் கொண்டுள்ளான். இதனை அறியாது மானைக் கையில் கொண்ட பித்தன் என்று கூறு

வாறும் உளர் என்ற கருத்தில்தான் "கைம்மான் கொளும் பித்தன்" என்றனர். இறைவன் சுந்தரமூர்த்திகளால் பித்தன் என்று அழைக்கப்பட்டிருத்தலின் அந்தக் குறிப்பையே ஈண்டுப் பித்தன் என்று கூறினர் எனக் கூறினும் பொருத்தமே. இறைவரும் தம் பெயரைப் பித்தன் என்றே பாடுமாறு சுந்தரரைப் பணித்துள்ளனர். அதற்கு இணங்கச் சுந்தரரும், "பித்தாபிறை சூடி" என்று பாடினர். (5)

**உன்னேர் அருள்தெய்வம் காணேன் மனத்தும் உரைக்கப்படாப்**
**பொன்னேஅப் பொன்அற் புதஒளி யேமலர்ப் பொன்வணங்கும்**
**அன்னே எம்ஆர்உயிர்க் கோர்உயி ரேஒற்றி அம்பதிவாழ்**
**மன்னேர் இடம்வளர் மின்னே வடிவுடை மாணிக்கமே.**

(பொ - ரை.) "மனத்தால் எண்ணிக் கூறமுடியாத பொன்னே! அப் பொன்னில் அமைந்த ஆச்சரியமான ஒளியே! செந்தாமரை மலரில் வாழும் இலக்குமி வணங்கும் தாயே! எங்கள் அரிய உயிர்க்கு உயிராய் இருப்பவளே! திருஒற்றியூராகிய அழகிய பதியில் வாழ்கின்ற தலைவனாகிய படம்பக்க நாதனது அழகிய இடப்பக்கத்தே வளர்கின்ற மின்னே! வடிவுடை மாணிக்கமே! உன்னைப்போல் அருள் நிறைந்த தெய்வத்தை யான் எங்கும் கண்டிலேன்" (எ - து.)

(அ - சொ.) அற்புதம் - ஆச்சரியம். மலர் - தாமரை. பொன் - இலக்குமி. அம், ஏர் - அழகு. மன் - தலைவர். நேர் - ஒப்பு.

(இ - கு.) மலர்ப்பொன், ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை. மன்+ஏர், உன்+நேர்.

(வி - ரை.) ஒரு பொருளைத் தீயில் இட்டபோது அதன் தன்மை மாறும். ஆனால் பொன் அத்தகையது அன்று. அது சுடச்சுட ஒளிவிடும். திருவள்ளுவரும், சுடச்சுடரும்

பொன்போல் ஒளிவிடும்" என்றனர். ஆகவேதான் "பொன் அற்புதஒளி" எனப்பட்டது. மலர் என இலக்கியங்களில் வருமாறுல் அது தாமரை மலரையே குறிக்கும். "பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை" என்று அப்பரும், "பூ எனப் படுவது பொறி (இலக்குமி) வாழ் பூவே" என்று சிவப்பிரகாசரும் கூறுதல் காண்க.

இறைவியின் திருக்கண் பார்வையால் இலக்குமி செல்வத்திற்குரியவளாகவும், கலைமகள் கல்விக்குரியவளாகவும் இருத்தலின், அப்பேறுகளை அளித்த இறைவியை இருவரும் தொழவேண்டியது கடமை ஆயிற்று. அம் முறைக்கு இணங்க இலக்குமியும், சரசுவதியும் உமாதேவியை வணங்குவார் ஆயினர். இலக்குமியும், சரசுவதியும் வணங்கியதைக் குமர குருபர சுவாமிகள் தம் மீனுட்சியம்மை பிள்ளைத்தமிழில், "தவளமலர் வரும் இளமின்னெடு சதுதளமின் வழிபடும் தையல்" என்று கூறுதலையும், மாதவச் சிவஞான சுவாமிகள் "பணியவரு பங்கயச் செல்வி முதலோர் ஏர்பூத்த அம்பிகை அரவிந்த மலர் கூம்ப" என்று அமுதாம்பிகை பிள்ளைத் தமிழில் குறிப்பிடுதலையும் காண்க.

அபிராமி அந்தாதி இலக்குமி இறைவியை வணங்கிப் போற்றுதலை, "மலர்க்கமலை துதிக்கின்ற மின்கொடி" என்கிறது. (6)

**கண்ணே அக் கண்ணின் மணியே மணியில் கலந்தொளிசெய்**
**விண்ணே வியன்ஒற்றி யூர்அண்ணல் வாமத்தில் வீற்றிருக்கும்**
**பெண்ணே மலைபெறும் பெண்மணி யேதெய்வப் பெண்அமுதே**
**மண்ணேயம் நீத்தவர் வாழ்வே வடிவுடை மாணிக்கமே.**

(பொ - ரை.) "கண்ணே! அக்கண்ணுக்குள் விளங்கும் மணியே. அத்தகைய மணியில் கலந்து ஒளி செய்கின்ற

சிதாகாச வடிவினளே! பரந்த திருஒற்றியூர் இறைவனுடைய இடப்பாகத்தில் வீற்றிருக்கும் பெண்ணே! மலை அரசன் பெற்ற பெண்மணியே! தெய்வமாகிய பெண்ணமிர்தமே! உலகப்பற்றை ஒழித்தவர்கட்கு வாழ்வளிக்கும் வாழ்வே! வடிவுடை மாணிக்கமே!'' (எ - து.)

(அ - சொ.) விண் - ஆகாயம். வியன் - பரந்த. அண்ணல் - பெருமையில் சிறந்தோன் தலைவன். வாமம் - இடப்பக்கம். வீற்றிருத்தல் - சிறப்புடன் இருத்தல். நேயம் - பற்று. மண் - உலகு. நீத்தவர் - ஒழித்தவர்.

(இ-கு.) வியன், உரிச்சொல். அண்ணல், விகுதிபெருத ஆண்பால் சிறப்புப் பெயர், மண் + நேயம்.

(வி - ரை.) மணி என்பது கண்ணிற்குள் விளங்கும் பாப்பா எனும் உருவம். கண்ணில் மணி இருப்பினும் இருட்டில் அக் கண் ஒளி பயன் தருவதில்லை. அது பயன்படச் சூரியன் ஒளி தேவைப் படுகிறது. அதுபோல இறைவியின் ஒளி இன்றியமையாது என்பதனை விளக்கவே, ''மணியில் கலந்தொளிசெய் விண்ணே'' என்றனர். மங்களாம்பிகை பிள்ளைத் தமிழ், ''திண்தோள் வலிச் சிலம்பரசன் தவத்துரு செல்வக் குமரி'' என்று கூறுதல் காண்க. இதுவே இங்கு மலைபெறும் பெண்மணி எனப்பட்டது. ''மண்ணேயம் நீத்தவர் வாழ்வே'' எனும் தொடரைப் படிக்கும்போது, ''தண்ணிய யோகியர் சிந்தைக் கமலத்தடம் அகலா அனமே'' என்னும் மங்களாம்பிகை பிள்ளைத் தமிழ் வரியினையும் இங்குச் சிந்தித்தல் நலம். (7)

**மலையான் தவஞ்செய்து பெற்றமுத் தேஒற்றி வாழ்கனகச்**
**சிலையான் மணக்க மணக்குந்தெய் வீகத் திருமலரே**
**அலையான் மலிகடல் பள்ளிகொண் டான்தொழும் ஆர்அமுதே**
**வலையான் அருமை மகளே வடிவுடை மாணிக்கமே.**

(பொ-ரை.) "பர்வதராசன் தவஞ்செய்து பெற்றெடுத்த முத்தே! திருஒற்றியூரில் வாழும் பொன்மலையை வில்லாக வளைத்த சிவபெருமான் திருமணம் செய்துகொள்ள அவர்க்கு வாசனையை அளித்துக் கொண்டிருக்கும் தெய்வீக மலரே! அலைகள் மிகுந்துள்ள திருப்பாற் கடலில் யோக நித்திரை செய்துகொண்டிருக்கும் திருமால் வணங்குகின்ற அருமை வாய்ந்த தேவாமுதமே! மீன் பிடித்து வாழும் செம்படவனுக்கு அருமை மகளாகப் பிறந்த மகளே! வடிவுடை மாணிக்கமே" (எ - து.)

(அ - சொ.) மலையான் - மலை அரசன். கனகம் - பொன். சிலை - வில். கனகச் சிலையான் - பொன் மலையை வில்லாக வளைத்த சிவபெருமான். மலி - மிகுந்த. கடல் பள்ளிகொண்டான் - திருப்பாற்கடலில் உறங்கும் திருமால். ஆர் அமுது - அருமையான தேவாமுதம்.

(இ - கு.) அலையால் + மலி அருமை + அமுது. எனப்பிரிக்க.

(வி - ரை.) இறைவி மலையரசனுக்கு மகளாய்த் தோன்றியது அவன் மகிழ மட்டும் அன்று. அகில சராசரங்களும் நல்வழிப் படவே ஆகும். இந்த உண்மையினை அமுதாம் பிகை பிள்ளைத் தமிழ்,

"மனம்வாக்கில் எட்டாத சிற்சத்தி ஆயிடினும்
மன்பதைகள் உய்யவேண்டி
மலைஅரையன் முதலோர் இடத்தவ
தரித்தொரு மடப்பிள்ளை யாய்வருதலால்"

என்று கூறும் கருத்தால் புலனாகிறது.

மலையான் தவம் கிடந்து உமையைப் பெற்றதைக் கந்தபுராணம்,

"அன்னதோர் தடத்திடை அசல மன்னவன்
மன்னிய கௌரிதன் மகண்மை ஆகவும்
தன்னிகர் இலாஅரன் தனக்கு நல்கவும்
முன்னுற அருந்தவம் முயன்று வைகினான்"

"மெய்த்தவம் இயற்றிய வெற்பன் காணிய
அம்தடம் மலரும்ஓர் அரவிந் தத்தின்மேல்
வைத்ததோர் குழவியின் படிவத் துற்றனள்
எத்திறத் துயிரையும் ஈன்ற தொன்மையாள்"

என்று கூறுகிறது.

முத்துகளில் பலவகை உண்டு. அவைகள் வட்டம், அனுவட்டம், ஒப்புமுத்து, குறுமுத்து, நிம்போளம், பயிட்டம், அம்புமுது, கரடு, இரட்டை, சம்பத்தி, சக்கத்து, குளிர்ந்தநீர் சிவந்தநீர் என்பன. முத்துகள் பிறக்கின்ற இடங்கள்,

" தந்தி வராக மருப்புஇப்பி பூகம் தனிக்கதலி
நந்து சலஞ்சலம் மீன்தலை கொக்கு நளினமின்னார்
கந்தரம் சாலி கழைகன்னல் ஆவின்பல் கட்செவிகார்
இந்து உடும்புகராம் முத்தை ஈனும் இருபதுமே"

என்று இரத்தினச் சுருக்க நூல் கூறும்.

முத்துகளுக்குரிய சிறப்பிடம் தமிழ்நாடே. தமிழ் மக்களே முத்துகளை முதல் முதலில் கண்டெடுத்தவர்கள். நல்ல முத்துகள் பருமை, வட்டம், உருண்டை, ஒளி யுடைமை, வெண்மை, திண்மை, மழமழப்பு, உரிய இடத்தில் தொளை உடைமை ஆகிய குணங்களுடன் இருக்கவேண்டும். மேலும், நட்சத்திரம் போன்ற ஒளியும் உருட்சியும் கொண்டனவாக இருக்கவேண்டும்.

முத்துக்குரிய குற்றங்கள் மசூர உரு, திரிபுட உரு, ஆமை உரு, குப்பாயம் உடைமை, சட்டைபோன்ற படலம். இரண்டடை ஒரு பிளவு. சருச்சரை, தேன்மெழுகு போன்ற

புள்ளி, கமண்டல உரு, கறுப்பும் மஞ்சளும் கலந்த நிறம், நீல நிறம், வேற்றிடத் துவாரம் என்பன. மேலும், காற்றேறு, மணலேறு, கல்லேறு, நீர்நிலை என்பன. இங்ஙனம் முத்து களுக்குக் குற்றம் இருப்பதனால்தான். மீனாட்சி அம்மை பிள்ளைத் தமிழ், இறைவியின் முத்தைச் சிறப்பித்து, ஏனைய முத்துகளை ஒதுக்குகிறது. இக் கருத்தடங்கிய பாடல்,

"கொழுதி மதர்வண் டுழக்குகுழல்
கோதைக் குடைந்த கொண்டலும்நின்
குதலைக்கிளிமென் மொழிக்குடைந்த
குறுகண் கரும்பும் கூன்பிறைக்கோ
குழைத பொலன்சீ றடிக்குடைந்த
செந்தா மரையும் பசுங்கழுத்துக்
குடைந்த கமஞ்சூல் சங்குமொழு
கொளியகமுகும் அழகுதொய்யில்
எழுது தடந்தோள் குடைந்ததடம்
பணையும் பணைமென் முலைக்குடைந்த
இணைமா மருப்பும் தருமுத்துன்
திருமுத்தொவ்வா இகபரங்கள்
முழுதும் தருவாய் நின்கனிவாய்
முத்தம் தருக முத்தமே
முக்கட் சுடர்க்கு விருந்திடும்மும்
முலையாய் முத்தம் தருகவே"

என்பது.

இருபது இடங்களில் பிறக்கும் முத்துகள் தேவையே இல்லை என்னும் குறிப்பில், திருச்செந்தூர் பிள்ளைத் தமிழ் கூறி முருகனது முத்தை விரும்பிப் பாடியுள்ள பாடல்கள் மிக்க சுவை உடையனவாகவும், முருகன் திருவருளைப் பெறு தற்கு உரியனவாகவும் இருத்தலின் அவற்றைப் படித்தின் புறுதல் வேண்டும் என்னும் கருத்தில் அவையும் இங்குத் தரப்படுகின்றன.

" கத்தும் தரங்கம் எடுத்தெறியக்
கடுஞ்சூல் உளைந்து வலம்புரிகள்
கரையில் தவழ்ந்து வாலுகத்தில்
கான்ற மணிக்கு விலையுண்டு
தத்தும் கரட விகடதட
தந்திப் பிறைக்கூன் மருப்பில்விளை
தரளம் தனக்கு விலையுண்டு
தழைத்துக் கழுத்து வளைந்தமணிக்
கொத்தும் சுமந்த பசுஞ்சாலிக்
குளிர் முத் தினுக்கு விலையுண்டு
கொண்டல் தரும்நித் திலம்தனக்குக்
கூறும் தரம்உண் டுன்கனிவாய்
முத்தம் தனக்கு விலை இல்லை
முருகா முத்தம் தருகவே
முத்தம் சொரியும் கடல் அலைவாய்
முதல்வா முத்தம் தருகவே "

" வளைக்கும் தமரக் கருங்கடலின்
வளைவாய் உகுத்த மணிமுத்துன்
வடிவேல் கறைபட் டுடல்கறுத்து
மாசு படைத்த மணிமுத்தம்
துளைக்கும் கழையில் பருமுத்தம்
துளபத் தொடைமால் இதழ்பருகித்
தூற்றும் திவலை தெறித்தமுத்தம்
சுரக்கும் புயலில் சொரிமுத்தம்
திளைக்கும் கவன மயில்சிறையில்
சிறுதூள் பொதிந்த குறுமுத்தம்
செந்நெல் முத்தம் கடைசியர்கால்
தேய்த்த முத்தம் செழுந்தண்தேன்

முளைக்கும் குமுதக் கனிவாயால்
முருகா முத்தம் தருகவே
முத்தம் சொரியும் கடல் அலைவாய்
முதல்வா முத்தம் தருகவே"

என்பன அப்பாடல்கள்.

ஆகவே, இறைவியாம் முத்து, குற்றம் குறைகள் இல்லா முத்தாக இருத்தலின் நம் ஐயா "மலையான் தவம் செய்து பெற்றமுத்தே" என்றனர்.

இறைவன் இறைவிக்கு வேதத்தின் பொருளை இரகசியமாகக் கூறிக் கொண்டிருந்தான். ஆனால், உமாதேவி அதனை விருப்பம் இன்றிக் கேட்டனள். இதனால் இறைவன் தேவியைச் செம்படவர் மகளாகப் பிறக்குமாறு பணித்திட்டான்.

இறைவி தன் குற்றத்தை உணர்ந்து "இறைவ! நான் எப்படி உங்களைப் பிரிந்து வாழ்வேன்" என்று வருந்திக் கூறினள். இறைவன் மன இரக்கம் கொண்டு, "நீ செம்படவர் மன்னனுக்கு மகளாகப் பிறந்து வளர்கையில், யாம் வந்து மணப்போம்" என்று அருள் செய்தான்.

இந்நிலையில் இறை அன்புகொண்ட வலைஞன் தனக்கு மகவு இன்மை குறித்து இறைவனிடம் முறையிட்டு வருகையில், அவனது மனக்குறையை நீக்க இறைவி புன்னை மர நிழலில் குழந்தை வடிவில் தோன்றி அழத் தொடங்கினாள். அவ்வழுகுரலைக் கேட்ட செம்படவர் மன்னன் அக் குழந்தையை எடுத்து வளர்த்தான்.

நந்தி எம்பெருமானும் இறைவன் சாபத்தால் சுறு மீன் வடிவுடன் கடலில் இருந்து கொண்டு செம்படவர்களுக்குப் பெருந் தொந்தரவு தந்து வந்தார். வலைஞர் தலைவன் அம் மீனைப் பிடிக்கிறவர்களுக்குத் தன் மகளை மண முடித்துத் தருவேன் என்று கூற அவனது மகளை மணக்கப் பலரும்

முயன்றனர். இறைவன் வலைஞன் வடிவில் வந்து நந்தியாம் சுரு மீனைப் பிடித்துச் செம்படவனிடம் வளர்ந்த பார்வதி தேவியை மணம் முடித்துக் கொண்டனன், இந்த வரலாற்றுக் குறிப்பைக் கொண்டுதான் வாதவூரர் "மீன்வலை வீசிய கானவன்" என்றனர். இதனைத் திருவிளையாடல் புராணத்தில் வலைவீசின படலத்தில் காண்க. இந்த வரலாற்றையே ஈண்டு நம் ஐயா, "வலையான் அருமை மகளே" என்றனர். வலையான் இறைவியாம் குழவியைக் கண்டதும் அடைந்த மகிழ்ச்சியைப் பரஞ்சோதி முனிவர்,

"பிள்ளை இன்மையேற் கிரங்கிஎம் பிரான்தமிழ்க் கூடல்
வள்ளல் நல்கிய மகவிது வேஎன வலத்தோள்
துள்ள அன்புகூர்ந் தெடுத்திரு தோள்உறப் புல்லித்
தள்ள ருந்தகைக் கற்பினுள் தனதுகைக் கொடுத்தான்"

என்று கூறுகிறார். ஆகவே, இறைவி வலையரசன் அருமை மகள்தானே!

இங்ஙனம் இறைவி வலையரசனுக்கு அருமை மகளாகப் பிறந்தது அவளது இரக்கப் பண்பும் கருணைப் பொழிவும் ஆகும் என்பதை மாதவச் சிவஞான சுவாமிகள் தம் அமுதாம்பிகை பிள்ளைத் தமிழில்,

"வளம்பெருகும் இமையவரும் ஏத்தொணுப்
பெருமாட்டி மகிமைஎன் புன்மொழிகளால்
வாழ்த்தரிய தாம்எனினும் ஆங்கவள்
கிரிக்கிறைவன் மகளாகி யதும்அல்லால்
உளம்கொடியர் வாழ்வலைச் சேரியினும்
அவதரித் தொளிர்பாசி சங்குபூட்டி
உள்மகிழ்ந் தருளுதலின் என்மொழிக்
கும்பெரி துவந்தருள் சுரக்கும்எனவே"

என்று பாராட்டிப் போற்றியுள்ளனர். (8)

காமம் படர்நெஞ் சுடையோர் கனவினும் காணப்படாச்
சேமம் படர்செல்வப் பொன்னே மதுரச் செழுங்கனியே
தாமம் படர்ஒற்றி யூர்வாழ் பவளத் தனிமலையின்
வாமம் படர்பைங் கொடியே வடிவுடை மாணிக்கமே.

(பொ - ரை.) "சிற்றின்ப இச்சையில் படிந்த மனமுடையவர்களின் கனவிலும் காணப்படாத இன்பம் நிறைந்த செல்வமாம் பொன்னே! இனிய வளமான கனியே! மாலை அணிந்த திருஒற்றியூரில் வாழ்கின்ற பவளம்போலும் செந்நிறம் படைத்த ஒப்பற்ற மலையின் இடப்பக்கத்தே படர்கின்ற பூங்கொடியே! வடிவுடை மாணிக்கமே!" (எ - து.)

(அ - சொ.) சேமம் - இன்பம். மதுரம் - இனிமை. தாமம் - மாலை வாமம் - இடப்பக்கம். பைங்கொடி - பச்சைப் பூங்கொடி (இறைவி). தனி - ஒப்பற்ற.

(இ - கு.) கனவினும், உம் இழிவு சிறப்பு. பவளமலை, உருவகம். பைங்கொடி, உவம ஆகுபெயர்.

(வி - ரை.) இறைவி காமுகர்களுக்கு அருள்புரியாதவள் ஆதலின், "காமம் படர்நெஞ்சுடையோர் கனவிலும் காணப்படாதாள்" எனப்பட்டாள். இறைவர் செந்நிறம் உடையவர் ஆதலின், பவளமலை எனப்பட்டார். "பவளம் போல் மேனி" என்பது அப்பர் வாக்கு. இறைவர் அளக்கலாகா அளவும், துளக்கலாகா நிலையும் தோற்றமுடையவர் ஆதலின், 'மலை' என்றே கூறப்பட்டார். மலையில் கொடி படர்தல் இயற்கை. இறைவியாம் பைங்கொடி இறைவனும் மலையின் இடப்பக்கத்தே படர்ந்திருத்தலின், "பவளத் தனி மலையின் வாமம் படர்ந்த பைங்கொடியே" என்றனர். (9)

**கோடா அருள்குணக் குன்றே சிவத்தில் குறிப்பிலரை**
**நாடாத ஆனந்த நட்பேமெய் அன்பர் நயக்குமின்பே**
**பீடார் திருஒற்றிப் பெம்மான் இடம்செய் பெருந்தவமே**
**வாடா மணிமலர்க் கொம்பே வடிவுடை மாணிக்கமே.**

(பொ - ரை.) "தவறுத அருள் குணம் நிறைந்த குன்றே! சிவபெருமானை வணங்கிப் போற்றவேண்டும் என்னும் குறிப்பு ஒரு சிறிதும் இல்லாதவரை அடையாமல், போற்றும் அன்பர் கட்கு இன்ப நட்பாய் இருப்பவளே! மெய் அன்பர்கள் விரும்பும் இன்பமே! பெருமை நிறைந்த திருஒற்றியூர் இறைவனது இடப்பாகத்தில் அமர்ந்திருக்கும் பெருந் தவமே! வாடாத அழகிய மலர்கள் நிறைந்த வடிவுடை மாணிக் கமே!" (எ - து.)

(அ -சொ.) கோடா - தவறுத. நயக்கும் - விரும்பும். பீடு - பெருமை.

(இ - கு.) பெருமான் என்பதன் மரூஉ வழக்கு, பெம்மான் என்பது.

(வி - ரை.) இறைவியின் அருட்பண்பு என்றும் ஒரே நிலையில் இருந்து அன்பர்களுக்கு அருள் செய்தலின், "கோடா அருள் குணக்குன்றே" எனப்பட்டாள். பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் ஆகிய மூன்று தேவர்களுக்கும் மேலான பரம்பொருள் சிவம். இதனைச் சைவசித்தாந்தம் சதுர்த்தம் என்று கூறும். இறைவி, "அகந்தைக் கிழங்கை அகழ்ந்தெடுக்கும் தொழும்பர் உளக்கோயிற் கேற்றும் விளக்கு" (மீனாட்சி அம்மன் பிள்ளைத்தமிழ்) ஆதலின், "அன்பர் நயக்கும் இன்பமே" எனப்பட்டாள். திருஒற்றி யூரின் பெருமையினைக் காப்புச் செய்யுளின் விசேட உரையில் காண்க. இறைவி இறைவனது இடப்பாகத்தைப் பெறத்

தவம் செய்தாள் ஆதலின், "திருஒற்றிப் பெம்மான் இடம் செய் பெருந்தவமே" என்றனர். (10)

**நாலே எனும்மறை அந்தங்கள் இன்னமும் நாடிஎனைப்
போலே வருந்த வெளிஒளி யாய்ஒற்றிப் புண்ணியர்தம்
பாலே இருந்த நினைத்தங்கை ஆகப் பகரப்பெற்ற
மாலே தவத்தில் பெரியோன் வடிவுடை மாணிக்கமே.**

(பொ - ரை.) "வடிவுடை மாணிக்கமே! வேதங்கள் நான்கே என்று கூறப்பட்ட அவ் வேதங்களும், அந்த வேதங்களின் அந்தங்களும் இதுவரையில் தேடியும் காணமுடியாமல் என்னைப்போல வருந்தவும், வெட்ட வெளியாகவும், பேரொளிப் பிழம்பாகவும் விளங்கும் திருஒற்றியூரின் புண்ணியப்பொருளாய் உள்ள இறைவரின் இடப்பக்கத்தே இருந்த உன்னைத் தங்கை என்று சொல்லுதற்குரிய வாய்ப்பைப் பெற்ற திருமால் தவத்தில் பெரியவனே". (எ - து.)

(அ - சொ.) மறை - வேதம். அந்தங்கள் - வேதாந்தங்கள். நாடி - தேடி. பால் - இடத்தில். பகர - சொல்ல. மால் - திருமால்.

(இ - கு.) நாலே, ஏகாரம் தேற்றம். மறை அந்தங்கள், வெளிஒளியா, உம்மைத்தொகை. பால், ஏழன் உருபு. மாலே, ஏகாரம் பிரிநிலை.

(வி - ரை.) ஒரு காலத்தில் வேதங்கள் பல வகையாக இருந்தன. அவ்வாறு இருந்தவற்றை வேதவியாசர் நான்காக வகுத்து வைத்தனர். இதனை வில்லிபுத்தூரார் பாரதம் "தோத்திரமான தெய்வச் சுருதிகள் யாவும் நான்காகக் கோத்தவன்" என்று கூறுதலால் தெளிவாகிறது. எனவேதான் ஈண்டு "நாலே எனும் மறை" எனப்பட்டது. ஈண்டுக்கூறப்பட்ட வேதங்கள் வடமொழி வேதங்கள். இவைதாம் இறை

வனைக் காண இயலாதவை. வேதங்கள் இறைவனைக் காண முடியாமல் கதறியதை மணிவாசகர் "வேதங்கள் ஐயா என ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே" என்றனர். பரஞ்சோதியாரும் "வேதங் கிடந்து தடுமாறும் வஞ்சவெளி" என்றும், "எதிர்மறை எட்டும் தோறும் வஞ்சனாய் அகல்வான்" என்றும் கூறினர். "இருக்காதி சதுர்வேதம் இசைப்பதும் நின்பல பேதம், ஒருக்காலும் ஒன்றுரைத்தது ஒன்றுரைக்க அறியாதே," என்று அருணைக் கலம்பகமும் கூறுகிறது. ஆனால், தமிழ்மறைகள் இறைவனை அறியவல்லன. "பீடுடைய பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் அன்றே" என்று இறைவனைக் கண்டு கூறியது திருஞான சம்பந்தர் திருவாய் மலர்ந்த வேதம்தானே. அப்பர் தம் தாண்டகங்களில் கண்டாய், காண்க என்று கூறியிருப்பதும், திருவாதவூரர் திருவாசகத்தில் காண்க என்று கூறுவதும் தமிழ் மறையினால் இறைவனைக் கண்ட உண்மையை உணர்த்துவதற்காக அல்லவோ? இதுகொண்டுதானே பரஞ்சோதியார் "தமிழ் அறியும் பெருமானே" என்றனர்.

அந்தம் என்பது வேதாந்தம். அந்ததரம் என்பது வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தம். இந்த உண்மை மெய்கண்டார் வாக்காகிய "சிவம் என்னும் அந்ததர என்னும் அருந்தொடரால் புலனாகின்றது.

வேதாந்தம் என்பது உபநிடதங்களைக் குறிக்கும். வேதக் கருத்தை விளக்க வந்த உபநிடதங்கள் ஒரு முகமாக முடிந்த முடிபாக எதையும் உணர்த்தாமல் பல திறப்பட்டுப் பிணங்குவன ஆயின. இந்த வேதாந்தங்கள் கேவலாத்துவிதம் சுத்தாத்துவிதம், விசிட்டாத்துவிதம், துவிதம் என்னும் மாறுபட்ட கருத்துகளுக்கு இடனாய் அமைந்துவிட்டன. இதனால்தான், நீலகண்டர், சங்கரர், இராமாநுஜர், மாத்துவர் ஆகியோர்களின் கருத்துகள் ஒன்றுக்கொன்று முரணுடை

யன ஆயின. இன்னோரன்ன காரணங்களால் வேதாந்தங் களும் இறைவனுடைய உண்மை நிலையினைக் காண இயலாமல் போயின. இவற்றை எல்லாம் உட்கொண்டே தான் வள்ளலார், "நாலே எனும் மறை அந்தங்கள் இன்னமும் நாடி எனைப்போலே வருந்த" என்றனர்.

வெளிஒளி என்பதற்கு வெளியும் ஒளியும் ஆன பொருள் என்றேனும், வெளியில் ஒளியாய் விளங்கும் பொருள் என்றேனும் பொருள் கொள்ளலாம். முன்னுள்ள பொருளைக் கருதின் உம்மைத் தொகையாகவும், பின்னுள்ள பொருளைக் கருதின் ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகையாகவும் கொள்க.

இறைவன் ஒருவனே புண்ணியப் பொருளாய் இருப் பவன். "புண்ணியா உன்அடிக்கே போதுகின்றேன்" என்று அப்பர் கூறுமாற்றால் தெளிக.

தவத்திற்கு எல்லாவற்றையும் கொடுக்கும் ஆற்றல் உண்டு. இது குறித்தே திருவள்ளுவர்,

"வேண்டிய வேண்டியாங் கெய்தலால் செய்தவம்
ஈண்டும் முயலப் படும்"

என்றார். இந்தக் கருத்தில்,

"நோற்றார்க்குச் சோற்றுள்ளும் வீழும் கறி"

என்று பழமொழி நானூறும்,

"விழுப்பொருள் பரவை ஞாலம் நோற்பவர்க்
குரிய ஆகும்"

என்று சீவக சிந்தாமணியும்,

"அத்தவப் பிறவியை அகற்றி மேதகு
முத்தியை நல்கியே முதன்மை ஆக்குறும்
இத்துணை அன்றியே இம்மை இன்பமும்
உய்த்திடும் உளந்தனில் உன்னும் தன்மையே"

"ஆற்றலில் தம்முடல் அலசப் பற்பகல்
நோற்றவர் அல்லரோ நுவலல் வேண்டுமோ
தேற்றுகிலீர்கொலோ தேவர் ஆகியே
மேற்றிகழ் பதந்தொறும் மேவுற் றோர்எலாம்"

என்று கந்த புராணமும்,

"வேண்டின வேண்டினர்க் களிக்கும் மெய்த்தவம்"

என்று கம்ப ராமாயணமும்,

"பண்ணிய தவத்தால் அன்றி யாதானும் படுபொருள்
பிறிதில்லை"

என்று திருவிளையாடல் புராணமும் கூறுகின்றன.

இத்தகைய அரும் பெரும் தவத்தைத் திருமால் செய்து தான் இறைவியைத் தங்கை எனக் கூறும் தகைமை பெற்றனன் என்று வியந்து, "நினைத் தங்கையாகப் பகரப் பெற்ற மாலே தவத்தில் பெரியோன்" என்றனர்.

தாயுமானவரும் இறைவியை நோக்கி, "மதுசூதனன் தங்கையே" என்று கூறியுள்ளனர். அபிராமி பட்டரும் (அபிராமி அந்தாதியின் ஆசிரியர்) "முகுந்தற்கு இளையவளே" என்றனர்.

இறைவனுக்கு ஆதிசத்தி, பராசத்தி, கிரியா சத்தி, ஞானசத்தி எனப் பலவகைச் சத்திகள் உளர். அவர்களுள் திருமாலும் ஒரு சத்தியே. "அரியலால்தேவி இல்லை" என்பது அப்பர் வாக்கு. "நால்வகைச் சத்திதன்னுள் மாலும் ஒருசத்தி." என்பதும் இக்கருத்தையே ஒட்டி எழுந்தது. எனவே, திருமாலுக்குத் தங்கையானாள் இறைவி. அரன் என்பது ஆண்பால். இந்த ஆண்பாலுக்கு 'அரி என்பது பெண்பால். ஆகவே, அரி இறைவனுக்குச் சத்தியாயினன்.

**கங்கைகொண் டோன்ஒற்றி யூர்அண்ணல் வாமம் கலந்தருள்செய்
நங்கைஎல் லாஉல கும்தந்த நின்னைஅந் நாரணற்குத்
தங்கைஎன் கோஅன்றித் தாயர்என் கோசொல் தழைக்குமலை
மங்கைஅம் கோமள மானே வடிவுடை மாணிக்கமே.**

(பொ - ரை.) "கங்காதேவியைச் சடையில் வைத்துள்ளவனும் திருஒற்றியூரில் எழுந்தருளி இருப்பவனும் ஆகிய பெருமையில் சிறந்த பெருமானுடைய இடப்பக்கத்தே இருந்து கொண்டு அன்பர்களுக்குத் திருவருள் செய்கின்ற அம்மையே! புகழ் மிகுந்திருக்கும் மலை அரசன் பெற்ற பெண்ணாகிய அழகுடைய மானே! வடிவுடை மாணிக்கமே! எல்லா உலகங்களையும் பெற்றெடுத்த உன்னை அந்த நாராயண மூர்த்தியின் தங்கை என்று கூறுவேனோ? அல்லது அவன் தாய் என்று சொல்வேனோ? (எ - து.)

(அ - சொ.) அண்ணல் - பெருமையில் சிறந்த சிவபெருமான். சொல் - புகழ். கோமளம் - அழகு.

(இ - கு.) நங்கை, அண்மைவிளி, மான், உவம ஆகு பெயர். அன்றி, குறிப்பு வினைஎச்சம்.

(வி - ரை.) இறைவன் பகீரதனுடைய வேண்டுகோட்கிணங்கிக் கங்கையைத் தன் சடையில் வைத்துள்ளான். கங்கையின் வேகத்தைச் சிவபெருமான் தவிரப் பிரமன் விஷ்ணு முதலானவர்களாலும் அடக்க முடியாது. இந்த உண்மையினைப் பிரமன் உணர்ந்து பகீரதனை நோக்கி, கூறியதைக் கம்பர்,

"மாக நன்னதி புவியிடை வருகின்மற் றவள்தன்
வேகம் ஆற்றுதல் கண்ணுதற் கன்றிவே றரிதால்
தோகை பாகனை நோக்கிநீ அருந்தவம் தொடங்கென்
றேகி னான்உல கனைத்தும்எவ் உயிர்களும் ஈந்தான்".

என்று கூறினர். இக் கட்டளைப்படி பகீரதன் இறைவனை

நோக்கித் தவம் செய்து சிவபெருமானைக் கண்டு தன் கருத்தைக் கூறச் சிவனுர் கங்கையைச் சடையில் அடைத்தார். இதையும் கம்பராமாயணம்,

"உந்தி யம்புயத் துதித்தவன் உறைதரும் உலகும்
இந்தி ராதியர் உலகமும் நடுக்குற விரைத்து
வந்து தோன்றினள் வரநதி மலைமகள் கொழுநன்
சிந்தி யாதொரு சடையினில் கரந்தனன் சேர"

என்று கூறுகிறது.

இதைத்தான் நம் ஐயா, "கங்கை கொண்டோன்" என்றனர். இறைவியே எல்லா உலகங்களையும், உலகு உயிர்களையும், பெற்றவள். "அகிலாண்ட கோடி ஈன்ற அன்னையே" என்பர் தாயுமானவர். "பிரமன் முதலாய தேவரைப் பெற்ற அம்மே" என்பர் அபிராமிபட்டர். ஆகவே, திருமாலும் தேவியால் படைக்கப் பட்டவர்களுள் ஒருவனே! ஆக அவனை எப்படி உன் அண்ணன் என்று கூறுவது? உன் பிள்ளை என்று தானே கூறவேண்டும்" என்று இப்படி இருபால் கவர் உற்று இடை ஊசலாடி ஒருபால் படாத நிலையில், "நாரணற்குத் தங்கை என்கோ? தாய் என்கோ?" என்றனர். எல்லா உயிர்களும் இறைவியின் பிள்ளைகள் என்பதைப் பெரிய நாயகி அம்மை கலித்துறை,

"சோதிப் பதிஅன்றி வேறொரு தெய்வம் தொழுதற்கில்லை
ஓதில் பிறர்என அச்சம் உருமல் உயிர்கள்எலாம்
நீதிப் புதல்வர்கள் ஆயின ஆதலின் நீகொள்கற்புப்
பேதிப்ப தன்றுகண் டாய்குன்றை வாழும் பெரியம்மையே"

என்று பாடுகிறது. (12)

சோலையிட் டார்வய லூர்ஒற்றி வைத்துத்தன் தொண்டர்அன்பின்
வேலையிட் டால்செயும் பித்தனை மெய்யிடை மேவுகரித்
தோலையிட் டாடும் தொழில்உடை யோனைத் துணிந்துமுன்னாள்
மாலையிட் டாய்இஃ தென்னே வடிவுடை மாணிக்கமே.

(பொ - ரை.) "வடிவுடை மாணிக்கமே? சோலைகள் சூழ்ந்து வயல்களும் நிறைந்த ஊரை ஒற்றி வைத்தும் தன் தொண்டர்கள் அன்பினால் ஏதேனும் வேலை செய்யும்படி சொன்னால், அதையும் செய்கின்ற பித்தனும் உடம்பின்மீது யானையின் தோலைப் போர்த்துக் கொண்டு கூத்தாடும் தொழிலுடையவனுமாகிய சிவபெருமானை முன்பு துணிவுடன் மாலை யிட்டாய். அம்மா! இதற்கு என்ன காரணமோ? புரியவில்லையே!" (எ - து.)

(வி - ரை.) ஆர் - நிறைந்த. மெய் - உடம்பு. கரி - யானை. மாலை - திருமண மாலை. மாலையிட்டாய் - திருமணம் செய்து கொண்டாய்.

(இ - கு.) அன்பின் வேலை, மூன்றன் உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை, முன் + நாள்.

(வி-ரை.) சூரிய குலத்து மன்னன் மாந்தாதா என்பவன், தன் ஆட்சிக்குள்பட்ட கோவில்களுக்கு வரி விதிக்க ஓலை எழுதச் சொன்னான். அப்படி எழுதப்பட்ட ஓலையில் திருவொற்றியூர் நீங்கலாக என்னும் வரிகள் அரசனாலும், அரசன் கட்டளையை எழுதியவனாலும் அறிய முடியாதபடி அமைந்து விட்டன. அதனால் அக் கோயில் ஒற்றியூர் என்னும் பெயரைப் பெற்றது. தள்ளி வைக்கப்பட்டது என்னும் பொருள் தரும் ஒற்றி என்னும் சொல்லுக்கு, உரிமை அடைமானம் என்னும் பொருளும் உளது. அதாவது திருஒற்றியூர் சிவபெருமானால் பிறரிடம் உரிமை அடைமானம் வைக்கப் பட்டது என்பது. இந்தப் பொருளில் மாணிக்கவாசகர்

"இருந்தென்னை ஆண்டுகொள் விற்றுக்கொள் ஒற்றிவை" என்று கூறுதலையும், ஒற்றி என்பதற்குத் தள்ளி வைத்தல் என்னும் பொருளில் சுந்தரர் ஆளுதலையும் சிவபெருமானுக்கு அதனை மீட்கின்றவரையில் உரிமை இல்லை என்று நகைச் சுவை ததும்பப் பாடுவதையும் இங்கு நினைக்கவும்.

"உம்மை ஒற்றிவைத்து இங்கு உண்ணலாமோ" என்பதும்,

"வார மாகித் திருவ டிக்குப்
பணிசெய் தொண்டர் பெறுவ தென்னே
ஆரம் பாம்பு வாழ்வ தாரூர்
ஒற்றி யூரோ உம்ம தன்று
தாரம் ஆகக் கங்கை யாளைச்
சடையில் வைத்த அடிகேள் உந்தம்
ஊரும் காடும் உடையும் தோலே
ஓண காந்தன் தளியு ளீரே"

என்பதும் மேலே கூறிய கருத்துகளை நிலை நிறுத்துவன ஆகும். காளமேகப் புலவரும்,

"ஆடும் தியாகரே ஆட்டம்ஏன் தான் உமக்கு
வீடும் சமுசாரம் மேலிட்டு—கூடிச்
செருக்கி விளையாடச் சிறுவர் இரண்டாச்சே
இருக்கும்ஊர் ஒற்றியாச் சே"

என்று நகைச்சுவையுடன் பாடினார்.

அப்பர் பெருமான் திருஒற்றியூர்த் தியாகேசனை நோக்கி, "இறைவா திருஒற்றியூரை விற்க வேண்டா. ஏற்கனவே அதனை ஒற்றிவைதுவிட்டீர். இதுபோன்ற வளமான நயமான ஊர் உங்கட்குக் கிடைக்காது" என்னும் கருத்தில்,

"சுற்றிவண் டியாழ்செயும் சோலையும் காவும் துதைந்திலங்கு
பெற்றிகண் டால்மற் றியாவரும் கொள்வர் பிறர்இடைநீ
ஒற்றிகொண் டாய்ஒற்றி யூரையும் கைவிட்டுறும்
[என்றெண்ணி
விற்றிகண் டாய்மற் றிதுஒப் பதில்இடம் வேதியனே"

என்று அழகும் நகைச்சுவையும் தோன்றப் பாடி இருப்பதையும் படித்தின்புறுக. இந்தச் சுவைகளை எல்லாம் எண்ணியே "ஊர் ஒற்றிவைத்து" என்றனர்.

சிவபெருமானுக்கு வேண்டியது உண்மை அன்பு. அந்த அன்புக்குக் கட்டுப்பட்டு அன்புடைத் தொண்டர்கள் எத்தகைய வேலைகளைச் சொன்னாலும் அவ்வேலைகளைத் தட்டாமல் செய்வர். இதனைச் சுந்தரருடைய வாழ்க்கை வரலாற்றில் காணலாம். சுந்தரருக்கும் அவர்தம் முதல் மனைவியார் பரவைநாய்ச்சியார்க்கும் மனக் கசப்பு (ஊடல்) உண்டாயிற்று. அந்த ஊடலைத் தீர்க்கும்படி திருவாரூர்த் தியாகராயரை நோக்கி,

"நாயன் நீரே நான்உமக்கிங் கடியேன் ஆகில் நீர்எனக்குத்
தாயின் நல்ல தோழரும்ஆம் தம்பி ரானு ரேஆகில்
ஆய அறிவும் இழந்தழிவேன் அயர்வு நோக்கி அவ்வளவும்
போயிவ் இரவே பரவைஉறு புலவி தீர்த்துத் தாரும்என"

வேண்டினார் எனப் பெரிய புராணம் கூறுகிறது. இறைவனும் அதற்கு இசைந்தார் என்பதையும் அப்புராணம்,

"அன்பு வேண்டும் தம்பெருமான் அடியார் வேண்டிற்
[றேவேண்டி
முன்பு நின்று விண்ணப்பம் செய்த நம்பி முகம்நோக்கித்
துன்பம் ஒழிநீ யாம்உனக்கோர் தூதன் ஆகி இப்பொழுதே
பொன்செய் மணிப்பூண் பரவைபால் போகின் றோம்என்
[றருள்செய்தார்"

என்று கூறுகிறது. இந்த வரலாற்றுக் குறிப்பே ஈண்டு "தொண்டர் அன்பின் வேலையிட்டால் செயும் பித்தன்" எனப்பட்டது. ஒரு பெண்ணின் ஊடலைத் தீர்க்க வேதம் காணு, வேய்ங்குழலோன் காணு, முழுமுதற் பொருள் தூது சென்றமையின் பித்தன் என்று ஏளனமாகக் கூறப்பட்டது. இந்த ஒரு காரணத்தால் மட்டும் இறைவன் பித்தன் இல்லையாம். பல காரணங்களாலும் இறைவன் பித்தனும். இதனை வேடிக்கையாகக் காளமேகப் புலவர்,

"கண்டீரோ பெண்காள் கடம்பவனத் தீசனார்
பெண்டீர் தலைச்சுமந்த பித்தனார்—எண்திசைக்கும்
மிக்கான் தங்கைக்கு மேலே நெருப்பை இட்டார்
அக்காளை ஏறினூராம்"

என்று பாடுதல் காண்க.

கயாசுரன் என்பவன் ஒருவன். அவன் யானைமுகமுடையன். அவன் தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் பெருந்துன்பத்தைப் புரிந்து வந்தான். இதனால் அவர்கள் காசிக்குச் சென்று விசுவேசுவரரைச் சரண்புகுந்து கயாசுரனது துன்பத்திலிருந்து மீட்க வேண்டிக் கொண்டனர். இறைவர் தம்மை அடைக்கலம் புகுந்தவர்களைக் காக்க உக்கிரப் பெருவடிவு கொண்டு, தம் விழிவழித் தீப்பொறியைச் செலுத்தி அசுரனைக் காலால் உதைத்துத் தள்ளித் தலையை மிதித்துத் தம் நகங்களால் அவன் உடலைப் பிளந்து, அவன் தோலை உரித்து, உமாதேவி அஞ்சும்படி தம் உடலில் போர்த்துக் கொண்டார். இதனால் இறைவர்க்குக் கஜயுத்த மூர்த்தி எனும் பெயரும் உண்டாயிற்று. இதனைக் கந்த புராணம்,

"மதித்து வேழமாம் தானவன் வருதலும் வடவை
உதித்த வன்னியும் அச்சுற எரிவிழித் தொருதன்
கதித்த தாள்கொடு தள்ளவே கவிழ்ந்து
புதைத்து வீழ்தலும் மிதித்தனன் சிரத்தைஓர் பதத்தால்"

"ஒருப தத்தினைக் கவான்உறு திருக்கரத் துகிரால்
வெரிந்இ டைப்பிளந் தீர் இரு தாள்புடை மேவக்
குருதி கக்கியே ஓல்இட அவுணர்தம் குலத்துக்
கரிஉ ரித்தனன் கண்டுநின் றம்மையும் கலங்க"

என்று கூறுகிறது. இந்த வரலாறே "மெய்இடை மேவுகரித் தோலை யிட்டாடும் தொழிலுடையோன்" எனப்பட்டது.

நம் ஐயா இறைவியை நோக்கி, "அம்மணி! உன் கணவன் பைத்தியக்காரன். எந்த வேலையைச் செய்யச் சொன்னாலும் செய்பவன். யானைத் தோலைப் போர்த்துக் கொண்டிருப்பவன். இப்படிப்பட்டவனை என்ன காரணத்தால் மணந்துகொண்டாய்" என்று வேடிக்கை முறையில் வினவும் நோக்கில் இப்பாடலைப் பாடினார். இதனால் இறைவனுக்கு இழுக்கினை நம் ஐயா கற்பித்தார் அல்லர். இவ்வாறு இகழ்வது இறைவனது புகழை மிகவும் புகழ்வதற்காகவே ஆகும். இப்படிப் பாடுவதைப் புகழாப் புகழ்ச்சி அணியின்பால் அடக்க வேண்டும். இவ்வாறு பாடுவன எல்லாம் இலக்கியச் சுவையை மிகுதி படுத்துவதற்காகவே ஆகும்.

இறைவி கூத்தாடிக்கு (நடராசப் பெருமானுக்கு) வாழ்க்கைப்பட்டதை நகைச்சுவை தோன்றக் காளமேகம்,

"மாட்டுக்கோன் தங்கை மதுரைவிட்டுத் தில்லைநகர்
ஆட்டுக்கோ னுக்குப்பெண் டாயினாள்—கேட்டிலையோ
குட்டி மறிக்க ஒருகாட்டானையும் பெற்றாள்
கட்டுமயிலிச் சிற்றிடைச்சி காண்"

என்று பாடினார். ஒரு பெண் சிவபெருமான் மீது மையல் கொண்டு பாடியதை ஒரு புலவர்,

"மாத்தானைப் பித்தனை மாடேறு வானை மதகரித்தோல்
போர்த்தானை வேதப் பொடிபூசு வானைஇப் பூதலத்தென்
ஆத்தா ளுடன்எதிர்த் தம்பலத் தேஎன்றும் ஆடிநிற்கும்
கூத்தாடிப் பையலுக் கோமக ளே மயல் கொண்டனையே"

என்று பாடியுள்ளனர்.

யார் என்ன கூறினாலும் இறைவனுடைய அருமை பெருமைகளை இறைவி உணர்ந்தவள் ஆதலின் அவனுக்கே மாலை யிட்டாள் என்க. (13)

**தனையாள் பவர்இன்றி நிற்கும் பரமன் தனிஅருளாய்**
**வினையாள் உயிர்மலம் நீக்கிமெய் வீட்டின் விடுத்திடும்நீ**
**எனையாள் அருள்ஒற்றி யூர்வாழ் அவன்தன் இடத்தும்ஒரு**
**மனையாள் எனநின்ற தென்னே வடிவுடை மாணிக்கமே.**

(பொ - ரை.) "வடிவுடை மாணிக்கமே! தன்னை யாரும் அடக்கி ஆள்பவர் இன்றித் தனக்குத்தானே தலைவனாய் விளங்கும் பரமேசுவரனுடைய ஒப்பற்ற அருளாய் இருந்து கொண்டு வினையால் ஆளப்பட்டு வருகின்ற ஆன்மாக்களைப் பற்றி நிற்கும் ஆணவ மலத்தை நீக்கி அவ்வான்மாக்களை உண்மையாய் விளங்கும் மோட்ச உலகில் விடுத்திடும் நீ, என்னை ஆளாகக் கொண்டு திருவருள் புரிகின்ற திருஒற்றி யூரில் வாழ்கின்ற பெருமானுக்கு வாழ்க்கைத் துணைவியாக இருப்பது எதனாலோ?" (எ து.)

(அ - சொ.) பரமன் - மேலான சிவம். தனி - ஒப்பற்ற. மலம் - ஆணவமலம். வீடு - மோட்ச உலகம்.

(இ - கு.) இன்றி, குறிப்பு வினை எச்சம் உயிர் மலம், இரண்டன் உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை. அவன்தன் தன். சாரியை. வினை ஆள் உயிர் என்பது, மூன்றும் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை.

(வி - ரை.) நாட்டில் ஒரு பழமொழி உண்டு. அதாவது "சிவனுக்குமேல் ஒரு தெய்வம் இல்லை. சித்திக்கு மேல் ஒரு சாத்திரம் இல்லை" என்பது. சித்தி என்பது சைவ சித்தாந்த சாத்திர நூல்கள் பதினான்கனுள் ஒன்று. இறைவனைப் பிறதேவர்கள் வணங்குவரே அன்றி இறைவன் பிறரை வணங்குவதில்லை. இதனை மணிமொழியார், "சேர்ந்தறியாக் கையான்" என்றனர். ஆகவே, இறைவன் தனை ஆள்பவர் இன்றி நிற்கும் பரமன் ஆயினார். இறைவி இறைவனது அருளே ஆவாள். அருளது சத்தியாகும் என்பது முன்பும் கூறப்பட்டது.

உயிர்கள் செய்யும் செயல்கள் நல்வினை தீவினை எனப் பகுக்கப்படும். இந்த இருவினைகளை அவ்வவ் உயிர்கள் அனுபவித்தே தீர வேண்டும். ஆன்மாக்கள் நல்வினை தீவினை என்னும் இருவினைக்கு ஈடாக நால்வகைத் தோற்றத்தையும், எழுவகைப் பிறப்பையும், எழுபத்துநான்கு யோனி பேதங்களையும் உடையனவாய்ப் பிறந்து இறந்து உழலும். இதனால் இங்கு, "வினை ஆள் உயிர்" எனப்பட்டது.

ஆணவ மலத்துக்குச் சகசமலம் என்னும் பெயரும் உண்டு. இதன் பொருள் உடன்தோன்றியது என்பது. அம்மலம் ஆன்மாவுடன் கலந்தே இருக்கும். அஃது ஆன்ம அறிவை மறைத்து, தன்னையும் காட்டாது. ஆணவ மலம் பேரிருள் மயமானது. ஆனால் இருள் பொருள்களை மறைத்தாலும் தன் வடிவைக் காட்டும். ஆனால் ஆணவம், தன்னையும் காட்டாது; பிற பொருளையும் காட்டாது. இதனை,

> "ஒருபொருளும் காட்டா திருள்உருவம் காட்டும்
> இருபொருளும் காட்டா திது".

என்று திருவருள்பயன் கூறுகிறது.

இந்த ஆணவ மலம் நீங்க வேண்டுமானால், சிவசக்தியின் தாக்குதலால் ஆன்மா, உடலை எடுக்கவேண்டும். அந்த

நிலையில் சரியை கிரியை, யோகம், ஞானம், என்னும் படி முறைகளை மேற்கொள்ளவேண்டும். இவற்றின் பயனால் ஒரு பொருளில் விருப்பமும், ஒரு பொருளில் வெறுப்பும் இன்றி எல்லாவற்றையும் ஒன்றாகவே கருதவேண்டும். இந்த நிலையே இருவினை ஒப்பு எனப்படும். இந்நிலையை உற்றால் சத்தியின் திருவருள் ஆன்மாவில் பதியும். இப்படிப் பதி தலைச் சத்திநிபாதம் என்பர். இதனால் ஞானப் பேற்றினைப் பெறலாம். சத்திநிபாதத்தைத் திருவருள் வீழ்ச்சி என்பர். இந்த உண்மைகளை எல்லாம் திருமந்திரம்,

> "இருவினை நேர்ஒப்பில் இன்அருள் சத்தி
> குருஎன வந்து குணம்பல நீக்கித்
> தருமெனு ஞானத்தால் தன்செயல் அற்றால்
> திரிமலம் தீர்ந்து சிவன்அவன் ஆமே" என்கிறது.

இவ்வாறெல்லாம் இறைவி ஆன்மாவிற்குத் திருவருள் புரிந்து அதனை முத்தி உலகுக்குத் தகுதியுடையதாகச் செய்யும் கருணைத் திறத்தை நம் ஐயா, "மலம் நீக்கி மெய் வீட்டின் விடுத்திடும் நீ" என்று சுருங்கக் கூறினார்.

இறைவி இறைவனுக்கு மனையாளாக இருப்பது அவளும் அவனும் இன்பம் துய்ப்பதற்கன்று. உலகுயிர்கள் போகத்தைத் துய்ப்பதற்காகவே ஆகும். "போகியாய் இருந்து உயிர்க்குப் போகத்தைப் புரிதல்" என்பது சிவஞான சித்தியார்.

> "இணர்எரித் தேவும் தானே எரிவளர்ப் பவனும் தானே
> உணவுகொள் பவனும் தானே ஆகிய ஒருவன் வையம்
> புணர்வுறு போகம் மூழ்கப் புருடனும் பெண்ணும் ஆகி
> மணவினை முடித்தான் அன்னான் புணர்ப்பையார்
> மதிக்க வல்லார்"

என்பது திருவிளையாடல் புராணம். இந்தக் கருத்தினை உளத்தில் கொண்டே "மனையாள் என நின்றதென்னே" என்றனர். (14)

**பின்ஈன்ற பிள்ளையின் மேல்ஆர்வம் தாய்க்கெனப் பேசுவர்நீ**
**முன்ஈன்ற பிள்ளையின் மேல்ஆசை உள்ளவர் மொய்அசுரர்**
**கொன்ஈன்ற போர்க்கிளம் பிள்ளையை ஏவக் கொடுத்ததென்னே**
**மன்ஈன்ற ஒற்றி மயிலே வடிவுடை மாணிக்கமே.**

(பொ - ரை.) "மலை அரசன் பெற்ற மயிலே! திருஒற்றியூரில் எழுந்தருளியுள்ள வடிவுடை மாணிக்கமே! முதல் முதல் பிறந்த பிள்ளையின் மேல் ஆசையுள்ளவர்களும், தாய்க்குமட்டும் பின்னால் பெற்றெடுத்த பிள்ளையின்மேல் தான் அன்பு என்று சொல்லுவர். அப்படி இருக்க நீ பின்னால் பெற்றெடுத்த இளம் பிள்ளையாகிய முருகப் பெருமானை மிக்க அரக்கர்கள் நிறைந்த அச்சத்தைக் கொடுக்கத் தக்க போருக்குச் செல்லப் பணித்தனையே. இவ்வாறு செய்தது என்னே! (எ - று)

(அ - சொ.) மன் - அரசன் (பர்வதராசன்.) ஆர்வம் - அன்பு. மொய் - மிக்க. இளம்பிள்ளை - முருகன். அசுரர் - இராக்கதர். கொன் - அச்சம். ஈன்ற - தரும், பெற்ற.

(இ - கு.) மன், ஈற்றுக்குறை. மயில், உவம ஆகு பெயர். கொன், உரிச்சொல்.

(வி - ரை.) மொய் அசுரர் ஆவார் சூரபதுமன், சிங்கமுகாசூரன், தாரகன் பானுகோபன் முதலியோர். இவர்களைக் கொல்ல முருகன் சென்றான் ஆதலின், அதை மனத்தில் கொண்ட நம் ஐயா, "போர்க்கு இளம்பிள்ளையை ஏவக் கொடுத்த தென்னே" என்றனர். (15)

**பையாளும் அல்குல் சுரர்மட வார்கள் பலருளும்இச்**
**செய்யாளும் வெண்ணிற மெய்யாளும் எத்தவம் செய்தனரோ**
**கையாளும் நின்அடிக் குற்றேவல் செய்யக் கடைக்கணித்தாய்**
**மையாளும் கண்ஒற்றி வாழ்வே வடிவுடை மாணிக்கமே.**

(பொ - ரை.) "கரிய மை நிறைந்த கண்களை யுடையவளே! திருஒற்றியூரில் வாழ்பவளே! வடிவுடை மாணிக்கமே! பாம்பின் படத்தைப் போன்ற குறியுடைய தேவமாதர்கள் பலருக்குள் இந்த இலக்குமியும், வெண்ணிற உடல்பெற்ற சரசுவதியும் உனக்குக் கையாளாக இருந்து உன் திருவடிகளுக்குச் சிறுசிறு வேலைகளைச் செய்ய நீ கடைக்கண் சாத்தி, திருவருள் செய்துள்ளாயே அவ்வாறு உனக்குத் திருப்பணி செய்ய அவர்கள் செய்த தவம்தான் எதுவோ?" (எ - து.)

(அ - சொ.) பை - படம் எடுத்தாடும் பாம்பு. அல்குல் - பெண்குறி. சுரர் மடவார் - தேவ மாதர்கள். செய்யாள் - இலக்குமி வெண்ணிற மெய்யாள் - சரசுவதி. மெய் - உடல். கடைக்கணித்தாய் - திருக்கண் சாத்தினாய், திருவருள் புரிந்தாய்.

(இ - கு.) குறு + ஏவல்.

(வி - ரை.) இறைவிக்குச் சேடிமார்களாக அமைந்தவர்கள் அலைமகளும், கலைமகளுமே ஆவர் இவர்கள் என்றும் இறைவிக்குத் தொண்டு செய்யும் பான்மையர் என்னும் குறிப்பை உணர்த்தும் முறையில் தான், காஞ்சி காமாட்சி அம்மன் உற்சவ திருமேனிக்கு வலத்தும், இடத்தும் இலக்குமியும், சரசுவதியும் இருந்துகொண் டிருக்கின்றனர். இந்தக் காட்சியை இன்றும் அங்குக் காணலாம். இறைவிக்கு அலங்காரம் செய்பவர்களும் அவர்களே. இதனைத் திருவிளையாடல் புராணம்,

"செம்மலர்த் திருவும் வெள்ளைச் செழுமலர்த் திருவும் தங்கள்
கைம்மலர்த் தவப்பே றின்று காட்டுவார் போல நங்கை
அம்மலர் அனிச்சம் அஞ்சும் அடியில்செம் பஞ்சு தீட்டி
மைம்மலர் குழல்மேல் வாசக் காசறை வழியப் பெய்து"

என்று கூறுகிறது.

மீனாட்சி அம்மை பிள்ளைத்தமிழ், அலைமகள் இறைவி யின் சேடி என்பதை "குண்டுபடுபால்கடல் வருந்திருச்சேடி" என்கிறது. மேலும், அந்நூலே அலைமகளே இறைவியின் உயிராய் இருக்கும் சேடியாம் என்று கூறுவதை "உயிராய் இருக்கும் சேடியரில் மலர்மீ துதித்தவள்" என்னும் வரியில் காண்க. இத்தகைய வாய்ப்பு ஏனைய தேவமாதர்களுக்குக் கிடைத்திலது. எனவேதான் "எத்தவம் செய்தனரோ" என்று வினவப்பட்டது. (16)

இலையாற்று நீமலர்க் காலால் பணிக்கும்சிற் றேவல்எலாம்
தலையால் செயும்பெண்கள் பல்லோரில் பூமகள் தன்னைத்தள்ளாய்
நிலையால் பெரியநின் தொண்டர்தம் பக்கம் நிலாமையினால்
மலையாற் கருளொற்றி வாழ்வே வடிவுடை மாணிக்கமே.

(பொ - ரை.) "மலை அரசனுக்குத் திருவருள் செய்வதற் காகவே அவனுக்குத் திருமகளாக வந்துதோன்றிய வாழ்வே! வடிவுடை மாணிக்கமே! சிறு பருவத்தில் மணலால் வீடு கட்டி விளையாடும் நீ, உன் மலர்போன்ற திருவடிகளால் இடும் சிறுசிறு வேலைகளை எல்லாம் தம்தம் தலையால் செய்யும் பெண்கள் பலருள், நீ திருமகளை மட்டும் தள்ளாமல் ஏற்றுக்கொள்ளுகிறாய். இவ்வாறு திருமகளைத் தள்ளாமல் நீ ஏற்பதற்குக் காரணம், தம்தம் நிலையில் தவறாது நடக்கின்ற காரணத்தால் பெரியவர்களாக விளங்குகின்ற உன் தொண் டர்களின் பக்கத்தில், இலக்குமி இருக்க வழி இல்லாதவள் ஆதலினால் போலும்!" (எ - து.)

(அ சொ.) இலை - வீட்டை. ஆற்றும் - செய்யும், கட்டும். பணிக்கும் - வேலை செய்யக் கட்டளை இடும். பூமகள் - இலக்குமி.

(இ - கு.) இலை, என்பது இல்லை என்பதன் தொகுத்தல் விகாரம்.

(வி - ரை.) இறைவி இல்லறம் நடத்தியதாக இதுவரையில் நாம் அறிந்தோம் இல்லை ஆதலின், "இலை ஆற்றும்" என்பதற்கு வீடுகட்டி சோறு சமைத்து ஆடிய இளமைச் செயல் இங்குக் குறிப்பிடப்பட்டது. இந்தக் குறிப்பைக் குமரகுருபரரது மீனாட்சி அம்மை பிள்ளைத்தமிழில் வரும், "சுற்றுரு நடுநேமி" என்று தொடங்கும் பாடலில் காணவும். அதன் ஈற்றுவரி, "சிற்றில்விளை யாடும்ஒரு பச்சிளம் பெண்பிள்ளை" என்பது. "காலால் இட்ட வேலையைத் தலையால் செய்வேன்" என்னும் பழமொழி இப்பாட்டில் இருப்பதைக் காண்க. மெய்ஞ்ஞானத் தொண்டர்கள் செல்வத்தை ஒரு பொருளாக மதிக்க மாட்டார்கள். இதனைத் திருவிளையாடல் புராணம்,

"புள்ளியதோல் ஆடை புனைந்தரவப் பூண் அணிந்த
வெள்ளிய செங்கண் விடையான் அடிக்கமலம்
உள்ளிய மெய்அன் புடையார் அருவருந்துந்
தள்ளிய செல்வந் தருக்கினய் என்செய்தாய்"

என்று கூறுதல் காண்க. செல்வத்திற்கு வெறுக்கை என்னும் சொல்லும் உளது. அதற்குக் காரணம் மெய்ஞ்ஞானிகள் அதனை வெறுத்து ஒதுக்குவதனல் என்க. இந்த அழகிய குறிப்புகளைத்தான் நம் ஐயா இப்பாட்டின் இடைநின்ற இரு அடிகளில் குறித்துள்ளனர். (17)

**கலைமக ளோநின் பணியைஅன் போடும் கடைப்பிடித்தாள்**
**அலைமக ளோஅன் பொடுபிடித் தாள்எற் கறைதிகண்டாய்**
**தலைமக ளேஅருள் தாயேசெவ் வாய்க்கரும் தாழ்குழல்பொன்**
**மலைமக ளேஒற்றி வாழ்வே வடிவுடை மாணிக்கமே.**

(பொ - ரை.) "எல்லார்க்கும் தலைவியாய் விளங்குபவளே! அருள்தரும் தாயே! சிவந்த வாயையும், தாழ்ந்த கரிய கூந்தலையுமுடைய அழகிய மலை அரசன் மகளே! திருவொற்றியூரில் வாழ்கின்ற இறைவியே! வடிவுடை மாணிக்கமே!

நீ இடும் வேலைகளை அன்போடு மேற்கொண்டு செய்பவள் சரசுவதியா? அல்லது திருமகளா? இதனை எனக்கு அறிவிப்பாயாக'' (எ - று.)

(அ - சொ.) குழல் - கூந்தல். பொன் - அழகிய. கலைமகள் - சரசுவதி. பணி - வேலை. கடைப்பிடித்தாள் - மேற்கொண்டு செய்தவள். அலைமகள் - இலக்குமி. எற்கு - எனக்கு. அறைதி - கூறுக.

(இ - கு.) செவ்வாய்க் கருந்தாழ்குழல், என்பது முரண் தொடை.

(வி - ரை.) இறைவி தெய்வ மாதர்களுக்கெல்லாம் தலைவி என்பதைக் குமரகுருபரர், "திருமகள், கலைமகள், தலைமகள்" என்று கூறுதல் காண்க. மேலும் கலைமகளும், அலைமகளும் மலைமகளை வணங்கும் பான்மையினர். "தவள மலர் வரும் இளமினொடு சததள மலர்வரும் இளமின் வழிபடு தையல்" என்று குமரகுருபரரும், "மலர்கமலை துதிக்கின்ற மின்கொடி" என அபிராமி பட்டரும் கூறுவதை உணரும்போது, இறைவி தலைமகள் என்று கூறுவது உண்மை ஆகின்றது.

இறைவி பேர்அருட்கு உறைவிடம் என்பதைக் குமரகுருபரர் அழகுற,

"கிள்ளைக்கு மழலைப் பசுங்குதலை ஒழுகுதீம்
கிளவியும் களிமயிற்குக்
கிளர்இளம் சாயலும் நவ்விக்கு நோக்கும்விரி
கிஞ்சுகச் சூட்டரசனப்
பிள்ளைக்கு மடநடையும் உடனொடும் மகளிர்க்கொர்
பேதைமையும் உதவிமுதிராப்
பிள்ளைமையின் வள்ளன்மை கொள்ளுமொரு பாண்டிப்
பிராட்டி"

என்று பாடியருளினர்.

மங்களாம்பிகை பிள்ளைத்தமிழ் இறைவியின் அருளை "கல்லா மூடர்மதிக்கும் இனித்துக் கமழும் பைந்தேனே!" என்று பாராட்டுகிறது. அலை, ஈண்டு ஆகுபெயராய்க் கடலைக் குறிக்கிறது. அக்கடலில் தோன்றியவள் இலக்குமி ஆதலின், அவளை அலைமகள் என்றனர். அலைமகள், கலைமகள் ஆகிய இருவருமே இறைவியின் குற்றேவலைச் செய்பவர்களே என்னும் குறிப்பில்தான் 'யார் கடைப்பிடித்தார்' என்ற வினாவை நகைச்சுவை தோன்ற வினவினார் நம் ஐயா. இறைவிக்குத் தொண்டு செய்வதில் இவ்விரு தேவிமாரும் முன்னணியில் நின்றனர் என்பது நூல்களால் புலனாகின்றது. "பங்கயமான் பற்றிப் பாரதி பரவ வந்தாள்" என்பது கந்த புராணம். "செம்மல ராளொடு நாமகள் தேவி கைம்மலர் பற்றின" என்பது திருவிளையாடல் புராணம். (18)

**பொன்னோடு வாணிஎன் போர்இரு வோரும் பொருள்நல்கல்வி**
**நன்னோ டருளும் திறம்நின்குற் றேவலைத் தாங்கிநின்ற**
**பின்னோ அலதுதன் முன்னோ தெளிந்திடப் பேசுகநீ**
**மன்னோ டெழில்ஒற்றி யூர்வாழ் வடிவுடை மாணிக்கமே.**

(பொ - ரை.) "மாணிக்கத் தியாகனோடு அழகிய திருஒற்றியூரில் வாழ்கின்ற வடிவுடை மாணிக்கமே! இலக்குமியும் சரசுவதியும் ஆகிய இவ்இருவரும் செல்வத்தையும் கல்வியையும் மக்களுக்குத் தருகின்ற வாய்ப்பு, உன் திருவடிகட்குத் தொண்டுசெய்த பிறகோ அல்லது உன் குற்றேவலை மேற்கொள்ளுதற்குப் முன்போ? இதனை எனக்குத் தெளிவாக அறிவித்தருள்வாயாக" (எ - று.)

(அ - சொ.) மன் - தலைவனாகிய மாணிக்கத் தியாகன். எழில் - அழகு. பொன் - இலக்குமி. வாணி - சரசுவதி. திறம் - வன்மை.

(இ - கு.) மன், ஈற்றுக்குறை. பொருள் நல் கல்வி, உம்மைத் தொகை. ஓகாரங்கள் ஐயம்பொருளில் வந்துள்ளன.

(வி - ரை.) இலக்குமி பொன்னைத்தரும் தேவி யாதலின், அவள் 'பொன்' என்றே கூறப்படுவாள், புலவர் நாவிலும், பிரமன் நாவிலும் கலைமகள் வாழ்தலின் அவள் வாணி எனப்படுவள். இலக்குமி பொன்னைத் தரும் தேவியாய் இருப்பதுபோலக் கலைமகள் கல்வியைத்தரும் தேவியாய் உளள். இந்தக் கருத்தில்தான் நம் ஐயா " பொன்னோடு வாணி என் போர் இருவோரும் பொருள் நல்கல்வி தன்னோடு அருளும் திறம் " என்றனர். அப்படியானால் " உமாதேவி எதைத் தருவள்?" என்னும் வினா எழும் அன்றோ? அதற்கு விடை பார்வதிதேவி அழியாப் பொருளாகிய வீட்டின்பத்திற்குக் காரணமான ஞானத்தைக் கொடுப்பவள் என்பது. இந்த உண்மையினை,

" திருமகள், வலக்கண் வாக்கின் சேய்இழை இடக்கண் [ஞானப்
பெருமகள் நுதற்கண் ஆகப் பெற்றுவான் செல்வம் கல்வி
அருமைவீ டளிப்பன் யாவன் அவள்உயிர்த் துணைவன் காண
ஒருமுலை மறைந்து நாணி ஒசிந்தபூங் கொம்பின் நின்றாள் "

என்று திருவிளையாடற் புராணம் கூறுதல் காண்க. அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ் ஆசிரியரும் இகமும் பரமும் அளிப்பவள் உமையே என்பதை " இகபர பெருவாழ்வு வேட்டவர்க்கருளும் நின் இணை அடிக் கமல மலர்" என்றனர். "மெய்ஞ்ஞான இன்பால் அருள் பிராட்டி " என்பது மங்களாம்பிகை பிள்ளைத் தமிழ். பொதுவாகக் கருதுமிடத்து இறைவியே, ஞானம், கல்வி, செல்வம் மற்றும் யாவும் தருபவள். இந்த உண்மையினை அபிராமி அந்தாதி,

"தனம்தரும் கல்வி தரும்ஒரு நாளும் தளர்வறியா
மனம்தரும் தெய்வ வடிவும் தரும்நெஞ்சில் வஞ்சம்இல்லா
இனம்தரும் நல்லன எல்லாம் தரும்அன்பர் என்பவர்க்கே
கனம்தரும் பூங்குழ லாள்அபி ராமி கடைக்கண்களே"

என்று கூறுதல் காண்க.

நம் ஐயா தம் பாட்டில் ஒரு வினவை எழுப்புகின்றார். அவ்வினா அலைமகளும், கலைமகளும், பொருளும், கல்வியும் தரும் பேற்றைப் பெற்றிருப்பதன் காரணம், இறைவிக்குக் குற்றேவல் செய்யும் வாய்ப்பைப் பெற்ற பின்போ, முன்போ என்பது. இதற்கு விடை அவ்விருவரும் இறைவிக்குக் குற்றேவல் புரிந்த பின்னே ஆகும் என்பது. மேலும், இறைவி அவ்விருவர்மீது பெருங்கருணை புரிந்து அவர்களின் கரத்தை அன்புடன் பற்றி நடந்தமையினால்தான் பொருளையும் கல்வியையும் மக்களுக்குத் தரும் வாய்ப்பைப் பெற்றனர். இந்த உண்மைகள் கீழ்வரும் பாடல்களால் நன்கு புலனாகும்.

"வெள்ளைக் கருஞ்செயலின் உருகிஉரு கித்துதிசெய்
வித்தகத் தவர்இம்மையே
மேலாய கல்வியும் செல்வமும் ஒருங்குபெற
விழைவில் கொடுத்தல்கருதி
அள்ளல் தலைப்படும் கமலத்தலை பொலியும்
அந்தலார் இருவர்கையும்
அறங்கள்பல வும்குடிகொள் அங்கையில் பற்றலுற்
றுங்கமை தரப்பற்றியே
எள்ளல் திறம்சிறிதும் இல்லாத மறைமுடியும்
எங்கள்உள மும்குடிகொளும்
எழில்கனிந் தொழுகுசிற் றடிமலர் பெயர்த்துவகை
எண்ணில் புவனத்துமேவ

வள்ளல் பெருந்தகையன் பொலியும் குடந்தைநகர்
வாழ்வாயப்பரை வருகவே
மன்னுயிர்ப் பயிரெலாம் தழைய அருள் மழைபொழியும்
மங்களாம் பிகைவருகவே ''

என்பது மங்களாம்பிகை பிள்ளைத் தமிழ்.

'' செம்மல ரானொடு நாமகள் தேவி
கைம்மலர் பற்றின கல்வியொ டாக்கம்
இம்மையி லேபெறு வார்க்கிது போதென்
றம்மணி நூபுரம் ஆர்ப்ப நடந்தாள் ''

என்பது திருவிளையாடல் புராணம்.

நம் வள்ளலார் தம் பாட்டில் பின்னோ முன்னோ என்று வினவும் வினாவைப் படிக்கும்போது நம் தாண்டகச் சதுரர்,

'' ஒருவனாய் உலகேத்த நின்ற நாளோ
ஓருருவில் மூவுருவம் ஆன நாளோ
கருவனாய்க் காலனைமுன் காய்ந்த நாளோ
காமனையும் கண்ணழலால் விழித்த நாளோ
மருவனாய் மண்ணும் விண்ணும் தெரித்த நாளோ
மான்மறிக்கை ஏந்தினார் மாதோர் பாகம்
திருவினார் சேர்வதற்கு முன்னோ பின்னோ
திருவாரூர் கோயிலாக் கொண்ட நாளே ''

என்று பாடிய திருத்தாண்டகம் நினைவிற்கு வருகிறது. (19)

**காமட் டலர்திரு ஒற்றிநின் நாயகன் கந்தைசுற்றி**
**போமட் டரையொடு நிற்பது கண்டும் இரங்கலர்போல்**
**நீமட்டு மேமட் டுடுக்கின் றனைஉன்தன் நேயம் என்னே**
**மாமட் டலர்குழல் மானே வடிவுடை மாணிக்கமே.**

(பொ - ரை.) "சிறந்த தேன் நிறைந்த மலரைச் சூடிய கூந்தலையுடைய மானே! வடிவுடை மாணிக்கமே! சோலையில் தேன் பொருந்திய மலர்கள் நிறைந்த அழகிய திருவொற்றியூரில் எழுந்தருளியுள்ள உன் நாதராம் படம்பக்கநாதர் இடுப்பில் மட்டமான கந்தையைச் சுற்றிக்கொண்டு நிற்பதைக் கண்டும் சிறிதும் இரக்கம் காட்டாதவர்கள் போல நீமட்டும் பட்டாடை உடுத்திக் கொள்கின்றாயே! நீ உன் நாயகனிடம் கொண்டுள்ள அன்பு இத்தகையதுதானோ?" (எ - து.)

(அ - சொ.) மா - சிறந்த. மட்டு - தேன். குழல் - கூந்தல். கா - சோலை. இரங்கலர் - அன்பு காட்டாதவர். நேயம் - அன்பு.

(இ - கு.) மா, உரிச்சொல்.

(வி - ரை.) நம் ஐயா காலத்தில் சிற்சில கோவில்களில் உள்ள திருவுருவங்களுக்கு நல்ல துணிகள் உடுத்தப்படவில்லை. கந்தைகளே உடுத்தப்பட்டு வந்தன. இதற்குக் காரணம் நிர்வாகமே ஆகும். நம் வள்ளலார் பாடி எனப்படும் திருவலிதாய திருத்தலத்தைக் கண்டு வணங்கச் சென்ற போதும், அத்தலத்துப் பெருமானும் கந்தையே உடுத்தி இருந்தனர். இந்த உண்மையினை நம் ஐயா மனம் உருகி,

"திரைப டாத செழுங்கட லேசற்றும்
உரைப டாமல் ஒளிசெய்பொன் னேபுகழ்
வரைப டாது வளர்வல்லி கேசநீ
தரைப டாக்கந்தை சாத்திய தென்கொலோ"

"பன்னு வார்க்கரு ளும்பர மேட்டியே
மன்னு மாமணி யேவல்லி கேசனே
உன்ன நீஇங் குடுத்திய கந்தையைத்
துன்னு வார்இலை யோபாஞ் சோதியே"

(துன்னுவார் (தைத்துக் கொடுப்பவர்) இலையோ என்று வினவும் வினாவினால் அவ்வளவு கிழிந்த ஆடை இறைவர்க்குக் கட்டப்பட்டிருந்தது என்பது புலனாகிறது.)

"கடுத்த தும்பிய கண்டவ கண்டனே
மடுத்த நற்புகழ் வாழ்வல்லி கேசநீ
தொடுத்த கந்தையை நீக்கித் துணிந்தொன்றை
உடுத்து வார்இல்லை யோஇவ் உலகிலே"

"ஆல டுத்த அரும்பொரு ளேதிரு
மால டுத்து மகிழ்வல்லி கேசநீ
பாலு டுத்த பழங்கந்தை யைவிடத்
தோலு டுப்பது வேமிகத் தூய்மையே"

"மாசில் சோதி மணிவிளக் கேமறை
வாசி மேவி வரும்வல்லி கேசநீ
தூசில் கந்தையைச் சுற்றிஐ யோபர
தேசி போல்இருந் தீர்என்கொல் செய்வனே

"சேரும் நற்றவர் சிந்தை எனும்தலம்
சாரும் நல்பொரு ளாம்வலி தாயநீர்
பாரும் அற்றிப் பழங்கந்தை சாத்தினீர்
யாரும் அற்றவ ரோசொலும் ஐயரே"

"மெல்லி தாய விரைமலர்ப் பாதனே
வல்லி தாய மருவிய நாதனே
புல்லி தாயஇக் கந்தையைப் போர்த்தினால்
கல்லி தாயநெஞ் சம்கரை கின்றதே"

என்று பாடி இருப்பதைக் காண்க.

திருவலிதாய நாதர் கந்தை சுற்றிக்கொண்டு காலம் கழிக்கின்றார். திருநாங்கூர் இறைவர் சோறு இன்றிக்காலம் கழித்தனர். இந்த உண்மையினை இரட்டைப் புலவர்கள்

வெளிப்படுத்தினர். இரட்டையர்கள் என்பவர்கள் நொண்டியும் குருடர் ஆகிய இரு புலவர்கள். குருடர் நொண்டிப் புலவரைச் சுமந்து செல்வர். இருவரும் சேர்ந்தே ஒரு பாட்டைப் பாடி முடிப்பர். இந்நிலையில் இவ்விருவரும் திருநாங்கூர்க்குச் சென்றனர். அங்குள்ள அர்ச்சகர் இறைவர்க்குப் பொங்கலைப் படைக்காமல் செங்கலைச் சுட்டு அதன்மீது ஈரத் துணியை மூடி அதனையே சுவாமிக்குக் காட்டிவந்தனர். சுட்ட கல்லின்மீது ஈரத்துணி மூடப்படுவதால் அதன்மீது ஆவி வந்துகொண்டு இருக்கும். இதனைக் காண்பவர்கள் உண்மையில் சுடச்சுட இறைவர்க்குப் பொங்கல் படைக்கப் படுகிறது என்று எண்ணி மகிழ்வர். இந்த வஞ்சகமான செயலை மக்கள் அறியவே இரட்டையர்கள் ஒரு பாட்டைப் பாடினார்கள். அப்பாட்டே,

"தேங்குபுகழ் நாங்கூர்ச் சிவனேஅல் ஆளிஅப்பா
நாங்கள் பசித்திருக்க ஞாயமோ — போங்காணும்
கூறுசங்கு தோல்முரசு கொட்டோசை அல்லாமல்
சோறுகண்ட மூளியார் சொல்"

என்பது. இவற்றை எல்லாம் மனத்தில் கொண்டே நம் ஐயா, "நின் நாயகன் கந்தை சுற்றியே மட்டரையோடு நிற்பது கண்டு" என்றனர். மட்டரை என்பதை மண் தரை எனப் பிரித்தும் பொருள் காணலாம். வடிவுடையம்மன் பட்டுடையுடன் இருப்பதற்குக் காரணம் அத்தலத்தில் நிர்வாகம் சீரிய முறையில் நடந்து வந்தமையே ஆகும். இறைவி பட்டுடை உடுத்தி வருவதை அபிராமி அந்தாதி "ஒல்கு செம்பட்டு உடையாளை" என்றும் "அரவின் பைக்கே அணிவது பல் மணிக் கோவையும் பட்டும்" என்றும் கூறுதல் காண்க. "சாத்துவன கோசிகமே" (பட்டுச்சீலை) என்பது. தட்சயாகபரணி. "திரிபுரை செம்பட்டுக் கட்டுநுசுப்பு" என்பது திருப்புகழ். ஆகவேதான், "நீமட்டுமே பட்டுடுக் கின்றனை" என்று நகைச்சுவை தோன்ற நம் ஐயா கூறினர்.

வீற்றுர்நின் தன்மணத் தம்மியின் மேல்சிறு மெல்அனிச்சம்"
ஆற்றுநின் சிற்றடிப் போதினைத் தூக்கிவைத் தாரெனின்மால்
ஏற்றுர் திருவொற்றி ஊரார் களக்கறுப் பேற்றவரே
மாற்று இயல்கொள் மயிலே வடிவுடை மாணிக்கமே.

(பொ - ரை.) "எவராலும் மாற்ற முடியாத இயல்பான நற்கருணைப் பண்பு வாய்ந்த மயிலே! வடிவுடை மாணிக்கமே திருஒற்றியூரில் வாழ்பவரும், கழுத்தில் விடம் உண்டதனுல் கருநிறத்தைக் கொண்டவரும் ஆகிய சிவபெருமான், பெருமை நிறைந்த உன் திருமணத்தில் சிறிய மிகமெல்லிய அனிச்சமலர் படினும் தாங்க முடியாத அவ்வளவு மென்மைத் தன்மை வாய்ந்த உனது சிறிய மெல்லிய தாமரை மலர் போன்ற திருவடியைத் தூக்கி அம்மி மீது வைத்தார் என்றுல், உண்மையில் அவர் உன்னிடம் மிகவும் காதல் மயக்கம் கொண்டுள்ளார் என்பது நன்கு தெரிகிறது. (எ - து.)

(அ - சொ ) களம் - கழுத்து. இயல் - நல் பண்பு. ஆற்று - பொறுக்க முடியாத. போது - மலர்.

(இ - கு.) வீறு + ஆர். சிறுமை + அடி எனப் பிரிக்க.

(வி - ரை.) இறைவி அன்பர்கட்குச் செய்யும் அருட் பண்பை எவராலும் மாற்ற முடியாமையின் "மாற்று இயல் கொள் மயிலே" எனப்பட்டது. களத்திற்குக் கறுப்பு வந்துற்ற மைக்குக் காரணம், இறைவர் விடம் உண்டமையே ஆகும். திருமணத்தில் மணமகள் காலை மணமகன் தூக்கி அம்மி யின் மீது வைப்பது ஒரு சடங்காகும். அவ்வாறு இறைவர் பார்வதிதேவியின் திருமணத்தில் அம்மையின் திருவடியைத் தூக்கி அம்மியில் வைத்தார் என நம் ஐயா உலகப் போக்கை எண்ணி இவ்வாறு கூறிஞர். இந்தச் சடங்கு நடந்ததைப் பரஞ்சோதி முனிவரும்,

" மங்கலம் புனைந்த செம்பொன் அம்மியில் மணுட்டி பாதம்
பங்கய மலரைக் கையால் பரிபுரம் சிலம்பப் பற்றிப்
புங்கவன் மனுவால் ஏற்றி"

என்று திருமணப் படலத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அம்மியின் மீது மணமகளின் காலைத் தூக்கி வைப்பதேன்? இதற்கு இரண்டு காரணங்கள் கூறப்படுகின்றன. இக் காரணங்களை இறைவன் இறைவியின் காலைத் தூக்கி வைத்ததற்குப் பொருத்திக் காணக் கூடாது உலக மக்களுக்காகவே இவ்விரு காரணங்களைக் கொள்ள வேண்டும். ஒன்று, "அகலிகை இந்திரனுடன் கூடித் தன் கற்பை இழந்து கல்லானது போல நீயும் உன் கற்பை இழந்து கல்லாக மாருதே" என்பது. மற்ருென்று "நீ இனி இல்லறம் நடத்தப் போகிருய். அங்ஙனம் நடத்தும் போது, துறந்தார், துவ்வாதார் முதலியவர்கள் உன்னை அணுகியபோது அவர்கட்கு உண்டி முதலியவற்றைத் தந்து மகிழவேண்டும். அத் தகையவர்கள் வந்தபோது நீ இந்தக் கல்லைப்போலக் கடின உள்ளம் படைத்தவளாக இருத்தல் கூடாது," என்பதாம். முன்னைய காரணத்தினும் பின்னைய காரணமே மிக மிகப் பொருத்தமானது. அனிச்சம் பூ மிகமிக மென்மையானது. அதனை மோந்து பார்த்ததுமே அது வாடிவிடும் தன்மையது. இந்த உண்மையினைத் திருவள்ளுவர் "மோப்பக் குழையும் அனிச்சம்" என்று கூறுதல் காண்க. இவ்வளவு மென்மைக்குரிய அனிச்சம் பூவின்மீது சமுத்திரிகா லட்சணம் அனைத்தும் வாய்க்கப்பெற்ற ஒரு பெண்ணின் பாதம் வைக்கப்படுமானாலும், அப்பாதம் நெருஞ்சி முள் தைத்தால் போன்று துன்புறுமாம். இதனையும் நம் திருக்குறள்.

" அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்
அடிக்கு நெருஞ்சிப் பழம் "

என்று கூறுதல் காண்க. இதனால்தான் வள்ளலார் "சிறுமெல் அனிச்சம் ஆற்றாநின் சிற்றடி" என்றனர்.

இறைவர் இறைவியின் திருவடிகளைப் பிடிக்கின்றார் எனில், "இறைவர் இறைவியின்மீது அந்த அளவுக்குக் காதல் கொண்டுள்ளார் என்பது புலனாகின்றதன்றோ" இதனை மங்களாம்பிகை பிள்ளைத்தமிழ் "இறைவர் தஞ்சமுற இருகை கொண்டு தழுவு ஆரணியை" என்று கூறுதல் காண்க. இதனால்தான் "மால் ஏற்றார்" என்றார். (21)

**பொருப்புறு நீலிஎன் பார்நின்னை மெய்அது போலும்ஒற்றி**
**விருப்புறு நாயகன் பாம்பா பரணமும் வெண்தலையும்**
**நெருப்புறு கையும் கனல்மேனி யும்கண்டும் நெஞ்சம்அஞ்சாய்**
**மருப்புறு கொங்கை மயிலே வடிவுடை மாணிக்கமே.**

(பொ - ரை.) "யானையின் தந்தங்களைப் போன்று அவ்வளவு கூர்மையானதும் அழகானதும் ஆகிய முலையினை யுடைய மயிலே! வடிவுடை மாணிக்கமே! திருஒற்றியூரைத் தனக்கு விருப்புக்குரிய இடமாகக் கொண்ட மாணிக்கத் தியாகனுடைய பாம்பாகிய நகையையும், இறந்தவர்களின் வெண்மையான தலைகளையும், நெருப்புச் சட்டியை ஏந்திய கையையும், நெருப்பு மயமான திருமேனியையும் நீ கண்டும் கூடச் சிறிதும் உள்ளத்தில் அச்சம் கொள்ளவில்லையே! இதனால் மலையில் வாழும் நீலி என்று உன்னைச் சொல்வர் பலர். இஃது உண்மைதான்" (எ - து.)

(அ - சொ.) மருப்பு - யானையின் தந்தம். உறு - பொருந்தப்பெற்ற. கொங்கை - முலை. கனல் - தீ. பொருப்பு - மலை.

(இ - கு.) போலும், அசைச்சொல்.

(வி - ரை.) மாதர்களின் தளரா கொங்கையின் தோற்றத்திற்கு யானையின் மத்தகத்தை உவமை கூறுவது புலவர் மரபு. கொங்கைகள் ஆடவரை உருத்துப் பார்ப்பது போல இருத்தலின், யானை மருப்பு உவமை காட்டுவதும் உண்டு. இந்தக் கருத்தில் "வேலை வென்ற உழத்தியர் வெம்முலை ஆளை நின்று முனிந்திடும் அங்கொர்பால்" என்று கம்பர் கூறுதலும் காண்க. திருஒற்றியூர் கடற்கரை ஓரத்தில் இருப்பதனால், அக் கடல்காற்றைத் துய்த்துக்கொண்டே இருக்க இறைவன் விரும்புதலின், அவ்வொற்றி விருப்புறு ஒற்றி ஆயிற்று. இறைவனுக்குப் பாம்பாபரணம் இருப்பதற்குரிய காரணத்தைக் கூறவந்த புலவர் ஒருவர்,

"ஒட்டாக ஒட்டியும் கால்பொன்னின்
மாப்பொன் உபாயமதாத்
தெட்டா திரான்பணி செய்யாதிரான்
செம்பொன் மேருவினைக்
கட்டாகக் கட்டிக் கடுகள
வாநிறை காட்டவல்ல
தட்டா னுக்குப்பயந் தல்லோஅணிந்
தான்சிவன் சர்ப்பத்தையே"

என்று வேடிக்கையாகப் பாடினார். மணிமொழியார் இறைவன் பாம்பை அணிந்திருப்பதற்குக் காரணம் எவ்வுயிர்க்கும் இயல்பாய் இருக்கும் தன்மையினால் என்பர். யோகியர் இறைவனது பாம்பைக் குண்டலி என்பர். அதாவது மூலாதாரத்தில் இருக்கும் பாம்பின் வடிவமைந்த ஒருசத்தி என்பர். இறைவன் ஊழி முடிவில் எல்லா உயிர்களையும் அழித்துத் தானே அழியாத நித்தியன் என்பதை மக்களுக்கு அறிவுறுத்தும் முறையில் இறந்தவர்களின் தலை ஓட்டினைத் தான் அணிந்து கொள்வன். தாருகா வனத்து இருடிகள் இறைவனை அழிக்கத் தீ அகலை ஏவியபோது அதனை அவன்

கையில் ஏற்றுக்கொண்டனன். சைவசித்தாந்த சாத்திரமாம் உண்மை விளக்கம், இறைவனது பஞ்சாட்சர மந்திரமாகிய நமசிவாய என்பதில் நெருப்பு நகர எழுத்தின் அறிகுறி என்றும், இறைவனது படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்து தொழில்களில் அங்கி சங்கரத்திற்குரிய கருவியாக உள்ளது என்றும், ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களையும் அழிக்கும் பொருட்டுக் கொண்டது என்றும் கூறும். இதனை முறையே, "அங்கி நகரம்" "அங்கியிலே சங்காரம்" "வல்வினையைச் சுட்டு" எனும் உண்மை விளக்கத்தில் வரும் தொடர்களால் உணர்க.

இறைவன் திருமேனி நெருப்பு மயமானது. இதனைத் திருநாவுக்கரசர், "சீர்ஒளிய தழல் பிழம்பாய் நின்ற தில்லைத் திகழ் ஒளியை" என்று கூறுதல் காண்க. ஒரு புலவர், "உலையின் இருப்புவண மேனியன்" என்று கூறியுள்ளனர்.

இறைவன் எல்லாப் படியாலும் தீ வடிவினனாய் உள்ளான் என்பதைக் காளமேகம் வேடிக்கையாக,

"தீத்தான் உன் கண்ணிலே தீத்தான் உன் கையிலே
தீத்தானும் உன்தன் சிரிப்பிலே—தீத்தான்உன்
மெய்எலாம் புள்ளிருக்கும் வேளூரா உன்னை இந்தத்
தையலாள் எப்படிச்சேர்ந் தாள்."

என்று வினவுகின்றார். இந்தக் கருத்தை எல்லாம் உட்கொண்டே நம் ஐயா, "வடிவுடை மாணிக்கமே நெஞ்சம் அஞ்சாய்" என்று அன்புடன் வினவுவாராயினர்.

இறைவிக்குப் பல பெயர்கள் உண்டு. அவற்றுள் ஒன்று "யாமளை" என்பது. "பரிமள யாமள பைங்கிளியே" என்று அபிராமி அந்தாதி கூறித் துதிக்கிறது. யாமளை என்பதன்

பொருள் பச்சை நிறமுடையவள் என்பது பச்சை, நீலம், கருமை இம் மூன்றையும் ஒன்றேபோலப் புலவர்கள் கூறுவது மரபு. ஆகவே இறைவியை நீலி என்றும் கூறுவர். "பிங்கலை நீலி செய்யாள் வெளியாள் பசும்பொன் கொடியே" என்பது அபிராமபட்டர் வாக்கு. நீலி என்பதன் பொருள் கரு நிறத்தோடு கூடியவள் என்பது. நீலி மூலாதாரச் சக்கரத்தில் ஐந்து முகத்தோடு நான்கு இதழ்த் தாமரையில் சாகினி என்ற திருப்பெயருடனும் கரிய நிறத்தோடும் எழுந்தருளி இருப்பள்.

இத்தகைய பெருமைக் குரியள் நம் இறைவி என்று தெரிந்திருந்தும் நம் ஐயா, ஈண்டு நீலி என்னும் திருப் பெயரைக் காளி என்னும் பொருளில் அமைத்து "நீ இறைவன் தோற்றத்தைக் கண்டு அஞ்சவேண்டி இருக்க" அஞ்சாமல் இருக்கின்றாய் ஆகவே உனக்கு நீலி என்னும் பெயர் தகும் என்னும் குறிப்பில் பிறர் கருதும் போக்கில் "நீலி என்பார் நின்னை மெய்யது போலும்" என்றனர். "மெய் அது என்பதை, அது மெய்" என்று மாற்றிப் பொருள் காண்க.

நீலி என்னும் சொல்லின் பொருளைக் காளமேகப் புலவர் முருகன் பெருமையைப் பழித்துக் கூறுவது போலப் புகழ்ந்து பாடிய பாட்டில்,

" அப்பன் இரந்துண்ணி ஆத்தாள் மலைநீலி
ஒப்பரிய மாமன் உறிதிருடி—சப்பைக்கால்
அண்ணன் பெருவயிறன் ஆறுமுகத் தானுக்கிங்
கெண்ணும் பெருமை இவை "

என்று பாடினர்.

இவ்வாறே விநாயகரைப் பழிப்பது போலப் புகழ்ந்து பாடவந்த அந்தகக்கவி வீரராகவ முதலியாரும்,

"வீரம் சொரிகின்ற பிள்ளாய்
உனக்குப்பெண் வேண்டுமென்றால்
ஆரும் கொடார்உங்கள் அப்பன்
கபாலிஅம் மான் திருடன்
ஊரும்செங் காடுநின் றன்முகம்
யானை உனக்கிளையோன்
பேரும் கடம்பன்உன் தாய்நீலி
நிற்கும் பெருவயிறே"

என்று பாடினார். (22)

**அனம்பொறுத் தான்புகழ் ஒற்றிநின் நயகன் அம்குமிழித்**
**தனம்பொறுத் தாள்ஒரு மாற்றாளைத் தன்முடி நன்றில்வைத்தே**
**தினம்பொறுத் தான்அது கண்டும் சினம்இன்றிச் சேர்ந்தநின்போல்**
**மனம்பொறுத் தார்எவர் கண்டாய் வடிவுடை மாணிக்கமே.**

(பொ - ரை.) "வடிவுடை மாணிக்கமே! அன்னப் பறவையால் தாங்கப்பட்டு வரும் பிரம்ம தேவன் போற்றிப் புகழும் உன் நாயகன், அழகிய குமிழ் போன்ற முலையைத் தாங்கியுள்ள கங்காதேவியாகிய சககளத்தியைத் தன் சடையில் நாள்தோறும் தாங்கிக் கொண்டிருக்கிறான். அதனைக் கண்டும் நீ சிறிதும் கோபம் கொள்ளாமல் அப் பெருமானைச் சேர்ந்து வாழ்கின்றாய் என்றால், உன்னைப் போலப் பொறுமை மிக்க மனம் உள்ள பெண்கள் யாவர்? ஒருவரும் இலர்". (எ - து.)

(அ - சொ.) அனம் பொறுத்தான் - அன்னப்பறவை யால் தாங்கப்பட்ட பிரமன். அம் - அழகிய. குமிழி - நீர்க் குமிழி. தனம் - கொங்கை. சினம் - கோபம். மாற்றாள் - சககளத்தி.

(இ - கு.) அனம் இடைக்குறை, கண்டாய், முன்னிலை அசைச்சொல்.

(வி - ரை.) அன்னவாகனனாகிய பிரமனால் புகழப்படும் சிவபெருமான் எனக் கூறப்பட்டனன் ஆயினும், ஏனைய தேவர் களாலும் இறைவன் புகழப்படுபவன் என்று உணர்க. ஒரு மொழி ஒழிதன் இனம் கோளற்கு உரித்தே என்பது இவ்வாறு வருதற்குரிய இலக்கண விதி. கங்கை ஆற்றைப் பெண்ணாக, உருவகம் செய்தமைக்கு ஏற்ப அவ்வாற்று நீரில் தோன்றும் குமிழியை அக் கங்கையின் தனமாகக் கூறப்பட்டது; மாற்றாள் ஆவாள், ஈண்டுக் கங்காதேவி. இறைவர் பகீரதன் பொருட்டுக் கங்கையைத் தலையில் தாங்கினானே அன்றி, அவளைத் தூக்கித் தலையில் வைத்துக் கொள்ளவேண்டும் என்று வைத்துக் கொள்ளவில்லை. என்றாலும், புலவர்கள் இறைவன் பார்வதி தேவிக்கு அஞ்சியும் கங்காதேவியினிடம் கொண்டுள்ள ஆசை காரணமாகவும் தலையில் மறைத்து வைத்துள்ளான் என்று கூறுவர். இந்தக் கருத்தில்தான் "ஈண்டு மாற்றாளைத் முடி தன்னில் வைத்தே" எனப்பட்டது. பார்வதிதேவியார் தம் கணவர் சிவபெருமான் கங்கையாம் நங்கையை தலையில் மறைத்து வைத்திருப்பது தெரிந்திருந்தும் கோபம் கொள் ளாது இறைவனோடு சேர்ந்து வாழ்கின்றாள் என்று பாராட்டி நம் ஐயா பாடுகின்றார்.

இறைவி, கங்கையானவள் இறைவன் தலையில் இருப்பது பற்றிச் சினம் கொள்ளாமல், மகிழ்ச்சியே கொண்டு இருந் தாள் என்பதை மங்களாம்பிகை பிள்ளைத் தமிழ் "வேணியில் சீகரக் கங்கை மங்கை செறிதரத்தகவின் அமர்வித்து மகிழ் மங்களச் செல்வச் செழுங்கொடி" என்று போற்றிப் புகழ்கிறது. (23)

**ஓருரு வாய்ஒற்றி யூர்அமர்ந் தார்நின் உடையவர்பெண்**
**சீருரு வாகும்நின் மாற்ருளை நீதெளி யாத்திறத்தில்**
**நீருரு வாக்கிச் சுமந்தார் அதனை நினைந்திலையே**
**வாருரு வார்கொங்கை நங்காய் வடிவுடை மாணிக்கமே.**

(பொ - ரை.) "நீண்ட உருவு அமைந்த முலையை உடைய உமாதேவியே! வடிவுடை மாணிக்கமே! ஒப்பற்ற ஒரே வடிவாய் இருந்துகொண்டு திருஒற்றியூரில் வீற்றிருக்கின்ற உன்னுடைய நாயகர், பெண்ணுகிய சிறப்புப் பொருந்திய உன் சககளத்தியாகிய கங்கை நங்கையை நீ அறிந்து கொள்ளாதபடி நீர் வடிவாக்கித் தலையில் சுமந்து கொண்டு இருக்கிருரே! அதைப்பற்றி நீ சிறிதும் சிந்திக்காமல் இருக்கின்ருயே. என்ன காரணம்?" (எ - து.)

(அ - சொ.) வார் - நீண்ட. ஆர் - பொருந்திய. கொங்கை - முலை. ஓர் - ஒப்பற்ற.

(இ - கு.) உருவு + ஆர், எனப்பிரிக்க, நங்காய் என்பது விகுதி பெருத பெண்பால் சிறப்புப் பெயர்.

(வி - ரை.) கொங்கை பருத்திருப்ப தோடின்றி நீண்டு இருக்க வேண்டியது சாமுத்திரிகா லட்சண விதி ஆதலின், வார் உருவு ஆர் கொங்கை எனப்பட்டது. இறைவன் பல வடிவினனுக இருப்பினும் அவனது உண்மை இறைமை வடிவு ஒன்றே ஆதலின் ஓர் உருவாய என்றனர். ஒன்றே குலமும், ஒருவனே தேவனும் என்பது திருமந்திரம். இறைவர் பார்வதி தேவிக்கே உரிமை உடையவரே அன்றிக் கங்கா தேவிக்கும் உரியவர் அல்லர் என்பதை அறிவுறுத்தவே "நின் உடையார்" என்று கூறுகிருர். கங்காதேவியும் பார்வதிதேவி போல அழகுடையவள் என்பதை அறிவிக்கவே அவள் "சீர் உருவாகும் நின் மாற்ருள்" எனப் பட்டாள். இந்தப் பாட்டிலும் முன் பாட்டில் அமைத்த கற்பனையை மீண்டும்

வேறு வகையில் நம் ஐயா கூறுகின்றார். அதாவது கங்கையைப் பெண் வடிவில் அப்படியே முடியில் கொண்டால் பார்வதி தேவிக்குத் தெரிந்துவிடும் என்ற காரணத்தால் அவளை நீர் வடிவாக்கித் தலையில் கொண்டாராம்.

துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் இறைவி கங்கை ஆற்றைப் பற்றி வினவியதாகவும், அதற்குத் தக்க விடையினை இறைவன் சொன்னதாகவும் கற்பனை செய்துள்ளார். அப்பாடல் சுவைமிக உடையது. அதாவது,

''ஐயநின் சென்னிமிசை உறைகின்ற மடமங்கை
ஆர்என்ன உமைவினவவும்
அன்னதொரு மடமங்கை அன்றுவெண் திரைகொழித்
தழகொடுதண் புனல்எனத்
துய்யஒளி ஆனனம் கரியவிழி காதுவாய்
தோயத்தில் உண்டோஎனச்
சொல்அரும் கமலமலர் காவிமலர் கொடிவள்ளை
தூயசெங் குமுதம்என்னப்
பொய்யென நினைத்துநற் கொங்கையும் கூந்தலும்
புனல்இடை உண்டோஎனப்
புற்புதம் சைவலம திதெனவே மறுத்துப்
புகன்றிடுதி நங்காய்எனத்
தையல்அவ ளேஎன்ன நாணொடு வணங்கிஎன் தன்
பிழைபொறுத் திடென்றே
சங்கரன் உரைத்திடத் திருவுளம் மகிழ்ந்தசிவ
சங்கரி உமைகாக்கவே''

என்னும் பாட்டு. இதன் திரண்ட பொருள் ''சுவாமி தலையில் இருக்கும் பெண் யார்?'' என்று உமை கேட்டனள். சிவனார், அது பெண் அன்று. அது நீர் என்றனர். உடனே உமை, ''நீருக்கு முகமும், கண்ணும், வாயும் இருக்குமா?''

என்று வினவினள். அப்போது அரனார் "முகம் அன்று; தாமரை. கண் அன்று; கருங் குவளை மலர். காது அன்று; வள்ளைக் கொடி. வாய் அன்று; குமுத மலர்" என்றனர். பார்வதி அப்படியானால் "நீருக்கு முலையும், கூந்தலும் உண்டா?" என்று கேட்டனள். அதற்கு விநயமாகப் பரமேசுவரன், "அவை நீரில் உள்ள குமிழ், பாசை" என்றனன். இந்த விடைகளைக் கேட்ட பிறகும் பார்வதி அவள் பெண்ணே என்று கூறப் பின் வேறுவழி இன்றிப் பரமசிவம் தம்மைப் பொறுக்கும்படி கேட்க அதனால் உமை உளம் மகிழ்ந்தாள். என்பது. (24)

சார்ந்தே நின் பால்ஒற்றி ஊர்வாழும் நாயகர் தாம்மகிழ்வு
கூர்ந்தே குலாவும்அக் கொள்கையைக் காணில் கொதிப்பள்என்று
தேர்ந்தேஅக் கங்கையைச் செஞ்சடை மேல்சிறை செய்தனர்ஒண்
வார்ந்தே குழைகொள் விழியாய் வடிவுடை மாணிக்கமே.

(பொ - ரை.) "ஒளி பொருந்திய நீண்ட காதணியைச் சென்று மோதுகின்ற கண்களையுடைய வடிவுடை மாணிக்கமே! திருஒற்றியூரில் வாழ்கின்ற உன் நாயகனான சிவபெருமான் உன்னோடு இணைந்துகொண்டு இருந்து, உள்ளத்தில் மகிழ்ச்சி மிக்கு, உன்னோடு கொஞ்சி விளையாடும் நிலையை அந்தக் கங்கை நங்கை கண்டால், அவள் ஒருவேளை மனம் புழுங்கக் கூடும் என்னும் காரணத்தால் போலும், அந்தக் கங்கையைத் தன் சடையில் அடைத்து வைத்துள்ளனன்." (எ - து.)

(அ - சொ.) ஒண்மை - ஒளி. வார்ந்து - நீண்டு. குழை - காதணி. நின்பால் - உன்னிடம். கூர்ந்து - மிக்கு. குலாவும் - விளங்கும்.

(இ - கு.) ஒண்மை என்பது புணர்ச்சியில் ஒண் என நின்றது. நின்பால், பால் ஏழன் உருபு. கூர் என்னும்

உரிச்சொல் கூர்ந்து என வினை எச்சமாகி நிற்கிறது. கொதிப்பள், தன்மை ஒருமை வினைமுற்று.

(வி - ரை.) பெண்களின் கண்கள் நீண்டு இருக்க வேண்டியது சாமுத்திரிகா லட்சண விதி. அவ்வாறு நீண்டிருப்பதால் அது பிறழும்போது காது அணிகளைச் சென்று தாக்குவது போல் காணப்படும். இதனை உட்கொண்டே ஈண்டு "வார்ந்தே குழைகொள் விழி" எனப்பட்டது. இதற்குமுன் வந்த இரு செய்யுட்களில் பரமேசுவரன் பார்வதி தேவியார்க்கு அஞ்சிக் கங்கையை முடியில் வைத்தனன் என்னும் குறிப்பில் பாடினார். இச் செய்யுளில் இறைவர், உமையம்மையுடன் கொஞ்சிக் குலாவுவதைக் கங்கை காணின், கங்காதேவி சினம் கொள்வள் என்ற காரணத்தால் அவளைச் சடையில் சிறை செய்துள்ளார் என்று பாடியுள்ளனர்.

அப்பர் பெருமானார் இறைவர் இரு மனைவியருடன் இருப்பது குறித்து வேடிக்கை செய்வார் போலப் பாடி இருக்கும் ஒரு பாடலையும் இங்கு நினைவுகூர்தல் நல்லதே.

"வங்க மலிகடல் நாகைக்கா ரோணத்தெம் வானவனே
எங்கள் பெருமான்ஓர் விண்ணப்பம் உண்டது கேட்டருளீர்
கங்கை சடையுள் கரந்தாய் அக்கள்ளத்தை மெல்லஉமை
நங்கை அறியில்பொல் லாதுகண் டாய்எங்கள் நாயகனே"

என்பது அப்பாட்டு. மேலும் அவர், இவ்விருவர்க்கும் அஞ்சி நடப்பதையும் அழகுற,

"மங்கை காணக் கொடார்மண மாலையைக்
கங்கை காணக் கொடார்முடிக் கண்ணியை"

என்று பாடுதலையும் காண்க. (25)

நீயே எனது பிழைகுறிப் பாய்எனில் நின்அடிமைப்
பேயேன் செயும்வண்ணம் எவ்வண்ண மோஎனைப் பெற்றளிக்கும்
தாயே கருணைத் தடங்கட லேஒற்றிச் சார்குமுத
வாயேர் சவுந்தர மானே வடிவுடை மாணிக்கமே.

(பொ - ரை.) "என்னைப் பெற்றுக் காக்கும் அன்னையே! கருணை நிறைந்த பெரிய கடலே! திருஒற்றியூரைச் சேர்ந்து விளங்கும் குமுத மலர்போன்ற வாயினை யுடைய அழகிய சௌந்தரவல்லியாம் மானே! வடிவுடை மாணிக்கமே! நீயே என் தவறுகளைக் குறிப்பிட்டுப் பேசுவாய் என்றால், உன் அடித் தொண்டனாகிய பேயேன் செய்யக்கூடிய நன்மை எந்த நன்மையாக இருக்க முடியும்?" (எ - து.)

(அ - சொ.) அளிக்கும் - காக்கும். தடம் - பெரிய. ஏர் - அழகிய. வண்ணம் - நன்மை.

(இ - கு.) தடம், உரிச்சொல். நீயே, என்பதன் ஏகாரம், பிரிநிலை. வண்ணம், உரிச்சொல்.

(வி - ரை.) இறைவி அகிலாண்டகோடி உயிர்களை ஈன்றவள் ஆதலின், அவற்றில் வள்ளலாரும் ஒருவர் என்பதனால் "எனைப் பெற்றளிக்கும் தாயே" என்றனர். மாதர்களின் வாய்க்குக் குமுத மலரை உவமை கூறுவது புலவர் மரபு. இந்த மரபுபற்றிக் குமுதவாய் எனப்பட்டது. குமுதம் செம்மை நிறமுடையது. இறைவியின் திருப்பெயர்களில் சௌந்தரவல்லி என்பதும் ஒன்று. இறைவியின் திருவருள் பெறாதவர்கள் எந்த நன்மையையும் செய்ய இயலாது என்னும் குறிப்பில் "பேயேன் செயும் வண்ணம் எவ்வண்ணமோ" என்றனர். (26)

**முப்போதும் அன்பர்கள் வாழ்த்தொற்றி யூர்எம் முதல்வர்மகிழ்
ஒப்போ தருமலைப் பெண்அமு தேஎன்று வந்துநினை
எப்போதும் சிந்தித் திடர்நீங்கி வாழஎனக் கருள்வாய்
மைப்போ தனையகண் மானே வடிவுடை மாணிக்கமே.**

(பொ - ரை.) "கருங்குவளை மலர்போன்ற கண்களை யுடைய மானே! வடிவுடை மாணிக்கமே! காலை, பகல், மாலை ஆகிய மூன்று வேளைகளிலும் மெய் அன்பர்கள் வந்து வணங்கி வாழ்த்துகின்ற திருஒற்றியூரில் உள்ள எங்கள் முதல்வராகிய சிவபெருமான் மகிழ்கின்ற ஒப்புக் கூறமுடியாத அரிய மேரு மலையில் தோன்றிய பெண் அமுதே என்று மகிழ்வுடன் உன்னை எப்போதும் நினைந்து துன்பம் நீங்கி வாழ எனக்கு அருள் செய்வாயாக". (எ - து.)

(அ - சொ.) மைப்போது - கருங்குவளைமலர். அனைய - போன்ற. முப்போது - மூன்று வேளை. ஒத அரும் - சொல்லி முடியாத. இடர் - துன்பம். உவந்து - மகிழ்ந்து.

(இ - கு.) மூன்று + போது. ஓத + அரும். என்று + உவந்து எனப்பிரிக்க.

(வி - ரை.) பெண்களின் கண்களுக்குக் கருங்குவளை மலரை உவமை கூறுவது புலவர் மரபு. இறைவன் நம்மை வாழ்த்த வேண்டுமே அன்றி நாம் அவனை வாழ்த்துவது மரபு அன்றே என்று சிலர் கருதலாம். இறைவனை நாம் வாழ்த்துவது அவன் வாழ்வதற்கு அன்று. நாம் வாழ்வதற் காகவே ஆகும். இந்த உண்மையினைத் திருவாதவூரர்,

"வாழ்த்துவதும் வானவர்கள் தாம்வாழ்வான் மனம்நின்பால்
தாழ்த்துவதும் தாம்உயர்ந்து தம்மைஎலாம் தொழவேண்டிச்
சூழ்த்துமது கரம்முரலும் தாரோயை நாய்அடியேன்
பாழ்த்தபிறப் பறுத்திடுவான் யானும்உன்னைப் பரவுவனே"

என்று அறிவித்தல் காண்க. எனவேதான் "அன்பர்களை வாழ்த்து ஒற்றியூர் எம்முதல்வா" எனப்பட்டது.

மெய் அன்பர்கள் வேண்டும் வரங்கள் பொன்னுக்கும் பொருளுக்கும் அன்று. அவர்கள் வேண்டும் வரங்கள் எல்லாம் இறைவனை என்றும் சிந்தித்த வண்ணம், இருப்பதற்காகவே ஆகும். இதனைப் பரிபாடல் என்னும் சங்க நூல்,

"யாஅம் இரப்பவை
பொருளும் பொன்னும் போகமும் அல்ல நின்பால்
அருளும் அன்பும் அறனும் மூன்றும்
உருள் இணர்க் கடம்பின் ஒலிதா ரோயோ"

என்று அறிவித்தல் காண்க. காரைக்கால் அம்மையாரும்,

"இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை [என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்நான் [மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும் போதுன் அடியின்கீழ் இருக்க என்றார்"

எனவேதான் நம் ஐயாவும் "நினை எப்போதும் சிந்தித்திடர் நீங்கி வாழ எனக் கருள்வாய்" என்னும் வரத்தை இறைவியிடம் வேண்டினார். (27)

**மீதலத் தோர்களுள் யார்வணங் காதவர் மேவும்நடுப்**
**பூதலத் தோர்களுள் யார்புக ழாதவர் போற்றிநிதம்**
**பாதலத் தோர்களுள் யார்பணி யாதவர் பற்றிநின்தாள்**
**மாதலத் தோங்கொற்றி வாழ்வே வடிவுடை மாணிக்கமே.**

(பொ - ரை.) "சிறந்த இத் தமிழ் அகத்தில் மேன்மையுடன் விளங்கும் திருஒற்றியூரில் வாழும் தேவியே! வடிவுடை மாணிக்கமே! மேல் உலகில் உள்ள தேவர்களுக்குள்ளே

உன்னை வணங்காதவர்கள் யார் இருக்கின்றனர். நடு உலக மாகிய இப் பூதலத்துள்ளவர்களுள் யார் உன்னைப் புகழாத வர்கள்? கீழ் உலகத்தில் உள்ளவர்களுள் எவர் உன் திருவடிகளைப் பற்றி வணங்காதவர்கள்"? (எ - து.)

(அ - சொ.) மா - சிறந்த. தலம் - தமிழ் அகம். மீதலம் - மேலுலகம். பூதலம் - மண்ணுலகம். நிதம் - தினந்தோறும்.

(இ - கு.) மா, உரிச்சொல்.

(வி - ரை.) இறைவி மேல் உலகம், நடு உலகம், கீழ் உலகமாகிய மூவுலகத்தவர்களாலும் போற்றப்படுபவள், வணங்கப்படுபவள் என்பது இப் பாட்டில் குறிப்பிடும் கருத் தாகும். நடுப் பூதலம் என்பது நாம் வாழும் மண்ணுலகம். பாதலம் என்பது நாகலோகம். (28)

**சேய்க்குற்றம் தாய்பொறுத் தேடா வருகெனச் செப்புவள்இந்**
**நாய்க்குற்றம் நீபொறுத் தாளுதல் வேண்டும் நவில்மதியின்**
**தேய்க்குற்றம் மாற்றும் திருவொற்றி நாதர்தம் தேவிஅன்பர்**
**வாய்க்குற்றம் நீக்கும் மயிலே வடிவுடை மாணிக்கமே.**

(பொ - ரை.) "எல்லாரும் எடுத்துப் பேசுகின்ற சந்திர னுக்கு ஏற்பட்ட தேய்தலாகிய குற்றத்தை மாற்றிய திருஒற்றி யூர்ப் பெருமானுடைய தேவியே! அன்பர்கள் தப்பித்தவறித் தம் வாயால் குற்றமான மொழிகளைக் கூறினும் அதனையும் போக்குகின்ற மயிலே! வடிவுடை மாணிக்கமே! தம் குழந் தையின் குற்றத்தைத் தாயானவள் பொறுத்து "ஏன் அடா அழுகிருய்? இங்கே வருக" என்று கூறி அன்பு காட்டுவள். அவளைப் போல, இந்த நாயாகிய நான் செய்கின்ற குற்றத் தையும் பொறுத்து என்னைக் காத்தல் வேண்டும்" (எ - து.)

(அ - சொ.) நவில் - சொல்லுகின்ற. மதி - சந்திரன். சேய் - குழந்தை.

(இ - கு.) தேய், முதல் நிலைத் தொழிற்பெயர். தேவி, அண்மைவிளி. வாய்க்குற்றம், ஐந்தாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை. குற்றம், ஆகுபெயர். சேய்க்குற்றம், ஆறன் தொகை. ஏடா, முன்னிலைச் சொல். செப்புவள், திசைச்சொல். வேண்டும், குறிப்பு வினைமுற்று.

(வி - ரை.) தட்சனது சாபத்தின் காரணமாகச் சந்திரன் தன் கலைகள் தேய்ந்து போகும் சாபத்தைப் பெற்றுப் பின் இறைவனை அடைக்கலம் புக, இறைவன் அவன் குற்றத்தை மாற்றினான். அதுபோல, இறைவியும் அன்பர்களின் வாய்ச் சொல் குற்றத்தையும் மாற்றவல்லவள் என்பது இங்கு அழகு படக் கூறப்பட்டுள்ளது. ஏடா என்பது சிறியவர்களைப் பெரியவர்கள் அழைக்கும் சொல்லாகும். இதுவே, இக் காலத்தில் 'ஏண்டா' என்றுயது. இச் சொல் பழி அஞ்சின படலத்தில் "என்னே மதித்தே ஏடா வேடா" என்று ஆளப் பட்டிருத்தலைக் காண்க. செப்பு என்பது தெலுங்கு சொல். ஆதலின் அது திசைச் சொல் ஆயிற்று. பெரியோர்கள் தம் அடக்கம் தோன்றத் தம்மை நாய் என்று கூறிக் கொள்வர். இவ்வாறு சொல்லிக் கொள்வதில் முன் அணியில் நிற்பவர் மணிமொழியார் ஆவார். "நாயே அனைய நமை" "நாயி னேன் உனை நினையவும் மாட்டேன்" "கல்லாத புல்லறிவில் கடைப்பட்ட நாயேனை" என்று திருவாதவூரர் தம்மைக் கூறிக்கொள்ளுதல் காண்க. அவரை ஒட்டியே நம் வள்ள லாரும், "நாய்" என்று தம்மைக் கூறிக்கொண்டனர்.

தட்சன் தன் பெண்களாகிய அசுவனி முதலிய இருபத் தெழுவரைச் சந்திரனுக்கு மணம் முடித்தான். ஆனால், அவன் கார்த்திகை, உரோகணி ஆகிய இரு பெண்களிடம் மிகுதியும் காதல் கொண்டிருந்தான். இதனால் ஏனைய இருபத்தைந்து மாதர்களும் தட்சனிடம் தம் குறைகளைக் கூறிக்கொண்டனர். தட்சன் சந்திரனுடைய கலைகள் தினம் தினம் குறைந்து

முடிவில் ஒன்றும் இன்றி இறக்கக் கடவன் என்று சாப மிட்டனன். இச் சாபத்தால் கலைகள் குறைவதைக் கண்ட சந்திரன் இந்திரன், பிரமன், திருமால் ஆகிய மூவரிடமும் சென்று தன்னைக் காக்கவேண்டும் என்று கூற அவர்கள் "சிவபெருமான் ஒருவரே உன்னைக் காக்கவல்லவர்" என்று கூற அவன் சிவபெருமானைச் சரணம் புக்கனன். அவன் சிவனுரைச் சரண்புகுந்தபோது சந்திரன் ஒரு கலையோடு இருந்தனன். ஆகவே, சிவனுர் ஒரு கலை மட்டும் கொண்டு வருந்திய சந்திரனைத் தம் தலையில் சூடி இழந்த கலைகளை வளரச் செய்து திருவருள் புரிந்தார். இதனைக் காந்த புராணம்,

"தீர்ந்தன அன்றியே திங்கள் தன்னிடை
ஆர்ந்திடு கலையினை அம்கை யில்கொளா
வார்ந்திடு சடைமிசை வயங்கச் சேர்த்திஞன்
சார்ந்தில தவ்வழித் தக்கன் சாபமே"

என்று அறிவித்தல் காண்க. இந்தக் கருணைத் திறத்தை வியந்தே நம் ஐயா, "மதியின் தேய்க்குற்றம் மாற்றும் திருஒற்றிநாதர்" என்றனர். (29)

செங்கம லாசனன் தேவிபொன் நாணும் திருமுதலோர்
சங்கம தாம்மிடற் றேந்தும்பொன் நாணும் தலைகுனித்துத்
துங்கமு றுதுளம் நாணத் திருஒற்றித் தோன்றல்புனை
மங்கல நாண்உடை யாளே வடிவுடை மாணிக்கமே.

(பொ - ரை.) "சிவந்த தாமரை மலரைத் தனக்கு இருப்பிடமாகக் கொண்ட பிரமனது தேவியாகிய சரசுவதியின் அழகிய தாலிகயிறும், இலக்குமி முதலான தேவிமார்களின் சங்கு போன்ற கழுத்துகளில் சிறந்து விளங்கும் அழகிய தாலி கயிறும் தலையினைத் தொங்கப் போட்டுத் தாம் உமாதேவி யின் கழுத்தில் விளங்கும் தாலிகயிறு போல என்றும் இருக்கும் பேற்றைப் பெற்றிலோமே என்று வெட்கப்படும்படி

திருஒற்றியூர்த் தியாகேசப் பெருமான் கட்டிய உண்மையான மாங்கல்ய நாணையுடைய தேவியே! வடிவுடை மாணிக்கமே". (எ - து.)

(அ - சொ.) செங்கமலாசனன் - சிவந்த தாமரையினைப் பீடமாகக் கொண்டு வாழும் பிரமன். தேவி - சரசுவதி. பொன் - அழகிய. நாண் - தாலி கயிறு. திரு - இலக்குமி. மிடறு - கழுத்து. துங்கம் - உயர்ச்சி, பெருமை. மங்கல நாண் - தாலி கயிறு.

(இ - கு.) கமலம் + ஆசனம், சங்கம் + அது + ஆம்; மிடறு + ஓங்கு துங்கம் + உருது + உளம் எனப் பிரிக்க. அது, பகுதிப் பொருள் விகுதி. தோன்றல், விகுதி பெருத ஆண்பால் சிறப்புப் பெயர்.

(வி - ரை.) திருமுதலோர் ஆவார் இலக்குமி, இந்திராணி முதலான தேவ மாதர்கள். இலக்குமிக்கு மங்கல நாணைக் கட்டியவன் திருமால். சரசுவதிக்குத் தாலி கயிற்றைப் புனைந்தவன் பிரமன். இந்திராணிக்கு மங்கலக் கயிற்றைக் கட்டியவன் இந்திரன். இம் மூவரும் இறுதியில் இறக்கக் கூடியவர்கள்; ஏன் இறந்தே போயினர். இதனை அப்ப மூர்த்திகள்,

" நூறு கோடி பிரமர்கள் நொந்தினர்
ஆறு கோடி நாராயணர் அங்ஙனே
ஏறு கங்கைமணல் எண்ணில் இந்திரர்
ஈறி லாதவன் ஈசன் ஒருவனே "

என்று உறுதிப்படுத்தி யுள்ளனர்.

இங்ஙனம் திருமால், பிரமன், இந்திரன் ஆகிய மூவரும் இறப்பதனால், இவர்களுடைய தேவிமார்களின் கழுத்தில் கட்டிய மங்கல நாண் அறுக்கப்படும். ஆனால் இறைவன் ஈறு இலாதவன் ஆதலின், அவனால் உமாதேவிக்குக் கட்டப்பட்ட

தாலிக்கயிறு என்றும் அருது. இந்த நிலையினை எண்ணி எண்ணித்தான் அலைமகள், கலைமகள், இந்திராணிமார்களின் நாண்கள் நாணினவாம். இந்தக் குறிப்புகளையே இப்பாட்டில் நம் ஐயா குறிப்பிடுகின்றார். இதனால் இறைவியின் கற்பு மேம்பாடு புலனாகின்ற தன்றோ? இவளது கற்பின் சிறப்பைத் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள்,

"மணமாட்சி எய்தும் உனக்கே பெருங்கற்பு மாட்சிஅன்றிப்
பிணமாட்சி ஆர்க்குண் டுலகீன்ற குன்றைப் பெரியம்மையே"

என்று போற்றுகின்றார்.

பெண்களின் கழுத்துக்குச் சங்கை உவமை கூறுவது புலவர் மரபு. ஆகவேதான் 'சங்கம தாம்மிடறு', என்றனர்.

**சேடார் இயல்மணம் வீசச் செயல்மணம் சேர்ந்துபொங்க**
**ஏடார் பொழில்ஒற்றி யூர்அண்ணல் நெஞ்சம் இருந்துவக்க**
**வீடா இருளும் முகிலும்பின் னிட்டு வெருவவைத்த**
**வாடா மலர்க்குழ லாளே வடிவுடை மாணிக்கமே.**

(பொ - ரை. "பெருமை மிக்க இயற்கை மணம் வீசச் செயற்கை மணம் சேர்ந்து பொங்க, இதழ்கள் நிறைந்த மலர்களைக் கொண்ட திருஒற்றியூரில் வாழும் பெருமையில் சிறந்த தியாகப் பெருமான் உள்ளத்தில் இருந்துகொண்டு அவன் மகிழும்படி நீங்காத இருளும், கருமேகமும் தோற்று அஞ்சி ஓடும்படி வாடாத மலர்களைச் சூடிய கூந்தலையுடைய தேவியே! வடிவுடை மாணிக்கமே!" (எ - து.)

(அ - சொ.) சேடு - பெருமை. ஆர் - நிறைந்த. இயல் - இயற்கை. செயல் - செயற்கை. ஏடு - இதழ்களையுடைய மலர்கள். பொழில் - சோலை. அண்ணல் - பெருமையில் சிறந்த சிவபெருமான். உவக்க - மகிழ. வீடா - நீங்காத. முகில் - மேகம். பின்னிட்டு - தோற்று. வெருவ - அஞ்ச. குழல் - கூந்தல்.

(இ - கு.) இருந்து + உவக்க, எனப் பிரிக்க. ஏடு, சினை ஆகுபெயர்.

(வி - ரை.) இறைவியின் கூந்தல் மிகுதியும் கருமை யாக இருக்கின்றமையின், அக் கருமைக்குத் தாம் ஒப்பு ஆகாத காரணத்தால் கரிய மேகமும், கருமை நீங்காது இருட்டும் தோற்று ஓடின. மக்கள் சூடும் மலர் ஆயின் அது வாடும். தேவர்கள் சூடும் மலர் வாடாது. ஆகவே தான் இறைவி சூடிய மலரை, 'வாடாமலர்' என்றனர். திருஒற்றியூரில் உள்ள சோலைகள் தம்மகத்தே பற்பலவகை யான மலர்களைக் கொண்டிருந்தமையின் மணம் மிகுதியும் கொண்டிருந்தது. ஏடு என்பது ஈண்டு ஏடுகளையுடைய மலர்களைக் குறித்து நிற்கிறது. இறைவி இறைவனுடைய உள்ளத்தில் குடிகொண்டு இறைவன் மகிழ விளங்குகின்றாள் என்னும் குறிப்பு இப் பாடலில் காட்டப்படுகிறது. இறைவன் உள்ளம் உவப்பதற்குக் காரணம் இறைவியின் கருங் கூந்த லில் வாடா மலரும், இயற்கை மணமும், செயற்கை மணமும் நிறைந்திருப்பதனால் என்க.

இறைவியின் கூந்தலில் இயற்கை மணம் உண்டு என்னும் குறிப்பு, இறைவர் நக்கீரரை நோக்கி,

"பரவிநீ வழிபட் டேத்தும் பரஞ்சுடர் திருக்கா ளத்தி
அரவுநீர்ச் சடையார் பாகத் தமர்ந்தஞா னப்பூங் கோதை
இரவின்ஈர்ங் குழலும் அற்றே"

என்று வினவும் வினவின் மூலம் அறியலாம். அதாவது நக்கீரன் பெண்களுக்குக் கூந்தலில் இயற்கை மணம் இல்லை என்று சாதித்தபோது, இறைவர் அவனை நோக்கி, "இறைவி யாம் ஞானப் பூங்கோதையின் கூந்தலும் அத்தகையதோ?" என்று வினவிய வினவைக் குறிக்கும் மேலே காட்டிய செய்யுள் வரிகள். நம் ஐயா இறைவிக்கு இயற்கை மணம் உண்டு என்பதை நம்மனோர் அறியவே "இயல்மணம் வீச"

என்றனர். "சேடார் இயல்மணம் வீசச் செயல்மணம் சேர்ந்து பொங்க" என்னும் வரியை "வாடாமலர்க் குழலாளே" என்னும் தொடருடன் வைத்துப் பொருள் காண்க.

புரநோக்கி னல்பொடி தேக்கிய ஒற்றிப் புனிதர்களக்
கரநோக்கி நல்அமு தாக்கிநின் போற்றும் கருத்தினர்ஆ
தரநோக்கி உள்இருள் நீக்கிமெய்ஞ் ஞானத் தனிச்சுகம்தான்
வரநோக்கி ஆள்விழி மானே வடிவுடை மாணிக்கமே.

(பொ - ரை.) "மூன்று கோட்டைகளையும் பார்வையினாலேயே சாம்பல் ஆகும்படி கொளுத்தி அச்சாம்பல் தேங்கும்படி செய்த திருவொற்றித் தூயராகிய சிவபெருமானது கழுத்தில் வைத்திருந்த விடத்தைப் பார்த்து, அது விடமாக அமையாமல் நல் அமுதமாக மாறும்படி நோக்கியும், உன்னைப் போற்றும் கருத்துடையவர்களின் அன்பை நோக்கியும், அத்தகைய மெய்உள்ளம் படைத்தவர்களின் உள்ளத்தில் இருந்து கொண்டு அவர்களின் அஞ்ஞான இருளை நீக்கியும் மெய்ஞ்ஞான ஒளியாம் ஒப்பற்ற பேரின்ப நிலை வரநோக்கி ஆள்கின்ற அருட்கண் படைத்த தேவி! வடிவுடைய மாணிக்கமே". (எ - து.)

(அ - சொ.) புரம் - மூன்று கோட்டைகள். நோக்கு - பார்வை. தேக்கிய - மிதும்படி செய்த. புனிதர் - பரிசுத்தமான சிவபெருமான். களம் - கழுத்து. கரம் - விடம். ஆதரம் - அன்பு. இருள் - அஞ்ஞானம். ஞானம் - பேரறிவு ஒளி. தனி - ஒப்பற்ற.

(இ - கு.) புரம்நோக்கினல், நின் போற்றும் இரண்டு தொடரும் இரண்டன் தொகை. மானே, உவம ஆகுபெயர்.

(வி - ரை.) இறைவர் தம் திருக்கரத்தில், மழு, சூலம், வில், அம்பு, முதலான படைகளைப் பெற்றிருந்தும், அவற்

றைப் பயன்படுத்தாமலே அழிக்க வல்லவர். இதனைக் குமர குருபரர்,

"வில்மதனை வென்றது அவர்விழியே ஒன்னார்தம்
பொன்னெயில் தீமடுத்த தின்நகையே பூமிசையோன்
தார்முடி கொய்தது உகிரே ஆர்உயிர் உண்
கூற்றுயிர் உண்ட தடித்தலமே ஏற்றுன்
பரசும் பிறைகழும் சூலமும் என்னே
கரமலர் சேப்பக் காளல்"

என்றும், சைவ எல்லப்ப நாவலர்,

"காலில் துலங்கும் நகத்தாலும் கையில் பொலிகூர் [நகத்தாலும்
சீலத் தரக்கன் உரம்கொண்டீர் திசைமா முகனைச் [சிரம்கொண்டீர்
மேலைப் புரத்தை நகைத்தெரித்தீர் வில்வேள் புரத்தைப் [பகைத்தெரித்தீர்
சூலப் படையேன் படையேன் சுமந்தீர் அருணை [அமர்ந்தீரே"

என்றும் அறிவித்திருப்பதனால் உணரலாம்.

இறைவர் திரிபுராதிகளை எதிர்த்தபோது தம் கையில் அம்பைக் கொண்டிருந்தும், அது பயன் பட்டிலது என்பதை மணிமொழியார்,

"ஈரம்பு கண்டிலம் ஏகம்பர் தம்கையில்
ஓரம்பே முப்புரம் உந்தீபற
ஒன்றும் பெருமிகை உந்தீபற"

என்று உணர்த்தியுள்ளனர். இவற்றை எல்லாம் அறிந்தே நம் ஐயா, "புரம் நோக்கினால் பொடி செய்து நேக்கிய ஒற்றிப் புனிதர்" என்று கூறினார்

தாரகாசுரன் பிள்ளைகளாகிய தாரகாட்சன், கமலாட்சன், வித்யுன்மாலி ஆகிய மூவரும் இரும்பு, பொன், வெள்ளி ஆகிய மூன்று உலோகங்களால் ஆன மதில்கள் சூழ்ந்த கோட்டை வேண்டும் என்றும், அக்கோட்டையுடன் எங்கும் சென்று வருதல் வேண்டும் என்றும் பிரமனைக் கேட்டனர். அவனும் அவ்வாறே கொடுத்தனன். அவர்கள் அதனைப் பெற்று ஆகாய வழியே சென்று தேவர்களைத் துன்புறுத்தி வந்தனர். இதனால் வருந்திய தேவர்கள் சிவபெருமானைச் சரணடைய, சிவபெருமான் தேவர்களையும் உடன் அழைத்து முப்புராதிகளை அழிக்கப் புறப்பட்டனர். அப்போது தேவர்கள் தம் உள்ளத்தில் நம் துணை இன்றெனில் சிவபெருமானால் முப்புராதிகளை அழிக்கமுடியாது என்று எண்ணினர். எங்கும் நிறைந்துள்ள இறைவன் தேவர்களின் அறியாமையை எண்ணிச் சிறிது புன்னகை புரிந்தனன். அந்நகையினின்று தீப் பொறி தோன்றி அதுவே முப்புராதிகளை அழித்தது. இந்த வரலாறே "புரம் நோக்கினால் பொடி தேக்கிய ஒற்றிப் புனிதர்" என்னும் வரியில் அமைந்துளது.

தேவர்கள் அசுரர்களால் துன்புற்று இறப்பதை அறிந்து இறவாதிருக்கப் பிரமனிடம் வழி வகைகளைக் கேட்டனர். அப்பிரம்ம தேவன் திருமாலுடன் கலந்து ஆலோசிக்கத் திருமால், திருப்பாற்கடலைக் கடைந்து அமுதம் பெற்று உண்டால் இறவாமல் இருக்கலாம் என்று கூற மைந்நாக மலையை மத்தாகவும், வாசுகியாம் பாம்பைக் கயிறாகவும் கொண்டு கடலைக் கடையப் பாம்பு தன்னால் பொறுக்க முடியாமல் விடத்தைக் கக்கியது. அதனைக் கண்டு ஓடிய தேவர்கள் சிவபெருமானிடம் முறையிட அவர் அந்த விடத்தைத் தாம் ஏற்று உண்டு தேவர்களைக் காத்தனர். அந்த விடம் இறைவனை ஒன்றும் செய்யாமைக்குக் காரணம் இறைவி, இறைவரை அந்தத் தருணம் பாதுகாத்த முறைமையினால் ஆகும். இதனை மாதவச் சிவஞான சுவாமிகள் தம் அமுதாம்பிகை

பிள்ளைத் தமிழில் கற்பனை நயம் ஒழுகப் பாடி இருப்பது படித்து இன்புறுதற்கு உரியதாகும். அப்பாடல்,

“ மடல்கொண்ட பூந்துழாய்ப் படலைமணி
மார்பினன் மறைக்கிழவன் ஆதிஅண்ட
வாணரும் பதைபதைத் தோட்டெடுப்
பக்கொடிய வளைகடல் புனல்மீதெழும்
விடமுண்ட சோமேச னார்க்கினிய
வாய் அமிர்தம் மெல்லெனப் பருகுவித்து
விளியாத வண்ணம்மென் கொங்கைஅம்
சஞ்சீவி வெற்பும்கொடுத்து மற்றும்
உடன்ஒன்றி மணிமிடற் றுலவா
திருத்தலால் ஒருகணப் போதும்அகலா
துருப்பாதி யில்கலந் தனுதினம்
பாதுகாத் தொண்குளத் தூரில்மருவும்
படம்ஒன்றும் அரவல்குல் எழில்அமுத
வல்லிநின் பனிவாயின் முத்தம்அருளே
பங்கயச் செல்விதொழும் மங்கையர்க்
கரசிநின் பனிவாயின் முத்தம்அருளே ”

என்பது. இந்த பாட்டின் கருத்து, இறைவி இறைவன் விடம் உண்டதனால் அவர்க்கு அதனால் தீங்கு வராதிருக்க, வாயாகிய அமுதம் ஈந்ததனாலும் (முத்தம் கொடுத்ததனாலும்) சஞ்சீவி மலையைத் தந்ததனாலும் (முலையாரத் தழுவிய தனாலும்) சிவபெருமானை அகலாது இருந்தமையினாலும் (அர்த்த நாரியாய் இருந்ததனாலும்) என்பது,

“ எவ்விடத்தும் தாமாகி இருந்தவருக் கருந்தவரும்
வெவ்விடத்தை அமுதாக்கும் விரைக்கொடியைப்
[பாடுவரே ”

என்று குமரகுருபரர் கூறுவர்.

இந்தக் குறிப்புகளை எல்லாம் நம் ஐயா "புனிதர்களக்கரம் நோக்கி நல் அமுதாக்கி" என்னும் தொடரில் அமைத்து விட்டனர்.

இறைவி மெய்ஞ்ஞான வடிவினள். இதனைப் பெரியநாயகி அம்மை நெடுங்கழி நெடில் அடி ஆசிரிய விருத்தத்தில் "சுட்டுதற்கு அரிய நின்னை மெய்ஞ்ஞான சொரூபி என்று அருமறை அனைத்தும் சொல்லுவது உண்மை என்ன நன்குணர்ந்தேன்" என்று கூறி இருப்பது கொண்டு தெளிக. இதனால்தான் அவள் தன்னை வழிபடும் மெய்யன்பர்கட்கு மெய்ஞ்ஞானத்தை அளித்து ஆள்பவளாக விளங்குகின்றாள். இதனை நம் வள்ளலார், "மெய்ஞ்ஞானத் தனிச்சுகந்தான் வரநோக்கி ஆள்மயிலே" என்று இறைவியை விளித்தனர். (32)

**உன்னும் திருஒற்றி யூர்உடை யார்நெஞ் சுவப்பஎழில்**
**துன்னும் உயிர்ப்பயிர் எல்லாம் தழைக்கச் சுகக்கருணை**
**என்னும் திருஅமு தோயாமல் ஊற்றி எமதுளத்தில்**
**மன்னும் கடைக்கண் மயிலே வடிவுடை மாணிக்கமே.**

(பொ - ரை.) "மெய்யன்பர்களால் எப்போதும் நினைக்கப்படுகின்ற திருஒற்றியூர்த் தியாகப் பெருமானது மனம் மகிழ, அழகு பொருந்திய உயிர்களாகிய பயிர்கள் எல்லாம் தழைக்க இன்பக் கருணை என்னும் சிறந்த அமுதத்தை இடை விடாமல் ஊற்றி எங்கள் உள்ளத்தில் நிலை பெற்றிருக்கின்ற கடைக்கண் பார்வையால் திருவருள் புரிகின்ற மயிலே! வடிவுடை மாணிக்கமே!" (எ - து)

(அ - சொ.) உன்னும் - நினைக்கும். உவப்ப - மகிழ. எழில் - அழகிய. துன்னும் - பொருந்திய. மன்னும் - நிலைத்து இருக்கின்ற.

(இ - கு.) நெஞ்சு + உவப்ப, அமுது + ஓயாமல் எனப் பிரிக்க.

(வி - ரை.) திருஒற்றியூருடையார் எப்போதும் அறிஞர்களால் சிந்திக்கும் பரம் பொருள் ஆதலின், "உன்னும் திரு ஒற்றியூர் உடையார்" எனப்பட்டார். இறைவியின் கருணை வார் அமுதுதான், உயிர்களாகிய பயிர்கள் தழைக்கத் துணை செய்வது. இந்தக் கருத்தில்தான் "உயிர்ப் பயிரெல்லாம் தழைக்கத் திரு அமுது ஓயாமல் ஊற்றி" என்றனர். முருகன் கருணையும் உயிர்ப் பயிரை வளர்க்கும் என்று குமரகுருபரர் "சகல புவனத்திலும் உயிர்ப் பயிர்த் தழைப்ப நல் தண்ணளி சுரந்திடுதல்" என்று கூறுவர். இறைவி இறைவனது நெஞ்சம் மகிழ அவன் உள்ளத்தில் விளங்குவதைக் குமர குருபரர், 'ஒருவன் திருஉள்ளத்தில் அழகொழுக எழுதிப் பார்த்திருக்கும் உயிர் ஓவியமே" என்றும், "அத்தன் மனத்து எழுதிய உயிர் ஓவியம்" என்றும் கூறுதல் காண்க. (33)

வெள்ளம் குளிரும் சடைமுடி யோன்ஒற்றி வித்தகன்தன்
உள்ளம் குளிரமெய் பூரிப்ப ஆனந்தம் ஊற்றெடுப்பத்
தெள்ளம் குளிர்இன் அமுதே அளிக்கும்செவ் வாய்க்குமுத
வள்ளம் குளிர்முத்த மானே வடிவுடை மாணிக்கமே.

(பொ - ரை.) "கங்கையின் வெள்ளப் பெருக்கினால் குளிர்ந்திருக்கும் சடைமுடி யுடைய திருஒற்றியூரில் வீற்றிருக்கின்ற மேலோனாகிய தியாகப் பெருமானது மனம் குளிர, உடல் மகிழ்ச்சியினால் பொலிவு பெற, ஆனந்தப் பெருக்கெடுப்பக் கிண்ணம் போன்ற சிவந்த குமுத மலராகிய வாயினால் தெளிவுடைய குளிர்ந்த இனிய தேவாமுதமாம் முத்தத்தைத்தரும் மானே! வடிவுடை மாணிக்கமே!" (எ - து.)

(அ - சொ.) வெள்ளம் - கங்கையாகிய வெள்ளம். வித்தகன் - மேலோன். பூரிப்ப - பொலிய, ஊற்றெடுப்ப, பெருக. தெள்ளம் - தெளிவு. வள்ளம் - கிண்ணம். மெய் - உடல்.

(இ - கு.) குமுதம், வள்ளமாக உருவகம் செய்யப் பட்டது.

(வி - ரை.) இறைவி இறைவன் மகிழத் தன் குமுத மலர்போன்ற வாயால் அவனுக்கு முத்தம் தந்து இன்புறுத்து வதை நம் ஐயா இப்பாடலில் குறிப்பிடுதல் காண்க. இதனால் இறைவன் உள்ளம் குளிர்கிறது. உடம்பு பூரிக்கிறது. ஆனந்தம் பெருக்கெடுக்கிறது. (34)

மாநந்தம் ஆர்வயல் காழிக் கவுணியர் மாமணிக்கன்
றுநந்த இன்அமு தூற்றும் திருமுலை ஆர்அணங்கே
காநந்த ஓங்கும் எழில்ஒற்றி யார்உள் களித்தியலும்
வானம் தரும்இடை மானே வடிவுடை மாணிக்கமே.

(பொ - ரை.) "பெரிய சங்குகள் நிறைந்த வயல்கள் சூழ்ந்த சீர்காழிப் பதியில் தோன்றிய திருஞான சம்பந்தராகிய உயர்ந்த மணிபோன்ற அந்தணச் சிறுவர்க்கு முன்னொரு சமயம் ஆனந்தமான இனிய ஞான அமுதத்தை ஊற்றுகின்ற அழகிய முலைகள் பொருந்திய பேரழகு உடைய தேவி! சோலைகள் பெருக ஓங்கும் திருஒற்றியூரர் உள்ளத்தில் மகிழ்ந்து தங்கி, அன்பர்கட்கு விண்ணுலகப் பேற்றைத் தரும் நுண்ணிய இடையினைப் பெற்ற மானே! வடிவுடை மாணிக்கமே!" (எ - து.)

(அ - சொ.) மா - பெரிய. நந்தம் - சங்குகள். ஆர் - நிறைந்த. காழி - சீர்காழிப்பதி. கவுணியர் - கௌணியர் கோத்திரத்தில் தோன்றிய திருஞான சம்பந்தர். மா - சிறந்த. அணங்கு - பேர் அழகு. (இங்கு இறைவியைக் குறித்து நிற்கிறது) கா - சோலை. நந்த - பெருக. எழில் - அழகிய. வானம் - விண்ணுலகப் பேறு.

(இ - கு.) மா, உரிச்சொல். நந்து + அம், அம் சாரியை.

(வி - ரை.) நீர்வளத்தின் மிகுதியை உணர்த்த மாநந்தம் ஆர்வயல் எனப்பட்டது. "நீரிடை உறங்கும் சங்கம்" என்பர் கம்பர். "செங்கண்மால் தடக்கையில் சங்கம் நாண முன்தாள் தாமரை முறுக்கவிழ் மலர்மேல் வலம்புரி கிடக்கும் வாதவூர்" என்பர் சிவப்பிரகாச சுவாமிகள். திருஞானசம்பந்தர் கௌணிய கோத்திரத்தைச் சார்ந்தவர். இதனை அவரே தம் திருகடைக்காப்புச் செய்யுளில் பல்வேறு இடங்களில் குறிப்பிட்டுள்ளனர். 'கௌணியன் ஞானசம்பந்தன்' என்பது அவரது வாக்கு களில் ஒன்று. சம்பந்தர் பிறந்த பதி சீர்காழி. இதனையும் அவர், 'குளிர் காழியுள் ஞானசம்பந்தன்' என்று கூறுமாற்ரு லும் உணரலாம். எனவேதான், நம் ஐயா, "காழிக் கவுணியர் மாமணி" என்றனர்.

சீர்காழித்தலம், சீர்காழி இரயில்வே நிலையத்திலிருந்து ஒரு கல் தொலைவில் உள்ளது. இத்தலத்து இறைவர் குரு, லிங்க, சங்கம வடிவில் முறையே தோணியப்பர், பிரமீசர், சட்டைநாதர் வடிவில் காட்சி அளிக்கின்ருர். தோணியப்ப ரும், சட்டைநாதர் விமானத்தின்மீது உள்ளனர். இறைவியின் பெயர் பெரியநாயகி, திருமலைநாயகி எனப்படும். திருஞான சம்பந்தர் கோயிலும் தனியே உண்டு. திருஞானசம்பந்தர் பிறந்த வீடு இரட்டைத் தெருவில் உள்ளது. இப்போது இது திருஞானசம்பந்தர் வீதி என்று பெயரிடப்பட்டுள்ளது.

இத்தலத்து இறைவிதான் ஆளுடை பிள்ளையாருக்கு ஞானப்பால் தந்தவள். அது முதல் ஆளுடைய பிள்ளையார் திருஞானசம்பந்தர் ஆயினர். திருஞான சம்பந்தப் பெருமா னுக்கு இறைவி ஞானப்பால் தந்ததைப் போற்றிப் பாடாத புலவர்கள் இலர். அப்பாடல்களில் பொருள் நயமும் கற்பனை நயமும் கனிந்து தோன்றும். துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள்,

"சுட்டுதற் கரிய நின்னைமெய்ந் ஞான
உருபினன் றருமறை அனைத்தும்
சொல்லுவ துண்மை என்னநன் குணர்ந்தேன்
சுரந்தநின் திருமுலைச் செழும்பால்
வட்டிலில் கொச்சைப் பிள்ளைமுன் உண்டு
வண்புகழ ஞானசம் பந்த
வள்ளலென் றிடப்பேர் பெற்றரன் மொழிபோல்
மையல்தீர் செய்யுள் செய்தமையால்"

என்று பாடுவர்.

"அருள்மடை திறந்தூற்று திருமுலைப் பால்கறந்
தமிழ்தஞா னம்குழைத்துத்
தடவுபொன் வள்ளத்து வைத்தூட்டு செங்கைகொடு
சப்பாணி கொட்டி அருளே
தண்தமிழ்ச் சுவைகண்ட தென்குளத்தூர் அம்மை
சப்பாணி கொட்டி அருளே"

என்றும்,

"தெய்வச் சுருதி தமிழ்க்கன்றித்
தீட்டா நிலைமைத் தெனஉலகில்
தெரிக்கும் காழித் திருஞானச்
செம்மல் குழவிக் கருள்ஞானம்
பெய்து குழைக்க வோமுலையாம்
பெரிய மலைவாய் உறுத்தும்என்றே
பெருமான் தனையும் குழைத்தவலிப்
பெற்றி அறிந்து தடுத்தோபூங்
கையில் இலகு நகக்குறிபல்
கதுவ நோம்என் றேதீம்பால்
கறந்து கொடுத்தாய் எனச்சகிமார்
கனிந்துபாட நகைமுகிழ்க்கும்

வைவைத் தமைத்த மதர்வேல்கண்
வாழ்வே வருக வருகவே
வளங்கூர் குளந்தைப் பதிஅமுத
வல்லி வருக வருகவே”

என்றும் மாதவச் சிவஞான சுவாமிகள் பாடுவார் ஆயினர். மங்களாம்பிகை பிள்ளைத்தமிழ், “பண்டோர் மறைக்குழவி உண்ண மெய்ஞ்ஞான இன்பால் அருள் பிராட்டி வந்தாள்” என்று போற்றிப் புகழும். இந்த வரலாற்றையே நம் வள்ளலார், “காழிக் கவுணியர் மாமணிக்கு அன்று அருந்த இன் அமுதூற்றும் திருமுலைஆர் அணங்கு” என்றனர். இறைவி இறைவன் உள்ளத்தில் அவர் களிக்க விளங்குபவள் என்பது முன்பே கூறப்பட்டது. (35)

**வான்தேட நான்கு மறைதேட மாலுடன் வாரிசமே**
**லான்தேட மற்றை அருந்தவர் தேடஎன் அன்பின்மையால்**
**யான்தேட என்உளம் சேர்ஒற்றி யூர்எம் இருநிதியே**
**மான்தேடும் வாள்கண் மயிலே வடிவுடை மாணிக்கமே.**

(பொ-ரை.) “தேவர்கள் தேடவும், நான்கு வேதங்கள் தேடவும், திருமாலும், தாமரை மலர் மீதுள்ள பிரமனும் தேடவும், ஏனைய அரிய தவசிகள் தேடவும் என்னிடம் அன்பு இல்லாத காரணத்தால் யானும் தேடவும், என் உள்ளத்தே சேர்ந்து விளங்கும் திருஒற்றியூரில் வாழும் பெருஞ் செல்வமே! மான் தேடுகின்ற ஒளிபொருந்திய கண்களைப் பெற்ற மயிலே! வடிவுடை மாணிக்கமே!” (எ-து.)

(அ-சொ.) வான் - தேவலோகத்தில் உள்ள தேவர்கள். மறை - வேதம். மால் - திருமால். வனசம் - தாமரை. வனச மேலான் - தாமரையில் வீற்றிருக்கும் பிரமன். இன்மை - இல்லாமை. இருநிதி - பெருஞ்செல்வம். வாள் - ஒளி.

(இ - கு.) வான், இட ஆகுபெயர். மால், முதல்குறை. மற்றை, இடைச்சொல். அன்பு+இன்மை, இருமை+நிதி எனப் பிரிக்க.

(வி - ரை.) இறைவியின் திருக்கண்கள் மானின் கண் போன்றிருத்தலால், மான் இறைவியின் கண்களைக் கண்டு உமாதேவி தன் இனமோ என்று தேடி வரும் என்ற கருத்தில், "மான் தேடும் வாள்கண்" எனப்பட்டது. (36)

**முத்தேவர் விண்ணன் முதல்தேவர் சித்தர் முனிவர்மற்றை**
**எத்தே வரும்நின் அடிநினை வார்நினைக் கின்றிலர்தாம்**
**செத்தே பிறக்கும் சிறியர்அன் றேஒற்றித் தேவர்நல்தா**
**மத்தேவர் வாம மயிலே வடிவுடை மாணிக்கமே.**

(பொ - ரை.) "திருஒற்றியூரில் விளங்கும் தேவரும், நல்லமலர் மாலை அணிந்த தேவரும் ஆகிய சிவபெருமானின் இடப் பக்கத்தே விளங்கும் மயிலே! வடிவுடை மாணிக்கமே! பிரம்மா, விஷ்ணு, உருத்திரர் இந்திரன் முதலான தேவர்களும், சித்தர்களும், முனிவர்களும், ஏனைய தேவர்களும் உன் திருவடிகளை நினைப்பார்கள். உன்னை நினைக்காதவர்கள் செத்துச் செத்துப் பிறக்கின்ற கீழோர் அல்லரோ?" (எ - து.)

(அ - சொ.) முத்தேவர் - மூன்று தேவர்கள்; (பிரமன், விஷ்ணு, உருத்திரன்) விண்ணன் - தேவலோகத்தில் இருக்கும் இந்திரன். தாமம் - மாலை. வாமம் - இடப்பாகம்.

(இ - கு.) சித்தர் முனிவர், உம்மைத் தொகை.

(வி - ரை.) சிவபெருமான் உருத்திரர் அல்லர். சிவன் வேறு உருத்திரர் வேறு என்பதை உளத்தில் கொள்க. விண்ணன் முதல் தேவர்கள் அட்டதிக்குப் பாலகர்கள். அவர்கள் இந்திரன், வருணன், வாயு, அக்கினி, இயமன், நிருதி, குபேரன், ஈசானன் என்பவர்கள். எத்தேவரும் என்ப

வர்கள் எட்டுத் திக்குப் பாலகர்கள் போக மிகுதியாக உள்ள பன்னிரு சூரியர், பதினொரு உருத்திரர், சந்திர சூரியர்கள் ஆவர். இவர்களுடன் எட்டுத்திசைப் பாலகர்களைச் சேர்க்க முப்பத்து மூன்றுகோடி தேவர் ஆவார். இவர்களையே முப்பத்து முக்கோடி தேவர் என்பர். இந்த உண்மையினை நம் குமரகுருபரர், இருவர், எண்மர், பதினொருவர், பன்னிருவர் எனும் விண்ணவர்கள் முப்பத்து மூவரே" என்று உணர்த்துதல் காண்க.

இறைவியை எல்லாத் தேவரும் நினைத்து வழிபடுகின்றனர் என்பதை நம் ஐயா இப் பாடலில் உணர்த்துகின்றனர். மேலும் நம் வள்ளலார், இறைவியை எப்போதும் நினைப்பவர்கள் நீண்ட ஆயுளைப் பெற்று வாழ்வர் என்பதையும், நினைத்து வழிபடாதவர்கள் செத்துச் செத்துப் பிறந்து பிறந்து துன்புறுவர் என்பதையும் அறிவித்துள்ளனர்.

இறைவியை உள்ளத்தில் நினையாதவர்கள் எய்தும் நிலையை அபிராமி அந்தாதி,

"தோத்திரம் செய்து தொழுதுமின் போலும்நின் தோற்றம்ஒரு
மாத்திரைப் போதும் மனத்தில்வை யாதவர் வண்மைகுலம்
கோத்திரம் கல்வி குணம்குன்றி நாளும் குடிகள்தோறும்
பாத்திரம் கொண்டு பலிக்குழ லாநிற்பர் பாரெங்குமே"

என்று கூறுதலையும் உணர்க. (37)

**திருநாள் நினைத்தொழும் நல்நாள் தொழாமல் செலுத்தியநாள்**
**கருநாள் எனமறை எல்லாம் புகலும் கருத்தறிந்தே**
**ஒருநா ளினும்நின் தனைமற வார்அன்பர் ஒற்றியில்வாழ்**
**மருநாள் மலர்க்குழல் மானே வடிவுடை மாணிக்கமே.**

(பொ - ரை.) "திருஒற்றியூரில் வாழ்கின்ற மணம் பொருந்திய புதிய மலர்களை அணிந்துள்ள கூந்தலையுடைய

மானே! வடிவுடை மாணிக்கமே! "உன்னை வணங்கும் நன்னாளே சிறந்த நாளாகும். அப்படி வணங்காமல் வீணாக்கிய நாள்கள் ஆகாத நாட்களாகும்" என்று வேதங்கள் எல்லாம் சொல்லும் உண்மைக் கருத்தை உணர்ந்து ஒருநாள் கூட அன்பர்கள் உன்னை வணங்க மறக்க மாட்டார்கள்" (எ - து.)

(அ - சொ.) மரு - வாசனை. நாள் - புதிய. குழல் - கூந்தல். திரு - சிறந்த. கருநாள் - ஆகாத நாட்கள். மறை - வேதம். புகலும் - சொல்லும்.

(இ - கு.) மறவார் அன்பர், வினைமுற்றுத் தொடர்.

(வி - ரை.) இறைவியின் கூந்தல் என்றும் இயற்கை மணத்துடன் செயற்கை மணமும் பொருந்தப் பெற்றிருக்கும் ஆதலின் "மருநாள் மலர்க் குழல் மானே" எனப்பட்டாள். முதல் அடி "பெரும்பற்றப் புலியூரானைப் பேசாத நாள் எல்லாம் பிறவா நாளே" எனும் அப்பர் பெருமானின் திருவாக்கை நினைப்பிக்கின்றது. அன்பர்கள் எப்போதும் இறைவியைத் நினைந்தவண்ணம் இருப்பதற்குரிய காரணத்தை நம் ஐயா இங்குத் தெளிவுறக் கூறியுள்ளனர். (38)

**வாணாள் அடைவர் வறுமை உறார்நல் மனைமக்கள்பொன்**
**பூணாள் இடம்புகழ் போதம் பெறுவர்பின் புன்மைஒன்றும்**
**காணார்நின் நாமம் கருதுகின் றோர்ஒற்றிக் கண்நுதல்பால்**
**மாணார்வம் உற்ற மயிலே வடிவுடை மாணிக்கமே.**

(பொ - ரை.) "திருஒற்றியூரில் வாழ்கின்ற நெற்றிக்கண் படைத்த முக்கண் மூர்த்தியினிடத்தில் மாட்சிமை பொருந்திய அன்பு கொண்ட மயிலே! வடிவுடை மாணிக்கமே! உன் திருப்பெயரை எப்போதும் எண்ணுகின்றவர்கள், நீண்ட ஆயுளைப் பெறுவர்; தரித்திரத்தால் துன்பம் அடையமாட்டார்கள். நல்ல மனைவியையும், மக்களையும், பொன்னையும்,

நகைகளையும், வேலை ஆட்களையும் வசதியான வீடு வாசல் களையும், புகழையும், அறிவையும் பெறுவர். பிறகு கீழ் நிலையை எக்காலத்தும் வாழ்க்கையில் காணமாட்டார்கள்." (எ — து.)

(அ - சொ.) கண்ணுதல் - நெற்றிக்கண்ணுடைய சிவ பெருமான். மாண் - மாட்சிமை. ஆர்வம் - அன்பு. வறுமை - தரித்திரம். பூண் - நகை. போதம் - அறிவு. புன்மை - தாழ்மை. நாமம் - பெயர்.

(இ - கு.) கண்ணுதல், அன்மொழித்தொகை. பால், ஏழன் உருபு. வாழ் + நாள், பூண் + ஆள் எனப் பிரிக்க.

(வி - ரை.) இறைவி இறைவனிடத்தில் பேர் ஆர்வம் கொண்டிருப்பவள் என்பது அவன் பாம்பாபரணமும், புலித் தோலும், யானைத்தோலும் போர்த்திருந்தும் அவனுடன் இணைந்து இருப்பதனால் புலனாகின்றதன்றோ? ஆகவேதான் "மாண் ஆர்வம் உள்ள மயிலே" என்றனர். இறைவிக்கு இலக்குமியும், சரசுவதியும், தோழிமார்களாகவும், கண் களாகவும் இருத்தலின், இறைவியை நினைந்தபோது இலக்குமி யின் மூலம் பொன்னும், கலைமகள் மூலம் அறிவும் பெறுதல் எளிதாகின்றது. இந்தப்பாட்டைப் படிக்கின்றபோது,

தனம்தரும், கல்வி தரும்ஒரு நாளும் தளர்வறியா
மனம்தரும் தெய்வ வடிவும் தரும்நெஞ்சில் வஞ்சம்இல்லா
இனம்தரும் நல்லன எல்லாம் தரும்அன்பர் என்பவர்க்கே
கனம்தரும் பூங்குழ லாள்அபி ராமி கடைக்கண்களே"

என்னும்அபிராமி அந்தாதிப் பாடல் நினைவுக்கு வருகின்றது.

**சீரறி வாய்த்திரு ஒற்றிப் பரம சிவத்தைநினைப்**
**போரறி வாய்அவ் அறிவாம் வெளிக்கப் புறத்துநின்றாய்**
**யாரறி வார்நின்னை நாயேன் அறிவ தழகுடைத்தே**
**வாரேறி பூண்முலை மானே வடிவுடை மாணிக்கமே.**

(பொ - ரை.) "கச்சினையும் விலக்கிக்கொண்டு பூரிக்கும் ஆபரணங்களை அணிந்த கொங்கைகளையுடைய மானே! வடிவுடை மாணிக்கமே! சிறந்த பேரறிவாய்த் திகழும் திருஒற்றியூரில் வாழும் பரமசிவத்தை நினைப்பவர்கள் யார் யார் என்பதை அறிபவளே! அந்த அறிவாம் வெளிக்கும் அப்பால் விளங்கி நின்றவளே! இத்தகைய உன் அருமை பெருமைகளை யார் அறிவார்கள்? அப்படி இருக்க நாயினும் கடைப்பட்ட நான் அறிவது வெகு அழகாய் இருக்கிறது!" (எ - து.)

(அ - சொ.) வார் - கச்சு. பூண் - ஆபரணம். வெளி - ஆகாயம்.

(இ - கு.) நினைப்போர், வினையால் அணையும் பெயர். அழகுடைத்தே என்பதில் உள்ள ஈற்று ஏகாரம் எதிர்மறைப் பொருளது.

(வி - ரை.) இறைவியின் கொங்கை பருத்துத் திரண்டு இருத்தலின், அதன்மீது கட்டப்படுகின்ற கச்சும் (இக்காலத்தில் கூறப்படுகின்ற இரவிக்கை போன்றது) பொருந்தப் பெறுமல் விலகுதலின் "வார் ஏறி பூண்முலை" எனப்பட்டது. இறைவர் அறிவு மயமாய்த் திகழ்பவர். "பேரறிவே இன்பப் பெருக்கே பராபரமே" என்பது தாயுமானார் வாக்கு. எனவே தான் "சீர் அறிவாய்த் திருஒற்றிப் பரமசிவம்" எனப்பட்டது. இறைவி எங்கும் நிறைந்தவள். மேலும் யார்யார் எந்தெந்த நிலையில் இருக்கின்றனர், என்பதை அறிபவள். ஆதலின், அவளை "நினைப்போர் அறிவாய்" எனப்பட்டது. இறைவனும் நம்மைப் பற்றித் தன் குறிப்பேட்டில் எழுதி வைக்கின்றான் என்பதை அப்பர் பாடியுள்ள,

"தொழுது தூமலர் தூவித் துதித்துநின்று
அழுது காமுற் றரற்றுகின் றாரையும்

*பொழுது போக்கிப் புறக்கணிப் பாரையும்*
*எழுதும் கீழ்க்கணக் கின்னம்பர் ஈசனே"*

என்னும் திருக்குறுந் தொகைப் பாடலால் தெளிக.

இறைவி நம் அறிவிற்கும் அப்பாலாய் விளங்குபவள் ஆதலின், "அறிவாம் வெளிக்கு அப்புறத்து நின்றாய்" என்றனர். இறைவன் நிலையினைப் பேசவந்த மணிமொழியாரும், "அப்பாலைக்கு அப்பாலாய்ப் பாடுதுங்காண் அம்மானே" என்று கூறுதலையும் ஈண்டு நினைவு கொள்க. இறைவி உண்மை அன்புடையவர்களால் அறியப்படுபவளே அன்றிப் பிறரால் அறியப்படாதவள். இந்தக் குறிப்பையே, "யார் அறிவார் நின்னை" என்றனர். "ஆர் அறிவார் என்னை அனந்தமறை ஓலம் இடும்" எனும் தாயுமானர் திருவாக்கினை ஈண்டு நினைவு கூர்க. இங்ஙனம் இருக்க நான் அறிவேன் என்று கூறுதல் அடாது என்னும் கருத்தில்தான் தம் பணிவும் தோன்ற "நாயேன் அறிவது அழகுடைத்தே" என்று நம் ஐயா கூறினர். (40)

**போற்றிடு வோர்தம் பிழைஆ யிரமும் பொறுத்தருள்செய்**
**வீற்றொளிர் ஞான விளக்கே மரகத மென்கரும்பே**
**ஏற்றொளிர் ஒற்றி இடத்தர் இடத்தில் இலங்கும்உயர்**
**மாற்றொளி ரும்பசும் பொன்னே வடிவுடை மாணிக்கமே.**

(பொ - ரை.) "உன்னை யார் போற்றுகின்றார்களோ அத்தகையவர்களின் குற்றங்கள் ஆயிரம் இருந்தாலும் அவற்றை எல்லாம் பொறுத்துத் திருவருள் செய்கின்ற தனிச் சிறப்புடன் விளங்குகின்ற அறிவு விளக்கமே! மரகதமணி போன்ற நிறமுடையாளே! இனிய கரும்பைப் போன்றவளே! இடப வாகனத்தின்மீது விளங்கும் திருஒற்றிப் பரமனது இடப்பாகத்தே விளங்கும் மாற்றுயர்ந்து ஒளிவிடும் பசும் பொன்னே! வடிவுடை மாணிக்கமே" (எ - து.)

(அ - சொ.) வீற்று - தனி. ஏறு - இரடபம். இலங்கும்- விளங்கும். மாற்று - பொன், வெள்ளியின் தரம்.

(இ - கு.) வீற்று + ஒளிர், ஏறு + ஒளிர், மாற்று + ஒளிர் எனப் பிரிக்க.

(வி - ரை.) இறைவியின் நிறம் பச்சை ஆதலின், "மரகதமென்கரும்பே" என்றனர். இறைவியின் ஒளி தனிச் சிறப்புடைமையின் "வீற்று ஒளிர் ஞான விளக்கே" எனப் பட்டது. "ஏற்றுக் குன்றிலே இருந்து காட்சி கொடுத்தருள் கோலம் போற்றி" என்று பரஞ்சோதியார் கூறுவார் ஆதலின், இறைவர் "ஏற்று ஒளிர் ஒற்றி இடத்தர்" எனப்பட்டார். (41)

**ஆசையுள் ளார் அயன் மால் ஆதி தேவர்கள் யாரும் நின் தாள்**
**பூசையுள் ளார்எனில் எங்கே உலகர்செய் பூசைகொள்வார்**
**தேசையுள் ளார்ஒற்றி ஊர்உடை யார்இடம் சேர்மயிலே**
**மாசையுள் ளார்புகழ் மானே வடிவுடை மாணிக்கமே.**

(பொ - ரை.) "மகத்துவம் உடையவராகிய திருஒற்றி யூர்ப் பரமரின் இடப்பக்கத்தே சேர்ந்து விளங்கும் மயிலே! பொன்னையும், பொருளையும் மனத்தால் நினைக்காதவர்களால் புகழப்படுகின்ற மானே! வடிவுடை மாணிக்கமே! எட்டுத் திசைகளிலும் உள்ள அட்டதிக்குப் பாலகர்கள், பிரமன், திருமால் முதலான தேவர்களும் மற்றும் பலரும் உன் திருவடிகளைப் பூசித்து உய்யவேண்டும் என்பதை நினைக் காமல் இருப்பார்களானால், அவர்கள் உலகத்தார் போற்றும் பூசைகளை எப்படி ஏற்க முடியும்?" (எ - து.)

(அ - சொ.) தேசு - மகத்துவம், ஒளி, பெருமை. உள்ளார் - பெற்றிருப்பவர். மாசை - பொன். உள்ளார் - நினைக்காதவர். ஆசை - திசை. ஆசை உள்ளார் - எட்டுத் திசையில் இருக்கும் அட்டதிக்குப் பாலகர்கள். அயன் - பிரமன். மால் - திருமால். ஆதி - முதல்வர்.

(இ - கு.) அயன்மால், உம்மைத் தொகை.

(வி - ரை.) இறைவன் ஒருவனே பெருமைக்குரியவன் ஆதலின், "தேசை உள்ளார் திருஒற்றியூர் உடையார்" எனப்பட்டார். இறைவியை உலகப் பொருள்களிடத்தில் ஆசையற்றவர்கள் போற்றிப் புகழ்வர் ஆதலின் அவள் "மாசை உள்ளார்கள் புகழ் மானே" எனப்பட்டாள். உண்மை ஞானிகள் ஓடும் பொன்னும் ஒக்கவே நோக்கி வீடும் வேண்டா விறலில் விளங்கி, கூடும் அன்பினில் கும்பிடலே விரும்புவர் ஆதலின் அவர்களை, "மாசை உள்ளார்" என நம் ஐயா குறிப்பிட்டனர்.

எட்டுத் திக்குப் பாலகர்கள் இந்திரன், வருணன், வாயு, அக்கினி, யமன் நிருதி, குபேரன், ஈசானன் என்பவர்கள். இறைவனைத் தேவர்கள் வணங்குவதற்கும் போற்றுவதற்கும் காரணம் தம்மைப் பிறர் போற்றுவதற்கும் வணங்குவதற்கும் ஆகும். இந்த உண்மையினைத் திருவாசகம்,

"வாழ்த்துவதும் வானவர்கள் தாம்வாழ்வான் மனம்நின்பால்
தாழ்த்துவதும் தாம்உயர்ந்து தம்மைஎல்லாம் [தொழவேண்டிச்
சூழ்த்துமது கரம்முரலும் தாரோயை நாய்அடியேன்
பாழ்த்தபிறப் பறுத்திடுவான் யானும்உன்னைப் பரவுவனே"

என்று அறிவிக்கிறது. எனவேதான் "தின்தாள் பூசை உள்ளார் எனில் எங்கே உலகர் செய்பூசை கொள்வர்" என்றனர். (42)

**அண்டாரை வென்றுல காண்டுமெய்ஞ் ஞானம் அடைந்துவிண்ணில்**
**பண்டாரை சூழ்மதி போல்இருப் போர்கள்நின் பத்தர்பதம்**
**கண்டாரைக் கண்டவர் அன்றோ திருஒற்றிக் கண்ணுதல்சேர்**
**வண்டாரை வேல்அன்ன மானே வடிவுடை மாணிக்கமே.**

(பொ - ரை.) "திருஒற்றியூரில் வீற்றிருக்கும் நெற்றிக் கண் படைத்த நிமலரைச் சேர்ந்து விளங்கும் வளமான மாலை அணிந்த அழகிய வேல் போன்ற கூர்மையான கண்களையுடைய மானே! வடிவுடை மாணிக்கமே! பகைவர் களை வென்று உலகை ஆண்டு மெய்ஞ்ஞானத்தைப் பெற்று மேலுலகில் சீருடைய நட்சத்திரங்கள் சூழ்ந்துள்ள சந்திர னைப்போல் ஒளியுடன் இருப்பவர்கள், உன் அன்பர்களின் திருவடிகளைக் கண்ட அன்பர்கள் அல்லரோ?" (எ - று.)

(அ - சொ.) கண்நுதல் - நெற்றிக் கண்ணுடைய சிவபெருமான். நுதல் - நெற்றி. வண்தார் - வளமானமாலை. ஐ - அழகு. அன்ன - போன்ற. அண்டார் - பகைவர். விண்ணில் - மேல் உலகில். பண் - சீர்மை. தாரை - நட்சத்திரம். மதி - சந்திரன்.

(இ - கு.) கண்ணுதல், அன்மொழித் தொகை. வண்மை + தார் + ஐ, பண் + தாரை என்று பிரிக்க. பதம், குறுக்கல் விகாரம். கண்டாரை, கண்டவர் இரண்டும் வினையால் அணையும் பெயர்கள்.

(வி - ரை.) வேல் வெற்றிக்குத் துணையாய் இருத் தலின் அதற்கு மாலை சூட்டிச் சிறப்புச் செய்தல் மரபு ஆதலின், "வண்தாரை வேல்" எனப்பட்டது. வேலின் கூர்மை மாதர்களின் கூரிய பார்வைக்கு உவமையாகக் கூறுவது புலவர் மரபு. ஐ என்பதற்கு அழகு என்று பொருள் காணாது சாரியை என்று கூறினும் அமையும். விண்ணுலகு அடைதற்கு வெற்றி துணை ஆகாது. ஞானமே துணை யாகும். அந்த ஞானமும் மெய்ஞ்ஞானமாக இருக்க வேண்டும். எனவேதான் "மெய்ஞ்ஞானம் அடைந்து விண்ணில் இருப்போர்" எனப்பட்டது.

விண்ணில் பல மெய்யன்பர்கள் சூழ்ந்திருப்பர் என்பது நம் ஐயா கூறும் உவமையால் புலனாகிறது. அதாவது பல

நட்சத்திரங்கள் சூழச் சந்திரன் விளங்குவதுபோலப் பல அன்பர்கள் சூழச் சிறப்புடைய அன்பர் விளங்குவர் என்பதாம். நம் ஐயா, ஈண்டுக் குறிப்பிட வந்த கருத்து யார் இறைவியின் அடியார்களின் திருவடிக் காட்சியைப் பெற்றவர்களோ, அவர்கள் விண்ணுலகில் பலர் தம்மைச் சூழச் சிறப்புடன் விளங்குவர் என்பதாம். இந்தக் கருத்தை ஊன்றிக் கவனிக்கும்போது,

"அன்பர்பணி செய்யஎனை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானேவந்து எய்தும் பராபரமே"

எனும் தாயுமானவர் வாக்கு நினைவுக்கு வருகிறது. (48)

அடியார் தொழும்நின் அடிப்பொடி தான்சற் றணியப்பெற்ற
முடியால் அடிக்குப் பெருமைபெற் றோர்அம் முகுந்தன்சந்தக்
கடியார் மலர்அயன் முன்னோர்தென் ஒற்றிக் கடவுள்செம்பால்
வடியாக் கருணைக் கடலே வடிவுடை மாணிக்கமே.

(பொ - ரை.) "அழகிய திருஒற்றியூர்க் கடவுளாகிய தியாகப் பெருமானின் சரி பாதியாக அவனது இடப்பக்கத்தே விளங்கும் குறையாத கருணையுடைய கடலே! வடிவுடை மாணிக்கமே! அடியவர்கள் வணங்குகின்ற உன் திருவடியின் சிறுதூசினைத் தம் முடியில் பெற்ற காரணத்தால்தான் திருமால் அழகிய மணம் நிறைந்த தாமரை மலரில் இருக்கும் பிரமன் முதலானோர் தங்கள் பாதங்களில் பலர் வந்து வணங்கும் பெருமை பெற்றார்கள்" (எ - து.)

(அ - சொ.) முகுந்தன் - திருமால். சந்தம் - அழகு. கடி - வாசனை. ஆர் - நிறைந்த. மலர் - தாமரை மலர். அயன் - பிரமன். முன்னோர் - முன்னோர்கள். தென் - அழகிய. செம்பால் - சரிபாதியான பகுதி. வடியா - குறையா.

(இ - கு.) கடி, உரிச்சொல்.

(வி - ரை.) தென் என்பதற்குத் தெற்குத் திசை என்று பொருள் கூறினும் கூறலாம். இறைவி இறைவனது உடலில் சரிபாதியாக அமைந்திருத்தலின் செம்பால் என்றார். கடல் சிற்சில சமயங்களில் தன் நீர்மையில் குறைதலும் உண்டு. அதாவது மேகம் தன்னிடத்தில் மழையினைப் பெய்யாத போது கடல் தன் நீர்மை குன்றும். இந்த உண்மையினைத் திருக்குறள்,

"நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும் தடிந்தெழிலி
தான்நல்கா தாகி விடின்"

என்று கூறுதல் காண்க. ஆனால் இறைவியாகிய கருணைக் கடல் என்றும் கருணையினின்று குறைதல் இல்லை. ஆதலின் "வடியாக் கருணைக்கடலே" என்றனர்.

திருமால், பிரமன் முதலான தேவர்கள் இறைவியின் திருவடிகளை வணங்கும்போது அத்திருவடிகளின் சிறு தூசு அவர்களின் தலைகளில் பொருந்தப் பெறும். அத்தூசினை அவர்கள் தம் தம் சிரசில் தாங்குவதால்தான் அவர்கள் பிறர் தம் பாதங்களை வந்து வந்து வணங்கும் பெருமையினைப் பெற்றனர். இந்த அரிய கருத்தையே நம் ஐயா இப்பாட்டில் அமைத்துள்ளனர். இறைவியைத் திருமாலும், பிரமனும் வணங்குவர் என்பதை அபிராமி அந்தாதி "நாரணனும் அயனும் பரவும் அபிராமவல்லி" என்று குறிப்பிடுதல் காண்க. இறைவியைத் தொழுவதனால் எய்தும் பயனை,

"விரவும் புதுமலர் இட்டுநின் பாத விரைக்கமலம்
இரவும் பகலும் இறைஞ்சவல் லார்இமை யோர்எவரும்
பரவும் பதமும் அயிரா வதமும் பகீரதியும்
உரவும் குலிசமும் கற்பகக் காவும் உடையவரே"

என்று அபிராமி அந்தாதி கூறுதல் காண்க. (44)

**ஓவா தயன்முத லோர்முடி கோடி உறழ்ந்துபடில்**
**ஆவா அனிச்சம் பொருமலர்ச் சிற்றடி ஆற்றும்கொலோ**
**காவாய் இமயப்பொன் பாவாய் அருள்ஒற்றிக் காமர்வல்லி**
**வாவா எனும்அன்பர் வாழ்வே வடிவுடை மாணிக்கமே.**

(பொ - ரை.) "இமய மலையில் தோன்றிய அழகிய பெண்ணே! அருள் நிறைந்த ஒளி பொருந்திய திருஒற்றியூரில் வாழ்கின்ற அழகிய வல்லிக்கொடி போன்றவளே! வடிவுடை மாணிக்கமே! எங்களைக் காப்பாயாக! எங்கள் அருகே வருவாயாக" என்று அன்புடன் விண்ணப்பித்துக்கொள்ளும் அன்பர்களின் வாழ்வே! இடைவிடாமல் பிரமன் முதலான தேவர்களின் தலையில் அணிந்துள்ள பல முடிகள் பெருகிப் படிந்தால் ஆ! ஆ! அனிச்சம் மலர் படினும் தாங்க முடியாத. அவ்வளவு மென்மை வாய்ந்த உன் சிறிய திருவடிகள் பொறுத்துக்கொண்டு இருக்குமோ?" (எ - து.)

(அ - சொ.) பொன் - அழகு. பாவாய் - பெண்ணே. காமர் - அழகிய. வல்லி - வல்லிக்கொடி. ஓவாது - இடைவிடாமல். அயன் - பிரமன், உறழ்ந்து - பெருகி. பொரு - தாங்க முடியாத. ஆற்றுங்கொலோ - பொறுக்குமோ.

(இ - கு.) பாவை, உவம ஆகுபெயர். காமர், உரிச்சொல். ஆ ஆ எனப்பிரிக்க. இவை வியப்பிடைச் சொற்கள். பொரு, ஈறுகெட்ட எதிர்மறைப் பெயர் எச்சம் சிறுமை+அடி எனப்பிரிக்க. கொல் வினாப்பொருளில் வந்த இடைச்சொல். ஓ, அசைச்சொல். வாவா, அடுக்குத் தொடர்.

(வி - ரை.) பர்வதராசன் மகளாய் இமயமலையில் தோன்றினமையின் இமயப்பொன் பாவை ஆயினள். பாவை என்பது பதுமை (பொம்மை) ஆகும். தேவி பதுமை போல அழகுடன் விளங்குதலின் பாவை எனப்பட்டாள். அயன் முதலோர், முப்பத்து முக்கோடி தேவர்களும் பிறரும் ஆவர். இறைவியை யார் யார் வணங்குகின்றனர் என்பதை அபிராமி அந்தாதி,

"ஆதித்தன் அம்புலி அங்கி குபேரன் அமரர்தம்கோன்
போதில் பிரமன் புராரி முராரி பொதியமுனி
காதிப் பொருபடைக் கந்தன் கணபதி காமன்முதல்
சாதித்த புண்ணியர் எண்ணிலர் போற்றுவர்
[தையலையே"

என்று குறிப்பிடுதல் காண்க. இந்தக் கருத்தை உளத்தில் கொண்டே "அயன் முதலோர் கோடி" முடி என்றனர்.

அனிச்சமலர் மிக மிக மெல்லியது. அதனை மூக்கருகே கொணரும்போதே அது வாடி விடும். இது குறித்தே திருவள்ளுவர். "மோப்பக் குழையும் அனிச்சம்" என்றனர். இத்தகை அனிச்சமலரினும் மிக மிக மென்மையர் மாதர்கள். இதனையும் திருவள்ளுவர்,

" நல்நீரை வாழி அனிச்சமே! நின்னினும்
மேல்நீரள் யாம்வீழ் பவள் " என்று கூறினர்.

மேலும் அவர், மிக மெல்லிய அனிச்சமலரின் காம்பினைக் கிள்ளி எறியாமல் அப்படியே ஒரு பெண்ணின் கூந்தலில் சூட்டினல் அவளுடைய இடை, அனிச்சமலரினு மெல்லிய தாக இருக்கின்றமையின், அவள் இடை முறிந்து விடும் என்றனர். இத்துடன் மட்டும் மாதர்களின் மென்மைத் தன்மையினைத் திருவள்ளுவர் கூறி நிறுத்தாமல், பெண்களின் பாதத்தில் அனிச்சமலர் படின் நெருஞ்சிமுள் போலத் தைக் கும் என்றும் கூறியுள்ளார்.

" அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்
அடிக்கு நெருஞ்சிப் பழம் "

என்னும் பாடலைக் காண்க. இத்தகைய பெண் இனத்திற்குத் தாயகமாய் இருப்பவள் இறைவியாதலின், அவளுடைய திருவடிகளை "அனிச்சம் பொருமலர்ச் சீறடி" என்றனர் நம் வள்ளலார்.

இறைவியின் திருவடிகளை வந்து பணியும் தேவர்களின் முடிகளின் தொகையினை உயர்வு நவிற்சி அணியாகக் கோடி என்னும் பேர் எண்ணால் குறித்தனர். இப்படிக் கூறுதல் புலவர் மரபு. இறைவனை வணங்க வந்தவர்களின் முடிகளை யும் கோடி என்னும் சொல்லால் பரஞ்சோதியாரும் கூறி யுள்ளதை,

"வந்திறை அடியில் தாழும் வானவர் மகுட கோடி
பந்தியில் மணிகள் சிந்த வேத்திரப் படையால் தாக்கி
அந்தியும் பகலும் தொண்டர் அலகிடும் குப்பை ஆக்கும்
நந்திஎம் பெருமான் பாத நகைமலர் முடிமேல் வைப்பாம்"

என்னும் பாட்டால் தெளிக.

இறைவியை அன்பர்கள் வாவா என்று அழைப்பதை இறைவியைப் பற்றிப் பாடப்பட்ட பிள்ளைத் தமிழ் நூல்களில் வரும் வருகைப் பருவப் பாடல்களால் அறிக.

"பெருந்தேன் இறைக்கும் நறைக் கூந்தல்
பிடியே வருக முழுஞானப்
பெருக்கே வருக பிறைமௌலிப்
பெம்மான் முக்கண் சுடர்க்கிடும்நல்
விருந்தே வருக மும்முதற்கும்
வித்தே வருக வித்தின்றி
விளைந்த பரமா னந்தத்தின்
விளைவே வருக பழமறையின்
குருந்தே வருக அருள்பழுத்த
கொம்பே வருக திருக்கடைக்கண்
கொழித்த கருணைப் பெருவெள்ளம்
குடைவார் பிறவிப் பெரும்பிணிக்கோர்
மருந்தே வருக பசுங்குதலை
மழலைக் கிளியே வருகவே
மலையத் துவசன் பெற்றபெரு
வாழ்வே வருக வருகவே"

என்னும் மீனாட்சி அம்மை பிள்ளைத்தமிழ் வருகைப் பருவப் பாடலையும்,

"துளிபட்ட தேந்தொடைக் கூந்தலைக்
காரென்று தோகைமுன் நாடிவரமென்
துணைமலர்ப் பாதநடை கற்க
அன்னத்திரள் தொடர்ந்துபின் ஓடிவரஉன்
களிபட்ட தீங்கிளவி கற்குந்நின்
செந்தளிர்க் கைக்கிள்ளை பாடிவரநின்
கருணைபொழி கட்கடைப் பார்வையை
வியந்துமான் கன்றினம் கூடிவரமெய்
ஒளிபட்ட வேதக்குழாம் கதறி
ஓலிட் டுனைப்பெரிதும் நேடிவரவில்
உமிழ்மணிக் கோவைக் குருஉப்பரும
மீமிசை உடுத்தஇடை வாடிவரமை
அளிபட்ட பூஞ்சோலை சூழ்குளத்
தூரில்வரும் அமுதாம்பி கைவருகவே
அருள்மடை திறந்தூற்று புன்மூரல்
அழகொளிர வரும்பொன்நா யகிவருகவே"

எனும் அமுதாம்பிகை பிள்ளைத் தமிழ் வருகைப் பருவப் பாடலையும் பாடி இறைவியின் திருவருளைப் பெறலாம். இந்த உரிமை அன்பர்கட்கு உண்டு என்பதை அறிவிக்கவே, "காமர்வல்லி! வாவா என்னும் அன்பர் வாழ்கவே" என்றனர். (45)

**இட்டார் மறைக்கும் உபநிட தத்திற்கும் இன்னும்சற்றும்**
**எட்டாநின் பொன்அடிப் போதெனி யேன்தலைக் கெட்டுங்கொலோ**
**கட்டார் சடைமுடி ஒற்றிஎம் மான்நெஞ்ச கத்தமர்ந்த**
**மட்டார் குழல்மட மானே வடிவுடை மாணிக்கமே.**

(பொ - ரை.) "அடர்ந்து கட்டாக அமைந்துள்ள சடைமுடியுடைய திருஒற்றியூரில் உள்ள எம் தியாகராசப் பெருமானின் உள்ளத்தில் அமர்ந்திருக்கின்ற தேன் நிறைந்த மலரை அணிந்துள்ள கூந்தலையுடைய மானே! வடிவுடை மாணிக்கமே! நுணுக்கமான கருத்துகள் நிறைந்திருக்கின்ற வேதங்களுக்கும், உபநிடதங்களுக்கும் இன்னமும் கூடச் சிறிதும் எட்டாதிருக்கின்ற உன் திருவடி மலர்கள் ஏழையாகிய என் தலைக்கு எட்டுமா?" (எ - து.)

(அ - சொ.) ஆர் - பொருந்திய. மட்டு - தேன். குழல் - கூந்தல். மடமான் - இளைய தேவி. இட்டு - நுண்மையான கருத்துகள். மறை - வேதம். பொன் - அழகிய. போது - மலர். எளியேன் - ஏழை. எட்டுங் கொலோ - கிட்டுமா?

(இ - கு.) எம்பெருமான், என்பது எம்மான் என மருவியது. நெஞ்சு + அம், இதில் உள்ள அம் சாரியை. திருவடி போதாக (மலராக) உருவகம் செய்யப்பட்டது. கொல், என்பது வினாப்பொருளில் வந்துள்ள இடைச்சொல். ஓ, ஈற்றசை. சிலர் கொல் என்பதை அசையாகக் கொண்டு, ஓவினை வினாவாகக் கூறுவர்.

(வி - ரை.) இறைவன் சடைமுடி அடர்த்தியாக இருத்தலின் அதனைக் "கட்டார் சடைமுடி" என்றனர். இறைவி இறைவன் உள்ளத்தை விட்டு நீங்காது இருத்தலின் "எம்மான் நெஞ்சத்தமர்ந்த" எனப்பட்டாள். "ஒருவன் திருவுள்ளத்தில் அழகொழுக எழுதிப் பார்த்திருக்கும் உயிர் ஓவியமே" என்பர் குமரகுருபரர்.

வடமொழி வேதம் இரு பிரிவுடையது. அவையே கரும காண்டம், ஞான காண்டம் என்பன. இவ்விரு பிரிவுகளே அன்றி உபாசனா காண்டம் என்னும் ஒரு பிரிவு உண்டு என்றும் கூறுவர். கரும காண்டத்தைப்

பூர்வபாகம் என்றும், ஞானகாண்டத்தை உத்தரபாகம் என்றும் கூறுவர். பூர்வ பாகத்தில் பலவகைத் தெய்வங்களைப் பற்றிய குறிப்புகளும், அத்தெய்வங்களைப் பற்றிய தோத்திரங்களும், வழிபடும் முறைகளும், வரலாறுகளும் காணப்படும். மேலும் இதில் யாகத்தைப் பற்றியும் கூறப்பட்டிருக்கும். இந்த யாகத்தின் மூலமே தேவர்களுக்கு ஆகுதி கொடுக்க வேண்டும் என்றும் கூறப்பட்டிருக்கும். மேலும், இந்தக் கர்ம காண்டத்தின் வழி தெய்வ உணர்ச்சியையும், சுவர்க்கம், நரகம், மறுபிறப்பு, ஆகிய உண்டு என்னும் விளக்கங்களையும் அறியலாம்.

உத்தர பாகமாகிய ஞான காண்டத்தில், தத்துவ ஆராய்ச்சி காணப்படும். "கர்ம காண்டத்தில் குறிப்பிடப் பட்ட தெய்வங்கள் சுதந்தரமுடையன அல்ல. அவைகளைச் செயல்படுத்துகின்ற பரம்பொருள் ஒன்று உண்டு. அப்பரம் பொருளை உணர்தலே ஞானம். இந்த ஞானத்தைப் பெற்றால் அன்றிப் பிறவி நீங்காது. ஞானத்தால் பரம் பொருளை உணர்ந்து அதனோடு ஒன்று படுதலே பிறப்பு நீங்கி வீடு பெறுவதற்கு வழி" என்பன போன்ற கருத்துகளை அதில் காணலாம். இந்த இருபகுதிகள் நாளடைவில் முறையே வேதம் என்றும், வேதாந்தம் என்றும் குறிக்கப்பட்டு வருகின்றன. இன்னும் இவற்றை விரிக்கில் அவை நீளும் எனக் கருதி இத்துடன் நிறுத்தப்பட்டன. இன்னோரன்ன அரிய பெரிய நுண் கருத்துகள் வேதத்தில் இருத்தலினால்தான் "இட்டு ஆர் மறை" என்றும் ஐயா, குறிப்பிட்டுள்ளனர்.

உபநிடதங்கள் என்பன வேதக்கருத்தை அறிவிக்க உண்டாயின. இவ்வுபநிடதங்கள் முடிந்த முடிபாக எதையும் உணர்த்தவில்லை. இவை கேவலாத்துவிதம், சுத்தாத்து விதம், விசிட்டாத்துவிதம், கவிதா எனும் பற்பல பிணக்கு களுக்கும், இடம் தருவன. இந்த உபநிடதங்கள் சைவ

சித்தாந்த சார்புடையனவாகவும், வைணவச் சார்புடையன வாகவும் ஏகான்மவாதச் (வேதாந்தம்) சார்புடையனவாக வும் விளங்கும். புராண இதிகாசங்களில் கூறப்படுகின்ற கதைகளுக்கும் உபநிடதங்கள் இடம் தந்துள்ளன.

இவ்வாறெல்லாம் கருத்து வேற்றுமைகட்கும் பிணக்கு களுக்கும் மற்றும் உள்ளனவற்றிற்கும் எல்லா வேதங்களும், உபநிடதங்களும் காரணமாய் இருத்தலின் நம் வள்ளலார் "இட்டு ஆர் மறைக்கும் உபநிடதத்திற்கும் இன்னும் சற்றும் எட்டா நின் பொன் அடி" என்றனர்.

வேதங்களுக்கும், உபநிடதங்களுக்கும் எட்டாத இறை வியின் திருவடிகள் தம் சென்னியில் சூட்டிக் கொள்ளும் வாய்ப்புக் கிட்டுமோ என்னும் ஐயத்தினால்தான் "எட்டா நின் அடிப்போது எளியேன் தலைக்கு எட்டுங்கொலோ" என்றனர். (46)

**வெளியாய் வெளிக்குள் வெறுவெளி யாய்ச்சிவ மேநிறைந்த**
**ஒளியாய் ஒளிக்குள் ஒளியாம் பரைநினை ஒப்பவர்ஆர்**
**எளியார்க் கெளியர் திருஒற்றி யார்மெய் இனிதுபரி**
**மளியாநின் றோங்கும் மருவே வடிவுடை மாணிக்கமே.**

(பொ - ரை.) "ஏழைகளுக்கு ஏழையாகவே விளங்கி அவர்கட்குத் திருவருள் புரியும் திருஒற்றியூர்ப் பரமரின் உடல் இனிது மணக்க உடன் இருந்து மேலும் அம் மணத்தை வீசிக் கொண்டு விளங்கும் தேவி! வடிவுடை மாணிக்கமே! பரவெளியாய் அப்பர வெளியுள் விளங்கும் ஞானவெளியாய் பரமாகாயமாய் எங்கும் மங்களமே நிறைந்த ஒளியாய், ஒளிக்குள்ளும் அதி நுட்பமான ஒளியாய் விளங்கும் பரமேசு வரியே! உனக்கு ஒப்பானவர் யார் உளர்? ஒருவரும் இலர்" (எ - து.)

(அ - சொ.) எளியார் - தாழ்ந்தவர், ஏழைகள். மெய் - உடல். பரிமளியா - மணம் வீசிக்கொண்டு. மருவே - மணமுடைய தேவி. வெளி - பரவெளி. வெளிக்குள் வெறு வெளி - பர வெளியில் அதி சூக்குமமாய் விளங்கும் சித் வெளி. சிவம் - மங்களம். பரை - பரமேசுவரி, மேலானவள்.

(இ - கு.) மரு, பண்பாகு பெயர். பரையே என்று விளிக்கப்பட வேண்டியவள் பரை என விளிக்கப்பட்டது, அண்மை விளியாம்.

(வி - ரை.) இறைவனுக்குரிய அரிய திருப்பெயர்களுள் அடியார்க்கு எளியன் என்பதும் ஒன்று. இந்தப் பெயரை இறைவன் தானே வைத்துக் கொண்டனன். இதனை ஒரு வரலாற்றால் உணரலாம். பெத்தான் சாம்பான் என் பவன் ஓர் ஆதித் திராவிடன். அவன் சிவபெருமானை மதிலுக்கு வெளியே நின்று வணங்குபவன். அடியார்களிடத் தில் பேரன்பு கொண்டவன். அவன் சிவபெருமானுக்கு நிவேதம் அமைத்ததற்குத் தினமும் விறகு கொடுக்கும் தொண்டில் ஈடுபட்டான். அவனது அன்பின் பெருக்கை உணர்ந்த தில்லைக் கூத்தன் ஓர் அந்தண வடிவில் தோன்றி அவனை நோக்கி "இனி இவ்விறகினைக் கொற்றவன் குடி உமாபதி சிவாசாரியார் திருமடத்துக்கு அளித்து வருக" என்று கட்டளை இட்டனன். இக்கட்டளைப்படியே உமாபதி சிவா சாரியார் திருமடத்திற்கு விறகினைக் கொடுத்து வந்தான். இறைவர் பெத்தான் சாம்பானுக்குச் சிவ தீட்சை செய்து முத்திக்கு ஏதுவாகும்படி செய்யத் திருவுளம் கொண்டு, பரமவைதிகர்களாகிய தில்லைவாழ் அந்தணர் மரபினராம் உமாபதி சிவாசாரியார்க்கு ஒரு கடிதம் எழுதி அதனைப் பெத்தான் சாம்பானிடமே கொடுத்து உமாபதி சிவாசாரிய ரிடம் கொடுக்கப் பணித்தார். அக்கடிதத்தில்தான் இறைவர்

தம்மை அடியார்க்கு எளியன் என்று குறித்துள்ளனர். அத் திருமுகம் (கடிதம்)

" அடியார்க் கெளியன்சிற் றம்பலவன் கொற்றம்
குடியார்க் கெழுதியகைச் சீட்டு—படியின்மிசைப்
பெத்தான்சாம் பானுக்குப் பேதம்அறத் தீக்கைசெய்து
முத்தி கொடுக்க முறை "

என்பது. இந்த வரலாற்றின் குறிப்பையே நம் ஐயா உளத்தில் கொண்டு "எளியார்க்கு எளியர் திருஒற்றியார்" என்றனர்.

இறைவி பரிமளமே வடிவாய் அமைந்தவள் என்னும் குறிப்பைக் குமரகுருபரர், "பரிமளம் ஊறிய உச்சி" என்று கூறுதலால் தெளியலாம். இதனை மேலும் வற்புறுத்தும் முறையில் அபிராமி அந்தாதி,

" சொல்லும் பொருளும் என நட மாடும் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடி யேநின் புதுமலர்த்தாள்
அல்லும் பகலும் தொழும்அவர்க் கேஅழி யாஅரசும்
செல்லும் தவநெறி யும்சிவ லோகமும் சித்திக்குமே "

என்று கூறுகின்றது. எனவேதான் நம் ஐயா "பரிமளியா நின்று ஓங்கும் மருவே" என்றனர். இறைவி பரையாக மட்டும் இன்றிப் பராபரையாகவும் உள்ளாள் என்பதை அபிராமி அந்தாதி " ஒரு பாகம் கொண்டாளும் பராபரையே " என்று கூறுவதால் உணரலாம். (47)

**விணங்கா தல்அன்பர்தம் அன்பிற்கும் நீன்புல விக்கும்அன்றி**
**வணங்கா மதிமுடி எங்கள் பிரான்ஒற்றி வாணனும்நின்**
**குணங்கா தலித்துமெய்க் கூறுதந் தான்எனக் கூறுவர்உன்**
**மணங்கா தலித்த தறியார் வடிவுடை மாணிக்கமே.**

(பொ - ரை.) " வடிவுடை மாணிக்கமே! உள்ளத்தில் உயர்வும் அழகும் கொண்ட மெய்யன்பர்களின் அன்பிற்கும், நீ கொள்ளும் ஊடலுக்கும் அல்லாமல் வேறு எந்தக்

காலத்திலும் வணங்காத சந்திரனை அணிந்த முடியுடைய எங்கள் பெருமானும், திருஒற்றியூர்த் தியாகனும் ஆகிய சிவன் உன் நற்குணத்தை விரும்பித் தன் உடம்பில் நீ சரிபாதியாக இருக்க என்று இடப்பாகத்தைத் தந்தான் என்று பலர் கூறுவர். ஆனல் அச்சிவபெருமான் உன் பரிமளத்தை என்றும் நுகர்ந்து கொண்டிருக்கவே தன் உடலில் பாதி ஈந்தான் என்பதை அவர்கள் அறிந்திலர்" (எ - து.)

(அ - சொ.) விண் - உயர்ச்சி. அம் - அழகு. காதல் - இறைவனிடம் காட்டும் அன்பு. புலவி - ஊடல். மதி - சந்திரன். வாணன் - வாழ்பவனுன சிவபெருமான். மெய் - உடம்பு. கூறு - ஒரு பகுதி. மணம் - பரிமளம்.

(இ - கு.) விண் + அம் எனப் பிரிக்க. அம், சாரியை. அன்றி, குறிப்பு வினை எச்சம். வாழ்நன் என்பது வாணன் என்ருயது மரூஉ வழக்கு, மெய்க்கூறு ஏழன் தொகை. காதலித்தது, தொழிற்பெயர். விணம் என்பது விண்ணம் எனப்புணரவேண்டியது எதுகை நோக்கித் தொகுத்தல் விகாரம் பற்றி ஒற்று இரட்டிக்காமல் நின்றது.

(வி - ரை.) இறைவன் தன்னைப் பிறர் வணங்கும் நிலையினனே அன்றித் தான் பிறரை வணங்கும் தன்மையன் அல்லன். இது குறித்தே திருவாதவூரர் "சேர்ந்தறியாக் கையான்" என்றனர். அப்படி இருந்தும் அவன் வணங்கும் இடங்கள் இரண்டு. ஒன்று அன்பர்கள் முன்பு வணங்குவது. மற்றொன்று இறைவியின் ஊடல் தீர்க்க வணங்குவது. எத்தகைய அன்பர்களின் முன்பு வணங்குவன் எனில் உயர்ந்த உள்ளமும், கள்ளம் கபடு அற்ற பண்புமுடைய அன்பர்கள் முன்புதான் வணங்குவன். இது குறித்தே நம் ஐயா மிக்க விழிப்புடன் "விண் அம் காதன் அன்பர்க்கும் அன்றி வணங்கா மதிமுடி எங்கள் பிரான்" என்றனர். இறைவர் அன்பர்க்கு வணங்கியதை ஒரு வரலாற்றல் உணரலாம்.

வேலூருக்கு அருகில் விரிஞ்சிபுரம் என்னும் தலம் ஒன்று உளது. அந்தத் தலத்தின் இறைவரை அர்ச்சிக்கும் அர்ச்சகர் அடுத்த நாள் வந்து விடலாம் என்ற நோக்கத்துடன் வெளியூர்க்குச் சென்றனர். ஆனல் அவர் நினைத்தபடி வந்திலர். ஆகவே அர்ச்சகரின் வாழ்க்கைத் துணைவியார் தம் மகனை இறைவனுக்குத் திருமுழுக்காட்டிப் பூசை புரிந்து வருமாறு அனுப்பினள். சிறுவன் தன் தாயின் கட்டளைப்படி உயர்ந்த உள்ளத்துடனும், உள்ளத்தில் கள்ளம் கபடு இல்லாத பண்புடனும் புறப்பட்டு வந்தான். வந்தவன் சிவலிங்கத்தைக் கண்டான். இறைவர்க்கு முழுக்காட்ட (அபிஷேகம் செய்ய) குடத்தில் நீர் கொண்டு வந்தான். ஆனல் சிவலிங்கம் தன் அளவுக்கும் நீண்டு உயர்ந்து காணப்பட்டதனல், எப்படிச் சிவலிங்கத்தின் உச்சியில் நீரைப் பொழிவது என்று சிந்தித்தவண்ணம் திகைத்து நின்ருன். இறைவர் எளியவர்க்கு எளியவர் ஆதலின் தம் வணங்காச் சென்னியைச் சிறுவனுக்காக வணங்கித் தலை சாய்த்து நின்ருர். அதன்பிறகு சிறுவன் முழுக்காட்டி மகிழ்ந்து பூசனை செய்து முடித்தான். இன்றும் இறைவர் தம் திருமுடி சாய்த்து விளங்கும் கோலத்தை விரிஞ்சிபுர ஆலயத்தில் கரு அறையில் (மூலட்டானத்தில்) காணலாம். இதனை உளத்தில் கொண்டார்போல தம் ஐயா எதிர்மறை முகத்தால் "வணங்காதல் அன்பர்தம் அன்பிற்கு அன்றி வணங்கா மதிமுடி எங்கள்பிரான்" என்றனர்.

இதனை ஒரு புலவர் வேறு ஒரு கற்பனை நயம் தோன்ற ஒரு பாடலை அழகுறப் பாடியுள்ளனர். அப்பாடல்,

"மாசிலாத் தென்விரிஞ்சை மார்க்கசகாயலிங்கர்
வேசியர்பால் தூதுசென்று மீண்டனர்காண் அம்மானை
வேசியர்பால் தூதுசொல்லி மீண்டனரே யாமாயின்
வீசைமுனை வெட்கம் அவர்க்கிலையே அம்மானை
இல்லாமல் தலைஇறக்கம் ஏன்வந்த தம்மானை"

என்பது. இப்பாட்டில் சிறுவனுக்காக இறைவர் தலைசாய்த்தனர் என்பதைக் கூறுமல், (சிறுவனுக்காகத் தலை சாய்த்தது தான் உண்மை) சுந்தரர் பொருட்டு ஒரு தாசி (பரவை நாச்சியார்) வீட்டிற்குத் தூது போனதால் மானம் போயிற்று என்ற காரணத்தால் தலை இறக்கம் கொண்டனர் என்று கூறப்பட்டுளது.

தமிழர் வாழ்க்கையில் தலைவன் தலைவிக்கு ஊடல் (சிறு பிணக்கு) உண்டாகும் என்று இலக்கண நூல்கள் கூறுகின்றன. இவ்வூடலுக்குப் பல காரணங்கள் இருப்பினும் அவற்றுள் ஒன்று, தன் தலைவன் தன்னைவிட்டு வேறு ஒருத்தியுடன் வாழ்வதனுல் உண்டாவதாகும். இந்த ஊடலைத் தீர்ப்பதற்குத் தலைவன், தலைவி காலில் வீழ்ந்து தன் குற்றத்தை மன்னிக்க வேண்டுவன்.

இந்த ஊடலும், வணக்கமும் பிறர் அறியா நிலையில் சிறிது பொழுதே நிகழும். ஊடலை நீட்டிக்கக் கூடாது என்றே வள்ளுவர் ஓர் உவமை வாயிலாகக் கூறியுள்ளார். அதாவது "உப்பு உணவில் பதமாக இருத்தல் போல ஊடலும் பதமாக அமைய வேண்டும். அப்படிக்கின்றி ஊடலை நீட்டித்தால் உப்பு மிகுதியும் கொண்ட உணவு சுவை கெட்டுப்போவது போலக் காதல் சுவை தோன்ருது கெட்டுவிடும்" என்பதாம். இதனை,

> "உப்பமைந் தற்றுல் புலவி அதுசிறிது
> மிக்கற்றுல் நீள விடல்"

என்னும் குறளில் காண்க. புலவி தேவை என்பதையும் திருவள்ளுவர் கூறுமல் இல்லை. அதனை,

> "துனியும் புலவியும் இல்லாயின் காமம்
> கனியும் கருக்காயும் அற்று"

என்னும் குறளில் விளக்கினுர். இன்னோரன்ன காரணங்களால் மாதர்கள் ஊடல் கொள்ளுதல் உண்டு என்பதை உணர்ந்தோம். இந்த ஊடலைப் போக்கத் தலைவன் தலைவியின்

கால்களில் வீழ்ந்து வணங்குவதால் தலைவி உயர்ந்துவிடு கின்றாள். தலைவன் தாழ்ந்து விடுகின்றான். இந்த உண்மை யினைத் தொல்காப்பியம்,

"மனைவி உயர்வும் கிழவோன் பணிவும்
நினையும் காலைப் புலவியுள் உரிய"

என்று கூறுகிறது. இதனை நளன் வாழ்க்கையில் வைத்துக் காட்டலாம். நளன் தன் மனையாளாம் தமயந்தியை நோக்கி ஒரு சோலையைக் காட்டி இச் சோலையில்தான் நாங்கள் விளையாடுவது என்று கூறினான், அதனைக் கேட்ட தமயந்தி நாங்கள் என்ற சொல்லுக்குப் பெண்களையும் உடன் சேர்த்துச் சொல்லப்பட்டது என்று உளம் கொண்டு தன்னைத் தவிரப் பல மாதர்கள் நளனுக்கு உண்டு போலும் என்று எண்ணி ஊடல் கொண்டனள். அந்த ஊடலைத் தீர்க்க நளன் உடனே தன்னை மன்னிக்க வேண்டி அவள் காலில் வீழ்ந்து வணங்கினான். இதனை நளவெண்பா,

"சில்லரிக் கிண்கிணிமென் தெய்வமலர்ச் சிற்றடியைத்
தொல்லை மணிமுடிமேல் சூட்டினான்"

என்று கூறுகிறது.

இவ்வாறான மக்கள் நிகழ்ச்சிகளையும் இறைவன் மீது ஏற்றி இறைவன் இறைவியை ஊடல் தீர்க்கும் பொருட்டு வணங்கினான் என்று புலவர்கள் கற்பனை செய்து பாடுவார் ஆயினர். இறைவன் வணங்குவதனால் இறைவிக்கும் மகிழ்ச்சி உண்டாகுமாம்.

"பொழியும் தரங்கக் கங்கைவிரைப்
புனல்கால் பாய்க்கத் தழைந்துவிரி
புவனம் தனிபூத் தருள்பழுத்த
பொன்னம் கொடி"

என்று பாடுவர் குமரகுருபரர்.

"முழுமணி மிடற்றன் கனல்மழு வீரன்
முக்கண்ஆண் தகைநின தெழில்கூர்
முகம்புலர் தலைக்கண் டுடல்வளைந் தடியின்
முனைப்பிறைக் கோடுகொண் டுழுது
விழுமணி அரவம் நுழைசடா டவியின்
விண்நதித் தண்புனல் விடுப்ப
விரைவொடு குளிர்ந்து முகமலர் தலினால்
மென்கொடி எனநினை உணர்ந்தேன்"

என்று பெரியநாயகி அம்மை விருத்தம் பாடிக் களிக்கும்.

"இகல்மலிந்தபுய இறைவர் தஞ்சமுற இருகை கொண்டு தழுவாரணி" என்று மங்களாம்பிகை பிள்ளைத் தமிழ் பாடுகிறது. அபிராமி அந்தாதி,

"ஆனந்த மாய்என் அறிவாய் நிறைந்த அமுதமுமாய்
வானந்த மான வடிவுடை யாள்மறை நான்கினிக்கும்
தானந்த மான சரணார விந்தம் தவளநிறக்
கானந்த மாடரங் காம்எம்பி ரான்முடிக் கண்ணியதே"

என்று பாடிக் களிக்கிறது.

இறைவி ஊடல் கொள்ளுதற்குக் காரணம் கங்கா தேவியினிடம் இறைவர் காதல் கொண்டுள்ளார் என்பதனால் என்பதையும் குமரகுருபரர்,

"கங்கைக்குக் கண்மலர் சாத்தக் கருங்குவளை
செங்குவளை பூத்தாள் செயல்என்னே—எங்கோமான்
பங்குற்றும் தீரா பசப்பு"

என்பர். இறைவர் இறைவியின் ஊடலைத் தீர்க்க வணங்கிய போது, இறைவி, இறைவன் வணங்குவதற்காகவோ, தன் நெற்றிப் பகையான பிறைச்சந்திரன் வணங்குவதற்காகவோ, தன் அல்குல் பகையாம் பாம்பு வணங்குவதற்காகவோ மகிழாமல் தன் சககளத்தியாகிய கங்கையும் வணங்கு

கின்றாள் என்பதற்கு மகிழ்ந்தாளாம். இந்தக் கருத்தில் தான் பிரபுலிங்கலீலையில் அம்பிகையை வணங்கும் பாடல் வருகிறது. அப்பாடல்,

" ஆதி பகவன் தனதூடல்
தணிப்பான் பணிய அவ்விறைவன்
பாதம் இறைஞ்சும் அதற்கும்நெற்றிப்
பகையும் அங்குல் பகையுமாம்
சீத மதியும் அரவும்விழும்
செயற்கும் உவகை செயாமல்அலை
மாது பணியும் அதற்குமனம்
மகிழும் உமையை வணங்குவாம் "

என்பது.

இவ்வாறெல்லாம் இறைவன் இறைவியை வணங்கிய வணக்கத்தை உளத்தில் கொண்டே நம் ஐயா "நின்புலவிக்கும் அன்றி வணங்கா மதிமுடி எங்கள்பிரான்" என்றனர். இந்தத்தொடரும் கருத்தும் மங்களாம்பிகை பிள்ளைத் தமிழில்,

" செஞ்செடைக் கருமிடற் றுத்தவள
நீற்றுத் திருப்பெரும் பரமயோகி
வாங்கும் திரைக்கடல் புடவிமுதல்
எத்தவமும் வாழ்வெனும் புணரிமூழ்க
வணங்கா முடித்தலை வணங்கிட "

என்று வருதல் காண்க.

இறைவன் இறைவியின் குணத்தினை நன்கு அறிந்து தான் அவளை மணந்து தன் உடலில் பாதி ஈந்தான் என்பது புராண வரலாறு. சுந்தரமூர்த்தி சுவாமிகளும்.

" குரும்பைமுலை மலர்க்குழலி கொண்டதவம் கண்டு
குறிப்பினொடும் சென்றவள்தன் குணத்தினை நன்கறிந்து
விரும்பும்வரம் கொடுத்தவளை வேட்டருளிச் செய்த
விண்ணவர்கோன் கண்ணுதலோன் "

என்று பாடுகின்றார். ஆனால் நம் வள்ளலார் ஈண்டு இறைவர், இறைவியின் இயற்கை மணத்தின் இன்பத்தை என்றும் உடன் இருந்தே துய்க்க வேண்டும் என்பதற்காக மணந்து கொண்டார் என்று கூறி இருப்பது படித்து இன்புறுதற் குரியது; இந்தக் குறிப்பை நம் ஐயா வாக்காகிய "உன் மணம் காதலித்தது" என்னும் தொடரால் அறிக. (48)

பன்னும்பல் வேறண்டம் எல்லாம்அவ் அண்டப் பரப்பில்நின்று
துன்னும் சராசரம் யாவையும் ஈன்றது சூழ்ந்தும்உன்னை
இன்னும் இளந்தை அழியாத கன்னிகை என்பதென்னே
மன்னும் சுகாநந்த வாழ்வே வடிவுடை மாணிக்கமே.

(பொ - ரை.) "நிலைபெற்ற இன்பமும், மகிழ்ச்சியும் நிறைந்து விளங்கும் வாழ்வரசியே! வடிவுடை மாணிக்கமே! பலவாறு சொல்லப்படும் வெவ்வேறான அண்டங்களை எல்லா வற்றையும், அந்த அண்டங்களின் பரப்பில் நிறைந்து நெருங்கி வாழ்கின்ற அசையும் பொருள்கள் அசையாத பொருள்கள் எல்லாவற்றையும் பெற்றெடுத்து அவற்றைச் சூழ்ந்து இருக்கும் உன்னை இன்னமும் வேதங்கள் இளமை அழியாத கன்னி என்று போற்றுகின்றனவே! இதன் கருத்து என்னே!" (எ - து.)

(அ - சொ.) மன்னும் - நிலைபெற்ற. பன்னும் - பலமுறை சொல்லுகின்ற. அண்டம் - உலகங்கள். துன்னும் - நெருங்கி இருக்கும். சரம் - அசையும் பொருள்கள். அசரம் - அசை யாப் பொருள்கள். கன்னிகை - இளம்பெண். இளந்தை - இளமை.

(இ - கு.) சுகம் + ஆனந்தம். சரம் + அசரம், என்று பிரிக்க. சரம் அசரம், சுகாநந்தம் உம்மைத் தொகை.

(வி - ரை.) இறைவி இன்பத்தையும் ஆனந்தத்தையும் தன் வடிவாகக் கொண்டு விளங்குதலின் சுகானந்த

வாழ்வே எனப்பட்டாள். அண்டங்கள் பற்பல ஆகும். இதனைத் திருவாசகம்.

"அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பரும் தன்மை வளப்பெருங் காட்சி
ஒன்றனுக் கொன்று நின்றெழில் பகரின்
நூற்றுக் கோடியின் மேற்பட விரிந்தன"

என்று கூறுதல் காண்க. எனவேதான் "பன்னும் பல்வேறு அண்டம்" எனப்பட்டது. மக்கள், தேவர், விலங்கு, பறவை, நீர் வாழ்வன், ஊர்வன முதலியன சரப்பொருள்கள். அசரம் என்பன மரம், செடி, கொடி, புல், பூண்டு, மலை முதலியன. இவை அனைத்தையும் ஈன்றவள் இறைவியே. அப்படி இருந்தும் அவள் முதுமை உறுமல் இளையளாகவே விளங்கு கின்றாள். அவளது இத்தகைய நிலையினை அறிந்தே வேதங்களும் ஏனைய நூல்களும் அவளைக் கன்னி என்றே போற்றுகின்றன. "அகிலாண்ட கோடி ஈன்ற அன்னையே பின்னையும் கன்னி எனமறை பேசும் ஆனந்த ரூப மயிலே" என்று தாயுமானவர் பாடுவர். "கருதரிய கடலாடை உலகு பல அண்டம் கருப்பமாய்ப் பெற்ற கன்னி" என்று போற்றுவர் சிவப்பிரகாச சுவாமிகள். இவற்றை உட்கொண்டே நம் ஐயா "சராசரம் யாவையும் ஈன்று அது சூழ்ந்தும் உன்னை இன்னும் இளந்தை அழியாத கன்னிகை என்பது என்னே" என்று வியந்து பாடினார். (49)

**சினம்கடந் தோர்உள்ளச் செந்தா மரையில் செழித்துமற்றை**
**மனம்கடந் தோதும்அவ் வாக்கும் கடந்த மறைஅன்னமே**
**தினம்கடந் தோர்புகழ் ஒற்றிஎம் மான்இடம் சேர்அமுதே**
**வனம்கடந் தோன்புகழ் மானே வடிவுடை மாணிக்கமே.**

(பொ - ரை.) "கோபத்தை ஒழித்தவர்களின் மனமாகிய செந்தாமரையில் செழிப்புடன் விளங்கி, மனத்திற்கும்,

வாக்கிற்கும் அப்பாற்பட்டு வேதங்களுக்கும் எட்டாத அன்னமே! வீழ் நாட்களைக் கடந்து வாழ்நாட்களுக்குரிய அரிய செயல்களைச் செய்கின்ற மேலோர் புகழ்கின்ற திருஒற்றியூரில் உள்ள எம்பெருமானின் இடப்பக்கத்தே விளங்குகின்ற அமுதமே! சிற்றவ்வையின் சொல்லைக்கேட்டு காடுகளைக் கடந்து சென்றவனை திருமாலாம் இராமன் போற்றிப் புகழ்கின்ற மானே! வடிவுடை மாணிக்கமே!" (எ - து.)

(அ - சொ.) சினம் - கோபம். உள்ளம் - மனம். மறை - வேதம். வனம்கடந்தோன் - காட்டைக் கடந்த இராமன்.

(இ - கு.) மற்று + ஐ இரண்டும் அசைச்சொற்கள்.

(வி - ரை.) கோபம் சண்டாளம். இந்தக் குணம் இல்லாது பார்த்துக்கொள்ள வேண்டும். இளமையிலே இது வராதபடி விழிப்பாக இருக்கவேண்டும் என்னும் கருத்தினால்தான் ஔவையார், "ஆறுவது சினம்" என்று கூறினார். வள்ளுவர் பத்துக் குறள் பாக்களால் கோபத்தை மறக்கவேண்டும். இன்றேல் தீங்கு வந்தே தீரும் என்று எச்சரிக்கை செய்துள்ளார். அந்த எச்சரிக்கை,

"மறத்தல் வெகுளியை யார்மாட்டும் தீய
பிறத்தல் அதனால் வரும்"

என்பது. இந்தக் கருத்தில் மேருமந்திர புராணம்,

"ஆதலால் வெகுளி யேபகை நமக்கெலாம்
தீதெலாம் வினையினால் தீக்க திப்பெயும்
காதலால் தம்மையும் ஒருக ணத்துளே
ஏதிலர் ஆக்கும் இஃதிகழத் தக்கதே"

என்கிறது.

இந்தக் கோபத்தை நாம் தடுக்கா விட்டால் அது நம்மையே அழித்துவிடும். ஆகவே, ஒருவன் தன்னைக் காத்துக்கொள்ள வேண்டுமானால் கோபம் வர ஒட்டாமல் காத்துக்கொள்ள வேண்டும். இதனையும் திருவள்ளுவர்,

"தன்னைத்தான் காக்கின் சினம்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்"

என்று அறிவுறுத்தி யுள்ளனர். இக் கோபம் சினம் கொண்ட வரை மட்டும் அழிக்காமல், இக் கோபம் கொண்டவர்களின் இனத்தாரையும் அழிக்கும் எனில், அதன் கொடுமையினை என் என்று கூறுவது ?

"சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
ஏமப் புணையைச் சுடும்"

என்பது, பொய்யாமொழியாரின் பேருள் உரை. இக் கருத்தினை நன்கு விளக்கும் முறையில் கம்பர்,

"மூங்கிலில் பிறந்த முழங்குதீ மூங்கில்
முதலற முறுக்குமா போலத்
தாங்கரும் சினத்தீ தன்உளே பிறந்து
தன் உறு கிளையெலாம் தகிக்கும்"

என்றனர். இவ்வாறெல்லாம் கொடுமைக்கு உறைவிடமான சினத்தை உள்ளத்தாலும் நினைக்காமல் எவன் வாழ்கிறானோ அவன் நினைக்கும் யாவற்றையும் பெறுவன். இந்த உண்மைகளை உணர்ந்தவர்கள் சினத்தை ஒழித்து இறைவன் இறைவியர் திருவருள் பெற்று அம்மை அப்பர் தம் உள்ளத்தில் வீற்றிருக்கும் பேற்றைப் பெறுவர் என்பதை நன்கு உணர்த்தவே நம் ஐயா "சினங்கடந்தோர் உள்ளச் செந்தாமரையில் செழித்து" என்று உணர்த்தியுள்ளனர்.

இறைவனும் இறைவியும் ஒவ்வோர் உயிரின் உள்ளத்தில் குடியாக இருந்தும் ஒளித்து இருக்கின்றனர்.

இதனை "உள்ளத்திருந்தும் ஒளித்தான் பரன்" என்று கூறுதல் காண்க. இறைவன் தன்மையே இறைவியின் தன்மை யாதலின் "மனம் கடந்து" எனப்பட்டாள். இவ்வாறே அவளுடைய பெருமைகளை வாக்கினால் எவ்வளவு கூறினாலும் அவ்வாக்குக்கு அப்பாற்பட்டவளாக இறைவி விளங்கு பவள். "மாற்றம் மனம்கழிய நின்ற மறையோனே" என்னும் திருவாசக வரியை ஈண்டு நினைவு கூர்க. இது குறித்தே நம் ஐயாவும், "மனம்கடந்து ஓதும் அவ்வாக்கும் கடந்த மறை அன்னமே என்றனர். "இவ்வாறு இறைவனும் இறைவியும் நம் மனம் வாக்கிற்கு அப்பாற்பட்டிருந்தால் அவர் களின் திருவருளைப் பெறுவதுதான் எப்படியோ?" என்னும் ஐயம் எழலாம். இந்த ஐயத்தைப் போக்கவே மணிமொழி யாரும், வாகீசரும் முறையே, "அவன் அருளாலே அவன் தாள் வணங்கி" என்றும், "அவன் அருளே கண்ணாகக் காணின் அல்லால் இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத் தன் இவன் இறைவன் என்றெழுதிக் காட்டொணாதே" என்றும் கூறிச் சென்றனர்.

தினம் கடந்தோர் என்பார் வீண் நாட்களைக் கடந்து இறைவனை வணங்கல், வாழ்த்தல், வழிபடல் ஆகிய நல் நாட்களில் தம் வாழ்நாட்களைப் பயன் படுத்திய நல் அறிஞர்கள் ஆவார்.

கைகேயி தன் மகனான பரதனுக்கு அரசைப் பெற்றுத் தரும் பொருட்டு இராமனைக் காட்டுக்குப் போகப் பணித் தாள். இராமனும் அக்கட்டளையைத் தலைமேல் தாங்கிக் காடுகளைக் கடந்து சென்றான். இதனைக் கம்பர் குறிப்பிடும் போது,

"மன்னவன் பணிஅன் றாகில் நும்பணி மறுப்ப னோஎன்
பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன் பெற்ற தன்றோ

என்னிதின் உறுதி அப்பால் இப்பணி தலைமேல் கொண்டே
மின்னொளி கானம் இன்றே போகின்றேன் விடையும்
[கொண்டேன்"

என்று பாடியுள்ளனர்.

இராமன் காட்டுக்குச் சென்றது குறித்து உள்ளம் உருகிய குலசேகராழ்வார்,

"பாராளும் படர்செல்வம் பரதநம்பிக் கேஅருளி
ஆராஅன் பிளையவனோ டருங்கானம் அடைந்தவனே!
சீராளும் வரைமார்பா! திருக்கண்ண புரத்தரசே!
தாராளும் நீண்முடி தாசரதீ! தாலேலோ"

என்றும்,

"சுற்றம்எலாம் பின்தொடரத் தொல்கானம்
[அடைந்தவனே"

"வெவ்வினையேன் வெவ்வுரைகேட்டு இருநிலத்தை
வேண்டாதே விரைந்து வென்றி
மைவாய களிறொழிந்து தேர்ஒழிந்து
மாஒழிந்து வனமே மேவி
நெய்வாய வேல்நெடுங்கண் நேர்இழையும்
இளங்கோவும் பின்பு போக
எவ்வாறு நடந்தனைஎம் இராமாவோ
எம்பெருமான் என்செய் கேனே"

என்றும் கல்லும் உருகும் நிலையில் பாடியுள்ளார்.

அழகிய மணவாளதாசர் என்னும் திவ்விய கவிப் பிள்ளைப் பெருமாள் ஐயங்காரும் திருவரங்கக் கலம்பகத்தில்,

"புலையாம் பிறவி பிறந்தென்செய் தோம்பொன்னி
பொன்கொழிக்கும்
அலையார் திருவரங் கத்தெம்பி ரான்நம
தன்னையொடும்
தொலையாத கானம் கடந்தஅந் நாள்தடம்
தோறும்புல்லாய்ச்
சிலையாய்க் கிடந்தி லமேநெஞ் சமேகழல்
தீண்டுகைக்கே"

என்று கனிவுடன் பாடியுள்ளனர். இந்த நிகழ்ச்சிகளையே நம் வள்ளலார், "வனம் கடந்தோன்" என்றனர். வனம் கடந்தோன் இராமன். அவன் திருமாலின் அவதாரம்; திருமால் இறைவியைத் தொழுதே எல்லாப் பேற்றையும் பெற்றுள்ளான். ஆதலின் "வனம் கடந்தான் புகழ் மானே" எனப்பட்டாள். (50)

வல்லாரும் வல்லவர் அல்லாரும் மற்றை மனிதர்முதல்
எல்லாரும் நின்செயல் அல்லா தணுவும் இயக்கிலரேல்
இல்லாமை யால்உழல் புல்லேன்செய் குற்றங்கள் ஏதுகண்டாய்
மல்லார் வயல்ஒற்றி நல்லாய் வடிவுடை மாணிக்கமே.

(பொ - ரை. "வளப்பம் பொருந்திய வயல்கள் நிறைந்த திருஒற்றியூரில் எழுந்தருளியுள்ள இறைவியே! வடிவுடை மாணிக்கமே! வன்மையுடையவர்களும், வன்மை அற்றவர்களும், மற்றுமுள்ள மனிதர்கள் முதலான ஏனையவர்களும் உன் திருவருளாம் செயல் இன்றி ஓர் அணுவையும் அசைக்க ஒண்ணு நிலையினராய் இருப்பார்களானால், உன் திருவருள் இல்லாமல் திரிகின்ற அற்பனாகிய நான் செய்கின்ற குற்றங்கள் எவை என்று கூற முடியும்" (எ - து.)

(அ - சொ.) இயக்கிலர் - அசைத்திலர். புல்லேன் - அற்பன். மல் - வளப்பம். ஆர் - பொருந்திய.

(இ - கு.) மல்லல் என்பது, மல் என ஈறு குறைந்து நின்றது.

(வி - ரை.) நல்லாய் என்பதற்கு நல்லவனே என்று பொருள் கூறினும் கூறலாம். அன்றிப் பெண்ணே என்று பொருள் காணினும் காணலாம். நல்லார் என்பது பெண்களைக் குறிக்கும் சொல்லும் ஆகும். மனிதர்களைத் தனியே பிரித்து வல்லாரையும், வல்லவர் அல்லாரையும் கூறலின் ஈண்டுத் தேவர்களையும் அரக்கர்களையும் கொள்ளலாம். "அவன் அன்றி ஓர் அணுவும் அசையாது" என்பது ஒரு பழமொழி. இறைவி அவனின்று வேறு அல்லள். ஆதலின் அக்கருத்தில் இறைவியின் செயல் இன்றி எவராலும் எதையும் செய்ய இயலாது என்பதை நம் ஐயா இப்பாடலில் வலியுறுத்தி யுள்ளனர். தேவர்களும் அரக்கர்களும் மற்றைய மனிதர்களும் இறைவியின் திருவருள் செயலைப் பெறாது ஒன்றும் செய்ய இயலாமல் இருக்கையில், தாம் அத்திருவருள் செயலைப் பெறாத நிலையில் தவறுகள் பல செய்தால், அத் தவறுகள் தவறு என்று எப்படிக் கருதப்படும் என்பது நம் ஐயாவின் வினா. ஆகவே நன்மைக்கும் தீமைக்கும் இறைவியே காரணமாய் இருக்கத் தவறு தம்முடையது அன்று என்பதைக் கூறாமல் கூறியுள்ளனர் நம் வள்ளலார். (51)

எழுதா எழில்உயிர்ச் சித்திர மேஇன் இசைப்பயனே
தொழுதாடும் அன்பர்தம் உள்களிப் பேசித் சுகக்கடலே
செழுவார் மலர்ப்பொழில் ஒற்றிஎம் மான்தன் திருத்துணையே
வழுவா மறையின் பொருளே வடிவுடை மாணிக்கமே.

(பொ - ரை.) "எழுத இயலாத அழகுவாய்ந்த உயிருடன் கூடிய சித்திரமே! இனிய இசையின் பயனாய் இருப்பவளே! வணங்கி ஆனந்தத்தால் ஆடுகின்ற அன்பர்களின் உள்ளத்தில் இருந்துகொண்டு மகிழ்ச்சியைத்

தருபவளே! உண்மை இன்பம் நிறைந்த கடலே! வளமானது நிறைந்த மலர்கள் மலர்ந்துள்ள சோலைகள் சூழ்ந்த திரு ஒற்றியூரில் வீற்றிருக்கின்ற எம்பெருமானுடைய சிறந்த வாழ்க்கைத் துணைவியே! குற்றம் அற்ற வேதத்தின் பொருளாய் இருப்பவளே! வடிவுடை மாணிக்கமே!'' (எ - து)

(அ - சொ.) எழில் - அழகு. சித் - உண்மை. செழுவார் - வளப்பம் நிறைந்த. மறை - வேதம். துணை - வாழ்க்கைத் துணைவி.

(இ - கு.) சித்சுகம், உம்மைத்தொகை. செழுமை + ஆர் எனப் பிரிக்க.

(வி - ரை.) இப்பாடலில் இறைவி பலவாறாக விளிக்கப் பட்டுள்ளாள். இறைவி பேரழகினள் ஆதலின் அவள் அழகை எழுத இயலாமல் போகிறது. ''ஓவியத்து எழுத ஒண்ணா உருவத்தாய்'' என்பர் கம்பர். சித்திரத்திற்கு அழகிய உருவப்பொலிவு இருக்கும். ஆனால் உயிர் மட்டும் இருக்காது. இறைவியும் சித்திரம்போலப் பேர் அழகுடன் இருந்து கொண்டு உயிருடன் திகழ்தலின் ''உயிர்ச்சித்திரமே'' எனப்பட்டாள். குமரகுருபரர் ''அழகொழுக எழுதிப் பார்த்திருக்கும் உயிர் ஓவியமே'' என்பர். இறைவன் எப்படி ஏழிசையாய் இசைப்பயனாய் இருக்கின்றானோ, அதே போல இறைவியும் இசைப்பயனாய் இருக்கின்றாள். இவளே இசை வடிவினள் என்பதை அபிராமி அந்தாதி, ''நரம்பை அடுத்த இசைவடிவாய் நின்ற நாயகியே'' என்று போற்றுகிறது. எனவேதான் ''இன் இசைப் பயனே'' எனப் பட்டாள்.

அன்பர்கள் இறைவனைத் தொழும்போது ஆனந்த வயத்தராய் ஆடிப்பாடித் துதிப்பர். இதனை மணிமொழியர், ''தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்'' என்று

கூறுதல் காண்க. இந்த நிலை தமக்கு வந்திலதே என்னும் கருத்தில்,

"ஆடு கின்றிலை கூத்துடை யான்கழற்கு அன்பிலை என்புருகிப்
பாடு கின்றிலை பதைப்பதும் செய்கிலை பணிகிலை பாதமலர்
சூடு கின்றிலை சூட்டுகின் றதும்இலை துணையிலி பிணநெஞ்சே
தேடு கின்றிலை தெருவுதோ றலறிலை செய்வதொன்
றறியேனே"

என்று தம் மனத்திற்கு அறிவுறுத்தல் காண்க. எனவேதான் "தொழுதாடும் அன்பர்" என்றனர். உலகமுறைக் கேற்ப இறைவி, இறைவனுக்கு மனைவி என்னும் முறையில் விளங்கலின், துணையே" எனப்பட்டாள். துணையே என்பதன் பொருள் வாழ்க்கைத் துணைவி என்பது. (52)

தெருட்பால் உறும்ஐங்கைச் செல்வர்க்கும் நல்இளம் சேய்க்கும்மகிழ்ந்
தருட்பால் அளிக்கும் தனத்தன மேஎம் அகம்கலந்த
இருட்பால் அகற்றும் இருஞ்சுட ரேஒற்றி எந்தைஉள்ளம்
மருட்பால் பயிலும் மயிலே வடிவுடை மாணிக்கமே.

(பொ - ரை.) "தெளிவாகிய குணம் பொருந்தப் பெற்ற ஐந்து கைகளையுடைய விநாயகப் பெருமானுக்கும் நல் இளைய குமரனாகிய முருகப் பெருமானுக்கும் இன்பத்தோடு அருள் செல்வமாகிய பாலை அளிக்கும் கொங்கைகளைப் பெற்ற செல்வமே! எங்கள் உள்ளத்தில் பொருந்தியுள்ள அஞ்ஞான மாகிய இருட்டை எல்லாம் நீக்குகின்ற பேர் ஒளியே! திரு ஒற்றியூரில் உள்ள எங்கள் தந்தையாம் தியாகப் பெருமான் உள்ளம் களிப்பால் மயங்கும்படி அவருடன் கலந்து பழகும் மயிலே! வடிவுடை மாணிக்கமே!" (எ - று.)

(அ - சொ.) தெருள் - தெளிவு, அறிவு. பால் - குணம். உறும் - பொருந்தப் பெற்ற. ஐ - ஐந்து. ஐங்கைச் செல்வர் - ஐந்து கைகளையுடைய விநாயகப் பெருமான். இளம்சேய் -

இளைய முருகப் பெருமான். சேய் - குழந்தை (முருகன்) தனம் - செல்வம், கொங்கை. அகம் - மனம். இருள்பால்- இருளின் பல்வேறு பகுதிகள். மருள் - மயக்கம்.

(இ - கு.) தெருள்பால், தனத்தனம் பண்புத் தொகைகள், எந்தை, மருஉ வழக்கு.

(வி - ரை.) விநாயகப் பெருமான் ஐந்து கரங்களை உடையவர். அவையே நான்கு கரங்களும் துதிக்கையாகிய மற்றும் ஒரு கரமும் ஆகும். இந்தக் கரங்களைக் கொண்டு என்ன செய்வது என்று திகைக்காமல் கொழுக்கட்டையை ஏந்திய கையைத் தமக்கும், தந்தத்தைப் பிடித்திருக்கும் கையைத் தேவர்களுக்கும், இரத்தினக் குடத்தை ஏந்திய கையைப் பெற்றோர்களுக்கும், இரண்டு கரங்களை மெய்யன்பர்களுக்கும் பயன்படுத்தும் தெளிவைப் பெற்றிருக்கின்றார். ஆதலின், "தெருள்பால் உறும் ஐங்கைச் செல்வர்" என்று நம் ஐயா விநாயகரைக் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு ஐந்து கைகளைக்கொண்டிருக்கும் காரணத்தைத் தணிகைபுராணம்,

"பண்ணியம் ஏந்தும் கரம்தனக் காக்கிப்
பால்நிலா மருப்பமர் திருக்கை
விண்ணவர்க் காக்கி அரதனக் கலச
வியன்கரம் தந்தைதாய்க் காக்கிக்
கண்ணில்ஆ ணவவெங் கரிபிணித் தடக்கிக்
கரிசினேற் கிருகையும் ஆக்கும்
அண்ணலைத் தணிகை வரைவளர் ஆபச்
சகாயனை அகம்தழீஇக் களிப்பாம்"

என்று கூறுகிறது.

இறைவி முருகப் பெருமானுக்கு வேல் கொடுத்தலும், விநாயகப் பெருமானைத் தழுவி மகிழ்தலும் அவள் இவ்விருவர்மாட்டும் கொண்டுள்ள அருளைக் காட்டுகின்றன

அல்லவோ? "வேல் கொடுத்தாய் திருச்செந்தி வேலவர்க்கு" என்று பொற்களந்தைப் படிக்காசுத் தம்பிரான் பாடி இருப்ப தாலும், "கருதரிய கடலாடை உலகுபல் அண்டம் கருப்ப மாய்ப் பெற்ற கன்னி கணபதியை அருகழைத்து அகம் மகிழ்வு கொண்டனள்" என்று சிவப்பிரகாச சுவாமிகளும் பாடி இருத்தல் கொண்டு இவ்வுண்மையினைக் காண்க. எனவேதான் "ஐங்கைச் செவ்வர்க்கும் நல் இளம் சேய்க்கும் மகிழ்ந்து அருள்பால் அளிக்கும் தனத்தனமே" என்றனர். இறைவி இறைவனை மயல் செய்கின்றனள் என்பதைக் குமர குருபரர், "அழகிய சொக்கற்கு மால் செயத் தோட்டிகல அமர்செய் கயல்கண் குமரி" என்று அறிவித்துள்ளனர். எனவேதான் நம் ஐயா, "எந்தை உள்ளம் மருள்பால் பயிலும் மயிலே" என்றனர்.

இறைவி விநாயகர்க்கோ முருகப் பெருமானுக்கோ பால் கொடுத்திலள். அவள் உண்ணாமுலையாள். என்றாலும், அரு ளாளர்களால் பால் கொடுத்தவள் என்று கூறுதல் உபசார வழக்கே அன்றி உண்மை அன்று. (58)

**அயிலேந்தும் பிள்ளைநல் தாயே திருவொற்றி ஐயர்மலர்க்**
**கயிலேந் தரும்பெறல் முத்தே இசையில் கனிந்தகுரல்**
**குயிலே குயின்மென் குழல்பிடி யேமலைக் கோன்பயந்த**
**மயிலே மதிமுக மானே வடிவுடை மாணிக்கமே.**

(பொ - ரை.) "கையில் வேலைத் தாங்கும் பிள்ளையாகிய முருகப் பெருமானின் நல்ல தாயே! திருஒற்றியூர்ப் பெரு மானின் மலர்போன்ற கையில் ஏந்தும் பெறுதற்கரிய முத்தே! இசையில் பயிற்சி மிக்க குரல் அமைந்த குயிலே! மேகத்தைப் போன்ற மென்மையான கூந்தலையுடைய பெண் யானை போன்றவளே! மலைஅரசன் பெற்றெடுத்த மயிலே! சந்திரனைப் போன்ற முகம் படைத்த மானே! வடிவுடை மாணிக்கமே!" (எ - து.)

(அ - சொ.) அயில் - வேல். பிள்ளை - முருகனாகிய குழந்தை. குயின் - மேகம். குழல் - கூந்தல். பிடி - பெண் யானை. கோன் - அரசன். மதி - சந்திரன். பயந்த - பெற்ற.

(இ - கு.) கயில், மொழிமுதல் போலி. பிடி, உவம ஆகுபெயர். மதிமுகம், உவமத் தொகை.

(வி - ரை.) சோமாஸ்கந்த மூர்த்தப் பெருமானை அலங்கரித்து வீதி உலா நடத்தும்போது இறைவியை இறைவன் கையில் ஏந்திக் கொண்டிருப்பது போல அலங்கரிப்பது உண்டு. ஆதலின், "ஒற்றி ஐயர் மலர்க்கையில் ஏந்து அரும் பெரும் முத்தே" எனப்பட்டனள். இறைவி பல்வேறு மொழிகளால் விளிக்கப்பட்டிருப்பதைக் காண்க. பெண்களின் நடைக்குப் பெண் யானையை உவமை கூறுதல் புலவர் மரபு. ஆதலின் "பிடியே" எனப்பட்டாள். (54)

**செய்யகம் ஓங்கும் திருவொற்றி ஊரில் சிவபெருமான்**
**மெய்யகம் ஓங்கும்நல் அன்பேநின் பால்அன்பு மேவுகின்றோர்**
**கையகம் ஓங்கும் கனியே தனிமெய்க் கதிநெறியே**
**வையகம் ஓங்கும் மருந்தே வடிவுடை மாணிக்கமே.**

(பொ - ரை.) "விளை நிலங்கள் பெருகி விளங்கும் திருஒற்றியூரில் வீற்றிருக்கும் சிவபெருமான் திருமேனியில் விளங்கும் அன்பே! உன்னிடம் அன்பு கொள்வோர் கையில் விளங்கும் கனியே! ஒப்பற்ற சத்தியமான நற்கதி அடைதற்கு நன்னெறியாய் விளங்குபவளே! உலகில் சிறந்து விளங்கும் மருந்தே! வடிவுடை மாணிக்கமே!" (எ - று.)

(அ - சொ.) செய் - வயல். மெய் - உடல். தனி - ஒப்பற்ற. நெறி - நல்வழி. வையகம் - உலகம், அகம் - இடம்.

(இ - கு.) நின்பால், என்பதன் பால் ஏழன் உருபு. கை அகம், என்பதன் அகமும் ஏழன் உருபு.

(வி - ரை.) திருஒற்றியூர்க் கடற்கரை ஊராக இருப்பினும் நன்செய் நிலங்களுக்கும் இடம் ஆதலின் "செய் அகம் ஓங்கும் திருஒற்றியூர்" என்று சிறப்பிக்கப்பட்டது. இறைவி மெய் அன்பர்கட்கு உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்குதலின், "அன்பு மேவுகின்றோர் கை அகம் ஓங்கும் கனியே" எனப்பட்டனள். இறைவி பிறவி எனும் நோயை ஒழிக்கும் மருந்தாய் இருத்தலின் "வையகம் ஓங்கும் மருந்தே" எனப் பட்டாள். (55)

**தரும்பேர் அருள்ஒற்றி ஊர்உடை யான்இடம் சார்ந்தபசுங்**
**கரும்பே இனியகற் கண்டே மதுரக் கனிநறவே**
**இரும்பேய் மனத்தினர் பால்இசை யாத இளங்கிளியே**
**வரும்பேர் ஒளிச்செஞ் சுடரே வடிவுடை மாணிக்கமே.**

(பொ - ரை.) "அன்பர்கட்குப் பேரருளை அளிக்கின்ற திருஒற்றியூரை இடமாகக் கொண்டுள்ள படம்பக்கநாதனது இடப்பக்கத்தே அமர்ந்துள்ள இளங்கரும்பே! இனிய கற்கண்டே! இனிமை நிறைந்த பழத்தின் தேனே! பெரிய பேய் போல அலையும் உள்ளம் கொண்டவர்களிடம் பொருந்த மனம் கொள்ளாத இளைய கிளியே! உலகில் நிலவும் பேரொளியுடைய சுடரே! வடிவுடை மாணிக்கமே!" (எ - து.)

(அ - சொ.) மதுரம் - இனிமை. நறவு - தேன். இரும்பேய் - பெரியபேய். இசையாத - பொருந்த விரும்பாத.

(இ - கு.) இருமை + பேய் எனப் பிரிக்க. பால், ஏழன் உருபு.

(வி - ரை.) இறைவி தன்னை நினைப்பவர்களுக்குப் பெருஞ்சுவையினளாய் இருத்தலின் கரும்பே, கற்கண்டே,

கனிநறவே எனப்பட்டாள். இருமை என்பதற்குக் கருமை எனும் பொருளும் இருத்தலின், கரியபேய் என்று பொருள் காணினும் காணலாம். மனம் பலவாறு அலைதலின் பேய் உவமை கூறப்பட்டுளது. பே எனும் ஓர் எழுத்து ஒரு மொழிக்கு அச்சம் என்பது பொருள். அவ்வச்சக் குணம் உடையதைப் பேய் என்று நம் முன்னோர் குறித்தனர். இப்பாட்டில் இறைவி பலவாறு விளிக்கப் பட்டிருப்பதைக் காண்க. (56)

சேலேர் விழிஅருள் தேனே அடியர்உள் தித்திக்குஞ்செம்
பாலே மதுரச்செம் பாகேசொல் வேதப் பனுவல்முடி
மேலே விளங்கும் விளக்கே அருள்ஒற்றி வித்தகனார்
மாலே கொளும்எழில் மானே வடிவுடை மாணிக்கமே.

(பொ - ரை.) "சேல் மீனைப் போன்ற அழகுடைய கண்ணைப்பெற்று அருளெனும் தேனைப் பொழிகின்றவளே! அடியவர்களின் உள்ளத்தே தித்திக்கும் நல்ல அமுதமே! இனிய நல்ல வெல்லப்பாகே! சிறப்பித்துச் சொல்லப்படுகின்ற வேத நூலின் முடி மீது விளங்கும் ஒளியே! திருவருள் பாலிக்கும் திருஒற்றியூரில் பேரறிவாய் விளங்கும் பெருமான் உன்மீது கொண்டுள்ள காதலால் மயங்கும் வண்ணம் பேரழகு வாய்ந்த மானே! வடிவுடை மாணிக்கமே!" (எ-து.)

(அ - சொ.) சேல் - சேல்மீன். ஏர் - அழகு. பனுவல் - நூல். வேதப் பனுவல்முடி - உபநிடதம். வித்தகனார் - பேரறிஞர். மால் - காதல் மயக்கம். எழில் - அழகு.

(இ - கு.) சேல் ஏர் விழி, உவமத்தொகை, மேலே, ஏகாரம் அசைச்சொல். மாலே, ஏகாரம், தேற்றம்.

(வி - ரை.) மீன் சினைகளை ஈன்றபின் தன் கண்களால் அவற்றைப் பார்த்தவுடன் அச்சினைகள் அத்தனையும் உயிர்

பெற்று நீரில் புகும். அதுபோல இறைவியின் திருக்கண் களும் ஆன்ம கோடிகளைத் தன் திருக்கண் பார்வையால் அருளுடன் பார்க்கும்போது அவை உய்வு பெற்று இனிது வாழ்தலின், "சேல் கண்ணள் எனக் கூறப்பட்டாள். தேன் உடல் நோயை நீக்கும். அதுபோல இறைவி உயிர்க்குரிய நோயாகிய மும்மலங்களை நீக்கி நல்வாழ்வு அளிக்கும். ஆகவே, தேன் எனப்பட்டாள். பல மொழிகளால் இறைவி விளிக்கப் பட்டிருப்பதைக் காண்க. (57)

எம்பால் அருள்வைத் தெழில்ஒற்றி ஊர்கொண் டிருக்கும்இறைச்
**செம்பால் கலந்தபைந் தேனே கதலிச் செழுங்கனியே**
**வெம்பாலை நெஞ்சர்உள் மேவா மலர்ப்பத மென்கொடியே**
**வம்பால் அணிமுலை மானே வடிவுடை மாணிக்கமே.**

(பொ - ரை.) "எம்மிடம் திருவருள் சுரந்து அழகிய திருஒற்றியூர்த் தலத்தை இடமாகக் கொண்டு விளங்கும் இறைவனது திருமேனியின் சரி பாதி இடத்தில் கலந்து விளங்கும் புத்தம் புதிய தேனே! வளமான வாழைக் கனியே! கொடிய பாலை நிலம் போன்ற அவ்வளவு கொடுமை நிறைந்தவர்களின் மனத்தில் பொருந்தாத தாமரை மலர் போன்ற திருவடிகளைக் கொண்ட பூங்கொடியே! கச்சினால் இறுக்கிக் கட்டப்பட்ட அழகிய முலைகளையுடைய மானே! வடிவுடை மாணிக்கமே!" (எ - று.)

(அ - சொ.) எம்பால் - எங்களிடம். எழில் - அழகிய. இறை - சிவபெருமான். செம்பால் - திருமேனியின் நேர் பாதி. கதலி - வாழை. பால் - பாதி. வெம்பாலை - கொடிய பாலை நிலம். மேவா - பொருந்தாத. வம்பு - கச்சு, அணி - அழகு.

(இ - கு.) எம்பால், பால் ஏழன் உருபு. எம்+பால்: செம்மை + பால்; பசுமை + தேனே; செழுமை + கனியே.

வெம்மை + பாலை. வம்பு + ஆல் எனப் பிரிக்க. செம்பால் கலந்த, ஏழன் தொகை. பைந்தேன், பண்புத் தொகை. பாலை நெஞ்சர். மலர்ப்பதம், உவமத் தொகை. பதம், குறுக்கல் விகாரம். வாம்பு + ஆல், ஆல் மூன்றன் உருபு.

(வி - ரை.) பாலை என்பது ஐவகை நிலங்களுள் ஒன்று. ஐவகை நிலங்கள் ஆவன; குறிஞ்சி,முல்லை, மருதம்,நெய்தல், பாலை என்பன. மலையும் மலையைச் சார்ந்த இடம் குறிஞ்சி; காடும் காட்டைச் சார்ந்த இடம் முல்லை; வயலும் வயலைச் சார்ந்த இடம் மருதம்; கடலும், கடலைச் சார்ந்த இடம் நெய்தல்; குறிஞ்சி நிலமும், முல்லை நிலமும், வெம்மை காரணமாகக் வளத்தில் குறைந்து காணப் பட்டால் அந்த இடம் பாலை எனப்படும். இந்த உண்மையினை,

" முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து
நல்இயல் பழிந்து நடுங்குதுயர் உறுத்துப்
பாலை என்பதோர் படிவம் கொள்ளும் "

எனச் சிலப்பதிகாரம் கூறுவது கொண்டு தெளியலாம். இந்தப் பாலை நடுவு நிலத்திணை என்றும் கூறப்படும். இந்த நிலத்தின் வெம்மையை உணர்த்துவதற்காகவே இதற்கு வேனில் காலமும், நண் பகல் வேளையும் பெரும் பொழுதாகவும், சிறுபொழுதாகவும் முறையே கூறப்பட்டன.

" நடுவுநிலத் திணையே நண்பகல் வேனிலொடு
முடிவுநில மருங்கின் முன்னிய நெறித்தே "

என்பது தொல்காப்பியம்.

பாலை வனத்தில் வாழும் மக்கள், எவரேனும் தப்பித்தவறி அந்நிலத்தில் வருவாராயின் அவர்களிடம் இருக்கும் பொருளைப் பறிக்க வரும்போது, வந்தவர்கள் தம்மிடம் ஒரு காசும் இல்லை என்றாலும், அவர்களைச் சும்மா விடாமல் அவர்களைக் கருவியால் குத்தி அவர்கள் துள்ளுவதைக் கண்டு மகிழ்வார்களாம். அதனால் பறவைகளும் அந்நிலத்தே பறவாவாம். இதனைக் கலித்தொகை என்னும் சங்க நூல்,

" கடுங்கண் மறவர்தாம்
கொள்ளும் பொருள்இலர் ஆயினும் வம்பலர்
துள்ளுநர்க் காண்மார் தொடர்ந்துயிர் வௌவலின்
புள்ளும் வழங்காப் புலம்புகொள் ஆர்இடை "

என்று அப்பாலையின் கொடுமையைக் கூறுகிறது. மேலும் அவர்கள், வழிபறிசெய்து பொருள்பறித்த பிறகும் அன்பும் அருளும் அன்றி வழிப்போக்கற்கு, துன்பமே செய்வர். இதனையும் கலித்தொகை,

" பொருள்கொண்டு புண்செயின் அல்லதை அன்போ
டருள்புறம் மாறிய ஆரிடை அத்தம் "

என்கிறது.

கலிங்கத்துப்பரணி என்பது ஒரு நூல். அது பாலையின் கொடுமையைக் கூறும்போது,

" தீயின் வாயின்நீர் பெறினும் உண்பதோர்
சிந்தை கூரவாய் வெந்து லர்ந்துசெந்
நாயின் வாயில்நீர் தன்னை நீர்என
நவ்வி நாவினால் நக்கி விக்குமே

இந்நி லத்துளோர் ஏகல் ஆவதற்
கெளிய கானமோ அரிய வானுளோர்
அந்நி லத்தின்மேல் வெம்மை யைக்குறித்
தல்லவோ நிலத்தடி இடாததே

காடுஇதனைக் கடத்தும்எனக் கருமுகிலும்
வெண்மதியும் கடக்க அப்பால்
ஓடிஇளைத்துஉடல் வியர்த்த வியர்வன்றோ
உகுபுனலும் பனியும் அம்மா "

என்று கூறுகிறது.

கம்பராமாயணம் பாலையின் கொடுமையைப் பற்றிப் பாடும்போது,

"எரிசுடர்க் கடவுளும்
கருதின்வேம் உள்ளமும் காணின்வேம் நயனமும்"

"படியின்மேல் வெம்மையைப் பகரினும் பகரும்நா
முடியவேம் முடியமூ டிருளும்வான் முகடும்வேம்
விடியுமேல் வெயிலும்வேம் மழையும்வேம் மின்னினோ
டிடியும்வேம் என்னில்வே றியாவைவே வாதவே"

"பாரும்ஓ டாதுநீ டாதெனும் பாலதே
சூரும்ஓ டாதுகூ டாதரோ சூரியன்
தேரும்ஓ டாதுமா மாகமீ தேரினோர்
காரும்ஓ டாதுநீள் காலும்ஓ டாதரோ"

என்று பாடிக் காட்டுகிறது. இன்னோரன்ன கருத்துகளை உளத்தில் கொண்டே நம் ஐயா, கொடியவர் நெஞ்சுக்குப் பாலையை உவமை கூறினார். (58)

ஏமமுய்ப் பேர்எமக் கென்றே இளேக்கில் எடுக்கவைத்த
சேமவைப் பேஅன்பர் தேடும்மெய்ஞ் ஞானத் திரவியமே
தாமமைக் கார்மலர்க் கூந்தல் பிடிமென் தனிநடையாய்
வாமநல் சீர்ஒற்றி மானே வடிவுடை மாணிக்கமே.

(பொ - ரை.) "இவ்வுலக இன்பத்தை என்றும் துய்க்க வேண்டும் என்னும் எண்ணத்தாலும், வளத்தில் குறைந்த போதும் பயன்படும் என்னும் காரணத்தாலும் தமக்கென்றே சேமித்து வைக்கப்பட்ட பொருளைப்போன்று விளங்கும் பொருள் செல்வமே! மேல் உலக இன்பத்திற்கே உள்ளத்தைச் செலுத்தும் மெய் அன்பர்கள் தேடும் உண்மை அறிவாம் அருள் செல்வமே! பெருமைமிக்க கரிய

மேகத்தைப் போன்ற மலரை அணிந்த கூந்தலையுடைய பெண் யானையின் ஒப்பற்ற நடையுடையாளே! அழகிய நல்ல சிறப்புடைய திருவொற்றியூரில் எழுந்தருளி இருக்கும் மானே! வடிவுடை மாணிக்கமே!" (எ - று)

(அ - சொ.) ஏமம் - இன்பம். உய்ப்போர் - துய்ப்பவர் (அனுபவிப்பவர்). சேமவைப்பு - சேமித்து வைக்கப்பட்ட பொருள். தாமம் - பெருமை. கார் - மேகம். பிடி - பெண் யானை. தனி - ஒப்பற்ற. வாமம் - அழகிய.

(இ - கு.) கார்க்கூந்தல், பிடிநடை உவமத்தொகை.

(வி - ரை.) இம்மையில் வயது முதிர்ந்தபோதும் வளத்தோடு இருப்பதற்காக இளமைக் காலம் தொட்டே பொருளைச் சேமித்து வைப்பது மக்கள் இயல்பு. அப் பொருளைச் சேமித்து வைத்தவர்கள் எப்போது வேண்டு மானாலும் எடுத்துச் செலவுசெய்து கொள்வர். அதுபோல இறைவியும், பிறவி எடுத்து எடுத்து இளைத்துப்போகிற வர்கள், அவ்விளைப்பில் தளர ஒட்டாது காத்துத் திருவருள் புரிகின்றான். ஆதலின், அவன் அன்பர் தேடும் மெய்ஞ் ஞானத் திரவியமாக விளங்குகின்றான். பெண்களின் நடைக்குப் பிடி (பெண் யானை)யின் நடை உவமை. ஆகவே 'பிடிமென் தனிநடையாய்'' எனப்பட்டாள். (59)

**மன்னேர் மலையன் மனையும்நல் காஞ்சன மாலையும்நீ**
**அன்னே எனத்திரு வாயால் அழைக்கப்பெற் றோர்அவர்தம்**
**முன்னே அருந்தவம் என்னே முயன்றனர் முன்னும்ஒற்றி**
**வன்னேர் இளமுலை மின்னே வடிவுடை மாணிக்கமே.**

(பொ - ரை.) ''எல்லோரும் நினைக்கும் சிறப்பு வாய்ந்த திருவொற்றியூரில் விளங்கும், சொக்கட்டான் காய்போலும் இளைய முலையையுடைய மின்னல் கொடிபோன்றவளே!

வடிவுடை மாணிக்கமே! நிலைபெற்ற அழகுடைய மலையரசன் மனைவியாம் மேனையையும், நல்ல பண்பு வாய்ந்த மலயத் துவச பாண்டியன் மனைவியாகிய காஞ்சன மாலையையும் நீ, "தாயே" என்று உன் திருவாயால் அழைக்கப் பெற்றார் கள். அவ்விருவரும் முன் பிறவியில் செய்த அரிய தவம் தான் யாதோ?" (எ - து.)

(அ - சொ.) மன் - நிலைபெற்ற. ஏர் - அழகிய. மலையன் - பர்வதராசன். மனை - மனைவியாம் மேனை. அன்னே - தாயே. திரு - சிறந்த. முன்னும் - நினைக்கும். வல் - சொக்கட்டான்காய். நேர் - ஒப்பான.

(இ - கு.) மன்+ஏர், வல்+நேர், அருமை+தவம் எனப் பிரிக்க. மனை, இடவாகு பெயர். தாம், அசைச்சொல்.

(வி - ரை.) இறைவி மலையரசன் மகளாகத் தோன்றிய போது பார்வதி என்றும், மலயத்துவச பாண்டியன் மகளாகத் தோன்றியபோது தடாதகைப் பிராட்டியார் என்றும் அழைக் கப்பட்டாள். தட்சன் மகளாகத் தோன்றியபோது தாட்சாயணி என்னும் பெயரைப் பெற்றாள். தன் தந்தையாம் தட்சன் சிவபெருமானை அசட்டை செய்ததனால் அத்தகை யவன் பெயருடன் இணைந்து தன் பெயர் இருந்தமையின் அது மறையும் பொருட்டே மலையரசனுக்கு மகளாகப் பிறந்து பார்வதி ஆயினாள். இந்த உண்மையினைக் கந்த புராணம்,

"கற்பனை முதலிய கடந்த கண்ணுதல்
தற்பர நிலை இகழ் தக்கன் தன்னிடைப்
பற்பகல் வளர்ந்தவன் பயந்த மாதெனச்
சொற்படு நாமமும் சுமந்து ளேன்யான்"

"ஆங்கதோர் பெயரையும் அவன்கண் எய்தியே
ஓங்கிநான் வளர்ந்தஇவ் உடலம் தன்னையும்
தாங்கினன் மேல்அவை தரித்தற் கஞ்சினேன்
நீங்குவன் அவ்வகை பணித்தி நீஎன்றாள்"

என்று கூறுகிறது. இவ்வாறு இறைவி வேண்ட இறைவன் மலையரசன் மகளாக அமையும் அன்பு கட்டளை இட, இறைவி மலையரசன் தவம்செய்திருந்த இடத்தில் பதுமை எனும் தடாகத்தின் தாமரை மலரில் குழவியாய்த் தோற்றம் அளிக்க, அரசன் கண்டெடுத்துத் தன் மனைவியாம் மேனையினிடம் கொடுத்தான். இதனையும் கந்த புராணம்,

"பங்கயத் தவிசில் வைகும் பராபரை தனைத்த ஞெது
செங்கையின் எடுத்து வல்லே சென்னிமேல் தாங்கி ஏகித்
துங்கநல் இமயத் தண்ணல் தொல்முறை இருக்கை புக்கு
மங்கல மேனை என்னும் மனைவிகைக் கொடுத்தான் மாதோ"

என்கிறது. இதனால் மேனை உமாதேவிக்குத் தாயாகும் பேற்றைப் பெற்ருள். ஆகவே, இறைவி மேனையை அம்மா என்று அழைக்க நேர்ந்தது. இதன் விரிவைக் கந்த புராணத்தின் பார்ப்பதி படலத்தில் காண்க.

பாண்டிய நாட்டை மலையத்துவசன் எனும் பெயரிய பாண்டியன் செங்கோல் செலுத்திவந்தான். இவனுடைய மனைவி காஞ்சனை என்பவள். இவன் தனக்குப்பின் தன் அரசை ஏற்று நடத்தற்கு ஒரு மகவு இல்லையே என்று வருந்தினான். இதன் பொருட்டு மகப்பேறு வேள்வியைச் (புத்திர காமேட்டி யாகம்) செய்தான். அவ் யாகத்தில் உமையம்மை தோன்றினள். இவள் காஞ்சனை மாலையின் மடியில் இருந்த சிறப்பைத் திருவிளையாடல் புராணம்,

"குறுந்தளிர்மெல் அடிக்கிடந்த சிறுமணிநூ
புரஞ்சதங்கை குழறி ஏங்க
நறுந்தளிர்போல் அசைந்துதளர் நடைஓதுங்கி
மழலைஇள நகையும் தோன்றப்

பிறந்தபெரும் பயன்பெறுபொன் மாலைமடி
இருந்தொருபெண் பிள்ளை ஆனாள்
அறம்தழுவு நெறிநின்றோர்க் கிகம்போகம்
வீடளிக்கும் அம்மை அம்மா "

என்று கூறுகிறது. இந்த வாய்ப்பினால்தான் காஞ்சனமாலை இறைவியைத் திருமகளாகக் கொள்ளும் வாய்ப்பைப் பெற்றாள். இந்த நிலையில் இறைவிக்குக் காஞ்சன மாலையை அன்னாய் என அழைக்கும் நிலை ஏற்பட்டது. இதனை மேலும் காண விரும்புவார் திருவிளையாடற் புராணத்தின் தடாதகைப் பிராட்டியார் திரு அவதாரப் படலத்தில் காண்பாராக. இந்த வரலாறுகளையே நம் ஐயா இப்பாட்டில் குறிப்பிட்டுள்ளனர்.

**கணமொன்றி லேனும்என் உள்ளக் கவலைக் கடல்கடந்தே**
**குணமொன்றி லேன்எது செய்கேன்நின் உள்ளக் குறிப்பறியேன்**
**பணமொன்று பாம்பணி ஒற்றிஎம் மானிடப் பாலில்தெய்வ**
**மணமொன்று பச்சைக் கொடியே வடிவுடை மாணிக்கமே.**

(பொ - ரை.) "படம் பொருந்திய பாம்பை நகையாக அணிந்துள்ள திருஒற்றிப் பெருமானின் இடப்பக்கத்தே இருந்து தெய்வ மணம் வீசிக் கொண்டிருக்கும் பச்சைப் பசுங்கொடியே! வடிவுடை மாணிக்கமே! ஒரு கணமேனும் என் மனக் கவலையாகிய கடலைக் கடந்து நற்குணம் பொருந்தப் பெற்றிலேன். நான் என்ன செய்வேன்! உன் திருவுள்ளக் குறிப்பையும் அறிந்திலேன்." (எ - து.)

(அ - சொ.) பணம் - பாம்பு படம். ஒன்று - பொருந்திய. கணம் - சிறிது நேரம்.

(இ - கு.) ஏது என்பது எது எனக் குறுகியது.

(வி - ரை.) தாருவனத்து முனிவர்கள் தம் தவம் சிவபெருமானால் அழிந்ததை அறிந்து அவரை அழிக்க அபிசார

வேள்வியைச் செய்தனர். அதிலிருந்து பாம்புகள் தோன்றின. அவற்றை இறைவன் மீது ஏவி இறைவனை அழிக்கத் தூண்டினர். இறைவர் முனிவர்களின் அறியாமைக்கு இரக்கம் கொண்டு, அவர்கள் ஏவிய பாம்புகளை நகைகளாகத் தம்மீது அணிந்து கொண்டனர். இதனைக் கந்த புராணம்,

"ஏந்திய பின்னர் வேள்வி எரிஅதற் கிடையே எண்ணில்
பாந்தளங் கொழுந்து தீயோர் பணியினால் சீற்றம் கொண்டு
போந்தன அவற்றை மாயோன் புள்ளினுக் கஞ்சித் தன்பால்
சேர்ந்ததோர் பணிகளோடு செவ்விதில் புனைந்தான்
[எங்கோன்"

என்று கூறுகிறது. இதனையே நம் ஐயா, "பாம்பணி ஒற்றி எம்மான்" என்றனர். இறைவி மரகதவல்லி ஆதலின், "பச்சைக்கொடியே" எனப்பட்டாள். (61)

கருவே தனைஅற என்நெஞ் சகத்தில் களிப்போ டொற்றிக்
குருவே எனும்நின் கணவனும் நீயும் குலவும்அந்தத்
திருவே அருள்செந் திருவே முதல்பணி செய்யத்தந்த
மருவே மருவு மலரே வடிவுடை மாணிக்கமே.

(பொ - ரை.) "செம்மை நிறம் வாய்ந்த இலக்குமி முதலான தெய்வங்கள் உனக்குத் தொண்டு செய்யும் பேற்றை அளித்த மணம் பொருந்தப் பெற்ற மலரே! வடிவுடை மாணிக்கமே! பிறவியாகிய துயரம் ஒழிய என் உள்ளத்தில் மகிழ்ச்சியுடன் திருஒற்றியூர் ஆசாரியனும் உன் கணவனும் நீயும் இணைந்து விளங்கும் அந்தக் காட்சியின் அழகையும் நான் என்றும் கண்டு இன்புறும் வாய்ப்பை அருள்வாயாக" (எ - து.)

(அ - சொ.) செந்திரு - செந்தாமரை மலரில் விளங்கும் செம்மை நிற இலக்குமி. பணி - தொண்டு. மரு - வாசனை. மருவு - பொருந்திய. கரு - பிறப்பு. குலவும் - விளங்கும். திரு - பேர் அழகு.

(இ - கு.) அருள், என்பதில் வியங்கோள் வினைமுற்றின் ககர விகுதி குறைந்து நிற்கிறது. மரு, பண்பு பெயர். மருவு, பெயர் எச்சம்.

(வி - ரை.) இறைவியின் திருவடிகட்குத் தொண்டு செய்வதற்கு அவளது திருவருள் தூண்ட வேண்டி இருத்தலின் "பணி செய்யத் தந்த மலரே" எனப் பட்டாள். அம்மையப்பருடைய காட்சி இம்மைக்கும் மறுமைக்கும் பெருந்துணையாதலின், அக்காட்சியினையே கண்டு களிக்கும் வாய்ப்புத் தமக்கு என்றும் கிடைக்கும் வண்ணம் நம் ஐயா, இறைவரை இப்பாட்டில் வேண்டுகின்றார். இறைவி பரிமள பூங்கொடி ஆதலின், "மருவே மலரும் மருவே" எனப் பட்டாள். அம்மை அப்பர் உருவைக் காண்பதனால் பெண் மயல் நீங்கும் என்பதைச் சோணசைல மாலை "பெண்பயில் உருவமொடு நிறைந்து எனது பெண் மயல் அகற்றும் நாள் உளதோ" என்று கூறுவது கொண்டு தெளிக. இந்த அர்த்த நாரீசுவரர் வடிவைக் கண்டு வணங்கியபின் வேறு சமயம் சார்ந்து வணங்கும் தெய்வம் இல்லை என்பதை அபிராமி அந்தாதி,

"உமையும் உமைஒரு பாகனும் ஏக உருவில்வந்திங்
கெமையும் தமக்கன்பு செய்யவைத் தார்இனி எண்ணுதற்குச்
சமையங் களும்இல்லை ஈன்றெடுப் பாள்ஒரு தாயும்இல்லை
அமையும் அமைஉறு தோளியர் மேல்வைத்த ஆசையுமே"

என்று கூறுகிறது. (62)

**எண்ணிய எண்ணங்கள் எல்லாம் பலிக்க எனக்குன்அருள்**
**பண்ணிய உள்ளங்கொள் உள்ளும் புறம்பும் பரிமளிக்கும்**
**புண்ணிய மல்லிகைப் போதே எழில்ஒற்றிப் பூரணர்பால்**
**மண்ணிய பச்சை மணியே வடிவுடை மாணிக்கமே.**

(பொ - ரை.) "நான் நினைத்த எண்ணங்கள் எல்லாம் நிறைவேறும்படி எனக்கு உன் திருவருள் புரியத் திருஉள்ளம் கொள்ளுகின்ற உள்ளும் வெளியும் மணம் வீசிக் கொண்டிருக்கின்ற புண்ணிய மல்லிகை மலரே! அழகிய திருஒற்றியூரில் குறைவின்றி நிறைவாய் விற்றிருக்கும் இறைவரிடம் மாட்சிமையோடு அமர்ந்திருக்கும் பச்சைமணியே! வடிவுடை மாணிக்கமே!" (எ - து.)

(அ - சொ.) புறம் - வெளி. போது - மலர். எழில் - அழகு. பூரணர் - நிறைவாய் இருப்பவர். மண்ணிய - மாட்சிமையுடன் விளங்கிய.

(இ - கு.) பண்ணிய, செய்யிய என்னும் வாய்பாட்டு வினை எச்சம். பால், ஏழன் உருபு.

(வி - ரை.) மல்லிகை புறத்தே மணம் வீசும். அகத்தே வீசும் ஆற்றல் அதற்கு இலது. ஆனால், இறைவியாம் மல்லிகை அகத்தும் புறத்தும் மணம் வீசுதலின் "புண்ணிய மல்லிகைப் போதே" எனப்பட்டாள். சத்திதான் சிவத்தைச் சாரின், அச்சிவம் எத்தொழிலிலும் வல்லதாக விளங்குதலின் அச்சிவத்திற்கு மாட்சிமை தரும் நிலையில் சத்தி விளங்குகின்றாள். எனவேதான் "பூரணர் பால் மண்ணிய பச்சை மணியே" எனப்பட்டாள். (63)

**தீதுசெய் தாலும்நின் அன்பர்கள் தம்முன் செருக்கிநின்று
வாதுசெய் தாலும்நின் தாள்மறந் தாலும் மதிஇலியேன்
ஏதுசெய் தாலும் பொறுத்தருள் வாய்ஒற்றி யின்இடைப்பூ
மாதுசெய் தாழ்குழல் மானே வடிவுடை மாணிக்கமே.**

(பொ - ரை.) " திருஒற்றியூரில் பூவை அணிவதனால் அழகைச் செய்துகொண்டு நீண்டு தொங்கும் கூந்தலைப் பெற்று விளங்கும் மானே! வடிவுடை மாணிக்கமே! அறிவற்றவனாகிய நான் உன் அன்பர்களுக்கு முன்னே எத்தகைய தீமைகளைச் செய்தாலும், கர்வம்கொண்டு எதிர்த்து நின்று வாதிட்டாலும், உன் திருவடிகளை வணங்க மறந்தாலும், மற்றும் பல குற்றங்களைச் செய்தாலும் என்னைப் பொறுத்து எனக்கு உன் திருவருளைப் புரிவாயாக." (எ - து.)

(அ - சொ.) மாது - அழகு. குழல் - கூந்தல். மதி - அறிவு.

(இ - கு.) ஒற்றியின் இடை, இடை ஏழன் உருபு. மாது, உரிச்சொல். தாழ்குழல், வினைத்தொகை.

(வி - ரை.) இறைவியின் கூந்தல் அழகு ஈற்றடியில் கூறப்பட்டுள்ளது. நம் ஐயா, பற்பல காரணங்களால் தாம் தவறு செய்ய நேர்ந்தாலும் தம்மைப் பொறுக்கும்படி இறைவியை வேண்டிக் கொள்கின்றார். நம் வள்ளலார் தாம் செய்யும் குற்றங்களை இன்னின்ன என்று குறிப்பிடும் போது உர்மை கொடுத்துக் குறிப்பிட்டிருத்தலால் தாம் குற்றம் செய்யார் என்பதைக் குறிப்பாக அறிவித்திருப்பதை ஊன்றிச் சிந்திக்கவும். மக்கள் பிறர்பால் வாதிடுதல் இயல்பு. இதனைத் தாயுமானவர்,

"கல்லாத பேர்களே நல்லவர்கள் நல்லவர்கள்
கற்றும்அறி வில்லாதஎன்
கர்மத்தை என்சொல்வேன் மதியைஎன் சொல்லுவேன்
கைவல்ய ஞானநீதி
நல்லோர் உரைக்கிலோ கன்மம்முக் கியமென்று
நாட்டுவேன் கன்மம்ஒருவன்
நாட்டினாலோ பழைய ஞானம்முக் கியமென்று
நவிலுவேன் வடமொழியிலே
வல்லான் ஒருத்தன்வர வும்திரா விடத்திலே
வந்ததா விவகரிப்பேன்
வல்லதமிழ் அறிஞர்வரின் அங்ஙனே வடமொழியின்
வசனங்கள் சிறிதுபுகல்வேன்
வெல்லாமல் எவரையும் மருட்டிவிட வகைவந்த
வித்தைஎன் முத்திதருமோ
வேதாந்த சித்தாந்த சமரசநல் நிலைபெற்ற
வித்தகச் சித்தர்கணமே"

என்று அறிவித்தல் காண்க. இவ்வாறு வாது செய்தலையே நம் ஐயா, "செருக்கி நின்று வாது செய்தாலும்" என்று அறிவித்துள்ளனர். (64)

**மருந்தினின் றுன்ஒற்றி ஊர்வாழும் நின்தன் மகிழ்நன்முன்னும்**
**திருந்திநின் றோர்புகழ் நின்முன்னும் நல்அருள் தேன்விழைந்தே**
**விருந்தினின் றேன்சற்றும் உள்இரங் காத விதத்தைக்கண்டு**
**வருந்திநின் றேன்இது நன்றோ வடிவுடை மாணிக்கமே.**

(பொ - ரை.) "வடிவுடை மாணிக்கமே! அடியவர்களின் பிறவி நோயைத் தீர்க்க மருந்தாக இருப்பதற்காகவே உன் கணவனும் சிவபெருமான் திருஒற்றியூரில் வீற்றிருக்கின்றான். மெய் அன்பர்கள் அத்தகையவனைத் தாம் தீயவழியினின்று விலகிப் புகழ்ந்துன் முன்நின்று விளங்கிக்கொண்டிருக்கின்ற

னர். நான் எல்லோரும் நினைக்கின்ற உனது நல் அருளாகிய தேனை விரும்பிய புதியவனாக இருக்கின்றேன். இந்நிலையில் நீ சிறிதும் என்மீது மன இரக்கம் காட்டாதிருப்பதைக் கண்டு நான் வருந்தி நின்றேன். இது நல்லதோ?" (எ - து.)

(அ - சொ.) மகிழ்நன் - கணவன். முன்னும் - நினைக்கும். விழைந்து - விரும்பி. விருந்து - புதுமை.

(இ - கு.) மருந்தின், இன் ஐந்தாம் வேற்றுமை ஒப்புப் பொருள். விருந்து, பண்பாகு பெயர்.

(வி - ரை.) விருந்து என்பது புதுமை என்னும் பொருளது. இந்தப் பொருளில் திருவள்ளுவர் "தெய்வம் விருந்து" என்று தொடங்கும் திருக்குறளில் ஆண்டிருத்தலைக் காண்க. ஆகவேதான் விருந்தின் நின்றேன் என்னும் தொடர்க்குப் புதியவனாக இருக்கின்றேன் என்னும் பொருள் கூறப்பட்டது.

**என்போல் குணத்தில் இழிந்தவர் இல்லைஎப் போதும்எங்கும்**
**நின்போல் அருளில் சிறந்தவர் இல்லைஇந் நீர்மையினால்**
**பொன்போலும் நின்அருள் அன்னே எனக்குப் புரிந்திகண்டாய்**
**மன்போல் உயர்ஒற்றி வாழ்வே வடிவுடை மாணிக்கமே.**

(பொ - ரை.) "அரசனைப் போல உயர்வு பெற்றிருக்கின்ற திருஒற்றியூரில் வாழ்கின்ற வாழ்வே! வடிவுடை மாணிக்கமே! தாயே! என்னைப்போல எப்போதும் தீய குணத்தில் இழிந்தவர்கள் எங்கும் இல்லை. உன்னைப்போல அருள் தருபவர்கள் எவரும் இலர். இந்தத் தன்மையினால் பொன்போல் சிறந்த உன் திருவருளை எனக்குத் தருவாயாக." (எ - து.)

(அ - சொ.) மன் - அரசன். நீர்மை - தன்மை.

(இ - கு.) மன் என்பது மன்னன் என்பதன் ஈற்றுக் குறை. பொழுது என்பது போது என ஆயது மரூஉ வழக்

குப் பற்றி என்க. இல்லை, குறிப்பு வினைமுற்று. கண்டாய், முன்னிலை அசைச்சொல்.

(வி - ரை.) மன் என்பதற்குப் பெருமை எனப் பொருள் கொண்டு பெருமை உயர்ந்து இருக்கும் திருஒற்றியூர் என்று பொருள் காணினும் காணலாம். அப்படிப் பொருள் காணும் போது, போல் என்பது உவம உருபாக நிற்காமல் அசைச் சொல்லாகிவிடும். இப்பாடலில் நம் ஐயா, சீவ வர்க்கத்தின் இழிவையும், சிற்சத்தியின் உயர்வையும் எடுத்துக் காட்டி இருப்பதைச் சிந்தித்தல் வேண்டும். (66)

**துன்பே மிகும்இவ் அடியேன் மனத்தில்நின் துய்யஅருள்**
**இன்பே மிகுவதெந் நாளோ எழில்ஒற்றி எந்தைஉயிர்க்**
**கன்பேமெய்த் தொண்டர் அறிவே சிவநெறிக் கன்பிலர்பால்**
**வன்பேமெய்ப் போத வடிவே வடிவுடை மாணிக்கமே.**

(பொ - ரை.) "அழகிய திருஒற்றியூரில் வீற்றிருக்கும் எம் தந்தையாம் இறைவரது உயிர்க்கு அன்பாய் விளங்கு பவளே! தொண்டர்களின் அறிவாய் இருப்பவளே! சைவ நெறியில் அன்பற்றவர்களிடம் கொடியவளாய் இருப்பவளே! உண்மை அறிவாய் விளங்குபவளே! வடிவுடை மாணிக்கமே! துன்பமே மிதியாகக் கொண்டுள்ள இந்த அடிமையினது உள்ளத்தில் உன் தூய்மையான திருவருள் இன்பம் பெருகு வது எந்த நாளோ? தெரியவில்லையே!" (எ - து.)

(அ - சொ.) எழில் - அழகு. எந்தை - எம் தந்தை. துய்ய - சுத்தமான.

(இ - கு.) எந்தை, என் தந்தை என்பதன் மரூஉ. பால், ஏழன் உருபு. துன்பே, இன்பே என்பனவற்றின் ஏகா ரங்கள் தேற்றம். துய்ய, குறிப்புப் பெயர் எச்சம்.

(வி - ரை.) இறைவன் தாயும், தந்தையுமாய் விளங்குபவன். இத்தகையனைத் தந்தை என்று கூறினால் தாயை இணைத்துக் கூறியதாக அமையாது. தாய் என்று குறிப்பிட்டால் தந்தையைச் சேர்த்துப் பாராட்டியதாக அமையாது. ஆகவேதான் தமிழ் மொழியில் தாயையும் தந்தையையும் ஒன்றாக இணைத்துக் குறிக்கும் சொல்லாக "எந்தாய்" என்னும் சொல் அமைந்திருக்கிறது. இந்த நுட்பத்தை நம் குமரகுருபரர் தம் சிதம்பரச் செய்யுட் கோவையில்,

"செவ்வாய்க் கருங்கண்பைந் தோகைக்கும்
வெண்மதிச் சென்னியற்கும்
ஒவ்வாத் திருஉரு ஒன்றே
உளதவ் வுருவினைமற்
றெவ்வாச் சியம்என் றெடுத்திசைப்
பேம்இன் அருள்புலியூர்ப்
பைவாய்ப் பொறிஅர வல்குல்எந்
தாய்என்று பாடுதுமே"

என்று கூறுகிறார். ஆகவே எந்தாய் என்பது எந்தாயே என்றும், என்தந்தையே என்றும் பொருள்படும் நிலையில் அமைந்திருத்தலைக் காண்க.

சிவநெறியே பெருநெறி, திருநெறி, அருள்நெறி, அன்பு நெறி சன்மார்க்க நெறி ஆகவேதான் இதன் பெருமையினை,

"புறச்சமய நெறிநின்றும் அகச்சமயம் புக்குப்
புகல்மிகுதி வழிஉழன்றும் புகலும்ஆச் சிரம
அறத்துறைகள் அவைஅடைந்தும் அருந்தவங்கள் புரிந்தும்
அருங்கலைகள் பலதெரிந்தும் ஆரணங்கள் படித்தும்
சிறப்புடைய புராணங்கள் உணர்ந்தும் வேத
சிரப்பொருளை மிகத்தெளிந்தும் சைவத்
திறத்தடைவர் இதிற்சரியை கிரியா யோகம்
செலுத்தியபின் ஞானத்தால் சிவனடியைச் சேர்வர்!

என்றும்,

"ஓது சமயங்கள் பொருள் உணரும் நூல்கள்
ஒன்றோடொன் றொவ்வாமல் உளபலவும் இவற்றுள்
யாது சமயம்பொருள் நூல் யாதிங் கென்னில்
இதுவாகும் அதுவல்ல தெனும்பிணக்க தின்றி
நீதியினால் இவைஎல்லாம் ஓரிடத்தே காண
நின்றதியா தொருசமயம் அது சமயம்
ஆதலினால் இவைஎல்லாம் அருமறை ஆகமத்தே
அடங்கியிடும் அவைஇரண்டும் அரனடிக்கீழ் அடங்கும்"

என்றும்,

"வேதநூல் சைவநூல்என் றிரண்டே நூல்கள்
வேறுரைக்கும் நூலிவற்றின் விரிந்த நூல்கள்
ஆதிநூல் அநாதிஅமலன் தருநூல் இரண்டும்
ஆரணநூல் பொதுசைவம் அருஞ்சிறப்பு நூலாம்
நீதியினால் உலகர்க்கும் சத்திநிபா தர்க்கும்
நிகழ்த்தியது நீள்மறையின் ஒழிபொருள் வேதாந்தத்
தீதில்பொருள் கொண்டுரைக்கும் நூல்சைவம் பிறநூல்
திகழ்பூர்வம் சிவாகமங்கள் சித்தாந்தம் ஆகும்"

என்றும், அருள்நந்தி சிவம்தம் சிவஞானசித்தியாரில் கூறியுள்ளனர்.

" இயல்பென்றும் திரியாமல் இயமம்ஆதி
எண்குணமும் காட்டிஅன்பால் இன்பம் ஆகிப்
பயன் அருளப் பொருள்கள்பரி வாரம் ஆகிப்
பண்புறவும் சௌபான பட்சம் காட்டி
மயலறுமந் திரம்சிட்சை சோதி டாதி
மற்றங்க நூல்வணங்க மௌன மோலி
அயர்வறச்சென் னியில்வைத்து ராசாங்க கத்தில்
அமர்ந்தது வைதிகசைவம் அழகி தந்தோ"

என்றும்,

" அந்தோஈ ததிசயம்இச் சமயம் போல்இன்
றறிஞர்எல்லாம் நடுவறிய அணிமா ஆதி
வந்தாடித் திரிபவர்க்கும் பேசா மோனம்
வைத்திருந்த மாதவர்க்கும் மற்றும் மற்றும்
இந்திராதி போகநலம் பெற்ற பேர்க்கும்
இதுவன்றித் தாயகம்வே றில்லை இல்லை
சந்தான கற்பகம்போல் அருளைக் காட்டத்
தக்கநெறி இந்நெறியே தான்சன் மார்க்கம்"

என்றும்,

" சன்மார்க்க ஞானமதில் பொருளும் வீறு
சமயசங்கே தப்பொருளும் தான்ஒன் றாகப்
பன்மார்க்க நெறியினிலும் கண்ட தில்லை
பகர்வரிய தில்லைமன்றுள் பார்த்த போதங்
கென்மார்க்கம் இருக்குதெல்லாம் வெளியே என்ன
எச்சமயத் தவர்களும்வந் திறைஞ்சா நிற்பர்
கன்மார்க்க நெஞ்சமுளஎனக்கும் தானே
கண்டஉடன் ஆனந்தம் காண்ட லாகும்"

என்றும்.

"விண்ணவர்இந் திரன்முதலோர் நார தாதி
விளங்குசத்த ருடிகள்கன வீணை வல்லோர்
எண்ணரிய சித்தர்மனு வாதி வேந்தர்
இருக்காதி மறைமுனிவர் எல்லாம் இந்தக்
கண்ணகல்ஞா லம்மதிக்கத் தானே உள்ளம்
கையின்நெல்லிக் கனிபோலக் காட்சி ஆகத்
திண்ணியநல் அறிவால்இச் சமயத் தன்றோ
செப்பரிய சித்திமுத்தி சேர்ந்தார் என்றும்"

'சைவ சமய மேசமயம் சமயா தீதப் பழம்பொருளைக்
கைவந் திடவே மன்றுள்வெளிக் காட்டும் இந்தக் கருத்தை
[விட்டுச்
பொய்வந் துழலும் சமயநெறி புகுத வேண்டா முத்திதரும்
தெய்வச் சபையைக் காண்பதற்குச் சேர வாரும் சகத்தீரே''

என்றும் தாயுமானுர் கூறி உள்ளனர். இத்தகைய சிவ நெறியில் சாராது பாவக் குழியில் வீழ்வாரைப் பற்றி இரக்கம் கொண்ட அருள்நந்தி சிவாசாரியார்,

''சித்தாந்தத் தேசிவன்தன் திருக்கடைக்கண் சேர்த்திச்
சௌனம் ஒன்றி லேசீவன் முத்த ராக
வைத்தாண்டு மலங்கழுவி ஞான வாரி
மடுத்தானந் தம்பொழிந்து வரும்பிறப் பைஅறுத்து
முத்தாந்தப் பாதமலர்க் கீழ்வைப்பன் என்று
மொழிந்திடவும் உலகர்எலாம் மூர்க்கர் ஆகிப்
பித்தாந்தப் பெரும்பிதற்றுப் பிதற்றிப் பாவப்
பெருங்குழியில் வீழ்ந்திடுவர் இதுஎன்ன பிராந்தி''

என்றும் பரிவுடன் கூறுதல் காண்க.

இதுவரையில் எடுத்துக் காட்டிய ஏதுக்களால் சிவ நெறியின் பெருமையினை ஒருவாறு உணர்ந்தோம். இத்தகை பெருமைகட்கு இருப்பிடமான சிவநெறியை மக்கள் சேராமல் இருப்பவர்களைக் காணில் இறைவிக்குச் சினம் பொங்குதலின் ''சிவநெறிக் கன்பிலர்பால் வன்பே'' என்று நம் ஐயர் இறைவி யைக் குறிப்பிட்டனர் என்க. (67)

**சற்றே எனினும்என் நெஞ்சத் துயரம் தவிரவும்நின்
பொற்றே மலர்ப்பதம் போற்றவும் உள்ளம் புரிதிகண்டாய்
சொற்றேர் அறிஞர் புகழ்ஒற்றி மேவும் துணைவர்தம்செம்
மற்றேர் புயத்தணை மானே வடிவுடை மாணிக்கமே.**

(பொ - ரை.) "சொற்களில் தேர்ந்த நல் அறிஞர்கள் புகழ்கின்ற திருஒற்றியூரில் எழுந்தருளி யிருக்கும் பெருமை யில் சிறந்தவர் ஆகிய உன் கணவர் தமது தேர்ந்த திருத் தோளில் அணைக்கின்ற மானே! வடிவுடை மாணிக்கமே! என் உள்ளத்தில் நிறைந்த துன்பம் சிறிதளவாகிலும் நீங்கவும் உன் அழகிய தேன் நிறைந்த மலர் போன்ற திருவடிகளைத் துதிக்கவும் நீ உன் திருவுள்ளத்தில் எண்ணங்கொண்டு அருள் செய்வாயாக!" (எ - து.)

(அ - சொ.) செம்மல் - பெருமையில் சிறந்தவர். தே - தேன். புரிதி - அருள் செய்வாயாக.

(இ - கு.) சொல், கருவி ஆகுபெயர். செம்மல் + தேர்; பொன் + தேன் + மலர் எனப் பிரிக்க. மலர்ப்பதம், உவமத் தொகை. பதம், குறுக்கல் விகாரம். கண்டாய், முன்னிலை அசைச் சொல். புரிதி, வியங்கோள் வினைமுற்று.

(வி - ரை.) சொல் ஈண்டுக் கருவி ஆகு பெயராகி இலக்கண இலக்கியங்களை உணர்த்தி நிற்கிறது. தேர் புயம் என்பதன் கருத்து, தோளின் வன்மையினை குறித்தற்கு ஆகும். இங்குச் சொல்தேர் அறிஞர் என்று நம் ஐயா குறிப்பிட்டிருப்பவர்கள் மூவர் முதலிகளான அப்பர், சம்பந்தர், சுந்தரர், பட்டினத்துப் பிள்ளை ஆவார். ஏனெனில் இவர்கள் திருஒற்றியூரைப் புகழ்ந்து பாடி யுள்ளனர். சம்பந்தர் இத் தலத்தைப் பற்றி ஒரு பதிகமும், அப்பர் ஐந்து பதிகங்களையும், சுந்தரர் இரண்டு பதிகங்களையும் பாடியுள்ளனர்.

திருஞானசம்பந்தர் மாலை மாற்று, திருஎழுக்கூற் றிருக்கை, ஏகபாதம், திருவியமகம் முதலான பல கவிவகை களைப் பாடியுள்ளனர். அப்பர் திருக்குறுந் தொகையாம் கலி விருத்தத்தையும், திருவிருத்தமாம் கட்டளைக் கலித் துறையினையும், திருநேரிசையினையும், திருத்தாண்டகங்களை யும் பாடியுள்ளனர். சுந்தரரின் இலக்கண இலக்கியப்

புலமைக்கு அவர்தம் திருத்தொண்டத் தொகை, திருநாட்டுத் தொகைகளே போதுமான சான்றுகளாகும். "கொடுக்கிலா தானைப் பாரியே என்று கூறினும் கொடுப்பாரிலை" என்று பாடி இருப்பது அவர்தம் சங்கநூல் புலமையையும், "எழுத்தொடு சொல் பொருளாகி" என்று குறிப்பிட்டிருப்பதனால் அவருடைய தொல்காப்பிய அறிவையும் உணரலாம்.

பட்டினத்துப் பிள்ளையார் திருவொற்றியூர்ப் பரமன் மீது "திருஒற்றியூர் ஒருபா ஒருபஃது" என்னும் நூலைப்பாடியுள்ளார். இந்நூலே அன்றிச் சிதம்பரத்தின் மீது கோயில் நான்மணிமாலையையும், சீர்காழி மீது திருக்கழுமல மும்மணிக்கோவையையும், திருவிடை மருதூர் மீது திருவிடை மருதூர் மும்மணிக் கோவையையும், காஞ்சியம் பதியின் மீது திருவேகம்பமுடையார் திருவந்தாதியையும் பாடியுள்ளனர். இங்குக் கூறப்பட்ட பட்டினத்துப் பிள்ளையார் பதினோராம் திருமுறையில் இடம் பெற்றவர். (இவரினும் வேறான ஒரு பட்டினத்தார் உளர். அவர் "இறைவா கச்சி யேகம்பனே" என்று முடியும் பாடல்கள் முதலான பலவற்றைப் பாடியவர்.) ஆகவே இங்குக் குறிப்பிடப்பட்ட மூவர், பட்டினத்துப் பிள்ளையார் ஆகியோர், சொல் (இலக்கண இலக்கிய நூல்) அறிவைப் பெற்றவர்கள். அத்தகையவர்களை "சொல் தேர் அறிஞர்" என்றனர்.

இறைவர் "திருப்புயம்" "நிமிர்ந்த பொன் மேரு வணங்கப் பொலிந்தன, மடங்கலின் வீரம் ஒருங்கத் துரந்தன, சுமந்தொரு கூடைமண் உந்திச் சொரிந்தன, பசுந்தமிழ் மாலை நிரம்பப் புனைந்தன" என்று மதுரைக் கலம்பகமும், "மதுர இசைக்குக் குழைந்தன. நரகரியின் மதத்தைத் தடிந்தன. வெற்பொத்து நின்றன" என்று காசிக்கலம்பகமும், "வெண்சுதை திருநீறு அணிந்தன. கனலிகை அரிந்து கண்பரிதியை முனிந்து தக்கனை முடிதடிந்து மைத்தலையே

வழங்கின. இமய மடமங்கைபோல் புளக இரு கொங்கையில் சுவடுபட இன்பமுற்றறிவே குழைந்தன. தனுவல தனஞ் சயற்கு அமர்பொரு சரம்தரச் சரதம் என வந்து மல்பொரு போர் புரிந்தன. சலசமலர் மண்டபச் சதுமுக அயன் திருத்தலையுடன் இலங்கு முத்தலை வேல் உவந்தன. அனவரதம் அம்பலத்தில் நடனம் இடும் தொழிற்கு அபிநய விதங்கள் பெற்று அழகோடு இருந்தன. அருமறை தெரிந்த சொல்புகலி செந்தமிழ்க் கரசினொடு சுந்தரப் பெருமாள் புகழ்ந்தன" என்று அருணைக் கலம்பகமும்,

"அந்தியொடு மாறுபட்டுத் திகழ்ந்தன
அன்றுதமிழ் மூவர்வைப்பச் சுமந்தன
புந்தி மகிழ்மாது கட்டக் குழைந்தன
புண்டரிகமாலை உற்றுக் கிடந்தன
நந்து தலைமாலை இட்டுச் சிறந்தன
நன்றி மறைநாலும் அற்பின் புகழ்ந்தன
விந்த மகமேரு ஒப்பக் கிளர்ந்தன
வெங்கைபுரி நாதர் வெற்றிப் புயங்களே"

என்று திருவெங்கைக் கலம்பகமும் இறைவனுடைய புயங்களைப் புகழ்ந்து போற்றுதல் காண்க. இத்தகைய காரணங்களால்தாம் நம் ஐயா, "செம்மல்தேர் புயம்" என்று புயத்தைப் போற்றிப் பாடினார். (68)

**சந்தோட மாப்பிறர் எல்லாம் இருக்கவும் சஞ்சலத்தால்**
**அந்தோ ஒருதமி யேன்மட்டும் வாடல் அருட்கழகோ**
**நந்தோடம் நீக்கிய நங்காய் எனத்திரு நான்முகன்மால்**
**வந்தோதும் ஒற்றி மயிலே வடிவுடை மாணிக்கமே.**

(பொ - ரை.) "எங்களுடைய குற்றங்களை எல்லாம் நீக்கிய தாயே!" என்று பிரமன் மகாவிட்டுணு முதலான தேவர்கள் வந்து துதித்துப் போற்றும் திருவொற்றியூரில் அமர்ந்திருக்கும்

மயிலே! வடிவுடை மாணிக்கமே! மற்றவர்கள் எல்லாம் மகிழ்வுடன் இருக்க ஐயோ! தன்னந் தனியனாகிய நான் மட்டும் துயரால் வாடி வதங்குவது உன் திருவருட்கு அழகாகுமா?" (எ - து.)

(அ - சொ.) தோடம் - குற்றம். திரு - அழகிய. நான்முகன் - பிரமன். மால் - திருமால். சஞ்சலம் - துயரம். தமியேன் - தனியனாகிய நான்.

(இ - கு.) நங்காய், என்பது விகுதிபெறாத பெண்பால் சிறப்புப் பெயர். நான்முகன், மால், உம்மைத் தொகை. நான்கு + முகன் எனப்பிரிக்க. சந்தோடமாக என்பது சந்தோடமா என நின்றது தொகுத்தல் விகாரம் பற்றி என்க. அந்தோ, இரக்கக் குறிப்பைக் காட்டும் ஓர் இடைச்சொல். வாடல், தொழிற்பெயர்.

(வி - ரை.) இறைவி திருமால், பிரமன் முதலான தேவர்களால் போற்றப்படுதலையும் அவர்கட்கு அவள் திருவருள் பாலித்ததையும் முன் பாடல்களில் விளக்கப் பட்டன. ஆண்டுக் காண்க.

"கடலே அனைய ஆனந்தம் கண்டார்
எல்லாம் கவர்ந்துண்ண
இடரே பெருக்கி ஏசற்றங் கிருத்தல்
அழகோ அடிநாயேன்
உடையாய் நீயே அருளுதிஎன் றுணர்த்தா
தொழிந்தே கழிந்தொழிந்தேன்
சுடரார் அருளால் இருள் நீங்கச் சோதீ
இனித்தான் துணியாயே"

என்று மணிமொழியார் கருத்தினை ஒட்டி நம் வள்ளலார் இப் பாட்டைப் பாடியுள்ளார். (69)

**அடியேன் மிசைஎப் பிழைஇருந் தாலும் அவைபொறுத்துச்**
**செடியேதம் நீக்கிநல் சீர்அருள் வாய்திகழ் தெய்வமறைக்**
**கொடியே மரகதக் கொம்பே எழில்ஒற்றிக் கோமளமே**
**வடியேர் அயில்விழி மானே வடிவுடை மாணிக்கமே.**

(பொ - ரை.) "தெய்வீகம் விளங்கும் வேதத்தின் பொருளாய் விளங்கும் கொடியே! பச்சை நிறமான மரகதக் கொம்பே! அழகிய திருஒற்றியூரில் வாழும் இளமைச் செல்வியே! கூர்மையான அழகிய வேலைப் போன்ற கண் இணையுடைய மானே! வடிவுடை மாணிக்கமே! அடியவனாகிய என்னிடம் எவ்வளவு தவறுகள் இருந்தாலும், அவற்றை எல்லாம் பொறுத்து என் பாவங்களையும், தீமைகளையும், குற்றங்களையும் நீக்கி உன் நல் சீரை அடியேனுக்கு அருள் செய்வாயாக." (எ - து.)

(அ - சொ.) மறை - வேதம். கோமளம் - இளமை. வடி - கூர்மை. ஏர் - அழகு. அயில் - வேல். அடியேன் மிசை - அடியேனிடம். செடி - தீமை. ஏதம் - குற்றம்.

(இ - கு.) வடி, உரிச்சொல். அயில்விழி, உவமத்தொகை. அடியேன்மிசை, மிசை ஏழன் உருபு. செடி ஏதம், உம்மைத்தொகை.

(வி - ரை.) இறைவி வேதப் பொருளாய் விளங்குதலின் "மறைக் கொடியே" எனப்பட்டாள். அகிலாண்ட கோடிகளை ஈன்றெடுத்தும் கன்னித் தன்மை குறையாது இருத்தலின் அவள் "கோமளமே" எனப்பட்டாள். மாதர்களின் விழிகட்கு வேலை உவமை கூறுதல் புலவர் மரபு ஆதலின், "அயில் விழி மானே" எனப்பட்டாள். குற்றம் செய்வது ஆன்மாக்களின் இயல்பாதலின், அக் குற்றங்களையும் குணமாகக் கொண்டு, அவ் வுயிர்களைக் காப்பது இறைவியின்

பண்பு. எனவே நம் ஐயா, "பிழை இருந்தாலும் அவை பொறுத்துச் செடி ஏதம் நீக்கி நல்சீர் அருள்வாய்" என்று வேண்டுவாராயினர். (70)

**கண்ணப்பன் ஏத்தும் நல் காளத்தி யார்மங் கலம்கொள் ஒற்றி**
**நண்ணப்பர் வேண்டும் நலமே பரானந்த நல்நறவே**
**எண்ணப் படாஎழில் ஓவிய மேஎமை ஏன்றுகொண்ட**
**வண்ணப் பசும்பொன் வடிவே வடிவுடை மாணிக்கமே.**

(பொ - ரை.) "கண்ணப்ப நாயனார் போற்றி வழிபடும் திருக்காளத்தியப்பரும், உன்னைத் திருமணம் கொண்டு திருஒற்றியூரில் வந்து பொலிவுற்று விளங்கும் எம் தந்தையும் ஆகிய மாணிக்கத் தியாகர் விரும்பும் நலமே! மேலான மோட்ச இன்பத்தைத் தருகின்ற நல்ல தேனே! மனத்தாலும் எண்ணிப் புகல இயலாத அவ்வளவு பேரழகு வாய்ந்த சித்திரமே! எங்களைப் போன்ற அடியவர்கள் ஏற்றுக்கொண்ட பல நிறமாகத் திகழும் பசும்பொன் வடிவே! வடிவுடை மாணிக்கமே!" (எ - து.)

(அ - சொ.) பரம் - மேலான. ஏத்தும் - போற்றும். மங்கலம் - திருமணம். நண் - பொருந்தும். அப்பர் - தந்தை. நறவு - தேன். எழில் - அழகு. ஓவியம் - சித்திரம். ஏன்று - ஏற்று. வண்ணம் - பல்வேறு நிறம்.

(இ - கு.) பர்+ஆனந்தம் எனப் பிரிக்க.

(வி - ரை.) காளத்தி அப்பர் நக்கீரர், அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகியோரால் போற்றப்பட்ட பெருமைக்குரியராயினும், கண்ணப்பரால் போற்றப்பட்டிருப்பதே ஒரு தனிச் சிறப்பாகும். கண்ணப்பர் காளத்தி அப்பரை ஏத்திய திறத்தே நக்கீரர்,

"கானத் தலைவன் தன்மை
எய்து துணித்திடும் துணித்த விடக்கினை
விறகினில் கடைந்த வெங்கனல் காய்ச்சி
நறுவிய இறைச்சி நல்லது சுவைகண்டு
அண்ணாற் கமிழ்தென் றதுவே றைமத்துத்
தண்ணறும் சுனைநீர் தன் வாய்க் குடத்தால்
மஞ்சனம் ஆக முகந்து மலரெனக்
குஞ்சியில் துவர்க்குலை சொருகி,
திருக்கா ளத்தி எய்திய சிவற்கு
வழிபட,
பூசனை தன்னைப் புக்கொரு காலில்
தொடுசெருப் படியால் நீக்கி வாயில்
இடுபுனல் மேனியில் ஆட்டித்
தன்தலைத் தங்கிய துவர்ப்பூ ஏற்றி இறைச்சியில்
பெரிதும் போனகம் படைத்துப் பிரானைக்
கண்டுகண் டுள்ளம் கசிந்து காதலில்
கொண்டதோர் கூத்துமுன் ஆடிக் குரைகழல்
அன்பொடு இறுக இறைஞ்சி"

என்று தம் திருக்கண்ணப்ப தேவர் திருமறத்தில் புகழ்ந்து போற்றியுள்ளனர். இவரைப் போலவே கல்லாடனாரும்,

"கணையில் வீழ்த்துக் கருமா அறுத்துக்
கோலின் ஏற்றிக் கொழுந்தீக் காய்ச்சி
நாவில் வைத்த நாட்போ னகமும்
தன்தலைச் செருகிய தண்பள் ளித் தாமமும்
வாய்க்கலசத்து மஞ்சன நீரும்
கொண்டு"

வழிப்பட்டு ஏத்தினர் என்று தாம் பாடிய திருக்கண்ணப்பர் திருமறத்தில் போற்றியுள்ளனர்.

மாணிக்க வாசகர், "கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்" என்று கூறியதோடு நில்லாமல் அவர் இறைவரை ஏத்தியதை,

"பொருட்பற்றிச் செய்கின்ற பூசனைகள் போல்விளங்கச்
செருப்புற்ற சீரடி வாய்க்கலசம் ஊன் அமுதம்
விருப்புற்று வேடர் சேடறிய மெய்குளிர்ந்தங்
அருட்பெற்று நின்றவா தோள்நோக்கம் ஆடாமோ"

என்றும் அறிவித்துள்ளனர்.

திருஞானசம்பந்தர் "வாய் கலசமாக வழிபாடு செய்யும் வேடன்" என்றும், அப்பர், "கையதோர் இறைச்சிப்பாரம் தோல்பெரும் செருப்புத் தொட்டுத் தூயவாய்க் கலசம் ஆட்டி" என்றும், கண்ணப்பர் காளத்தியாரை ஏத்திய நிலையைப் புகழ்ந்து போற்றியுள்ளனர்.

மேலும் சைவசித்தாந்த சாத்திர நூல்களில் ஒன்றாகிய திருக்களிற்றுப் படியாரும்,

"கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை என்றமையால்
கண்ணப்பன் ஒப்பதோர் அன்பதனைக்—கண்ணப்பர்
தாமறிதல் காளத்தி யார்அறிதல் அல்லதுமற்
றியார்அறியும் அன்பன் றது"

என்று கண்ணப்பருக்கும் காளத்தியாருக்கும் இருக்கும் அன்புடைமையினைப் போற்றுகிறது. இன்னோரன்ன காரணங்களால் "கண்ணப்பன் ஏத்தும் நல் காளத்தியார்" என்று நம் ஐயா போற்றியுள்ளனர். அவ்வத் தலத்துக்கு ஏற்ப இறைவர் திருப்பெயர் கொண்டு திகழ்கின்றாரே அன்றி, எல்லாத் தலங்களிலும் இருப்பவர் ஒரே சிவபெருமான்தான். ஆகவேதான், "காளத்தியார் மங்கலம்கொள் ஒற்றிநண் அப்பர்" என்று இங்குக் கூறப்பட்டனர்.

திருக்காளத்தி தலம் பஞ்சபூத தலங்களுள் ஒன்று. இறைவர் இங்குக் காற்று வடிவாய் இருக்கின்றார். இந்த உண்மையினை இத்தலத்து மூலட்டானத்தில் உள்ள சிவலிங்கத் திருமேனிக்கு அருகில் ஒரு விளக்குமட்டும் எந்த நேரமும் அசைந்துகொண்டு இருப்பதனால் உணரலாம். இத்தலம் தென் கயிலாயம் என்று கூறப்படுகிறது. இது சீபுரம் என்றும், மும்முடிச் சோழபுரம் என்றும் கூறப்படும். இதனை விராட் புருடனது ஆருதாரத் தலங்களில் விசுத்தித் தலமாகும் என்றும் கூறுவர்.

இத்தலம் ரேணுகுண்டா கூடூர் இரயில் வழியில் இடையில் காளாஸ்திரி என்னும் பெயரில் ஓர் இரயில் நிலையமாக இருக்கிறது. இங்கிருந்து இரண்டுகல் நடந்தால் இத் தலத்தை அடையலாம். பேருந்தி (பஸ்) வண்டிகளின் மூலமும் நேரே இத்தலத்தை அடையலாம்.

சிலந்தி (சீ) பாம்பு (காளம்) யானை (அத்தி) ஆகிய மூன்றும் இத்தலத்துப் பெருமானைப் பூசித்துப் பேறு பெற்றமையின் இத்தலம் சீகாளத்தி என்னும் பெயரைப் பெற்றது. இந்த மூன்றன் வடிவங்களும் சிவலிங்கத் திருமேனியில் விளங்குவதை இன்றும் காணலாம். இத்தலத்துச் சிவலிங்கம் சுயம்பு மூர்த்தம். இதன் நிறம் வெண்மை. இம் மூர்த்திக்குப் பச்சைக் கற்பூரம் கலந்த நீர்மட்டும்தான் திருமுழுக்குக்கு (அபிடேகத்திற்கு) உரியது.

இத்தலத்துப் பெருமானைத் திருமால், பிரமன், இலக்குமி, சரசுவதி, உரோமேசர், வசிட்டர், தேவ இருடிகள், ஆதி சேடன், யட்சர், அகத்தியர், திக்பாலகர், யோகினிகள். முசுகுந்தன், இருகன்னியர், கண்ணப்பர், நக்கீரர், சிவகோசரியார், சங்கம வேந்தன் முதலியோர் வழிபட்டு நற்பேறு பெற்றுள்ளனர். இங்குப் பொன்முகலி என்னும் சுவர்ணமுகி ஆறு ஓடுகிறது. இவ்வாறு வடக்கு நோக்கிப் பாய்கிறது,

இங்குத் தனியாக ஒரு பெரிய கோபுரம் காணப்படும். இதனைக் கிருட்டினதேவராயர் கட்டினார் என்பர். இதற்கும் கோவிலுக்கும் தொடர்பு இல்லாமல் இருக்கும். இது ஆற்றிற்குப் போகும் வழியில் அமைந்துளது.

இத்தலம் மலைத் தொடர்புடையது. இதன் சுற்றளவு பதினெட்டுக் கல். இந்தப் பதினெட்டுக் கல் தொலைவையும் சுவாமி சிவராத்திரியின் போதும், மாட்டுப் பொங்கலின் போதும் சுற்றிவருகிறார். அப்போதுதான் மக்களும் மலையைச் சுற்றி வருவர். இறைவர் இவ்விரு நாட்களில் சுற்றி வருவதன் நோக்கம் மலையில் வாழும் முனிவர்கட்கும் ஏனையோர்க்கும் காட்சி அளிப்பதற்காகவே ஆகும்.

வைகாசியில் வசந்தோற்சவம் அமைதியாக நடை பெறும். அந்நாள்களில் காளத்தியப்பர் அலங்காரத்துடன் ஆற்றில் இறங்கி அன்பர்கட்குக் காட்சி அளிப்பர். இங்கு முப்பது அடி ஆழத்தில் பாதாள விக்னேசுவரர் என்னும் பெயரில் பிள்ளையார் காட்சி அளிக்கின்றார். உள்ளே இறங்கப் படிகள் உண்டு.

காளத்தியப்பருக்குத் தும்மைப் பூவைச் சூட்டுவது சிறப்பாகும். காளத்தியப்பருக்குப் பக்கத்திலேயே கண்ணப்ப நாயனார் இருந்துகொண்டு காட்சி அளிக்கின்றார். பிராமணராகிய திருஞானசம்பந்தர் கண்ணப்பரைக் கண்டு வணங்கினமையால்தான் காளத்தியப்பரை வணங்கிய பேறு பெற்றார் என்பதைச் சேக்கிழார், “கும்பிட்ட பயன் காண்பார் போல் மெய்வேடர் பெருமானைக் கண்டு வீழ்ந்தார்” என்று அறிவித்துள்ளார்.

கண்ணப்பர் திருவுருவைக் கருவறையில் (மூலட்டானத்தில்) கண்டு களிப்பதோடின்றி வெளியில் கோவிலைச் சுற்றி வரும்போதும், கடைவீதியிலும், மலையின் உச்சியிலும் கண்டு

களிக்கலாம். மலையின் உச்சியில் ஒரு சிவ இலிங்கமும் உளது. இந்த இலிங்கத்தைத்தான் கண்ணப்பர் வழிபட்டார் என்று கூறுவர். மேலே அடர்ந்த காடும் ஒரு குளமும் உள்ளன.

இத்தலத்து இறைவியின் திருப்பெயர் ஞானப் பூங்கோதை என்பது. இப் பெயரை நம் அப்பர் பெருமானும், "ஞானப்பூங்கோதையாள் பாகத்தான்" என்று தம் திருத்தாண்டகத்தில் குறித்துள்ளார். இவ்வம்மையார்க்கு ஒவ்வொரு வெள்ளிக்கிழமை தோறும் பொன்கவசம் சாத்தப் படும். அக்காட்சி கண்டு இன்புறுதற்கு உரியதாகும்.

இத்தலத்துக்கு கல்லாலமரமும், (விழுது இறங்காத ஆலமரம்) வில்வ மரமும் தல விருட்சங்கள் ஆகும். விநாயகர் ஐஞ்சந்தி விநாயகர். இத்தலத்துத் தீர்த்தங்கள் பொன்முகலி ஆறு, சூர்யதீர்த்தம், பிரம்ம தீர்த்தம் என்பன.

இத்தலத்துச் சிவபெருமான் காளத்தீசுவரர், குடுமித் தேவர் என்று அழைக்கப்படுவார். காளத்தீசுவரர் என்னும் பெயர்க்குரிய காரணம் முன்பே கூறப்பட்டது, குடுமித் தேவர் என்பதற்குரிய காரணம் இறைவர் மலையின் உச்சியில் (குடுமி - மலை உச்சி) இருப்பதனால் ஆகும். இதற்கு மற்றும் ஒரு காரணமும் கர்ணபரம்பரையாக (செவிவழியாக)க் கூறப்படுகிறது.

அரசன் தினந்தோறும் காளத்தியப்பருக்கு மலர் மாலையினை அனுப்பி அதனைப் பெருமானுக்குச் சாத்தி அடுத்த நாள் அனுப்பிவைக்கும்படி ஏற்பாடு செய்திருந் தான். அம்மாலையினை அரசி தன் கூந்தலில் சூடி மகிழ் வாள். ஆனால், கோவில் அர்ச்சகர் அதனைத் தன் காதற் கிழத்தி சூட அளித்து அடுத்தநாள் அதனை அரசனுக்கு அனுப்பிவைப்பது வழக்கம். ஒருநாள் அம்மாலையில் ஒரு மயிர் இருக்கக்கண்ட அரசன், அருச்சகரை அழைத்துக் காரணம்

விறைவ அர்ச்சகர் அஞ்சிப் பொய்யாகக் "காளத்தி அப்பருக்கு மயிர்முடி இருத்தலின் அது ஒருவேளை இதில் சேர்ந்திருக்க லாம்" என்று கூறினர். அரசன், "அப்படியானல் அம் முடியை நான் நாளை பார்க்க வருகின்றேன்" என்று கூறினன். அர்ச்சகர் காளத்தியப்பரை அணுகித் தம்மை எவ்வாறேனும் காப்பாற்ற வேண்டுமென்று முறையிட, இறைவர் அவ் வர்ச்சகர் பொருட்டுக் குடுமியுடன் இருந்தார். அரசர் வந்த போது அர்ச்சகர் குடுமியைக் காட்ட, அரசனும் வியந்து வணங்கிச் சென்ருன். இக் காரணத்தினல் இறைவர்க்குக் குடுமித் தேவர் என்னும் பெயர் வந்தது என்பர்.

இங்கு மணிகண்டேசுரர் ஆலயமும் உண்டு. இதில் திருமால் கோவிலும் உண்டு. மலை ஓரமாக ஆறு கல் தூரம் சென்ருல் வெயிலிங்கக் கோனு (ஆயிரம் லிங்கம் உள்ள கோவில்)வையும் கண்டு இன்புறலாம். இதனை அடர்ந்த காட்டைக் கடந்து தரிசிக்க வேண்டும்.

திருக்காளத்தியில் இரண்டு குன்றுகளின்மீது துர்க்கை கோயிலும், குமரன் கோயிலும் இருப்பதைக் கண்டு வணங்க லாம். இவ்விரு குன்றுகளையும் அடைய நல்ல படிகள் உண்டு.

திருக்காளத்தி மலைக்காட்டில் தீப மரங்கள் உண்டு. இந்த உண்மை "சோதிமா மரங்களால் எந்தையால் திருக் காளத்தி மலையினில் இரவொன்றில்லை" என்று சேக்கிழார் கூறுதலால் அறியவருகிறது.

இத் தலத்தில் பல கல்வெட்டுகள் உண்டு. அவற்றின் மூலம் மூலட்டானத்து இறைவர் காளத்தி உடைய நாயனர், திருக்காளத்திச் சிவனர், ஆளுடையார், தென் கயிலாய முடையார் என்னும் பெயர்களையும் உடையவர் என்பது

தெரிகிறது. வீதி உலா வரும் உற்சவமூர்த்தி சோதி விடங்கர் என்று அழைக்கப்பட்டதாகத் தெரிகிறது. இது போது மாசி மாதத்தில் நடக்கும் விழா கல்வெட்டின் மூலம் வைகாசியில் நடந்ததாகத் தெரியவருகிறது.

திருக்காளத்தி யுடையார் கோயில் மலைமேல் ஒரு மடம் இருக்கிறது. இதில் அடியார்கட்கு அமுது அளிக்க மான்யங்கள் விடப்பட்டன என்பது தெரிகிறது. தியாகமேகன் மடம், கூற்றுதைத்தான் சோமதேவர் மடம் எனும் பெயரிலும் மடங்கள் இருந்திருக்கின்றன. வீரநரசிங்கதேவன் நந்தவனம், ஆலாலசுந்தரர் (சுந்தரமூர்த்தி நாயனர்) நந்தவனம், திருக்கண்ணப்பர் தோட்டம் ஆகியவையும் இங்கு இருந்தன.

இராஜேந்திர சோழன் காலத்தில் இத் தலத்தில் கார்த்திகை தீப விழா, பெருஞ் சிறப்புடன் நடந்ததாக அறிய வருகிறது. இத்தலத்து முகத்தல் அளவைக் கருவிக்குக் காளத்தியுடையான் மரக்கால் என்பது பெயர். மேலே கூறப்பட்ட செய்திகள் அனைத்தும் திருக்காளத்தித் தலத்தில் கிடைத்த தமிழ்க் கல்வெட்டுகளால் அறியப்பட்டவை. இதை உற்று நோக்கும்போது திருக்காளத்தியில் முழுக்க முழுக்கத் தமிழ் மொழியே பேசப்பட்டு வந்ததை நன்கு உறுதிப்படுத்தலாம்.

இத் தலத்தின் மீது திருஞானசம்பந்தர் இரண்டு பதிகங்களையும், அப்பர் ஒரு திருத்தாண்டகத்தையும், ஒரு பதிகத்தையும் பாடியுள்ளனர். நக்கீரர் பாடிய கைலை பாதி காளத்தி பாதி என்னும் நூலும் இத் தலத்தைச் சார்ந்ததே. இந் நூலைப் பாடியே நக்கீரர் தம் குட்ட நோயை நீக்கிக் கொண்டனர். இத் தலத்திற்கு இரண்டு புராணங்கள் உண்டு. ஒன்று வீரைநகர் ஆனந்தக் கூத்தரால் பாடப்பட்டது. அது திருக்காளத்திப் புராணம் எனப்படும். மற்

ளுன்று சீகாளத்திப் புராணம் என்பது. இதனைக் கருணைப் பிரகாசர், சிவப்பிரகாசர், வேலப்ப தேசிகர் ஆகிய மூவர்களும் பாடியுள்ளனர். இந்நூலில் சிவப்பிரகாசர் பாடியுள்ள நக்கீரர் சருக்கமும், திருக்கண்ணப்பர் சருக்கமும் சிறந்த பகுதிகளாகும்.

சேனைக் கவிராச பண்டிதர் திருக்காளத்தி நாதர்மீது ஓர் உலாப் பிரபந்தத்தையும் பாடியுள்ளனர்.

இவ்வாருன பெருஞ் சிறப்புக்குக் காரணமான திருத்தலம் ஆதலின் "நல் காளத்தி" என்று நம் ஐயா குறிப்பிட்டுள்ளார்.

இறைவி யாமளை, பிங்களை, நீலி, செய்யாள், வெளியாள் என்று போற்றப்படுவாள். இவ்வாறு போற்றப்படுதற்குக் காரணம் முறையே பச்சை நிறமும், பொன்நிறமும், கரிய நிறமும், செந்நிறமும், வெண்ணிறமும், அவளுக்கு உள்ளமையால் என்க. "பரிமளை யாமளைப் பைங்கிளியே" என்றும் "பிங்கலை நீலி செய்யாள் வெளியாள் பசும்பெண் கொடியே" என்றும் அபிராமி அந்தாதி போற்றுதல் காண்க. குமரகுருபரர், "மாணிக்கவல்லி, மரகதவல்லி" என்று தேவியைக் குறிப்பிட்டுள்ளனர். இன்னோர் அன்ன வண்ணவடிவு இறைவிக்கு இருத்தலினுல்தான் "வண்ணப் பசும் பொன் வடிவே" என்று நம் ஐயாவால் போற்றப்பட்டனள். (71)

**கற்பே விகற்பம் கடியும்ஒன் ருேளங்கள் கண்டிறைந்த**
**பொற்பேமெய்த் தொண்டர்தம் புண்ணியமேஅருள் போதஇன்பே**
**சொற்பேர் அறிவுள் சுகப்பொரு ளேமெய்ச் சுயஞ்சுடரே**
**மற்பேர் பெறும்ஒற்றி மானே வடிவுடை மாணிக்கமே.**

((பொ - ரை.) "கற்புக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்குபவளே! மனக் கோணல்களை எல்லாம் ஒழிக்கும்

ஒப்பற்ற தேவியே! எங்களுடைய கண்களுக்குக் காட்சிப் பொருளாய் நிறைந்து விளங்கும் தாயே! உண்மைத் தொண்டர்களின் புண்ணியமாய்த் திகழ்பவளே! அருளும், ஞானமும் வடிவாய்க் கொண்ட இன்பமே! சொல்லப்படுகின்ற பேரறிவுக்குள் இன்பப் பொருளாய் இருப்பவளே! உண்மையான இயற்கை ஒளியே! பெருமையும் பேரும் பெற்று ஒளிறும் திருஒற்றியூரில் வாழும் மானே! வடிவுடை மாணிக்கமே! (எ - து.)

(அ - சொ.) விகற்பம் - மனக் கோணல். பொற்பு - அழகு. போதம் - ஞானம். சுயஞ்சுடர் - இயற்கை ஒளி. மல் - பெருமை. கடியும் - ஒழிக்கும்.

(இ - கு.) மல்பேர், உம்மைத் தொகை.

(வி - ரை.) இறைவி ஒருத்தியே கற்புப் பண்புக்குரியவள். இதனைச் சிவப்பிரகாச சுவாமிகள்,

"சோதிப் பதிஅன்றி வேறொரு தெய்வம் தொழுதற்கில்லை
ஓதில் பிறர்என் அச்சம் உறுமல் உயிர்கள்எல்லாம்
நீதிப் புதல்வர்கள் ஆயினர் ஆதலின் நீ கொள்கற்பது
பேதிப் பதன்றுகண் டாய்குன்றை வாழும் பெரியம்மையே"

என்று அறிவித்துள்ளனர். எனவேதான், 'கற்பே' என்று நம் ஐயா விளித்துள்ளனர்.

மனம் ஒரு குரங்கு. ஆகவே அதன் குறும்பைக் குறிக்கும் கருத்தில்தான் 'விகற்பம்' என்று கூறப்பட்டது. இந்த மனத்தின் கோணல் குறும்பு, இறைவியின் திருவருள் பெற்றவர்முன் யாதும் செய்ய இயலாமல் ஓட்டம் எடுக்கும். ஆகவேதான் "விகற்பம் கடியும் ஒன்றே" எனப்பட்டது.

மிகவே துயர்க்கடல் வீழ்ந்தேனை நீகை விடுதல்அருள்
தகவே எனக்கும்நல் தாயே அகில சராசரமும்
சுகவேலை மூழ்கத் திருஒற்றி ஊர் இடம் துன்னிப்பெற்ற
மகவே எனப்புரக் கின்றோய் வடிவுடை மாணிக்கமே.

(பொ - ரை.) "எனக்கு நல் தாயாக விளங்குபவளே! உலகில் உள்ள அசையாப் பொருள்களையும் அசையும் பொருள்களையும் இன்பக் கடலில் மூழ்கும் பொருட்டுத் திருஒற்றியூரினை இடமாகக் கொண்டு அணுகிவந்து அவற்றைப் பெற்ற பிள்ளைகளைப் போலக் காத்து வருகின்ற தாயே! வடிவுடை மாணிக்கமே! மிகுந்த துன்பக் கடலில் வீழ்ந்து வருந்துகின்ற என்னை நீ கைவிடுதல் உன் திருவருட்குத் தகுதியுடையதாகுமோ?" (எ - து.)

(அ - சொ.) அகிலம் - உலகம். சரம் - அசையும் பொருள்கள். அசரம் - அசையாப் பொருள்கள். வேலை - கடல். துன்னி - நெருங்கிவந்து. மகவு - பிள்ளை. புரக்கின்றோய் - காப்பாற்றுபவளே. தகவே - தகுதியுடையதாகுமா?

(இ - கு.) சரம் + அசரம் எனப் பிரிக்க. வேலை மூழ்க. ஏழன் தொகை. மகவே, ஏகாரம் பிரிநிலை. மிகவே. ஏகாரம் அசை. தகவே, ஏகாரம் வினா.

(வி - ரை.) இறைவி எங்கு இருந்தாலும் அந்தந்த இடத்திலிருந்து உயிர்களைத் தன் பிள்ளைகளைப் போலக் காத்து வருகின்றாள் என்றாலும், நம் ஐயா திருஒற்றியூர்த் தேவியைப் போற்றுகின்றார் ஆதலின், "திருஒற்றியூர் இடம் துன்னிப்பெற்ற மகவே எனப் புரக்கின்றோய்" என்றார். அசையும் பொருள்கள் ஆவன மக்கள், தேவர், விலங்கு, பறவை, நீர்வாழ்வன என்பன. அசையாப் பொருள்கள் ஆவன மலை, மரம், கட்டடம் முதலியன. "நீ எல்லா

உயிர்களையும் பெற்றாய். அவைகள் எல்லாம் இன்பக் கடலில் மூழ்கும்படி திருவருள் புரிகின்றாய். நானும் நீ படைத்த பொருள்களில் ஒருவன். அப்படி இருக்க நான் மட்டும் இன்பக் கடலில் திளைக்காமல் மிகுதியும் துன்பக் கடலில் மூழ்கி வருந்துதல் உன் திருவருட்குப் பெருமை தருமா? என்று உரிமையுடன் நம் ஐயா தேவியை வினவுகின்றார். (73)

**வேதங்கள் ஆய்ஒற்றி மேவும் சிவத்தின் வினைவருள் ஆய்ப்**
**பூதங்கள் ஆய்ப்பொறி ஆய்அப் புலன்ஆகிப் புகல்கரண**
**பேதங்கள் ஆய்உயிர் ஆகிய நின்னைஇப் பேதைஎன்வாய்**
**வாதங்க ளால்அறி வேனோ வடிவுடை மாணிக்கமே.**

(பொ - ரை.) "வடிவுடை மாணிக்கமே! நீ வேதங்களாய், திருஒற்றியூரில் விளங்கும் சிவபெருமானால் உண்டாக்கப்பட்ட திருவருளாய், பூதங்களாய், பொறிகளாய், புலன்களாய் கூறப்படுகின்ற அந்தக்கரணங்களின் பலவடிவாய், உயிர்களாய் விளங்கும் உன்னை இந்த அறிவிலியாகிய நான் என் வாயிலிருந்து வருகின்ற தர்க்க வாதத்திற்கு உரிய மொழிகளால் அறிந்துகொள்ள முடியுமோ?" (எ - து.)

(அ - சொ.) மேவும் - பொருந்தியிருக்கும். புகல் - சொல்லப்படுகின்ற. பேதங்கள் - வேறுபாடுகள். பேதை - அறிவீனன். வாதம் - தருக்கம்.

(இ - கு.) புகல் காரணம், வினைத்தொகை. அறிவேனோ, ஓகாரம் எதிர்மறைப் பொருளது.

(வி - ரை.) இறைவி வேதம், அருள், பூதம், புலன், பொறி, கரணம் ஆகிய வடிவுடையவளாய் உள்ளாள் என்பதை நம் ஐயா இப்பாட்டில் உணர்த்துகின்றார். வேதங்கள் ஆவன அறம், பொருள், இன்பம், வீடு என்னும்

பொருள்களை உணர்த்தும் நூல்கள். வடவர் கூறுகின்ற இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்னும் நான்கு வேதங்கள் என்று பொருள் காணினும் பொருத்தமே. பூதங்களாவன மண், நீர், தீ, காற்று, ஆகாயம் என்பன. பொறிகளாவன மெய் (உடம்பு) வாய், கண், மூக்கு, செவி (காது) என்பன. புலன்கள் ஆவன ஊறு (தொடு உணர்ச்சி) சுவை, பார்வை, மோப்பம், கேட்டல் ஆகியவை. பொறிகள் தொழிற்படுகின்றபோது இப் பெயர்கள் அமைகின்றன. ஐம்பொறிகளை ஞானேந்திரியங்கள் என்பர். ஐம்புலன்களைக் கன்மேந்திரியங்கள் என்றும் கூறுவர். அப்போது வாக்கு, கால், கை, மலங்கழி இடம், சிறுநீர் கழியும் இடம் என்று பொருள்படும். கரண பேதங்கள் ஆவன மனம், புத்தி, சித்தம், அகங்காரங்கள். மனமாவது பற்றும் தன்மையது, புத்தி நிச்சயிக்கும் தன்மையது. அகங்காரமாவது தருக்கி எழும் தன்மையது. சித்தமாவது சிந்திக்கும் தன்மையது.

இறைவி எல்லாமாய் இருப்பவள். அவளை வேதமாகவும், பொறி புலன்களாகவும், பூதங்களாகவும், மட்டும் உள்ளாள் என்று ஒருசிலர் சாதிக்கும்போது அச் சாதனையை எதிர்த்துத் தம் கொள்கையினை நிலை நிறுத்துபவர்களும் உலகில் உண்டு. ஆதலின் அவர்களை உளத்தில் கொண்டே நம் வள்ளலார், "என் வாய் வாதங்களால் அறிவேனே" என்று கூறிக்கொள்கின்றார்.

இறைவன் தன் அருளையே தன் தேவியாக அமர்த்திக் கொண்டான் என்று சாத்திரங்களும் புராணங்களும் கூறும். இதனை "அருளது சத்தியாகும் அரன்தனக்கு" என்று சிவஞான சித்தியாரும்,

"மேனுள் அகிலம் தரமெல் லியலா
ஆறு அருள்தன் னையளித் தொருபால்
தாறு கஇருத் தியதற் பரனை
நாறு மயல்செய் வதுநன் றிதுவே"

என்று கந்த புராணமும் கூறுதல் காண்க. இந்தக் கருத்தில் தான் நம் வள்ளலார், "சிவத்தின் விளை அருளாய்" என்றனர்.

**மதியே மதிமுக மானே அடியர் மனத்துவைத்த**
**நிதியே கருணை நிறைவே சுகாநந்த நீள்நிலையே**
**கதியே கதிவழி காட்டுங்கண் ணேஒற்றிக் காவலர்பால்**
**வதியோர் இளமட மானே வடிவுடை மாணிக்கமே.**

(பொ - ரை.) "அறிவாய் இருப்பவளே! சந்திரனைப் போன்ற முகமுடைய மானே! அடியவர்கள் உள்ளத்தே வைத்துப் போற்றுகின்ற செல்வமே! கருணையின் நிறைவாய் விளங்குபவளே! சுகாநந்தப் பெருநிலையே! அன்பர்கட்கு அருளும் பொருட்டு வீடுபேறாய் இருப்பவளே! இவ் வீடு பேறு இன்னது எனக் காட்டுகின்ற கண்ணே! திருஒற்றி மன்னராம் சிவபெருமானிடம் வாழ்கின்ற மிக இளகிய மானே! வடிவுடைய மாணிக்கமே!" (எ - து.)

(அ - சொ.) மதி - அறிவு, சந்திரன். நிதி - செல்வம். கதி - வீடுபேறு. காவலர் - மன்னர். வதி - வாழும்.

(இ - கு.) மதி முகம், உவமத் தொகை. சுகம் + ஆனந்தம் எனப் பிரிக்க. பால், ஏழன் உருபு.

(வி - ரை.) இறைவி என்றும் இளையளாய் இருத்தலின் இளமையினைக் குறிக்கும் இரு சொற்களாகிய இளமை, மடமை என்பனவற்றைக் கூறினர். (75)

ஆருத் துயரத் தழுந்துகின் றேனை இங் கஞ்சலென்றே
கூருக் குறைஎன் குறையே இனிநின் குறிப்பறியேன்
தேருச் சிறியர்க் கரிதாம் திருவொற்றித் தேவர்மகிழ்
மாருக் கருணை மழையே வடிவுடை மாணிக்கமே.

(பொ - ரை.) "உண்மையினை உணராத சிற்றறிவுடையவர்களாய் அறிதற்கரிய பொருளாய் விளங்கும் திருவொற்றியூர்ப் பெருமான் மகிழ்கின்ற மாருத கருணை மழையைப் பொழிகின்றவளே! வடிவுடை மாணிக்கமே! தணியாத துன்பத்தில் அழுந்தும் என்னை, "நீ அஞ்சாதே" என்று நீ கூருமல் இருப்பதற்கு என் குறையே அன்றி உன் குற்றம் அன்று. இனி உன் குறிப்பு இன்னது என்று உணராமல் திகைக்கின்றேன்." (எ - று.)

(அ - சொ.) சிறியர் - சிற்றறிவுடைய அஞ்ஞானிகள்.

(இ - கு.) அழுந்துகின்றேனை, வினையால் அணையும் பெயர்.

(வி - ரை.) இறைவனது உண்மையினைத் தெரியாதவர் [illegible] றுத் "தேருச் சிறியர்" என்றனர். இறைவன் மழையாய் இருக்கிருள் என்பதைத் திருமந்திரம் கடவுள் வாழ்த்தில், "மழைபொழி தையலுமாய் நிற்கும்" என்று கூறுகிறது. திருவள்ளுவர் அமைத்துள்ள கடவுள் வாழ்த்தையும், வான் சிறப்பையும் ஆழ்ந்து சிந்தித்தால் கடவுள் வாழ்த்து அப்பன் வாழ்த்தாகவும், வான்சிறப்பு அம்மை வாழ்த்தாகவும் விளங்குவதை உணரலாம். இந்தக் கருத்தினை எல்லாம் உளத்தில் கொண்டே நம் ஐயா "மாருக் கருணை மழையே" என்றனர். (76)

எற்றே நிலைஒன்றும் இல்லா துயங்கும் எனக்கருளச்
சற்றேநின் உள்ளம் திரும்பிலை யான்செயத் தக்கதென்னே
சொற்றேன் நிறைமறைக் கொம்பேமெய்ஞ் ஞானச் சுடர்க்கொழுந்தே
மற்றேர் அணிஒற்றி வாழ்வே வடிவுடை மாணிக்கமே.

(பொ - ரை.) "சொற்களாகிய தேன் நிறைந்த வேத மாகிய கொம்பே! உண்மை அறிவாகிய ஒளிப் பொருளே! மிக்க அழகு நிறைந்த திருஒற்றியூரில் வாழ்கின்ற வாழ்வே! வடிவுடை மாணிக்கமே! எத்தகைய நிலை ஒன்றும் இல்லாது வாடுகின்ற எனக்கு நீ திருவருள் புரிய உன் திருவுள்ளம் என்பால் சிறிதும் திரும்பவில்லையே! இதற்கு யான் செய்யத்தக்கது யாது? ஒன்றும் புரியவில்லையே!" (எ - து.)

(அ - சொ.) மறை - வேதம். ஏர் - அணி, அழகு. எற்றே - எத்தன்மைத்து. உயங்கும் - வாடும்.

(இ - கு.) சொல் + தேன் எனப் பிரிக்க. மற்று, அசைச்சொல். ஏர், அணி இரண்டும் ஒரு பொருளையே தருதலின் ஒரு பொருள் பன்மொழி ஆகும்.

(வி - ரை.) திருஒற்றியூரின் அழகு மிகுதியும் உடைமை யின் "ஏர் அணி ஒற்றி" எனப்பட்டது. ஏர் என்பதற்கு எழுச்சி என்றும் பொருள் காணலாம். (77)

செவ்வேலை வென்றகண் மின்னேநின் சித்தம் திரும்பிஎனக்
கெவ்வேலை செய்யென் றிடினும்அவ் வேலை இயற்றுவல்காண்
தெவ்வேலை வற்றச்செய் அவ்வேலை ஈன்றொற்றித் தேவர்நெஞ்சை
வவ்வேல வார்குழல் மானே வடிவுடை மாணிக்கமே.

பொ - ரை.) "பகைவர்களாகிய கடலை வற்றச் செய்யும் பொருட்டு அந்தச் செவ்விய முருகப் பெருமானைப் பெற்றுத் திருஒற்றியூர்ப் பரமனது உள்ளத்தை வசப்படுத்தும் மணம் பொருந்திய மயிர்ச்சாந்தைப் பூசியுள்ள நீண்ட கூந்தலை

யுடைய மானே! வடிவுடை மாணிக்கமே! வேலை வென்ற கண்ணைப்பெற்ற மின்னலைப் போன்றவளே! உன் உள்ளமானது மாறி எனக்கு நீ எந்த வேலையைச் செய்யச் சொன்னாலும் அவ்வேலையை தயங்காது செய்வேன். அப்படிக் கட்டளைப் பிறப்பித்தாகிலும் என்னை ஆட்கொள்வாயாக." (எ - து.)

(அ-சொ.) தெவ்-பகைவர். வேலை-கடல். பணி-வேலை. வேள் - முருகப்பெருமான். வவ் - கவரும். ஏலம் - வாசனை கலந்த மயிர்ச் சாந்து. வார் - நீண்ட. குழல் - கூந்தல்.

(இ - கு.) தெவ், பண்பாகு பெயர். (தெவ் என்பது பகைமை என்னும் பொருளது. அஃது ஈண்டுப் பகைவரை உணர்த்தலின் பண்பாகு பெயர் ஆயிற்று) அ என்பது உலகறி சுட்டு. வார், உரிச்சொல். செம்மை+வேல் எனப் பிரிக்க. வேலை இயற்றுவன், இரண்டன் தொகை. காண், முன்னிலை அசைச் சொல்.

(வி - ரை.) ஈண்டுப் பகைவராகிய கடல் எனப்பட்டது சூரபதுமன், சிங்கமுகன், தாரகன், பானுகோபன் முதலான அசுரர்களையே ஆகும். அவர்களின் இனப்பெருக்கம் கடல் போல் பரந்து இருந்தமையின் அவர்களைக் கடலாக உருவகம் செய்தனர். வேள் என்னும் சொல் முருகப் பெருமானையும், மன்மதனையும் குறிக்கும் சொல்லாயினும், மன்மதனைக் குறிக்கும்போது கருவேள் என்றும், முருகனைக் குறிக்கும்போது செவ்வேள் என்றும், குறிப்பிடுதல் புலவர் மரபாகும். ஈண்டு வேள் என அடை கொடுக்காது வேள் எனக் கூறியதன் கருத்து வேள் எனும் சொல்லுக்கு உரியவன் முருகனை என்பதை உணர்த்துவதற்காகவே ஆகும். அவன் உலகம் முழுவதிலும் அறியப்பட்டவன் ஆதலின், "உலகறி சுட்டாகிய அகரத்தைக் கூட்டி அவ்வேளை என்று கூறப்பட்டது.

இந்த உலகறிந்த முருகன் ஒருவனால்தான் அசுரர்களாகிய கடல் வற்றச் செய்யமுடியும் ஆதலின், அத்தகைய முருகனை உமாதேவி ஈன்றனள் என்க. இறைவனே முருகப் பெருமானைத் தோற்றுவித்தவன். அப்படி இருந்தும் உமை ஈன்ற செவ்வேள் என்று கூறப்பட்டதன் கருத்து உபசார வழக்குப்பற்றி என்க. இதன் விளக்கத்தைக் கந்தபுராணத்தில் காண்க.

சூரபதுமன் இறைவனை நோக்கித் தான் எக் கருவியினாலும் அழிக்கப்படாதவனாக இருக்க வேண்டுமென்று வரம் கேட்டபோது, இறைவன், "நம் சத்தி (வேல்) மட்டும் உன்னை வெல்லும்" என்று கூறியிருத்தலின் அந்தச் சத்தியை ஈன்ற தேவி என்னும் கருத்தில் செவ்வேலை ஈன்று என்று பாடம் கொண்டு பொருள் காண்பாரும் உளர்.

இறைவிக்குப் பல பெயர்கள் உண்டு. அப் பெயர்களுள் ஒன்று ஏலவார் குழலி என்பது. இந்தப் பெயரையுடைய தேவி காஞ்சியம்பதியில் ஏகாம்பரநாதர் கோவிலில் விளங்கிக் கொண்டிருக்கிறாள். இதனை அழகுற நம் சுந்தரமூர்த்தி சுவாமிகள்,

"ஆலந் தான்உகந்து அமுதுசெய் தானை
ஆதி யைஅம ரர்கள் தொழு தேத்தும்
சீலம் தான்பெரி தும்உடை யானைச்
சிந்திப் பார்அவர் சிந்தையு ளானை
ஏல வார்குழ லாள்உமை நங்கை
என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
கால காலனைக் கம்பன் எம்மானைக்
காணக் கண்அடி யேன்பெற்ற வாறே"

என்று பாடி அறிவித்தல் காண்க. இதை உளத்தில் கொண்டே "ஏலவார் குழல் மானே" என்று கூறினர். (78)

தாயே மிகவும் தயவுடை யாளெனச் சாற்றுவர்இச்
சேயேன் படுந்துயர் நீக்கஎன் னேஉளம் செய்திலையே
நாயேன் பிழைஇனி நாடாது நல்அருள் நல்கவரு
வாயேஎம் ஒற்றி மயிலே வடிவுடை மாணிக்கமே.

(பொ - ரை.) "எமது திருஒற்றியூரில் வாழும் மயிலே! வடிவுடை மாணிக்கமே! தாயே உன்னை மெய்யன்பர்கள் "நீ மிகவும் கருணை யுடையவள்" என்று கூறுவர். அப்படி இருக்க இந்தச் சிறுவனாகிய உன் மகன் படுகின்ற துன்பத்தை ஒழிக்க ஏன் நீ சிறிதும் உளத்தில் மனம் கொண்டிலையோ! தெரியவில்லையே. நாயினும் கடைப்பட்ட யான் செய்கின்ற குற்றங்களைக் குறியாது எனக்கு நல் அருளைத் தர வருவாயாக." (எ - று.)

(அ - சொ.) சாற்றுவர் - கூறுவர். சேயேன் - மகனாகிய சிறுவன். நல்க - தர.

(இ - கு.) நல்க, வியங்கோள் வினைமுற்று.

(வி - ரை.) இறைவி அருள் குணம்தானுடைய திருஉள்ளமுடையவள் ஆதலின் அவளிடம் தம் துயரைப் போக்கித் திருவருள் புரியும் வண்ணம் முறையிட்டுக் கொள்கின்றார் நம் வள்ளலார். (78)

நானே நினக்கடி யேன்என் பிழைகளை நாடியநீ
தானே எனைவிடில் அந்தோ இனிஎவர் தாங்குகின்றோர்
தேனே நல்வேதத் தெளிவே கதிக்குச் செலும்நெறியே
வானோர் பொழில்ஒற்றி மானே வடிவுடை மாணிக்கமே.

(பொ - ரை.) "தேனே! நல் வேதத்தின் தெளிந்த பொருளாய் இருப்பவளே! நல்ல நிலைக்குச் செல்வதற்கு வழியாய் விளங்குபவளே! ஆகாயத்தை அளாவிய அழகிய சோலைகள் சூழ்ந்த திருஒற்றியூரில் விளங்கும் மானே! வடி

வுடை மாணிக்கமே! நான் உனக்கு அடிமை. அப்படி இருக்க நீ என் குற்றங்களையே கண்டு என்னைக் கைசோர விட்டால் ஐயோ! என்னைத் தளராமல் தாங்குகின்றவர்கள் எவர் உளர்?" (எ - து.)

(அ - சொ.) நெறி - வழி. வான் - ஆகாயம். ஏர் - அழகு. பொழில் - சோலை.

(இ - கு.) அந்தோ, இரக்கப் பொருளை உணர்த்தும் இடைச் சொல்.

(வி - ரை.) என் பிழைகளைக் குறியாமல் தம்மை ஆட்கொள்ளுமாறு நம் ஐயா இப் பாட்டின்வழி வேண்டுகோள் விடுகின்றார். (90)

கல்லார் இடத்தில்என் இல்லாமை சொல்லிக் கலங்கிஇடர்
நல்லாண்மை உண்டருள் வல்ஆண்மை உண்டெனில் நல்குவையோ
வல்லார் எவர்கட்கும் வல்லார் திருஒற்றி வாணரொடு
மல்லார் பொழில்ஒற்றி வாழ்வே வடிவுடை மாணிக்கமே.

(பொ - ரை.) "வல்லவர் என்று சொல்லிக் கொள்கின்றவர்கட்கெல்லாம் வல்லவராய் திருஒற்றியூரில் வாழும் இறைவருடன் வளம் பொருந்திய சோலையுடைய திருஒற்றியூரில் விளங்கும் தேவி! வடிவுடை மாணிக்கமே! படியாதவர்களிடம் சென்று உளம் கலங்கி என் வறுமையைப் பற்றிக் கூறிக் கேட்கும் அத்தகைய நல் ஆண்மை என்னிடம் உண்டு. உன்னிடம் அருள் செய்கின்ற வன்மைமிக்க ஆண்மை உண்டு என்றால் அதனை எனக்குக் கொடுப்பாயோ?" (எ - து.)

(அ - சொ.) வாணர் - வாழ்பவர். மல் - வளப்பம். ஆர் - பொருந்திய. இல்லாமை - வறுமை.

(இ - கு.) வாழ்நர் என்பது, வாணர் என மருவியது.

(வி - ரை.) வல்லவனுக்கு வல்லவன் என்பது நாட்டில் வழங்கும் ஒரு பழமொழி. அந்தக் குறிப்பில்தான் நம் ஐயா "வல்லார் எவர்கட்கும் வல்லார்" என்றனர். மக்களுள் ஒரு சிலர் பிறரிடம் சென்று யாசிப்பதையே பெருமையாகக் கொள்வர். அவர்களை உளத்தில் கொண்டே நம் ஐயா, "கல்லார் இடத்தில் இல்லாமை சொல்லிக் கலங்கி இடர் நல்லாண்மை உண்டு" என்றனர். இறைவியினிடம் என்றும் அருள்புரியும் பண்பு அமைந்திருத்தலின் "அருள் வல்லாண்மை" என்றனர். "அருள்வல்லாண்மை உண்டெனில்" என்று கூறியதன் கருத்து இறைவியைத் தூண்டித் தாம் அருள் பெறுவதற்காக ஆகும். (81)

சுந்தர வாள்முகத் தோகாய் மறைகள் சொலும்பைங்கிள்ளாய்
கந்தர வார்குழல் பூவாய் கருணைக் கடைக்கண்நல்காய்
அந்தர நேர்இடைப் பாவாய் அருள்ஒற்றி அண்ணல்மகிழ்
மந்தர நேர்கொங்கை மங்காய் வடிவுடை மாணிக்கமே.

(பொ - ரை.) "அழகிய ஒளி பொருந்திய முகத்தைப் பெற்றுள்ள மயிலே! வேதங்கள் புகழ்ந்து பேசும் பச்சைக் கிளியே! மேகத்தைப் போன்ற நீண்ட கூந்தலையுடைய நாகணவாய்ப் பறவை போன்றவளே! கருணை பொழியும் கடைக்கண் படைத்த நங்காய்! அளவான, ஒழுங்கான இடையினையுடைய பதுமை போன்றவளே! திருவருளைச் செய்யும் திருஒற்றிப் பரமர் மகிழும் வண்ணம் மந்தர மலை போன்ற பருத்த முலைகளையுடைய மங்கையே! வடிவுடை மாணிக்கமே!" (எ - து.)

(அ - சொ) சுந்தரம் - அழகு. வாள்-ஒளி. தோகை- மயில். மறைகள் - வேதங்கள். பைங்கிள்ளை - பச்சைக்கிளி. கந்தரம் - மேகம். வார் - நீண்ட. குழல் - கூந்தல். பூவை - நாகணவாய்ப் பறவை, அந்தரம் - அளவு. நேர் - ஒழுங்கு.

பாவை - பதுமை (பொம்மை). மந்தரம் - மந்தரமலை. கொங்கை - முலை.

(இ - கு.) வாள், உரிச்சொல்.

(வி - ரை.) இறைவி பல்வேறு சொற்களால் குறிக்கப் பட்டிருப்பதைக் காண்க. நாகணவாய்ப் புள் என்பது மைனா என்னும் பறவை ஆகும். இறைவியின் இனிய பேச்சுக்குப் பூவையும், கிள்ளையும் உவமையாயின. மென்மைத் தன்மைக்கு மயில் உவமம் ஆயிற்று. ஆகாயம் என்பது பருப் பொருளாகக் காட்சி அளிக்காமல், நுண் பொருளாகக் காட்சி அளிப்பது போல இடையும் நுண்ணியதாய்க் காட்சி அளித்தலின் அந்தர நேர் இடை எனப்பட்டது என்று கூறலும் அமையும். அதுபோது அந்தரம் என்பது ஆகாயம் என்று பொருள்படும். மந்தரமலை திருப்பாற்கடலைக் கடைந்த போது மத்தாகப் பயன்பட்டது. அம்மலைபோலப் பருத்தும் வன்மையுற்றும் இருத்தலின் அது கொங்கைக்கு உவமை ஆயிற்று. இஃது உயர்வு நவிற்சி அணியின் பாற்படும். (82)

**பத்தர்தம் உள்ளத் திருக்கோயில் மேவும் பரம்பரையே**
**சுத்தமெய்ஞ் ஞான ஒளிப்பிழம் பேசித் சுகாநந்தமே**
**நித்தம்நின் சீர்சொல எற்கருள் வாய்ஒற்றி நின்மலர்உன்**
**மத்தர்தம் வாம மயிலே வடிவுடை மாணிக்கமே.**

(பொ - ரை.) "அன்பர்களுடைய மனமாகிய சிறந்த கோயிலில் அமர்ந்திருக்கும் மேலான பரதேவதையே! தூய உண்மை அறிவாம் ஒளிப்பொருளே! சித்சுகாநந்தமே! திருஒற்றியூரில் விளங்கும் தூயராகிய தியாகராகிய பித்தரின், இடப்பாகத்தில் அமர்ந்திருக்கும் மயிலே! வடிவுடை மாணிக்கமே! தினமும் உன் சிறப்பைப் பேசும் வாய்ப்பை அருள் செய்வாயாக." (எ - து.)

(அ - சொ.) திரு - சிறந்த. பரம் - மேலான. பரை - பரதேவதையே. நித்தம் - தினமும். சித் - அறிவு எற்கு - எனக்கு. நின்மலர் - தூயர். உன்மத்தர் - பித்தர். வாமம் - இடப்பக்கம்.

(இ - கு.) கோயில், இலக்கணப்போலி. சுகம் + ஆநந்தம் எனப்பிரிக்க

(வி - ரை.) இறைவிக்கும் இறைவனுக்கும் கோயில், மெய் அன்பர்களின் திருவுள்ளமே ஆகும். "காயமே கோயிலாக" என்று அப்பர் கூறுதலும் இக் கருத்தைப் பற்றியே ஆகும். இறைவியின் குடும்பம் அன்பர்களின் உள்ளத்தில் மேவும் தன்மையது ஆதலின், அப்பரம்பரையைச் சார்ந்தவள் இறைவி என்னும் குறிப்பில் பரம்பரையே எனப்பட்டாள் எனினுமாம்.

"உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில்கொண் டான்என்று
உடம்பினை யான்இருந் தோம்புகின் றேனே"

என்பர் திருமூலர். இக்கருத்துக்களைப் பின்பற்றியே நம் ஐயர், "பத்தர்தம் உள்ளத் திருக்கோயில் மேவும் பரம்பரையே" என்றனர். இறைவர் சுந்தரரால் பித்தர் எனப்பட்டார். ஆதலின் உன்மத்தர் எனப்பட்டார். (83)

பூவாய் மலர்க்குழல் பூவாய்மெய் அன்பர் புனைந்ததமிழ்ப்
பாவாய் நிறைந்தபொன் பாவாய்செந் தேனிற் பசுமொழியாய்
காவாய் எனஅயன் காவாய் பவனும் கருதும்மலர்
மாவாய் எழில்ஒற்றி வாழ்வே வடிவுடை மாணிக்கமே.

(பொ - ரை.) "பூவையைப் போன்றவளே! அழகிய கூந்தலில் மலரை அணிந்திருப்பவளே! மெய் அன்பர்கள் பாடிய தமிழ்ப் பாட்டாய் விளங்குபவளே! நிறைந்த பொன் நிறமான பதுமை போன்றவளே! நல்ல தேன்போலப் பேசும்

மொழியை உடையவளே! பிரமனும், கற்பக விருட்சத்தின் கீழ் இருந்து இன்பத்தைத் துய்க்கும் இந்திரனும், எங்களையும் காத்தருள்க என்று வேண்டி உள்ளத்தில் எண்ணும் தாமரை மலரில் வீற்றிருக்கும் திருவே! அழகிய திருஒற்றியூரில் வாழ்கின்ற வாழ்வே! வடிவுடை மாணிக்கமே!'' (எ - து.)

(அ - சொ.) குழல் - கூந்தல், புனைந்த - பாடிய. பகர் - கூறும். அயன் - பிரமன். கா வாய்பவன் - கற்பகச் சோலையில் இருக்கும் இந்திரன். மா - திருமகள். எழில் - அழகு.

(இ - கு.) தேனில், இல் ஐந்தாம் வேற்றுமை ஒப்புப் பொருள்.

(வி - ரை.) பூவாய் என்பது மைனை போன்றவள் எனும் பொருளிலும், மலரை அணிந்தவளே எனும் பொருளிலும், பாவாய் என்பது பாட்டாய் விளங்குபவளே என்னும் பொருளிலும், பதுமை போன்றவளே எனும் பொருளிலும், காவாய் என்பது காப்பாற்றுவாய் எனும் பொருளிலும், சோலையினிடத்தில் எனும் பொருளிலும் வந்துள்ளன. இறைவி அட்ட இலக்குமியாய் இருக்கின்றாள் ஆதலின் அவளைத் திருமகள் எனும் கருத்தில் மலர் மாவாய் என்று விளித்தனர் நம் ஐயா.

தாதா உணவுடை தாதா எனப்புல்லர் தம்இடைப்போய்
மாதாகம் உற்றவர் வல்நெஞ்சில் நின்அடி வைக்கும்கொலோ
காதார் நெடுங்கண் கரும்பேநல் ஒற்றிக் கருத்தர்நட
வாதார் இடம்வளர் மாதே வடிவுடை மாணிக்கமே.

(பொ - ரை.) "காதினைச் சென்று பொருந்தும் அவ்வளவு நீண்ட கண்களைப் பெற்ற கரும்பே! நல்ல திருஒற்றியூரின் தலைவரும், நடந்து சென்று வழக்கு ஆடியவரும் ஆகிய சிவபெருமானின் இடப்பக்கத்தே விளங்கும் மாதே! வடிவுடை மாணிக்கமே! "வள்ளலே உணவு கொடு உடை

கொடு" என்று சொல்லிக்கொண்டு புல்லரிடைச் செல்லும் பெருவேட்கை கொண்டவர்களின் உள்ளத்தில் உன் திருவடிகள் தங்குமோ?" (எ - து.)

(அ - சொ.) ஆர் - பொருந்தும். வாதார் - வழக்காடியவர். தாதா - கொடு. புல்லர் - அற்பர். மாதாகம் - பெருவிருப்பம். வைகும் கொலோ - தங்குமோ.

(இ - கு.) வாது + ஆர், எனப்பிரிக்க. (வாதம் செய்யும் குணம் பொருந்திய என்பது பொருள்.) உணவு + உடை எனப் பிரிக்க. மா, உரிச்சொல். கொல், அசைச் சொல். ஓ, வினா.

(வி - ரை.) உத்தம மாதர்களின் கண் காதருகே செல்லும் அளவுக்கு நீண்டிருக்கும். அந்தக் கருத்தில்தான், "காதார் நெடுங்கண்" என்று பெண்களின் கண்களை வர்ணிப்பர். சுந்தரரைத் தம் அடிமையாக்கும் பொருட்டு, இறைவர் வாதாடியதை மனத்தில் கொண்டே இங்கு நம் ஐயா, "வாதார்" என்று இறைவரைக் குறித்தனர். நாம் நமக்கு வேண்டியதை இறைவியைக் கேட்டே பெறவேண்டி இருக்க அதை விடுத்து அற்பர்களை அடைந்து வள்ளலே! என்று கூறி, உணவு கொடு, உடைகொடு என்று கேட்டால் இறைவி எங்ஙனம் அத்தகையவர்கட்கு அருள் செய்வாள்? ஆகையினால் நம் ஐயா இறைவியை நோக்கி, "மாதாகம் உற்றவர்தம் நெஞ்சில் நின் அடிவைகுங் கொலோ" என்று வினவுவார் ஆயினர். நம் சுந்தரரும் புலவர்களை நோக்கிப் புல்லர்களைப் புகழ்ந்து பாடாதீர்கள்! இறைவனைப் பாடுங்கள். அவ் விறைவர் உணவு உடை முதலியவற்றைக் கொடுப்பார் என்னும் கருத்தில்,

"தம்மை யேபுகழ்ந் திச்சை பேசினும்
சார்வினும் தொண்டர் தருகிலாப்
பொய்ம்மை யாளரைப் பாடாதே எந்தைப்
புகலூர்ப் பாடுமின் புலவீர்காள்

இம்மை யேதரும் சோறும் கூறையும்
ஏத்த லாம்இடர் கெடலுமாம்
அம்மை யேசிவ லோகம் ஆள்வதற்
கியாதும் ஐயுற வில்லையே"

என்று பாடியுள்ளனர். இவரது போக்கில் அட்டப் பிரபந்த ஆசிரியர் பிள்ளைப் பெருமாள் ஐயங்காரும்,

"தருக்கா வலாஎன்று புல்லரைப் பாடித் தனவிலைமா
தருக்கா வலாய்மயி லேதுயி லேஎன்று தாமதராய்த்
தருக்கா வலாநெறிக் கேதிரி வீர்கவி சாற்றுமின்பத்
தருக்கா வலாயுதன் பின்தோன்றும் அரங்கன் பொன்
தாளிணைக்கே"

என்று பாடினார். இப் பாடல்களையும் ஈண்டு நினைவுகொள்ளுதல் சாலவும் நன்று. (85)

**களந்திரும் பாஇக் கடையேனை ஆளக் கருணைகொண்டுன்**
**உளந்திரும் பாமைக்கென் செய்வேன் துயர்க்கடல் வீடலைந்தேன்**
**குளந்திரும் பாவிழிக் கோமானொடு நம்தொண்டர் கூட்டம்உற**
**வளந்திரும் பாஒற்றி வாழ்வே வடிவுடை மாணிக்கமே.**

(பொ ரை.) "நெற்றியிலிருந்து நீங்காத கண்ணையுடைய தலைவனோடும் தொண்டர்களின் கூட்டத்திலும் இருந்து உன் கருணைவளம் நீங்காது திருஒற்றியூரில் வாழும் வாழ்வே! வடிவுடை மாணிக்கமே! என் மனத்தை உன்னிடத்தே பதிய வைக்காத இந்தக் கடைப்பட்ட நாயினேனை ஆட்கொள்ள அன்புகொண்டு உன் உள்ளம் என்னிடம் திரும்பிப் பார்க்காமைக்கு நான் என்ன செய்வேன்? இதனால் நான் துன்பக்கடலிடை அகப்பட்டுக் கொண்டு அலைகின்றேன்". (எ - து.)

(அ - சொ.) குளம் - நெற்றி. கோமான் - தலைவன். உற - பொருந்த. களம் - மனம். கடலூடு - கடலில்.

(இ - கு.) கோமான், மான், உயர்திணை ஆண்பால் விகுதி.

(வி - ரை.) இறைவி இறைவனோடு பொருந்தி இருப்ப தோடல்லாமல் தொண்டர்களின் கூட்டத்திலும் பொருந்தி இருத்தலின் "கோமானொடு தொண்டர் கூட்டம் உற வளம் திரும்பர் ஒற்றி வாழ்வே" எனப்பட்டாள், மனம் எங்கெங்கோ சென்று அலைந்து கொண்டு இறைவியினிடம் வந்து சேராது இருத்தலின் "களம் திரும்பாக் கடையேன்" என்றனர். அலை கின்றேன் என்னும் நிகழ்கால வினைச்சொல் இங்கு இறந்த காலத்தில் கூறியது காலவழு அமைதிபற்றி என்க. என் உள்ளம் தான் அறிவுகெட்டு உன்பால் திரும்பவில்லை என்றால் கருணை வளம் பொருந்திய உன் உள்ளமேனும் என் மீது திரும்பி அருள் செய்யக் கூடாதா என்னும் ஆற்றாமையினால்தான் "கருணை கொண்டு உன் உளம் திரும்பாமைக்கு என் செய் கேன்" என்கின்றார். (86)

ஆரணம் பூத்த அருள்கோ மளங்கொடி அந்தரிபூந்
தோரணம் பூத்த எழில்ஒற்றி யூர்மகிழ் சுந்தரிசத்
காரணம் பூத்த சிவைபார்ப் பதிநம் கௌரிஎன்னும்
வாரணம் பூத்த தனத்தாய் வடிவுடை மாணிக்கமே.

(பொ - ரை.) "வேதத்தின் பொருளாய்த் தோன்றிய வளே! அருள் நிறைந்த இளைய பூங்கொடியே! சுந்தரியே! பூந்தோரணங்கள் நிறைந்த அழகிய திருவொற்றியூரில் வாழ்வ தற்கு மனம் மகிழும் சுந்தரியே! சத்காரணம் நிறைந்த சிவசத்தியே! பார்வதியே! எங்கள் கௌரியே! என்று கூறப் பெறும் யானையின் மத்தகம் போன்ற முலையினை யுடைய வளே! வடிவுடை மாணிக்கமே" (எ - று)

(அ - சொ.) ஆரணம் - வேதம். கோமளம் - இளமை. எழில் - அழகிய. சத் - உண்மையான, சத்தான. சிவை - சிவசத்தி - வாரணம் - யானை. தனம் - முலை.

(இ - கு.) சிவை, சிவன் என்பதன் பெண்பால்.

(வி - ரை.) இறைவி வேதத்தின் பொருளாய் விளங்கு பவள் ஆதலின் ஆரணம் பூத்த அருள் கோமளக் கொடியே எனப்பட்டாள். "அருமறைக்கு முன்னாய் நடு எங்குமாய் முடிவாம் முதல்வி" என்பர் அபிராமபட்டர். இறைவியின் மென்மைத் தன்மையை உணர்த்த, கோமளக்கொடி என்று கூறப்பட்டது. கோமளம் என்பதற்கு இளமை என்னும் பொருளுடன் மென்மை என்னும் பொருளும் உண்டு என்பதையும் உணர்க. "கோமள யாமளைக் கொம்பே" என்று அபிராமி அந்தாதி போற்றும்.

அந்தரி என்பது இறைவியின் திருப்பெயர்களில் ஒன்று. அந்தரி என்பதன் பொருள், பராகாச உருவாய் உள்ளவள் என்பது. அந்தரம் - ஆகாயம். மேலும் இதற்குச் சிதாகாசத்தில் உறைபவள் என்று பொருள் கூறினும் கூறலாம். இறைவி அன்பர்களின் உளமாகிய தாமரையில் வீற்றிருப்பவள் ஆதலின் தகராகாச உருவினள் என்று பொருள் காணினும் பொருத்தமே. அவளுடைய திருப்பெயர்களில் தகராகாச ரூபிணி என்பதும் ஒன்று. "அம்புயமேல் திருந்திய சுந்தரி அந்தரி பாதம் என் சென்னியதே" என்று அபிராம பட்டர் இறைவியைப் போற்றியுள்ளதை, ஈண்டு நினைவு கொள்க. இறைவி தீயது புரியச் சிறிதும் நினையாள் ஆதலின் அவளை "சத்காரணம் பூத்த சிவை" என்றனர்.

வாரணம் ஈண்டு முழுயானை வடிவத்தையும் உணர்த்தாமல் யானையின் மத்தகத்தை மட்டும் உணர்த்தி இரு கொங்கைகளுக்கு உவமை ஆயிற்று. இறைவி மஞ்சள் நிறத்துடனும் விளங்குதலின் கௌரி எனப் பட்டாள். பர்வதராசன் மகளாகப் பிறந்தமையின் பார்வதி எனும் திருப்பெயரைப் பெற்றாள். (87)

திருவல்லி ஏத்தும் அபிடேக வல்லிஎஞ் சென்னிஇடை
வருவல்லி கற்பக வல்லிஒண் பச்சை மணிவல்லிஎன்
கருவல்லி நீக்கும் கருணைம் பகவல்லி கண்கொள்ஒற்றி
மருவல்லி என்றும் மறைதேர் வடிவுடை மாணிக்கமே.

(பொ - ரை.) "இலக்குமி போற்றித் துதிக்கின்ற அபிடேக வல்லியே! எம்போன்ற அடியவர்களின் தலைமீது வந்து திருவடி சூட்டும் கற்பகவல்லியே! ஒளியுடைய மரகத வல்லியே! எங்களுடைய பிறப்புக்குக் காரணமாகிய கருவை நீக்கும் கருணை ஒழுகும் கண்களை கொண்டவளே! நெற்றியில் கண்படைத்த திருஒற்றிப் பெருமானைக் கலந்து விளங்குபவளே! எக்காலத்திலும் வேதங்கள் அறிந்து போற்றும் வடிவுடை மாணிக்கமே!" (எ - று.)

(அ - சொ.) திருவல்லி - வல்லிக்கொடிபோன்ற இடையுடைய இலக்குமி. ஏத்தும் - போற்றும். மரு - பொருந்திய. மறை - வேதம். அம்பகம் - கண்.

(இ - கு.) சென்னி இடை, இடை ஏழாம் வேற்றுமை உருபு. கருணை + அம்பகம் எனப் பிரிக்க.

(வி - ரை.) திருமகள் தான் செல்வத்திற்குத் தேவியாக என்றும் விளங்க இறைவியைப் போற்றி வணங்குபவள் ஆதலின், "திருவல்லி ஏத்தும் அபிடேகவல்லி" எனப்பட்டாள்; இறைவியின் நிறம் பச்சை ஆதலின் "ஒண்பச்சை மணி வல்லி" எனப்பட்டாள். இறைவியின் திருக்கண்கள் கருணை பொழியும் கண்களாக இருத்தலின் "கருணைப்பகவல்லி" எனப்பட்டாள். இறைவியின் திருப்பெயர்களுள் பல இதில் கூறப்பட்டிருத்தலைக் காண்க. (88)

உடையென்ன ஒண்புலித் தோல்உடை யார்கண் டுவக்கும்இள
நடையன்ன மேமலர்ப் பொன்முத லாம்பெண்கள் நாயகமே
படையன்ன நீள்விழி மின்னேர் இடைப்பொன் பசுங்கிளியே
மடைமன் னும்நீர்ஒற்றி வாழ்வே வடிவுடை மாணிக்கமே.

(பொ - ரை.) "புலித்தோலை உடையாகக் கொண்டுள்ள இறைவர் கண்டு மகிழும் வண்ணம் இளைய நடை நடக்கும் அன்னமே! தாமரையில் இருக்கும் இலக்குமிமுதலான பெண்களுக்கெல்லாம் தலைவியே! வேலாயுதம்போன்ற கூரிய நீண்ட கண்களையும், மின்னல் போலத் தோன்றி மறையும் அழகிய இடையையும் கொண்ட பச்சைப் பசுங்கிளியே! நீர் மதகுகள் நிறைந்த நீர்வளம் பொருந்திய திருஒற்றியூரில் வாழ்கின்ற வாழ்வே! வடிவுடை மாணிக்கமே!" (எ - று.)

(அ - சொ.) ஒண்புலி - கண் ஒளியுடைய புலி. உவக்கும் - மகிழும். மலர்ப்பொன் - தாமரையில் வாழும் இலக்குமி. பொன் - இலக்குமி. நாயகமே - தலைவியே. படை - வேலாயுதம். அன்ன - போன்ற. ஏர் - அழகிய. மடை - மதகு.

(இ - கு.) கண்டு + உவக்கும் எனப்பிரிக்க. மலர்ப்பொன், ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை. அன்ன, உவம உருபு. மீன் + ஏர், எனவும், மின் + நேர் எனவும் பிரிக்கலாம்.

(வி - ரை) தாருகா வனத்து இருடிகள் ஏவிய புலியைக் கொன்று அதன் தோலை இறைவர் உடையாக உடுத்திக் கொண்டார் ஆதலின் "புலித்தோல் உடையார்" எனப் பட்டார். திருஒற்றியூரின் நீர்வளத்தைக் குறிக்க "மடை மன்னும் நீர் ஒற்றி" என்று சிறப்பிக்கப்பட்டது. (89)

கற்பதும் கேட்பதும் எல்லாம்நின் அற்புதக் கஞ்சமலர்ப்
பொற்பதம் காணும் பொருட்டென எண்ணுவர் புண்ணியரே
சொற்பத மாய்அவைக் கப்புற மாய்நின்ற தூய்ச்சுடரே
மற்பதம் சேர்ஒற்றி வாழ்வே வடிவுடை மாணிக்கமே.

(பொ - ரை.) "சொல்லின்பால் குறிக்கப்படும் நிலையாயும், சொற்களால் குறிக்கப்படும் நிலைக்கு அப்பாலும் ஆய்

விளங்குகின்ற தூய ஒளியே! வளமான நிலை சேர்ந்து திகழும் திருஒற்றியூரில் வாழ்பவளே! வடிவுடை மாணிக்கமே! கற்பதும், கேட்பதும் எல்லாம் உன்னுடைய தாமரை மலராகிய அழகிய திருவடிகளைக் காண்பதற்காகவே என்று புண்ணியர் நினைப்பர்" (எ - து.)

(அ - சொ.) பதம் - நிலை. அப்புறம் - அப்பால், கடந்த பொருளாய். தூய - பரிசுத்தம். மல் - வளமை. கஞ்சமலர் - தாமரைப்பூ.

(இ - கு.) கஞ்சமலர்ப் பொற்பதம், உவமைத்தொகை. பதம், குறுக்கல் விகாரம். பொருட்டு, நான்காம் வேற்றுமைச் சொல் உருபு.

(வி - ரை.) இறைவி வாக்குக்கு அப்பாற்பட்டும் விளங்குதலின், அவளைச் சொற் பதம் அப்புறமாய் என்றனர். "சொற்பதம் கடந்த தொல்லோன்" என்று திருவாசகம் கூறுவதை இங்கு நினைவு கொள்க.

"கற்றதனால் ஆய பயன்என்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்"

எனும் திருக்குறள் கருத்தையும்,

"உள்ள நிறை கலைத்துறைகள் ஒழிவின்றிப் பயின்றவற்றால்
தெள்ளிவடித் தறிந்தபொருள் சிவன்கழலில் செறிவென்றே
கொள்ளும் உணர்வினில்முன்னே கூற்றுதைத்த கழற்கன்பு
வள்ளலுடை யாய்என்றும் பயின்றுவரும் பண்புடையார்"

என்று சேக்கிழார் பெருமானும் கூறியுள்ள கருத்தையும் உளத்தில் கொண்டே நம் ஐயா,

"கற்பதும் கேட்பதும் எல்லாநின் அற்புதக் கஞ்சமலர்ப்
பொற்பதம் காணும் பொருட்டுஎன எண்ணுவர் புண்ணியரே"

என்று எடுத்து மொழிந்தனர். (90)

நின்னால் எனக்குள எல்லா நலனும் நினை அடைந்த
என்னால் உனக்குள தென்னைகண் டாய்எமை ஈன்றவளே
முன்நால் வருக்கருள் ஒற்றிஎம் மான்கண் முழுமணியே
மன்னால் மறையின் முடிவே வடிவுடை மாணிக்கமே.

(பொ - ரை. ''எங்களைப் பெற்றெடுத்த தாயே! முன்னொரு காலத்தில் அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்க வாசகர் ஆகிய நால்வர்களுக்கும் திருவருள்புரிந்த எம் திருஒற்றியூர்ப் பெருமானுடைய கண்களுக்கு முழுமணியாய் விளங்குபவளே! நிலைபெற்ற நான்கு வேதங்களின் முடிவாய் விளங்குபவளே! வடிவுடை மாணிக்கமே! உன்னைச் சரண் புகுந்த எனக்கு உன்னால் எல்லா நன்மைகளும் உண்டாகி இருக்கின்றன. என்னால் உனக்குப் பயன் யாது உளது?'' (எ - து.)

(அ - சொ.) நால்வர் - அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர். மன் - நிலைபெற்ற. மறை - வேதம்.

(இ - கு.) நால்வர், தொகைக் குறிப்பு. நலன், மொழி ஈற்றுப் போலி. என்னை, ஐகாரம் சாரியை. என் + ஐ எனப் பிரிக்க. கண்டாய், முன்னிலை அசைச் சொல்.

(வி - ரை.) இறைவர் மாணிக்கவாசகரை ஆட்கொள்ளக் குருவாக வந்துளர். திருநாவுக்கரசரை மறக் கருணை காட்டிச் சூலைநோய் தந்து ஆட்கொண்டனர். சம்பந்தருக்கு ஞானப்பால் தந்து ஆட்கொண்டனர். சுந்தரரைத் திருமணத்தில் தடுத்தாட்கொண்டனர். இங்ஙனம் ஆட்கொண்டு அருள் செய்தமை கருதியே நம் ஐயா ''நால்வர்க்கு அருள் ஒற்றி எம்மான்'' என்றனர். நால்வர் என்பதற்குப் பிரமதேவன் திருக்குமாரர்களாகிய சனகர், சனந்தரர், சனாதரர், சனக்குமாரர்களையும் குறிக்கும். இவர்கட்கு இறைவர் தட்சணாமூர்த்தியாக இருந்து அருள் உபதேசத்தைச் செய்த குறிப்பை நம் ஐயா கூறியுள்ளார் என்று கூறினும்

அமையும். இந் நால்வர்க்கு இறைவர் அருளியதைத் திருவிளையாடற் புராணம்,

"கல்லாலின் புடைஅமர்ந்து நான்மறைஆ
றங்கமுதல் கற்ற கேள்வி
வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிறந்த
பூரணமாய் மறைக்கப் பாலாய்
எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை
இருந்தபடி இருந்து காட்டிச்
சொல்லாமல் சொன்னவரை நினையாமல்
நினைந்துபவத் தொடக்கை வெல்வாம்"

என்று கூறிப் போற்றுகின்றது. (91)

நன்றே சிவநெறி நாடும்மெய்த் தொண்டர்க்கு நன்மைசெய்து
நின்றேநின் சேவடிக் குற்றேவல் செய்ய நினைந்தனன்ஈ
தென்றே முடிகுவ தின்றே முடியில் இனிதுகண்டாய்
மன்றேர் எழில்ஒற்றி வாழ்வே வடிவுடை மாணிக்கமே.

(பொ-ரை.) "அரசர்கள் தேர்ந்து போற்றும் அழகிய திருஒற்றியூரில் வாழ்கின்ற வாழ்வே! வடிவுடை மாணிக்கமே! சிவநெறிதான் நன்னெறி; நல்லதும் ஆகும். என்று நாடி அடைகின்ற உண்மைத் தொண்டர்களுக்கு நன்மை செய்து கொண்டே உன் செவ்விய திருவடிகளுக்குச் சிறுதொண்டு செய்ய நினைத்தனன். என் நினைவாகிய இஃது என்று ஈடேறுமோ தெரியவில்லையே! இன்றே என் எண்ணம் முடியின் நல்லதாகும்". (எ - று.)

(அ - சொ.) மன் - அரசர்கள், எழில் - அழகிய. குற்றேவல் - சிறுதொண்டு.

(இ - கு.) மன்னன் என்பது மன் என நின்றது, ஈற்றுக் குறை. ஒன்றே ஏகாரம் தேற்றம். செம்மை+அடி, குறு+ஏவல் எனப் பிரிக்க. ஈது, நீட்டல் விகாரம்.

(வி - ரை.) மன்னர்கள் தேர்ந்து வந்து திருஒற்றியூரை வணங்கினர் என்பதைக் காப்புச் செய்யுளின் விளக்க உரையில் காண்க. ஒவ்வொரு சமயமும் ஒவ்வொரு கொள்கையினைக் கொண்டுளது. சமணமதம் கொல்லாமையினைக் கொள்கையாகக் கொண்டுளது. பௌத்தமதம் கடவுள் என ஒரு பொருள் இல்லை. மக்களுக்கு நன்மை செய்தாலே போதுமானது என்னும் கொள்கை கொண்டது. கிறித்தவமதம் உனக்குத் தீங்கு செய்தவனுக்கும் நன்மை செய் என்று போதிக்கிறது. இஸ்லாமிய மதம் உருவவழிபாட்டைப் மறுத்து அருவ வழிபாட்டையும் பல தெய்வங்கள் இல்லை என்பதையும் கூறுகிறது. வைணவமதம் சரணாகதி தான் கடவுளை அடைய வழி என்று கூறுகிறது. இத்தனை கொள்கைகளையும் சிவநெறி தன்னகத்தே கொண்டு திகழ்கிறது. ஆகவேதான் "சிவநெறியே நன்றே" என்றனர் நம் ஐயா?

தொண்டர்களுக்குத் தொண்டு செய்தால் இன்ப நிலை தானே வந்து சேரும். இதனைத் தாயுமானவர்,

"அன்பர்பணி செய்யஎனை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே"

என்று கூறுதலால் உணரலாம். இது கருதியே "தொண்டர்க்கு நன்மை செய்து" என்றனர் நம் ஐயா.

கபிலர் என்பவர் மக்களை நோக்கி,

"ஒன்றே செய்யவும் வேண்டும் ஒன்றும்
நன்றே செய்யவும் வேண்டும் நன்றும்
இன்றே செய்யவும் வேண்டும் இன்றும்
இன்னே செய்யவும் வேண்டும்"

என்று உபதேசம் செய்வார் ஆயினர். இந்த உண்மையினை உணர்த்தவே நம் வள்ளளார் "சேவடிக்குக் குற்றேவல் செய்ய நினைத்தேன். ஈது இன்றே முடியில் இனிது" என்று வேண்டினர். (92)

அத்தனை ஒற்றிக் கிறைவனை அம்பலத் தாடுகின்ற
முத்தனைச் சேர்ந்தொளிர் முத்தே மதிய முகஅமுதே
இத்தனை என்றள வேலாத குற்றம் இழைத்திடினும்
மத்தனை ஆளல் வழக்கோ வடிவுடை மாணிக்கமே.

(பொ - ரை) "தந்தை ஆகிய திருஒற்றியூர்க்குத் தலைவனைச் சிதம்பரப் பொற்சபையில் திருநடனம் புரிகின்ற வீட்டின்பத்திற்கு உரிய இறைவனைச் சேர்ந்து விளங்கும் ஒளியுடைய முத்தே! சந்திரனைப் போன்ற முகமுடைய அமுதே! வடிவுடை மாணிக்கமே! இவ்வளவு என்று அளவிட்டுக் கூற முடியாத குற்றங்களை நான் செய்தாலும் இந்த வெறியனை நீ ஆட்கொள்ளுவதற்கு ஒரு வழக்கை மேற்கொள்ள வேண்டுமோ?" (எ - று.)

(அ - சொ.) அத்தன் - தந்தை. இறைவன் - தலைவன். அம்பலம் - சிதம்பரம். பொற்சபை. முத்தன் - மோட்சத்திற்குக் காரணனாய் இருப்பவன். மதியம் - சந்திரன். ஏலாத - பொருந்தாத. மத்தன் - வெறியன்.

(இ - கு.) மதியமுகம், உவமைத் தொகை. மதியம் என்பதன் அம் சாரியை.

(வி - ரை.) அன்பர்கள் ஒரு தலத்தைப் பாடுகின்றபோது வேறு தலத்தையும் நினைத்துப் பேசுதல் மரபு. ஆதலின் திருஒற்றியூரைப் பாடும்போது சிதம்பரத்தையும் சேர்த்து நம் ஐயா இப்பாடலில் பாடியுள்ளனர். அம்பலம் என்பதற்குச் சிதம்பரம் நடன சபை, எனப் பொருள் காணாது திருஒற்றியூர்ச் சபை என்று பொருள் காணினும் காணலாம்.

பிரமன், விஷ்ணு முதலியவர்கள் பதவிகளை மட்டும் கொடுக்கும் தகுதி உடையவர்கள். இறைவன் ஒருவனே மோட்ச இன்பத்தைக் கொடுக்க வல்லவன். ஆதலால்தான் நம் ஐயா முத்தன் என்று நம் இறைவனை வியந்து கூறினர்.

கூறுத வாழ்க்கைச் சிறுமையை நோக்கிக் குறித்திடும்என்
தேறுத விண்ணப்பம் சற்றேனும் நின்தன் திருச்செவியின்
ஏறுத வண்ணம்என் ஒற்றித் தியாகர் இடப்புறத்தில்
மாறு தமர்ந்த மயிலே வடிவுடை மாணிக்கமே.

(பொ - ரை.) "திருஒற்றியூர்த் தியாகரின் இடப்பக்கத்தில் நீங்காது வீற்றிருக்கின்ற மயிலே! வடிவுடை மாணிக்கமே! வாயால் சொல்லி முடியாத உலக வாழ்க்கையாகிய சிறுமையைக் கண்டு என்றால் தெளிய முடியாத நிலையில் விண்ணப்பம் செய்து கொள்ளும் என் விண்ணப்பத்தைச் சிறிதேனும் உன் திருச்செவியில் ஏற்காமல் இருக்கின்ற செயல் என்னே? (எ - து.)

(அ - சொ.) புறம் - பக்கம்.

(இ - கு.) வாழ்க்கைச் சிறுமை, பண்பு தொகை.

(வி - ரை.) இறைவி இறைவனை விட்டு நீங்காது இருத்தலின் "தியாகர் இடப்புறத்தில் மாறுதமர்ந்த மயிலே" எனப் பட்டாள். நம் விண்ணப்பத்தை நாம் வழிபடும் தெய்வத்தினிடம் விண்ணப்பம் செய்து கொள்வதற்கும் தெளிவு தேவைப்படுதலின் "தேருத விண்ணப்பம்" என்று கூறினர்.

ஓயா இடர்கொண் டுலைவேனுக் கன்பர்க் குதவுதல்போல்
ஈயா விடினும்ஓர் எள்ளள வேனும் இரங்குகண்டாய்
சாயா அருள்தரும் தாயே எழில்ஒற்றித் தற்பரையே
மாயா நலம்அருள் வாழ்வே வடிவுடை மாணிக்கமே.

(பொ - ரை. "என்றும் தளராத திருவருளை அன்பர்கட்கு தந்துகொண்டிருக்கும் தாயே! அழகிய திருஒற்றியூரில் வீற்றிருக்கும் பரதேவதையே! அழியாத முத்தி இன்பத்தை அளிக்கின்ற வாழ்வே! வடிவுடை மாணிக்கமே! எந்தநேரமும் துன்பத்தால் வருந்துகின்ற எனக்கு, நீ அன்பர்களுக்கு

முழுவருளையும் தருவதுபோல் தராமல் போயினும், எள்ளளவு அருளையேனும் தந்து காப்பாற்ற என்மீது கருணை காட்டுவா யாக!'' (எ - து.)

(அ - சொ.) எழில் - அழகு. தற்பரை - மேலானவள்; பரதேவதை. நலம் - முத்திநலம். உலைவேனுக்கு - வருந்து கின்றவனாகிய எனக்கு.

(இ - கு.) இடர்கொண்டு, கொண்டு மூன்றும் வேற் றுமைச் சொல் உருபு. உலைவேனுக்கு, வினையால் அணையும் பெயர்.

(வி - ரை.) தற்பரன் இறைவன் ஆதலின் தற்பரை இறைவி ஆயினள். மக்களுள் ஒருசிலர் இரக்கத்தால் பிறர்க்கு அருள் செய்தாலும் அவ்வருள் நாளடைவில் குறைந்துவிடும். ஆனால், அதியமானைப் போன்ற சங்ககால வள்ளல்கள் அருள் செய்வதில் சிறிதும் தளராமல் என்றும் செய்துகொண்டே இருப்பர். இதனை ஔவையார்,

''ஒருநாள் செல்லலம் இருநாள் செல்லலம்
பலநாள் பயின்று பலரொடு செல்லினும்
தலைநாள் போன்ற விருப்பினன் மாதோ
அணிபூண் அணிந்த யானை இயல்தேர்
அதியமான் பரிசில் பெறூஉம் காலம்
நீட்டினும் நீட்டா தாயினும் யானைதன்
கோட்டிடை வைத்த கவளம் போலக்
கையகத் ததுவது பொய்ஆ காதே
அருந்தே மாந்த நெஞ்சம்
வருந்த வேண்டா வாழ்கவன் தாளே''

என்று அதியமான் நெடுமான் அஞ்சியை வாழ்த்தியுள்ள பாட்டால் நன்கு உணர்கின்றோம். சில் வாழ்நாள் சிற்றறி வுடைய மக்களே சாயாது அருள் புரிவாராயின், திருவருளையே திருமேனியாகக் கொண்ட இறைவியின் அருள் சாயும் தன்மையதோ? ஆகவேதான் ''சாயா அருள்தரும் தாயே'' என்றனர். நலம் ஈண்டு வீட்டின்பமாகிய நலத்தைக் குறித்து நிற்கிறது. ''முத்திநலம்'' என்று நம் மணிமொழியார் கூறி யுள்ளதை ஈண்டு நினைவு கூர்க. (95)

பெரும்பேதை யேன்சிறு வாழ்க்கைத் துயர்எனும் பேர்அலையில்
துரும்பே என அலை கின்றேன் புணைநின் துணைப்பதமே
கரும்பே கருணைக் கடலே அருள்முக் கனிநறவே
அரும்பேர் அருள்ஒற்றி வாழ்வே வடிவுடை மாணிக்கமே.

(பொ - ரை.) "கரும்பே! கருணைக்கடலே! திருவருளாகிய வாழை, மா, பலா என்னும் மூன்று பழங்களின் தேனே! அரிய பெரிய அருள் நிறைந்த திருஒற்றியூரில் வாழ்கின்ற வாழ்வே! வடிவுடை மாணிக்கமே! பெரிய அறிவிலனாகிய நான் கடல் அலையில் அகப்பட்டுக்கொண்ட துரும்பைப் போல அற்பமான உலக வாழ்க்கையாம் துன்ப அலையில் சிக்கி அலைகின்றேன். அத்துன்பக் கடல் அலையிலிருந்து இன்பக் கரையைச் சேர உன் இரு திருவடிகள் தாம் எனக்குத் தெப்பமாக இருந்து துணை செய்ய வேண்டும்." (எ - து.)

(அ - சொ.) முக்கனி - வாழை, மா, பலா எனும் மூன்று கனிகள். நறவு - தேன். பேதையேன் - அறிவிலனாகிய நான். புணை - தெப்பம். துணைப்பதம் - இரண்டு திருவடிகள்.

(இ - கு.) முக்கனி, தொகைக் குறிப்பு. பதம், குறுக்கல் விகாரம்.

(வி - ரை.) இறைவன் திருவடியே பிறவிக் கடலைக் கடந்து முத்திக் கரையினை அடைதற்குத் துணை என்பதைத் திருவள்ளுவர் கடவுள் வாழ்த்து அதிகாரத்தில் அறுதியிட்டு உறுதிப்படுத்தியுள்ளனர். இதனை,

"அறஆழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்
பிறஆழி நீத்தல் அரிது"

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்"

என்னும் குறட்பாக்களிற் காண்க. இந்தக் கருத்தில்தான் "புணைநின் துணைப்பதமே" எனப்பட்டது. (96)

**காதர வால்உன் கலங்கிநின் றேன்நின் கடைக்கண் அருள்**
**ஆதர வால்மகிழ் கின்றேன் இனிஉன் அடைக்கலமே**
**சீதரன் ஏத்தும் திருவொற்றி நாதர்தம் தேவிஎழில்**
**மாதர சேஒற்றி வாழ்வே வடிவுடை மாணிக்கமே.**

(பொ - ரை.) "இலக்குமியைத் தன் மார்பகத்துக் கொண்டுள்ள திருமால் போற்றி வணங்கும் திருஒற்றியூர்த் தலைவரின் வாழ்க்கைத்துணைவியே! அழகிய பெண்களுக்கெல்லாம் அரசியே! திருஒற்றியூரில் வாழும் வாழ்வே! வடிவுடை மாணிக்கமே! தீவினைத் தொடர்பு காரணமாக நான் மனக் கலக்கம் கொண்டுள்ளேன். ஆனால் அக்கலக்கத்தினை நீ உன் திருக்கடைக் கண்ணால் பொழியும் அருளாலும் ஆதரவாலும் பொருட்படுத்தாமல் இன்புறுகின்றேன். ஆகவே நான் உன் திருவடிகளில் சரணம் புகுகின்றேன்" (எ - து.)

(அ - சொ.) சீதரன் - இலக்குமியை மார்பில் கொண்ட திருமால். ஏத்தும் - போற்றும். எழில் - அழகிய. காதரவு - தீவினைத் தொடர்பு.

(இ - கு.) தேவி, அண்மை விளி. மாது + அரசே எனப் பிரிக்க.

(வி - ரை.) சீ என்பதன் பொருள் இலக்குமி. தரன் என்பதன் பொருள் தரித்தவன் என்பது. ஆகவே இலக்குமி யைத் தரித்தவன் என்பதே சீதரன் என்பதன் விளக்கமாகும். திருமாலின் மார்பில் ஒரு மச்சம் உண்டு. அதுவே ஸ்ரீவச்சம் என்பது. இந்த உண்மையினைப், பரி பாடல் என்னும் சங்கநூல் "திருவளர்ந்து அமர்ந்த மார்பினை" என்று பாடிப் போற்றுதலை அறிக. "பங்கயத் திருந்த பொன்னை ஆகத்தில் ஒருவன் வைத்தான்" என்று கம்பரும் குறித்துள்ளதைக் காண்க. துயரால் துன்புற்றபோது இறைவனின் திருவருள் இருக்குமானால் அத் துன்பமும் இன்பமாகும். இதனை அப்பர் தாம் சமணர்களால் நீற்றறையில் இடப்பட்டபோதும் இன்புற்றிருந்த நிலையினை,

"மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே"

என்று அறிவித்திருப்பதைக் காண்க. இந்தக் கருத்தில் தான் நின் கடைக்கண் அருள் ஆதரவால் மகிழ்கின்றேன் என்றனர்.

**பொன்னுடையார் அன்றிப் போற்றும்நல் கல்விப் பொருள்உடையார்**
**என்னுடை யார்என ஏசுகின் றார்இஃ தென்னை அன்னே**
**மின்னுடை யாய்மின்னில் துன் இடை யாய்ஒற்றி யேமுக்கண்**
**மன்னுடை யாய்என் உடையாய் வடிவுடை மாணிக்கமே.**

(பொ - ரை.) தாயே! மின்னலைப்போலும் ஒளியுடையவனே! மின்னலைப்போல, நெளியும் இடையினை உடையவனே! திருவொற்றியூரில் பொருந்தியுள்ள மூன்று கண்களையுடையவனைக் கணவனாகக் கொண்டவளே! என்னை அடிமையாகக் கொண்டவளே! வடிவுடை மாணிக்கமே! பொன்னுடையவர்களே அல்லாமல் சிறப்பித்துப் பேசப்படுகின்ற நல்ல கல்விச் செல்வத்தை உடையவர்களும் ஆகிய இவ்விருவர்களும் என்ன அவ்வளவு சிறப்புக் குரியவர்கள் என்று இழித்துப் பழித்தும் பேசுகின்றார்கள். இதற்கு என்னே காரணம்?" (எ - று.)

(அ - சொ.) மின்னில் - மின்னலைப்போல். துன் - துவளும், அசையும். மன் - தலைவன், நிலைபெறுதல். அன்றி - அல்லாமல். என்னை - என்ன காரணம்?

(இ - கு.) மின்னில், இல் ஐந்தாம் வேற்றுமை ஒப்புப் பொருள். துன் இடை, வினைத்தொகை. அன்றி, குறிப்பு வினை எச்சம். என் + ஐ என பிரிக்க, ஐ சாரியை, மன் என்பது மன்னன் என்பதன் ஈற்றுக்குறை.

(வி - ரை.) இடை சிறுத்து மெலிந்து துவளும் நிலையில் இருத்தலின் மின்னல் இடைக்கு உவமை ஆயிற்று. பொருட்

செல்வமும், கல்விச் செல்வமும், திருவருட் செல்வத்திற்கு ஈடாகா ஆதலின் பொருள், கல்வி உடையாரைக் காணும் அருள் செல்வர் மதியார் ஆதலின் "என்னுடையார் எனை ஏசுகின்றார்" என்று அறிவித்துள்ளனர் நம் ஐயா. (98)

**பொய்விட் டிடாதவன் நெஞ்சகத் தேனைப் புலம்பும்வண்ணம்**
**கைவிட் டிடாதின்னும் காப்பாய் அதுநின் கடன்கரும்பே**
**மெய்விட் டிடார்உள் விளைஇன்ப மேஒற்றி வித்தகமே**
**மைவிட் டிடாவிழி மானே வடிவுடை மாணிக்கமே.**

(பொ - ரை.) "கரும்பே! உண்மையைக் கை விடாதவர்களின் உள்ளத்தில் விளைகின்ற இன்பமே! திருஒற்றியூரில் வாழும் பேரறிவு படைத்த பெருந்தேவியே! மை நீங்காத கண் பெற்றுள்ள மானே! வடிவுடை மாணிக்கமே! பொய்யை விடாத கொடிய மனமுடையவனாகிய என்னை அழுது புலம்பும்படி விட்டு விடாமல், இன்னமும் காத்து வருவாயாக. இஃது உன் கடமையாகும்". (எ - து.)

(அ - சொ.) வித்தகமே - அறிவுடைப் பெருமாட்டியே.

(இ - கு.) நெஞ்சகத்தேனை, என்பது குறிப்பு வினையால் அணையும் பெயர் வண்ணம், இடைச்சொல்.

(வி - ரை.) இறைவியின் திருவருள் இன்பத்தைப் பெற வேண்டுமானால் நாம் பொய் பேசுதலை ஒழிக்கவேண்டும். இன்றேல் அவள் நம் உள்ளத்தில் பொருந்தி இன்பம் தர மாட்டாள். இந்த உண்மையினை நம் ஐயா "மெய் விட்டிடார் உள் விளை இன்பமே!" என்னும் தொடரில் விளக்கியுள்ளனர். அப்பர், "தன் கடன் அடியேனையும், தாங்குவது" "என் கடன் பணிசெய்து கிடப்பதே" என்று அறிவித்துள்ளார். ஆதலின் அந்தப் போக்கில் நம் வள்ளலாரும் "அது நின் கடன்" என்று கூறியுள்ளார். (99)

நேயானு கூல மனமுடை யாய்இனி நீயும்என் றன்
தாயாகில் யான்உன் தனையனும் ஆகில்என் றன்உளத்தில்
ஓயா துறும்துயர் எல்லாம் தவிர்த்தருள் ஒற்றியில்செவ்
வாயார் அமுத வடிவே வடிவுடை மாணிக்கமே.

(பொ - ரை.) "திருஒற்றியூரில் எழுந்தருளியுள்ள சிவந்த வாயையுடைய அருமையான அமுதமாகிய வடிவுடையாளே! வடிவுடை மாணிக்கமே! அன்பர்களிடத்தில் அன்பையும், ஆதரவையும் காட்டுகின்ற திருவுள்ளம் படைத்தவளே! இனி நீ, என் தாயானால், நானும் உன் பிள்ளையானால் என் மனத்தில் எப்போதும் நிறைந்திருக்கும் துன்பங்களை எல்லாம் நீக்கித் திருவருள் புரிவாயாக' (எ - று.)

(அ - சொ.) ஆர் அமுதம் - அருமையான தேவாமுதம். நேயம் - அன்பு. தனையன் - மகன்.

(இ - கு.) செம்மை + வாய், நேயம் + அநுகூலம், அருமை + அமுது எனப் பிரிக்க. நேயம் அநுகூலம், உம்மைத்தொகை.

(வி - ரை.) தாய் பிள்ளையைக் காப்பாற்ற வேண்டுவதை நினைவுறுத்தும் முறையில் நம் ஐயா இறைவியிடம் உரிமை உணர்ச்சியுடன் நீயும் என்தன் தாயாகில் யான் உன் தனையனும் ஆகில் என்தன் உள்ளத்தில் ஓயாது உறும் துயர் எல்லாம் தவிர்த்தருள் என்று வேண்டுவாராயினர்.

வாழிநின் சேவடி போற்றிநின் பூம்பத வாரிசங்கள்
வாழிநின் தாண்மலர் போற்றிநின் தன்அளி வாழிநின்சீர்
வாழிஎன் உள்ளத்தில் நீயும்நின் ஒற்றி மகிழ்நரும்நீ
வாழிஎன் ஆர்உயிர் வாழ்வே வடிவுடை மாணிக்கமே.

(பொ - ரை.) "என் ஆர் உயிர் வாழ்வே! வடிவுடை மாணிக்கமே! உன் செம்மையான திருவடிகள் வாழ்க. உன்னு

டைய அழகிய திருவடிகளாகிய தாமரைகட்கு வணக்கம். உன் திருவடி மலர்கள் வாழ்வதாக. உன் குளிர்ந்த கருணைக்கு வணக்கம். நின் சீர்மை வாழ்க. என் உள்ளத்தில் நீயும் உன் திருஒற்றியூர் நாயகரும் வாழ்வீர்களாக'' (எ - து.)

(அ - சொ.) பூர்பதம் - அழகிய திருவடிகள். வாரிசங்கள் - தாமரை மலர்கள். தண் அளி - குளிர்ந்த கருணை. மகிழ்நர் - கணவர்.

(இ - கு.) வாழி, வியங்கோள் வினைமுற்று. செம்மை + அடி என்பது சேவடி எனப் புணர்ந்தது. பதவாரிசங்கள், தாள்மலர், உருவகம். பதம், குறுக்கல் விகாரம். அருமை + உயிரே என்பது ஆருயிரே எனப் புணர்ந்தது.

(வி - ரை.) இறைவியை வாழ்த்தி முடிக்கவேண்டும் என்னும் கருத்தில் இப் பாட்டை நம் ஐயா வாழ்த்துப் பாடலாகப் பாடி அமைத்துள்ளனர். கந்த புராண ஆசிரியரும் தம் நூலின் ஈற்றில்,

"ஆறிரு தடந்தோள் வாழ்க அறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க யானைதன் அணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்கசீர் அடியார் எல்லாம்''

என்று வாழ்த்துப் பாடலைப் பாடி அமைத்திருத்தலைக் காண்க.

திருவடிப் புகழ்ச்சியே சீரிய புகழ்ச்சி ஆதலின், திருவள்ளுவரும் தம் கடவுள் வாழ்த்துப் பகுதியில் ஏழு குறட்பாக்களில் திருவடிகளையே போற்றிப் புகழ்ந்துள்ளனர். மாணிக்கவாசகரும், தம் திருவாசகத் தொடக்கத்திலும் திருவடியினை வாழ்த்தியும், போற்றியும் வணங்கியுள்ளனர் திருநாவுக்கரசரும், நான்காம் திருமுறையில் திருவதிகை வீரட்டானத் தலத்தைப்பற்றிப் பாடியுள்ள ஒரு பதிகம்

முழுமையினையும் இறைவன் திருவடிகளின் பெருமையினையே எடுத்து மொழிந்துள்ளார். இவ்வாறே திருவையாற்றுப் பதிகத்தினுல் திருவடி மாண்பையே வாழ்த்தி வணங்கியுள்ளனர். நம் ஐயாவும் திருவடிப் புகழ்ச்சியினை முதல் திருமுறையின் தொடக்கத்தில் பாடிப் போற்றி யுள்ளனர். எனவேதான் நம் வள்ளலார் இந்த வடிவுடை மாணிக்க மாலையில் ஈற்றில் வாழ்த்துப் பாடலை அமைத்து அதில் மூன்று முறை, இறைவியின் திருவடிகளை வாழ்த்தியும் போற்றியும் உள்ளனர்.

இறைவனும் இறைவியும் தம் உள்ளத்தில் இணை பிரியாது, என்றும் நிலைத்து இருக்கும் பொருட்டு, வாழி என் உள்ளத்தில் நீயும் நின் ஒற்றிமகிழ்நரும் என்று வாழ்த்தி வணங்குகின்றுர்.

இந்த அளவில் அம்மை அப்பருடைய திருவருளால் வடிவுடை மாணிக்க மாலைக்கு உரை எழுதி முடிக்கப் பட்டது. (101)

வடிவுடை மாணிக்கமாலை உரை முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்